FOR FAVOUR OF REVIEW

MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS SERIES No. 49.

# செயங்கொண்டார் வழக்கம்

(உரை விளக்கத்துடன்)

# JAYANKONDAR VALAKKAM

WITH

**Commentary**

EDITED BY

**T. CHANDRASEKHARAN**, M.A., L.T.,

*Curator, Government Oriental Manuscripts Library, Madras*

and

THE STAFF OF THE LIBRARY

*Under orders of the Government of Madras*

**1955**

**Price Rs. 2-6-0**

PRINTED AT THE
SREEVATHSA PRESS
ROYAPETTAH

# PREFACE

Life is mirrored in Literature; and the accumulated robust, native wisdom of the Tamils crystallizes itself into professed proverbs in the hands of the ancient poets. Again they filter down to the masses and become current among them. One must remember that the poetic tradition is not divorced from life; but, on the other hand, it is built on it. In fact what is born of the people is enriched, vitalized and coloured by the rich Imagination of the Poets.

Later on these proverbs which are the distilled wisdom of the people are handled by the succeeding poets who skilfully weave them into the texture of their poems. Some apt striking situations from the classics — situations which are illustrative of the proverbs — are also enshrined in them. These poems are couched in Kuru - viruttam. Palamoli Nanuru by Munrurai Arayanar and Tandalaiyar Satakam by Padikkasuppulavar are cast in the same mould. To such a body of literature belongs this composition of Jayankondar - valakkam. The author of this work belongs to Niyama Nagaram alias the Kilaccevarpatti Ilaiyarrangudi Elunagaram in Sivaganga Jamin. He is the son of Alagappa Chettiyar; and he is called Muthappa Chettiyar. From stray verses written in warm praise of him, we cannot but infer that he is a learned poet deeply read in the classics: we gather that this work is the off-spring of a request made to him by Subramania Pandaram, son of Vira Pandaram. Among his works, Tirumuga - vilasam, Divya - desa - yattiraic-cariram etc. may be mentioned.

Perhaps this work Jayankondar - valakkam saw the light a hundred years ago. There is a commentary on it but it is written in coloquial Tamil. We have not tinkered at it lest we should lose the original flavour of the language then spoken.

However, we have steered clear of certain errors which have crept into the composition.

Besides, the stories introduced from the Puranas are slightly altered in this composition. For instance there is an incident of Muruga of being cursed into a fish for overhearing the conversation between Parvati and Paramesvara. Such an incident does not figure in the Tiruvilaiyadal puranam, where it is Nandi that has been cursed into a fish.

There is a printed text belonging to the Paganeri publications,but our manuscript has different readings in several places : The special and attractive feature of our publication is the lucid interpretation of the stanzas by an anonymous author.

This printed work is based on a paper manuscript of this library bearing D. No. 586. It was transcribed from a manuscript of Sri Ramakrishna Ayyar, Teacher, District Board High school, Thirupparankunram in the Madura district.

My thanks are due to Messers M. Pasupathi, V. S. Krishnan and E. B. Venugopal — Pandits of this library, who prepared the Press copy and carefully corrected the proofs.

MADRAS.
1-11-1955

T. CHANDRASEKHARAN,
*Curator*
Govt. Oriental Manuscripts Library,

# முன்னுரை

பண்டைத் தமிழ்மக்கள், வாழ்க்கையில் எண்ணும் எண்ணங்களும், சொல்லும் சொற்களும் இயற்கை இலக்கண வரம்புக்குட்பட்டு இயலுவன; அவ்விலக்கணத்தோடு ஒட்டிய இயற்கைமொழியிலக்கணம் "தமிழ் மொழியின் தொல்லிலக்கணம்" என மொழிநூலறிஞர் கூறுகின்றனர். அதற்கேற்பவே, இந்நூலில் காணும் பழமொழிகளை விளக்கஞ் செய்யும் செய்யுட்களும் "வழக்கு" என்னும் இலக்கணத்துட்பட்டு யாத்த செய்யுட்களாகும். வழக்கு என்பது, "வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே" (தொல்-பொ-647) என்ற சூத்திர உரைப்படி, கல்வியறிவு கேள்விகளால் உயர்ந்தவர்களின் தன்மையது என்று, பொருள் கொள்ளக்கிடக்கின்றது. அவ்வழக்கு, "இலக்கணமுடையது.. ........ ........................ஆகும் வழக்கியல்." என்ற நன்னூற் சூத்திரத்தாலே பெறப் படுகின்றது. செய்யுள் வழக்கு, உலக வழக்கு என இருவகைத்து. பழமொழி களெல்லாம் உலகவழக்கில் அடக்கப்பட்டிருக்கின்றது. வழக்கு, வழக்காறு, வழக்கடிப்பாடு, வழக்கம், பழக்கவொழுக்கம் என்பன ஒரு பொருளைத்தரும் பன்மொழிகளாலான திரிசொற்கள். உலகத்தில் மக்களிடையில், நாளடைவில், நடைபயிலும் பழக்கவொழுக்கங்கள் தாமே கற்றறி புலவர்களால் முதுமொழி களாக இயற்றப்பட்டு, மீண்டும் மீண்டும் சொல்வழக்கு விளங்க விளங்க, மக்கள் உள்ளத்தில் அழுந்தப் பெற்று, நின்று நிலைத்து, அழிந்தொழியாது வழங்கி வருகின்றது. அவையே, பின்பு பழமொழிகள் என்ற பெயருடன் வாழ்க்கை நிலைகளுக்கு, ஏற்றபெற்றி இயல்புடைத்தாக வழங்கப் படுகின்றன. இங்ஙனம் வழங்கிவந்தனவாகக் கண்ணுறும் சில இன்றியமையாத பழமொழிகளை ஈற்றடியாக அமைத்து, அதற்கேற்ற பழங்கால இதிகாசபுராணக்கதைகளையும் மேற்கோளாக அமைத்துக் குருவிருத்தமாகப் பாடப்பட்டதே, "செயங்கொண்டார் வழக்கம்" என்னும் இந்நூலாகும். இன்னும் தமிழ் மொழியின், முன்றுறையரையனரால் பாடப்பெற்ற பழமொழி நானூறு என்னும் கடைச் சங்க நூலும், படிக்காசுப்புலவரால் பாடப்பெற்ற "தண்டலையார் சதகம்" என்ற நூலும் உண்டு. இதனைப் பின்பற்றியேதான், "செயங்கொண்டார் வழக்கம்" என்னும் இந்நூலும் பாடப் பெற்றிருக்கிறது. இந்நூலாசிரியர், சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்த இளையாற்றங்குடி ஏழு நகரமென்று சொல்லப்பட்ட நியம நகரத்திலுதித்த அழகப்பச் செட்டியார் குமாரர் முத்தப்பச் செட்டியார் என்பவராவர். இவர், கல்வி கேள்விகளில் வல்லுநராகி கவிதை பாடும் திறமுடையவர் என்பது,

"திருமதுரைச் சீர்பட் டிளையாற்றங் குடிச்செட்டி
சீமா னென்று
முருமதன னழகப்ப னுதவியமுத் தையனெனு
மொப்பில் சிங்க

மருமறைசாத் திரங்களோ டாகமங்கள் புராணங்க
ளனைத்துந் தேர்ந்து
பெருகுபழ மொழிநூறுங் கதைநூறுஞ் சதகமெனப்
பேசிற் றுமால்.

என்ற தனிக்கவியால் பெறப்படுகின்றது, இந்நூல், ஊனைநகர் வீர பண்டாரம் குமாரர் சுப்பிரமணிய பண்டாரம் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பாடியளித்தவையாகும். இவ்வாசிரியர் இதனைத் தவிர திருமுகவிலாசம், திவ்யதேச யாத்திரையின் சரித்திரம் முதலிய நூல்களும் செய்துள்ளனர். இந்நூல், இற்றைக்குச் சுமார் நூறுண்டிற்கு முன் எழுந்தனவாகும்.

இந்நூல், பண்டைக் காலத்தில் எழுந்த சில உரைநடை நூல்களைப் போன்று இந்நூலின் உரை, கொச்சைச் சொற்களால் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூல் நிலையத்தில் காணப்படும் சுவடிக்கும், இதற்குமுன் அச்சிடப்பட்ட பிரதிக்கும் பெரும்பாலான செய்யுட்களில், பாட பேதங்கள் காணப்படுகின்றன. மற்றும் செய்யுள் வடிவில் உள்ள பழமொழியின் உதாரணக்கதைகளை, உரைநடையில் எழுதப்பட்டு இந்நூல்நிலையச்சுவடியில் காணப்படுகின்றது. இன்னுரால் உரைசெய்யுப்பட்டது என்பது அறியக்கூடவில்லை. நடை முழுவதும் கொச்சைச் சொற்கள் அளவு கடந்து பயிலப்பட்டுள்ளது. அக்காலநடையை அனைவரும் தெரிந்து கொள்ளவே, திருத்தப் பெறுமல் அப்படியே போடப்பட்டிருக்கிறது. பிழைகளும் இடையிடையே காணப்பட்டன. அவற்றை முடிந்த வகையில் திருத்தப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. இன்னும், அறிஞர் கண்ணுக்குப் பிழை தெரியின் மன்னித்துத் திருத்திக் கொள்ள வேண்டுதும்.

இந்நூலில் சிலகதைகள் பழக்கவழக்கத்தில் உள்ளனபோலன்றி திரிந்து காணப்படுகின்றன. உதாரணமாக ''மிஞ்சிய செவ்வேள் சிவனுர்,'' என்று தொடங்கும் பாட்டில் வரும்படியான கதையில், பார்வதிக்கு சிவபெருமான் பிரணவப் பொருளை உபதேசிக்கும் போது, முருகன் மறைந்து நின்று கேட்டதாகவும், அதனையறிந்த சிவபெருமான், அவரை மகரமீனுகச் சபித்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கதை, திருவிளையாடற் புராணத்தில், ஆலவாய்க் காண்டத்தில் நந்தியை மகர மீனுகவும், முருகனை ஊமைப் பிள்ளையாக ஆகும்படியும் சபித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக்கதை மாறுபடக் காண்கின்றது. மற்றும்,

''சுத்துமளக் கலிங்கம்'' என்று தொடங்கும் பாட்டில் வரும்படியான கதையில், முதற் குலோத்துங்கசோழன் கருணாகரந்தொண்டைமானை யனுப்பி கலிங்கத்தை வெல்லும்படி சொல்ல, அவன், ஊசிக்காந்தக் கோட்டைகளையுடைய கலிங்கத்தை வெல்லமுடியாமல், தன்புத்தியின் வலிமையால் கொலுதாசிகளை சமர்த்திகளாகவும், யௌவன ரூபம் வாய்ந்தவர்களாகவும் ஆயிரந்தாசிகளை சமுத்திரக்கரையில் ஆயிரம் மாடி வீடுகட்டி, ஆயிரம்பேர்களையும் அதில் இருக்கப்

பண்ணினுன். அந்த அதிசயத்தைக் கலிங்கக் கோட்டையார் காண, கள்ளப் பாதை வழியாய் வந்து இந்தந்தாசிகளைக் கைவசம் பண்ணி அவர்களோடு உல்லாசமாக இருக்கும்போது, கருணுகரத் தொண்டைமான் தந்திரமாக அவர்களை எல்லாம் தன்வசப்படுத்தி வென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வளவு விளக்கமாக, முதற்குலோத்துங்கசோழன் வரலாற்றிலோ, கலிங்கத்துப் பரணியிலோ காணக்கூடவில்லை. ஆகவே, இந்தக்கதையும் புதியதாகத் தெரிகின்றது. மற்றும்,

"சூத்திரப்பாவை" என்று தொடங்கும் பாட்டில் வந்துள்ள நந்திராசனுடைய வரலாற்றில், நந்திராசன் மூத்தமனைவியின் மக்கள் ஐந்துபேரும், நந்தியின் இரண்டாம் மனைவியாம் சக்கிலிச்சிமகனைக் கொல்லமுடியாமல் கரிமூட்டையைக் கொன்றதும், அந்த கடைசி மகன் தப்பியோடி கவிராயர் வீட்டில் அடக்கம் புகுந்து கவிதை கற்று, நந்திக்கலம் பகம் என்றநூல் பாட, அதனையறிந்த நந்திராசான் அக்கவிதையைப் பாடக்கூடாது; பாடினுல் ஒரு கவிதைக்கு ஆயிரம் பொன் தரவேண்டும் என்று இராச்சியம் முழுவதும் தண்டோரா போட, அதற்கு அந்நாட்டிலுள்ள ஒரு தாசி கட்டுப்படாமல், கவிதையின் இனிமையில் மயங்கிப் பாதிப் பாட்டுப்பாட, அதனையறிந்த காவலாளிகள், அந்தப்பாட்டிற்கு ஆயிரம் பொன் அந்தத் தாசியிடத்தில் பெற்றுக் கொண்டார்கள். இந்த வரலாறு இந்நூற் கதையில் புதுமையாக எடுத்துக்காட்டப்படுகின்றது. இன்னும் சில சில புதுக் கதைகளும் காணப்படுகின்றன. அவைகளை எடுத்துக் கூறின் விரியும் என்றஞ்சி இதோடு முடிக்கின்ரேம்.

இந்நூல், இந் நூல்நிலையத்திலுள்ள, தமிழ் மூவருடக் காட்லாக்கில், 586-ஆம்எண்ணிலுள்ளகாகிதப் பிரதியினின்றும் எடுத்து வெளியிடப் படுகின்றது. இந்தப் பிரதி, மதுரை திருப்பரங்குன்றத்திலுள்ள, மாவட்டப் பள்ளியிலுள்ள, ஆசிரியர், திருவாளர். இராமகிருஷ்ண ஐய்யர் அவர்களிடத்திலுள்ள பிரதியைப் பார்த்து, 1924-25 ஆண்டில் பிரதி செய்து வைத்ததாகும்.

இறுதியாக,இந் நூலை மூலப்பிரதியினின்றும் பெயர்த்து எழுதி, அச்சிடுவதற்குரிய வகையில் அமைத்துக்கொடுத்த, இந் நூல் நிலையப் புலவர்கள்; திரு.மு.பசுபதி திரு. வி. எஸ். கிருஷ்ணன், திரு. இ. பா. வேணுகோபால் ஆகியோருக்கு எனது நன்றி உரியதாகும்.

சென்னை
1-11-1955

தி. சந்திரசேகரன்.

T. 2139

## இந்நூலில் வந்துள்ள பழமொழிகளின் அட்டவணை


| | பக்கம் எண் |
|---|---|
| அம்பு கிடைக்கையிலே ஆளைக்கட்டலாகாது .... | 64 |
| அயல்வீட்டு ஆண்மகன் அவத்தைக்குதவான் .... | 23 |
| அனுபோகம் தொலையும்போது அவிழ்தம் சித்திக்கும் .... | 41 |
| ஆற்றோடே போனாலும் போகிறதே யல்லாமல் தெப்பக் காரனுக்கு ஒரு காசும் கொடுக்கிறதில்லை .... | 55 |
| ஆனை நிழல் பார்க்கையிலே தவளை வந்து கலக்கிவிடும் .... | 6 |
| இடுவது பிச்சை, பெறுவது மோட்சம் .... | 101 |
| இராமர் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன .... | 65 |
| இறைவன், அடியார் நெஞ்சில் குடியாய் இருப்பான் .... | 80 |
| உடைகுலைந்த பிறகு முறைமைகள் கொண்டாடுவாரோ ? .... | 12 |
| உயரத்தான் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ ? .... | 37 |
| உறவுதனைப் போலிருந்து குளவியைப்போல் கொட்டுவது .... | 44 |
| உனக்கு மழை பெய்யுமிப்போ, எனக்கு இரவை கொடுத்தால் .... | 39 |
| ஊணன் உள்ள கருமம் இழப்பான் .... | 38 |
| ஊர் இரண்டானால் கூத்தாடிக் கழகு .... | 7 |
| எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் .... | 82 |
| எண்ணெய்போக முழுகலாம் ; எழுத்துப்போக முழுக முடியாது .... | 25 |
| எறும்பிற்குந் தன்கையால் எண்சாண் உடம்பு .... | 46 |
| கட்டப்பாலை முற்றப் பழுக்குமோ ? .... | 74 |
| கடுகு சிறுத்தாலும் காரம் போகாது .... | 51 |
| கணக்கனுக்கும் கைக்கூலிகட்டி குடியிருப்பது கடன் .... | 43 |
| கண்டது கற்றவன் பண்டிதனாவான் .... | 21 |
| கண்ணாரக் கண்டதும் காதாரக் கேட்டதும் பொய் ; தீரவிசாரிப்பது மெய். .... | 53 |
| கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொள்ள வேண்டும் .... | 60 |
| கல்விதனக் கழகு கசடற மொழிதல் .... | 3 |
| காணியை நட்டுக் களத்தில் நில் .... | 36 |
| காதமோடியும் முயல்தான் கைத்தூக்கு .... | 52 |
| காத்திருந்தவன் பெண்டுதனை நேற்றுவந்தோன் கொண்டு போன கதை .... | 31 |

காமத்துக்குக் கண்கண்ட விடத்திலே .... 73
கீர்த்தி அபகீர்த்தி வந்தால் போகாது .... 85
குதிரை நடவாவிடில் மாவுத்தர் பறப்பரோ ! .... 32
குப்பையிலே கிடந்தாலும் குன்றிமணி மங்காது .... 42
குலவித்தை கல்லாமல் பாகம்படும் .... 56
கெடுப்பதும் வாயால் ; படிப்பதும் வாயால் .... 63
கொண்டவன் தூற்றினல் கூரையுந்தூற்றும் .... 11
கொன்ருரைக் கொல்லும் கொலே .... 57
கோபமே பெரும்பாவம், சண்டாளம் .... 31
சரச மிஞ்சினல் கைபோ டொண்ணுது .... 16
சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும் .... 71
சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழுவது நல்லது. .... 103
சாணியொருகூடை, சவ்வாது ஒரு பணவெடை .... 91
சிறிய பாம்பானுலும் பெரிய கம்பாலடி .... 35
சிறுக்கி மனதறியாமல் செடிதனேத் துரத்தியவாறுபோல .... 19
சுங்கமாறியபோது சுண்ணும்புங் கொடுக்கார் ... 8
சூதும் வாதும் வேதனே செய்யும் .... 59
செய்தவம் மறந்தால் கைதவமாகும் .... 100
செய்தவினே செய்தவர்க்கு எய்திடும் ... 69
தகப்பன் ஒரு பாக்கு ; பிள்ளேயொருதோப்பு .... 81
தருமமே தலேகாக்கும் ; அதர்மமே அழிந்துவிடும் ... 3
தன்பானே சாயப் பிடிப்பதுண்டோ ? ... 34
தன்னுலேதான் கெட்டால் அண்ணுவி என் செய்வான் ... 84
தன்னுயிர்போல மன் உயிரை நினே ... 28
தாய்க்கு விளேந்தாலும் தனக்கு விளேயவேண்டும் ... 56
தான் பத்தினியானுல் தேவடியாள் தெருவில் குடியிருக்கலாமே.... 20
தீராக் கோபம் போராய் முடியும் ... 48
துர்ப்புத்தி மந்திரியால் அரசுக்கீனம் ... 30
துஷ்டனேக் கண்டால் தூர விலகு .... 98
தெய்வம் உண்டென்பார்க்கு உண்டு ; இல்லே என்பார்க்கு இல்லே ... 26
தொழுவானெல்லாம் உழுவான் தலேக்கடையில் .... 4
நடுச் சொல்வோர் அறிவுடையோர் .... 14
நல்லது சொன்னுல் பொல்லாப்பு இல்லே ... 40

நல்லது கண்டால் நாயகனுக்கு என்பார் நல்லோர் ... 98
நாளை என்பார்க்கு, இன்று இல்லை என்பார் நல்லவர் ... 47
நிழலருமை வெய்யிலில் போனால் தெரியும் ... 42
நீந்த மாட்டாதவனை ஆறு கொண்டு போம் ... 50
நெருப்பைக் கண்டு மிதித்தாலும், காணாமல் மிதித்தாலும் சுடும்... 67
நெல்லோடே பதரும் அசத்தினில் அதரும் ... 7
பகட்டிப் பங்கெடுத்தாலென் ? இடியடிபொறியரிசி ... 94
பங்காளிக்குப் பல்லிலே விஷம் ... 17
பசுத்தோல் போர்த்த புலியதுபோல ... 70
படைக்குப் போகாதவர் நல்ல சேவகர் ... 6
படைக்கு ஓடிவாழ் பஞ்சத்திற்கு இருந்துவாழ் .... 44
பத்தினி உத்தமி வாக்குப் பலிக்கும் ... 90
பாத்திரமறிந்து பிச்சை இடு ... 33
பார்ப்பானுக்கு வாய்ப்போக்காதே; ஆண்டிக்கு அது தானும் சொல்லாதே ... 9
பிடித்தவருக்குப் பேறுண்டாம் .... 78
புண்ணியத்திற்கு உழும் எருத்தைப் பல் பிடித்துப் பார்த்தாப்போல் .... 22
புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டு போனது ... 92
புத்திமான் பலவானாவான் ... 13
பெண்ணென்றால் பேயும் இரங்கும் ... 49
பெரியோர் துணைக்கொள் ... 5
பெரியோர் உள்ளம் பேதிக்கப்படலாகாது ... 106
பெரு மரத்தைச்சுற்றிய வள்ளியுஞ்சாகாது ... 3
மந்திரங் கால், மதி முக்கால் ... 69
மலையைத்துளைக்கச் சிற்றுளி போதாதோ ! .... 59
மனிதன் ஆகாசத்தையு மடிக்கட்டிவிடுவான் .... 76
மன்னவன் எப்படி, மன்னுயிரும் அப்படி ... 51
மாமியார் தலையில் கையும் வேலிப்புறத்திலே கண்ணும் ... 53
மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே .... 66
முள்ளால் எடுப்பதுவை விட்டுக் கோடரியால் பிளப்பது போல் .... 10
மூத்தது மோழை; இளையது காளை ... 83
மூப்பு, இளமை பழிக்கு இல்லை ... 15

வஞ்சகம் நெஞ்சைப் பிளக்கும் ... 4
வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு ... 91
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் ... 17
வாரவிதி வந்ததென்றால் வளைந்தாடும் பிரானே ... 88
வித்துவானும் மதயானையும் சரி .... 72
வெண்ணீறே வினையகற்றும் ... 9
வெண்ணெய் திரளும்போது தாழி உருண்டதுபோல் ... 29
வெள்ளம் வருமுன் அணைகோலவேண்டும் ... 49
வேண்டுமென்று நூற்றால் வெண்ணெய்க்கட்டிபோல
நூற்கலாம் ... 97

# செயங்கொண்டார் வழக்கம்.

## காப்பு.

### விநாயகர் வணக்கம்.

சீர்பொருந்துந் தென்னியமச் செயங்கொண்ட
சோளீ (ழீ)சர் திருப்பேர் வாழ்த்தி
பார்பொருந்துங் குருவிருத்தப் பாமாலை
தனிலுலகப் பழமைச் சொல்லை
யேர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப்
புவியிலுள்ளோ ரிசைந்து கேட்கக்
கார்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த
கணபதிதாள் காப்புத் தானே.

*என்றது:—சீர் தானேபொருந்திய நியமநகரில் செயங்கொண்ட சோழீசுபரர் பெயரினுலே உலக வழக்கச் சொல்லுக்கு முற்காலத்துத் திட்டாந்தத்தைக் கொடுத்து குருவிருத்தமாய்ப் பாட வேண்டியதற்கு, காருதவும்படிக் கொடுக்கப் பட்ட துதிக்கரத்தோடுங் கூடிய வெயிலுகந்த விநாயகன் பாதாரவிந்தமே காப்பென்றவாறு.*

### முருகர் வணக்கம்.

நகரமெல் லாம்பணிந் தேத்தும்
செயங்கொண்ட சோழீசர் நாயஞர்மேல்
மகரநெடுங் கடலுலக வசந்தையைச்
செந்தமிழால் யான்வழுத் துதற்கு
அகரமுத லவ்வெழுத்தென் ருயதிலே
முப்பால் சொன்னவன் ருள்போற்றி
சிகரவரை மீதெழுந்த குன்றைவடி
வேலவன்ருள் சென்னி காப்பாம்.

*என்றது:— நகரியினுள்ளோரெல்லாம் பணியப்பட்ட செயங்கொண்ட சோழீசுபரர் பேரில் மகரமுலாவிய கடல் சூழ்ந்த உலக வசந்தையைத் (வழக்கம்) தமிழாலே பாட வேண்டியதற்கு அகரமுத லவ்வெழுத்தென்ற முதலமைக் குறள் முப்பாலும்பாடிய திருவள்ளுவ நாயஞர் பதம்போற்றி,சிகரவரையாகிய மயூரகிரிக் கந்தநாயகர் பாதார விந்தத்தைச் சென்னியில் சேர்ப்பாமென்றவாறு.*

### வாலசரசுவதி வணக்கம்.

சிலைவேளை வென்றபிரான் தென்னியம
நகரில்வளர் செயங்கொண் டார்மேல்

உலகிலுள்ளோர் வழக்கமதாய்ச் சொன்ன
சொல்லைத் தமிழாலே யுரைப்பதற்குக்
கலைவாணி யாகியுல குள்ளமட்டும்
படிக்கவந்த கவிதா கன்னி
மலர்வேதன் மனைவியெந்தன் மனதிலிருந்
திவ்வுரையை வழுத்து வாளே.

*என்றது:—சிலைவேளாகிய மன்மதனைவென்ற செயங்கொண்டார் மீதில் உலக வழக்கச் சொல்லைத் தமிழாலே பாட வேண்டியதற்கு, கலைவாணியாகிய பூமி உள்ளமட்டும் கல்வி கற்கின்ற கவிதா கன்னிகை மலர் வேதனை பிரம்மாவின் பாரியாகிய வாலசரசுவதி படிப்பொருட் சிந்தையிலிருந்து இந்தத் தமிழைப் பாடிக்கொடுப்பார்கள் என்றவாறு.*

அவையடக்கம்.

பத்தர்கழுத் தினில்சூரி தண்டலையென்
றுமைக்குரைத்த பரமர் மீதில்
வித்தகர்முன் றுலகவழக் கத்தையெடுத்
தொருநூறு விருத்தஞ் சொன்னர்
அத்தைநிக ரெனச்செயங்கொண் டார்மீதில்
முத்தையன் சிற்றறிவி ஞலே
மத்தகெசந் தனக்குமுன்னே சிற்றெறும்பு
நடந்ததென வசனித் தேனே.

*என்றது:—தண்டலை ஈசுரருக்கு உச்சிக்கால நைவேத்தியத்திற்குத் தேதிப் படியாய் கீரையும் மாவடுவும் கொடுத்து வந்த பத்தனை, சுவாமி மனஞ் சோதித்து ஒருநாள் உச்சிக்கால மாகுமட்டுங் கீரையும் மாவடுவும் அகப்படாமல் பண்ணிப்போட்ட நிமித்தம், பத்தன் இன்றைக்கு விரதந் தப்பினேனென்று சூரியை எடுத்துக் கழுத்தை அறுத்துக்கொள்ளும்போது, பார்வதி தண்டலை நாயக ரைப் பார்த்து, சுவாமி பத்தன் கழுத்து அறுத்துக்கொள்ளுகிறுனே, சாக்கிறுதிக் குக் கிருபை செய்ய வேணுமென்று சொல்லும்போது சூரிபின்னங் குறவளையிலே தண்டலை யென்ற பத்தனை முழுதுஞ் சோதித்து அப்பால் பத்தனுக்குக் கிருபை செய்தார். அன்று முதல் அந்த ஈசுரருக்குத் தண்டலையாரென்று பெயராயிற்று. அந்தத் தண்டலையார் பேரில் முன் பெரியோர் உலக வசந்தைக்கு திஷ்டாந்தரங் கொடுத்து அநேக நிதிகளையும் பொருள்களையும் விசாலமாகக் காண்பித்து தண் டலை விருத்தமென்று அநேகங் கவிதை பாடினுர். அதற்கீடென்பதாய்,* **"மதயானை விதியிலே நடக்கும்போது யானுமொரு சிறுவன்தானெனன்று சிற்றெறும்புகூட நடந்த ஒப்பந்தம்போல,"** *செயங்கொண்டார்பேரில் செயங்கொண்ட விருத்த மென்பதாய், நானும் சிறிது உலக வழக்கச் சொல்லைப் பார்த்து எடுத்து அதற்கு முன்னுன திருஷ்டாந்தங்களை எனக்குத் தெரிந்தமட்டும் முத்தையன் பாடத் தொடங்கினேன் என்றவாறு.*

## நூல்.

### கல்விதனக் கழகு கசடற மொழிதல்.

நல்வேடன் வால்மீகர் சத்தரிஷி
களைச்சேர்ந்து ராம மந்திரம்
சொல்வழுவில் லான்தகர்த்த திறமையில்பின்
வருங்கதைமுன் சொன்ன ரன்றோ
வில்விசையன் தேர்வெல்லக் கணைதொடுத்த
செயங்கொண்டார் விளங்கும் நாட்டில்
கல்விதனக் கழகு கசடற
மொழிவதெனக் கருது வாரே.

என்றது :—வால்மீகி ரிஷி வேடனாக வனசஞ்சாரமாய்த் திரியும் நாளிலே **சத்த** ரிஷிகளைக் கண்டவுடனே நல்லறிவு தோன்றி வந்து எனக்குப் புத்தியென்ன வென்று கேட்க, அவர்கள் **ராம மந்திரங்களைக்** கட்டளையிட, அது சொல்லத் தெரியா தென்ன, இந்த மரத்தின் பெயரென்னவென்று ரிஷிகள் கேட்க, அது மராமரம் என்று சொல்ல, அந்த மரத்தின் பெயரைத்தானே சொல்லிக்கொண்டிருவென்று ரிஷிகள் சொன்னபடிக்கு, அந்த ராம மந்திரம் வலுவில்லாமல் தீர்க்கமாகி பிறகு பின்வருங்கதை முன் சொல்லத் தொடங்கினர். ஆனதால், **"கல்விக் கழகு கசடற மொழிவதென்று,"** உலகஞ் சொல்லும் என்றவாறு. (1)

### பெருமரத்தைச் சுற்றுகின்ற வள்ளியுஞ் சாகாது.

2. அருமறைமார்க் கண்டர்நி(த்)தம் திருக்கடையூர்
வேணியனை யன்பாய்ப் போற்றி
வருசவெமன் பகையடக்கித் தீர்க்காயுசாய்ப்
புவியில் வாழ்கின் றனே
தருவைநிகர் தென்னியம நகரில்வளர்
செயங்கொண்டார் தமிழ்சேர் நாட்டில்
பெருமரத்தைச் சுற்றுகின்ற வள்ளியுஞ்
சாகா தெனவே பேசுவாரே.

என்றது :—மார்க்கண்டேயருக்கு ஈசுபரன் பதினறு வயது கட்டளையிட்டிருக்க, மார்க்கண்டனைப் பிடிக்கவந்த எமனையும் வென்று மார்க்கண்டனுக்கு என்றும் பதினறு என்று அனுக்கிரகம் பண்ணினர். ஆதலால், **"பெருமரத்தைச் சுற்றிய வள்ளியுஞ் (வள்ளிக் கொடியும்) சாகா,"** தென்றவாறு. (2)

### தருமமே தலைகாக்கும் அதர்மமே அழிந்துவிடும்.

அருமைசெறி பாண்டவர்கள் பங்காளி
செய்கொடு மையால் காடாண்டும்

உரிமையுடன் தருமர்செய்(த) நன்றியினுல்
திரும்பவும் வந்துலகை யாண்டார்
பருவரையை வில்வளைத்த செயங்கொண்டார்
எவரும் பண்பாய்ச் செய்த
தருமமே தலைகாக்கும் அதர்மமே
அழிந்திடு மெனவுஞ் சாற்றுவாரே.

*என்றது :—பஞ்சபாண்டவர்களைப் பங்காளிகளாகிய துரியோதனுதிகள் சபையிலே துரோபதியம்மனைத் துகிலுரிந்தும், பாண்டவர்களை அரக்கு மாளிகைக்குள்ளே விட்டு நெருப்பை வைத்தும், முன் வனசஞ்சாரமாய்த் திரியும் நாளில், காட்டிலே வாவிகளிலே இருக்கிற தண்ணீரிலே விஷத்தைக் கலந்தும் இப்படிக் கொடுமைகள்செய்ய, அதற்கெல்லாம்தருமராஜர் சகிப்பினுலே துரியோதனுதிகளைச் செயம்பண்ணி, திரும்பவும் வந்து கங்கை நாடாகிய அத்தினுபுரச் சீமையை ஆண்டு சுகமே இருந்தார்கள். ஆதலால்,* **''தர்மம் தலைகாக்கும் அதர்மம் அழிந்துவிடும்,''** *என்று உலகு சொல்லியது என்றவாறு.* **(3)**

**தொழுவா னெல்லாம் உழுவான் தலைக்கடையில்.**

உழுதிளையாங் குடிமாரன் முளைவாரி
அன்னமன்பர்க் குதவிப் பாரில்
வழுவாத கீர்த்தியுடன் ஒருநாளும்
கேடில்லா வாழ்வு பெற்றுன்
மழுவேந்துங் கரதலத்தார் செயங்கொண்டார்
வள நாட்டில் மறைக ளோதி
தொழுவானெல் லாமுழுவான் தலைக்கடையி
லென்றுலகஞ் சொல்லுங் காலே.

*என்றது :—இளையாங்குடியில் மாறனென்ருெரு சமுசாரி விவசாய முயற்சியினுலே அநேக தர்மங்களைச் செய்து வருகிற நாளையிலே மகாதேவர் பரிசோதனை செய்து வீட்டிலே அமுது படிக்கில்லாமலிருக்கையில் பசிக்குதென்று அன்னங் கேட்கு மிடத்தில் இல்லையென்று சொல்ல நாவெழாமல் அன்றைய தினம் தொளியில் (சேறு) விரைத்திருந்த விரையை (வித்து) அரித்துக்கொண்டு வந்து அமுது பண்ணி ஈசுவரனுக்கும் அமுதில்லையென்று சொல்லாமல் சாதம் படைத்து முத்தி சேர்ந்தான். ஆதலால்,* **''தொழுவா னெல்லாம் உழுவான் தலைக்கடையில்,''** *என்று உலகஞ் சொல்லுமென்றவாறு.* **(4)**

**வஞ்சகம் நெஞ்சைப் பிளக்கும்.**

மிஞ்சியசெவ் வேள்சிவனுர் மந்திரத்தை
ஒளித்திருந்து வினவிக் கேட்கப்

பஞ்சமுகன் சபித்தொருமீ னெனக்குகனும்
கடலில்மெத் தப்பட்டுத் தீர்ந்தான்
செஞ்சரணத் தாலெமனை வென்றுசெயங்
கொண்டாரே தேவ ரென்றும்
வஞ்சகம்நெஞ் சைப்பிளக்கு மிதுவுலகில்
நிசவசன வார்த்தை தானே.

என்றது :— செவ்வேளாகிய கந்த சாமியாரைப் பக்கத்திலே வைத்து மகாதேவர், மகாதேவிக்கு பரம ரகசியமான பிரணவ மந்திரம் சொல்லும்போது, சுப்பிரமணியர் வண்டு வடிவங்கொண்டு பார்வதி செவியின் அண்டையிலே (அருகிலே) வந்து, இருந்துகொண்டு மந்திரத்தைக் கேட்டுக்கொண்டதை சிவனறிந்து செவ்வேளை மகர மீனுகச் சபித்துக் கடலிலே விட்டு, பார்வதியை நீ மந்திரம் சொல்லச் சொன்னதால் அந்த ரகசியம் மூன்றும் பேருக்குத் தெரியப்பட்டதென்று அவளைக் கடலிலே (கடலோரப் பிரதேசம்) பிறந்து கரையானுகிய அதி அரசனுக்குப் (மீனவத் தலைவன்) பிள்ளையாக விருமென்று சபித்தார். அப்படி இருக்கிற நாளையிலே அதியரசன் அந்த மகரத்தைப் பிடித்த பேருக்கு இந்தப் பெண்ணை விவாகம்பண்ணிக் கொடுக்கிறேமென்று பிரதிக்கினை பண்ணியிருக்கையில் மகாதேவர் விருத்தாப்பியமான பழங் கிழவனுக வந்து மகரத்தையும் பிடித்துச் சாபத்தையும் நிவர்த்திபண்ணி அதியரசன் மகள் திரைசேர் மடந்தையாகிய பார்வதியையும் விவாகம் பண்ணினுர். ஆகையால், தேவர்கள் முனிவர்களாகிலும் செய்த "வஞ்சகம் நெஞ்சைப் பிளக்குமென்று," உலக வசந்தை (வழக்கு) சொல்லுவார்கள் என்றவாறு. (5)

## பெரியோர்த் துணைக்கோள்.

அரியோனைக் கவுசிகன்பால் விடமலைத்தான்
தசரதன் விட்டதற்கு லாபம்
கரியோன்தான் அதிசவுரியந் தனக்குந்
தனுவினுக்கும் கமலத் தாட்கும்
உரியோனு கியதுமுனி செயலன்றே
செயங்கொண்டா ருலகந் தன்னில்
பெரியோரைத் துணைக்கொள்ளென் றவ்வையார்
வாக்கியத்தி லொன்றும் பிசகிடாதே.

என்றது :— விசுவாமித்திரர் தசரத மகாராசாவிடத்தில் வந்து, நான் செய்கிற யாகத்திற்கு இடைஞ்சல் செய்கிற ராக்ஷதரைச் சங்காரம்பண்ணி என் யாகத்தை நிறைவேறும்படி பண்ணித்தா. உன் மகன் இராமனை என் பின்னே

கூட்டியனுப்பென்று சொல்ல, ராசா ரொம்பவும் விசனப்பட்டுச் சிறு பிள்ளையை இராக்ஷதருடனே யுத்தம் பண்ணச் சொல்லி கூட்டியனுப்புகிறது எவ்விதமென்று மலைக்கிறபொழுது, வசிட்டர் வந்து ராசாவையும் சமாதானம்பண்ணி ராம சுவாமியை விசுவாமித்திரரிடத்தில் கூட்டி யனுப்ப, இருவரும் போய் தாடகை சங்காரமும் பண்ணி வேள்வியும் முடித்து, அப்பால் ரிஷியானவர் மிதிலைக்குக் கூட்டிப்போய் சீதையை ராமருக்கு விவாகம் பண்ணிவைத்துத் திரும்ப வரும் வழியிலே, பரசுராமர் கைவில்லும் வாங்கிக்கொண்டு, அநேக சந்தோஷத்துடனே ராமசுவாமி அயோத்தியாபுரி பட்டணம் வந்து சேர்ந்தார். இவ்வளவும் விசுவாமித்திரர் செயலினுலே நடந்தது. ஆதலால், சகல லோகமும் பணி பாதராகிய செயங்கொண்டார் உலகில், "ஔவை வாக்கியம் பெரியோரைத் துணைக்கொள்," என்று உலக வழக்கம் வழங்கும் என்றவாறு. (6)

### ஆனைநிழல் பார்க்கையிலே தவளைவந்து கலக்கிவிடும்.

பானுகுல ராமனுக்குப் பட்டாபி
ஷேகமெனப் பகர்ந்த போது
கூனியொரு மித்திரத்தைக் கெடுத்து
வனமுறைய விட்டகொள்கை போலே
மானணியுங் கரத்தாரே செயங்கொண்டார்
புவியில் மகிமை சேர்ந்த
ஆனை நிழல் பார்க்கையிலே தவளைவந்து
கலக்கிவிடு மதுமெய் தானே.

என்றது :—சூரியகுல வங்கிசத்தில் இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்ய முகூர்த்தம் வைத்து இன்றைக்கு நடப்புவிக்கிறதென்று தெம்பாய்(மனக்களிப்பாய்) இருக்கையிலே சிறிய தாயார் வீட்டு ஊழியக் காரிச்சி ராமர் பேரில் முன் விரோத மிருந்த நிமித்தம் வெகு நாளாய் மறந்துபோன வியாச்சியத்தை கைகேசிப் பிராட்டியாருக்குத் தெரியப்படுத்தி, அவள் தசரதருக்குச் சொல்லி, ராசா மனத்தைக் கலக்கம்பண்ணிப் பரதருக்குப் பட்டம் என்றும், ராமர் பதினன்கு வருடத்திற்கு வனவாசம் போகிறதென்றும் தீர்மானமாச்சுது. அதுபோலே, மகாபலத்தோடுங் கூடிய பார்வாசியாகிய (பூமியில் வசிக்கும்படியான) "யானை தண்ணீரிலே நிழல் பார்க்கும்போதுசிறிதாகிய தவளை கலக்கிப்போடுமென்று," உலகவழக்கம் சொல்லும் என்றவாறு. (7)

### படைக்குப் போகாதவர் நல்ல சேவகர்.

தொடைக்கிலங்கு மார்பனிலக் குவன்கை
வலுவென்று மகன்சொன்ன பேச்சை
அடக்கிரா வணன்நாளை ஓரம்பால்
நான்வெல்வேன் அறியென் ருப்போல்

சடைக்கிதழி மாலையணி செயங்கொண்டார்
எதிரி தளத்துக் கஞ்சிப்
படைக்குப்போ காதவர்கள் நல்ல
சேவக ரெனவும் பகருவாரே.

என்றது :— மாலைக்கிலங்கு மார்பனாகிய இலக்குமணருடனே இந்திரசித்து வேள்வி அழிந்து போனதையும் அறிந்து, நம்மாலே இவனைச் செயிக்க மாட்டோமென்று தகப்பனாகிய இராவணனிடத்திலே போய், இலக்குமணன் கை வலுவென்றும், அவனைச் செயம்பண்ணுகிறது பிரயாசமென்றும் (கடினம்) சொன்னவுடனே ராவணனுக்குக் கோபமும் சிரிப்பும்வந்து, "அடா சிறு பிள்ளாய்! யுத்த முகத்திலே எதிராளியைப் புகழ்ந்து பேசுகிறதா நீ, நானே போய் இலக்குமணனையும் இராமனையும் ஓரம்பினாலே செயம்பண்ணுகிறேன்" என்றான். இந்திரசித்துக்கத்தகம்(எண்ணம்)இலக்குமணர் அண்டையிலேபோய், பொருது எதிரியால் வாட்டப்பட்டாலல்லோ தெரியும்என்பது. ஆகையால்,"**படைக்குப்போகாதவர்கள் நல்ல சேவகரென்று,**" உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (8)

### ஊர் இரண்டானால் கூத்தாடிக் கழகு.

பேரிலுயர் வாலிசுக் கிரீப
ரிருவரும் பகையாய்ப் பிரியராமர்
காரியத்திற் காகிவந்து கடலடைத்துச்
சிறைமீட்ட கணக்குப் போலே
மேருவைவில் லாய்வளைத்த செயங்கொண்டார்
உலகில் விளங்குஞ் சொல்லு
ஊரிரண் டானதினால் கூத்தாடிக்
கழகெனவு முரைத்த வாரே.

என்றது :— வாலியும் சுக்கிரீபனுமாக இருபேருக்கும் ஒப்புதலில்லாமல் விரோதமாய்ப் பிரிதலாயிருக்கும்போது, இராமரும், இலக்குமணரும் சீதையைக் காணாமல் தேடி வரும் வழியிலே சுக்கிரீவன் ராமசாமியைக் கண்டு பேசி, சுக்கிரீவனை ராமர் சேர்த்துக்கொண்டு, வாலியை இறக்கப்பண்ணினதால் சுக்கிரீவனும் அவன் படையும் ராமசுவாமிக்கு உதவியாக கடலையுமடைத்து இலங்கையில் போய் இராவணனைச் செயம்பண்ணி, இராமருக்குச் சீதையைச் சிறை மீட்டுக் கொள்ள நேர்ந்தது, ஆனதால், "**ஊர் இரண்டானால் கூத்தாடிகளுக்கு (நல்லது),**" என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (9)

### நெல்லோடே பதரும் அசத்தினி லதரும்.

செல்லோடே யிணங்குகடல் திருவுடன்மூத்
தாள்பிறந்த செயலும் பாரில்

நல்லோடைச் சலத்திலுசிலம் பாசி
பிறந்திருக்கும் நடத்தை பார்த்தேன்
வில்லோடே மோதியதோள் செயங்கொண்டார்
வயலில் விளைவுண் டான
நெல்லோடே பதருமசத் தினிலதரும்
பிறந்திருக்கும் நேர்மை தானே.

*என்றது :— மேகம்படியும் பாற்கடலிலே பிறந்த திருவென்னும் இலக்குமியுடனே மூத்தாளாகிய சேட்டைப் பெண் (மூதேவி) பிறந்ததும், ஓடையாகிய குளங்களிலே பெருகிய நல்ல தண்ணீரிலே உசிலம்பாசி பிறந்திருக்கும் நடத்தை (தன்மை) பார்க்கில் அருச்சுனன் காண்டீபத்தால் அடிபட்டபோது தோள்வலியுடைய செயங்கொண்டார் நாட்டில் உலக வழக்கம்,* **"நெல்லோடே பதரும் ஆட்டுக் கழுத்தி லதருமென்று,"** *உலகஞ் சொல்லியது என்றவாறு.* (10)

**சுங்க மாறியபோது சுண்ணும்பும் கொடுக்கார்.**

நங்கமல வாணிகம்ப ரிடத்திருக்கத்
தண்டிகையில் நலமாய் வாழ்ந்தார்
அங்கவள்தான் பிரிந்தபின்பு கம்பர்தகக்
காலிதனக் காளா ஞரே
செங்கையுகி ரால்வேதன் சிரசிலொன்றைத்
துணித்துவிட்ட செயங்கொண் டாரே (உலகில்)
சுங்கமா றியபோது சுண்ணும்பும்
கொடுக்கார் தொல்புவியு ளாரே.

*என்றது :— கமலவாணியாகிய சரசுவதி கம்பரிடத்தில் அகலாமலிருக்கும்போது கம்பருக்கு அளவற்ற பாக்கியமும் பல்லக்குத் துரையாகவும் கற்றுச் சொல்லிகள், எழுநூறு தண்டியலங்காரரும், ராசாக்களும் அதிகமாக வாழ்ந்திருந்தார். கம்பர் பல்லக்குப் பின்னாலே எழுநூறு தண்டியல் புறப்படுகிறதினாலே எந்தப் பக்கத்தில் பல்லக்குப் பிடித்தார்களோ அந்த வழியிலுள்ள புன்செய் நன்செய்ப் பயிர்களெல்லாம் துவைந்து சேதம்போகிறது. நிலம் சாதனம் எழுதுகிறபோது* **கம்பர் போன வழிகண்டு கழித்துக்கொள்ளக் கடவோமாகவும்** *என்று எழுதிக்கொள்ளுகிறது. அப்பால், கம்பரைவிட்டு, சரசுவதி ஒதுங்கின மாத்திரமே, கம்பரிடத்தில் செல்வமும்போய் வாக்கும் பலியாமலிருந்ததால் சீவனத்திற்குக் கட்டாமல், சோழ தேசம் விட்டுத் தெற்கே நாட்டரசங் கோட்டையிலே வந்து,* **''நெல்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே,''** *என்று வேலியென்கின்ற செட்டிச்சிக்கு கூலிக்குச் சுவர் வைத்தார். ஆதலால், உகிராகிய நகத்தினாலே பிரம்மாவின் தலையிலொன்றைத் துணித்த செயங்கொண்டாருலகில்* **"சுங்க மாறினல் சுண்ணும்பும் கொடுக்கார்,"** *என்று உலக வழக்கம் சொல்லும் என்றவாறு.* (11)

பார்ப்பானுக்கு வாய்ப் போக்காதே, ஆண்டிக்கு அதுதானும் சொல்லாதே.

தாப்பாய்வா மனன்கையிலே மாவலிதண்
ணீர்விட்டுத் தரணி யேதான்
வாய்ப்பாய்க் கோசிகர்க்கு முன்னு
லரிச்சந்திரன் ஆசைசொல்லி மனைவிவிற்ருன்
தீய்ப்போலே விழிகாட்டி மதனுடலை
யெரித்துவிட்ட செயங்கொண் டாரே
பார்ப்பார்க்கு வாய்ப்போக்கா ஆண்டிக்கு
அதுதானும் பகரொண் ணுதே.

என்றது :—தாப்பாகிய இடத்திலே மகாவிட்டுணுவானவர் வாமன ரூப மெடுத்து மாபலி வாணனிடத்தில் மூன்றடிமண் பூமி இரவலர்கக் கேட்டார். முன் (பின்) வரும் காரியம் தெரியாமல், சுக்கிர பகவான் பின்வரும் காரியம் அறிந்து சொன்னதும் கேளாமல்,வாமனன் கையிலே மூன்றடிமண் தாரைவார்த்த நிமித்தம் பூமி ஓரடியும், ஆகாசம் ஓரடியும், அவன் சிரசு ஓரடியுமாக அளந்தார். பின்னும், பிராமணப் பிள்ளையாகிய விஷ்ணுவானவர் மாவலிராசன் பூமியை அபகரித்துக் கொண்டார். வாய்ப் பாதத்தானே (வாக்குத் தத்தம்) பின்னும் கோசிகராகிய விசுவாமித்திர சுவாமியார் அரிச்சந்திரனிடத்தில் போய் யாகத்திற்குத் திரவியங் கேட்க, அவர் கேட்ட திரவியங்கொடுக்க அதை வாங்கிக்கொண்டு போகாமல் அவர் பொக்கிசத்தில் தானே முத்திரைபோட்டுவை. பிறகு வந்து எடுத்துக் கொள்ளுகிறேன் என்று போனவர் பின்பு வாணப் (பாணர் சாதிப்பெண்கள்) பெண்களைக் கூட்டி வந்து அரிச்சந்திரனைப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொள்ளச் சொல்ல, அப்போது அரிச்சந்திரன் என் பாக்கியத்தையுந் தேசத்தையுங் கேட்டாலுந் தருகிறேனென்று சொன்னதே அன்னியில் பாணப் பெண்களை நான் மணஞ் செய்ய மாட்டேனென்று சொல்ல, அந்தச் சொல்லுக்குச் சாட்சிவைத்து திரவியமும் தேசமும் தந்ததே சரி, முன் யாகத்திற்குத் தாரைவார்த்த திரவியத் திற்கு மறு தேசத்திலே போய் சம்பாதித்துத் தாவென்று நட்சத்திரப் பிரிவும் (நச்சுத்தரகனும் கூட அனுப்பி) விட்டு அது நிமித்தம் அரிச்சந்திரன் காசிப் பட்டணத்திலே போய் பெண்சாதியையும் பிள்ளையையும் விற்றுத் தானும் புலைய னுக்கு அடிமைப்பட்டுக் கடன்தீர (தீர்க்க) வேண்டி வந்தது. அப்படிப் போல, "பார்ப்பானுக்கு வாய்ப் போக்காதே, ஆண்டிக்கு அதுதானும் சொல்லாதே", என்று உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (12)

வெண்ணீறே வினையகற்றும்.

பண்ணுருங் கவுணியர் விபூதியினுல்
வழுதிசுரம் பாதி தீர்த்தார்

எண்ணுயிரஞ் சமணர் திருநீற்றை
மறந்து கழுவேறி மாய்ந்தார்
பெண்ணுரைச் சடையில் வைத்தசெயங்
கொண்டாரே உலகில் பெருமைசேர்ந்த
வெண்ணீறே வினையகற்றும் உண்மையுடன்
தரிப்பவர்க்கே மெய்ய தாமே.

என்றது :—மதுரையில் சமணர் எண்ணுயிரம் பேரும் திருநீற்றைத் தள்ளிப் பாண்டியனையும் சமணத்திலே உள்ளாக்கி இருக்கும் நாளிலே, இவர்கள் திருநீற்றைத் தள்ளினது ஈசுரனுக்குப் பொறுக்காமல் பண்ணுகிய தமிழார்ந்த கணியாகிய சம்பந்தமூர்த்தி சமணரையழிக்கத் திருவவதாரம் செய்து மதுரையில், பதினுயிரஞ் சிவ பக்தர்களுடனே கூட்டமாய்ப் போயிருந்து, அவ்வளவு பேரும் சர்வாங்கமும் விபூதி ருத்திராக்க மாலை ஆபரணமாய் 'அரஹரா' வென்ற சத்தம் கடல் முழக்கம் போலே முழங்கியிருந்த தருவாயில், பாண்டியனுக்கு சரீரத்திலே காய்ச்சல் கண்டு வருத்தமான வேளையிலே சமணர்களெல்லாரும் சமண மந்திரங்களால் உச்சாடனம்பண்ணின விடங்களில் அந்தக் காய்ச்சல் அதிகமாக இருந்ததினுலே, அப்போது சமணர்களுக்கும் சம்பந்தமூர்த்திக்கும் வாது வந்து சமணர்களின் மந்திர புத்தகங்களையும் சம்பந்தமூர்த்தி சிவபுராணங்களையும் அக்கினியிலே போட, சமணர்களின் ஏடு வெந்துபோக சம்பந்தமூர்த்தி ஏடு வேகாமலிருக்க, மீதியுள்ள இருவகை ஏடுகளையும் வைகைச் சலத்தில் போட, சம்பந்தமூர்த்தியேடு எதிரேறிக் கரைசேர்ந்த இடம் '**திருவேடகம்**' என்று பெயராயிருக்கிறது. சமணர்களின் ஏடுகளெல்லாம் தண்ணீர் வாரிக்கொண்டு போக அதிலே ஒரு ஏடு நாலடி எதிரேறிக் கரைசேர, அதை **நாலடியாரென்று** ஒப்புக்கொள்ள. பாண்டியன் வெதுப்பு நோயை, சமணர் தீர்த்தால் சம்பந்தமூர்த்தியார் தானே கழுவேறுகிறதென்றும், சம்பந்தமூர்த்தி தீர்த்தால் சமணுள் தாமே கழுவேறுகிறதென்றும் சபதம் வைத்துக்கொண்டதால் சமணர்களால் தீரவில்லை. சம்பந்தமூர்த்தியின் விபூதியால்,பாண்டியனுக்கு சுரந் தீர்ந்தது. சமணர் எண்ணுயிரம் பேரும் தாமே கழுவேறி மாய்ந்தார்கள். ஆதலால், "**வெண்ணீறே வினையகற்றும்**" என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. — (13)

முள்ளா லெடுப்பதுவை விட்டுக் கோடரியால் பிளப்பதுபோல்.

புள்ளாலே பொறியரவத் துசன்மடிந்தால்
தருமருக்குப் பொரும்போ ருண்டோ
துள்ளாடத் திருப்பிவிட்டுப் பிறகவனைச்
செயிக்க மெத்தத் தொல்லையாச்சே

வெள்ளானைக் கிறைபணியும் செயங்கொண்
டாரே பகையை மெலிவியாமல்
முள்ளாலே எடுப்பதுவைக் கோடரியா
லெடுத்த முறைய தாமே.

என்றது:— புள்ளாகிய சக்கரவாளப் பட்சியானது அரவத்துவசனாகிய துரியோதனன் பஞ்ச பாண்டவர்களைக் காட்டிலே விரட்டின கொடுமை தாங்க மாட்டாமல் கோழிக் குஞ்சைப் பறந்து எடுத்துப் போவது போலே புள்ளானது துரியோதனனைத் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாகப் போகிறபோது துரி யோதனன் பாண்டவர்களுக்கு அபயமென்று வாய்விட்டலறினது வனத்திலே திரிந்த தர்மராசனுக்குக் கேட்கப்பட்டு அர்ச்சுனனைப் பார்த்து நம்முடைய தமையனாகிய துரியோதனனைப் புள் எடுத்துப் போகிறது. நாம் பார்த்திருக்கக் கூடாது. அவனைத் திருப்பிவிடு தம்பீ என்று தர்மராசன் சொல்ல காண்டீபன் பாணப் பிரயோகத்தினாலே துரியோதனனைப் புள்கொண்டு வந்து விடும்படி பண்ணினான். அந்தத் துரியோதனனைத் துள்ளாட்டங்கொள்ளும்படியாய் அவ னுடைய கங்கை நாட்டிலே கொண்டுபோய் விட்டார்கள். அப்பால், வனசஞ்சாரம் பன்னிரெண்டு வருடம் சென்று விராடன் பட்டணத்திலே இருந்துகொண்டு சீர்மை பிரித்துவிடச் சொல்லி கிருஷ்ண தேவரைத் தூதனுப்பினதில் துரியோத னன் பாண்டவர்களுக்குச் சுத்தமாய்ப் பூமிகிடையாதென்று சொல்லிப்போட்டான். திரும்ப சண்டைக்கிடமாகி அந்தச் சண்டையிலே கிருஷ்ணமூர்த்தி, குருவாகிய துரோணாசாரியார், கிருபாசாரியர், அசுவத்தாமா இப்படி இஷ்டமான பேரெல் லாருமிருந்து பாண்டவர்கள் துரியோதனாதிகளைச் செயித்து கங்கை நாடு பெற்றார் கள். அந்தத் துரியோதனனைப் புள்ளெடுத்துப் போனபோது திருப்பாமல் விட்டு விட்டால், இவ்வளவு துன்பத்திற்கிடமில்லையே. ஆனதால், "**முள்ளாலே எடுப்பது வைக் கோடரியா லெடுக்கிறதாவென்று,**" உலகவழக்கம் சொல்லும் என்றவாறு. (14)

**கொண்டவன் தூற்றினல் கூரையுந் தூற்றும்.**

பண்டுலகில் அகலியைஇந் திரன்களவாய்த்
தழுவி வெளிப்படுஞ் சாலத்தைக்
கண்டுமுனி சகியாம லிருவரையும்
சபித்ததனால் கனச்சொல் லாச்சே
இண்டைபுனைச் சடையாரே செயங்கொண்
டாரே புவியிலில்லாள் பேச்சைக்
கொண்டவன்தூற் றும்போது கூறையொக்கத்
தூற்றுமெனக் கூறு வாரே.

என்றது:—முன்னுளிலே அகலிகையைத் தேவேந்திரனிச்சைப்பட்டுப் பாதி சாமத்திலே போய்க் கோழியாகக் கூவினன். அப்போது அகலிகைக்கு நாயகனுகிய கௌதம ரிஷியானவர் விடியற்காலமாச்சுதென்று நியமநிஷ்டை முடிக்கிறதற்கு தடாகத்திற்குப் போய்ப் பார்க்குங் காலையிலே கங்கை நித்திரைபண்ணினது கண்டு கோழி கூவின பிற்பாடு கங்கை நித்திரை பண்ணுகிருளே, இது என்ன காரணமென்று ஞானதிருஷ்டியால் பார்த்தார். கூவினது கோழியல்ல. இது தேவேந்திரன் புரட்டென்று சாக்கிரதைக்குத் தன்னுடைய ஆசிரமத்திற்கு ஓடி வரும்போது, தேவேந்திரன் ரிஷியாருடைய ஆசிரமத்தில் புகுந்து அகலியைத் தழுவிக்கொண்டு வெளியிலே வரும்போது கௌதம ரிஷியானவர் வர, அவசர மாய் வருகிறது தெரிந்து மார்ஜாலமாகிய பூனை வேடங்கொண்டு வெளியிலே புறப் பட்டது கண்டு, அடா தேவேந்திரா! நீயொரு யோனிக்காசைப் பட்டல்லவோ வந்தாய்; உன் சரீரமெல்லாம் ஆயிரம் யோனியாகக் கடவதென்றும் அகலியை கருங்கல்லாய்ப் போகக் கடவதென்றும் சபித்தபடியினுலே, அது மூன்று லோகத் திற்கும் தெரியப்பட்டது (தெரிந்தது). உலகத்திற்கெல்லாம் சொல்லுக்கிட மாச்சுது. ரிஷியானவர் சகிப்புப் பண்ணினுல் பிறருக்குத் தெரியாதே. ஆதலால், இன்றையாகியத் தாமரைப் பூவையுந் தரிக்கப்பட்ட சடாபாரமுடைய செயங் கொண்டாருலகத்தில், "கொண்டவன் தூற்றினுல் கூறையுந் தூற்றுமென்று," உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. — (15)

**உடை குலைந்த பிறகு முறைமைகள் கொண்டாடுவரோ?**

கடனின்ற சந்திரனைக் குருமனைவி
கலந்தணையக் கருதி வாவென்
றிடவுமதி தொடலாமோ பின்வருவ
தறியாம லிணங்கி னுனே
சடையிலங்க கங்கையணி செயங்கொண்
டாரே மதனசரந் தாங்காமல்
உடைகுலைந்த பிறகுசொந்த முறைமைகொண்
டாடுவரோ வுலகுள் ளோரே.

என்றது:—கடலிற் பிறந்த சந்திரனின்மேல் குருவாகிய வியாழ பகவான் மனையாள் மோகமாகி மேல் விழுந்து வலிய அழைத்தாள். சந்திர பகவான், அவள் வலிய மேல் விழுந்தாலுங் குருபத்தினியை நாம் கூடும்போது பின்னுக்குத் துன்பம் வருமென்று நினைக்க வேண்டும். அப்படி நினையாமல் சந்திரனுக்குக் காம பாண மோகத்திலே சம்மதிக்கக் கூடினுர். அந்த நியாயம் வியாழ பகவானுக்குத் தெரியப்பட்டு சந்திரனை இறந்து போகும்படிச் சபித்தார். அப்போது சந்திர னில்லாததனுலே இந்த வர்த்தமானம் தேவதைகளுக்குத் தெரியப்பட்டு அந்த வியாழ பகவான் தேவதைகளுக்கெல்லாம் குருவானபடியினுலே அவரிடத்திலே தேவதைகளெல்லோரும் வந்து தேவரீர் தயவு வைத்து சந்திரனை உண்டுபண்ணித்

தர வேணும். சந்திரனில்லாமல் சஞ்சரிக்க மாட்டோம். எங்களை வேண்டிக் கிருபை செய்ய வேண்டுமென்று மிகவும் வருந்தியதாலே வியாழ பகவானுக்கு இரக்கம் வந்து, இறந்த சந்திரன் சும்மாவருகிற தெய்விதமென்று பூர்ணசந்திரனைப் பார்த்து நிலவுதான் தாயுந் தகப்பனுமென்று உலகஞ் சொல்வதால் தாய் தந்தை யில்லாத பேர்கள் அமாவாசை யென்றொரு விரதஞ் செய்கிறது; விரதஞ் செய்த மூன்றும் நாள் விரதப் பணியிலே மாகாணிச் (சிறிய ஓர் அளவு) சந்திரன் பிறக்கிறது. நித்தம் மாகாணியாய் பதினாறும் நாளில் பூர்ண சந்திரனாகிறது. அப்பால் நித்திய மாகாணித் திறங்குறைந்து பதினாறும் நாளில் இறக்கிறது. இறந்தவன்றைக்குத் திரும்பவும் அமாவாசை நடப்பிவிக்கிறது. அந்த விரதப் பலனால், திரும்பப் பிறக்கிறதென்று ஒரு வழிவிட்டார் (காட்டினார்). அந்த நாள் முதல் நெடுகிலுமப்படி நடந்து வருகிறது. ஆனதால், கங்காதரராகிய செயங்கொண்டாருலகத்தில்,'உடை குலைந்தபிறகு முறைமை கொண்டாடுவார்களோ' வென்று உலக வழக்கச்சொல் விளங்குமென்றவாறு. — (16)

## புத்திமான் பலவானாவான்.

சுத்துமளக் கலிங்கமென்னும் கடல்சூழும்
சிக்காந்தத் துருவந் தன்னை
எத்தும்விலை மாதர்களால் பண்டுகரு
ணாகரன்வென் றெடுத்தா னன்றோ
கைத்திகிரி யோன்பணியும் செயங்கொண்
டாரே மிகுந்தகருத் துண்டான
புத்திமான் பலவானா வானெனவுஞ்
சொல்லியசொல் பொருந்துந் தானே.

என்றது :—கலிங்கமானது, ஆழ்கடலிலே, ஊசிக் காந்தத்தினாலே ஆகிய கோட்டைகளைக் கொண்டது. அந்தக் கோட்டைக்குள்ளே பெண்களல்லாமல் ஆண் பிள்ளைகள் ஆயிரம்பேர் சுத்த வீரர்களாயிருந்தார்கள். மற்ற தீவுகளிலே இருக்கிற பேர்கள் அந்தக் கோட்டையைக் கைவசம்பண்ணவெண்ணி, கப்பல் களிலே படையேற்றிக் கோட்டையின் பேரில் சண்டைநடத்தி பீரங்கிக்குண்டுகளி னாலே, ஊசிக் காந்தக் கோட்டையை இடிக்க வேண்டுமானால், அந்தப் பீரங்கிக் குண்டு போகிறபோது, அது ஊசிக் காந்தக் கோட்டையாகையினால், வலிய அந்தக் கோட்டைக்குள்ளிருக்கிற குண்டை யிழுத்துக் கோட்டைக்கு வலுக் கட்டி னாப்போலே, கோட்டைக்கு மேலே குண்டுகள் ஒட்டிக்கொண்டிருக்கிறது. ஆத லால், அந்தக் கோட்டையை ஒருத்தராலேயும் வாங்கக் கூடாமலிருக்கிற நாளை யிலே, கரிகாற் சோழ ராசாவும் மந்திரி கருணாகரன் புத்தி கோசாரத்தினாலே (கூர்மையினாலே) கொலு தாசிகளிலே சமர்த்திகளாகவும் யௌவனமான ரூப வர்ணங்கள் வாய்ந்தவர்களாகவும் ஆயிரந் தாசிகளைச் சமுத்திரக்கரையில் மாடிவீடு

கட்டி அதில் கொண்டுபோய் வைத்து ஆயிரம் பேரும் ஆடையாபரண பூஷணாதிகளாலும், களப கஸ்தூரி பரிமள சுகந்தாதிகளாலும் அலங்காரம் செய்து ஆயிரம் மாடிகளிலும் ஆயிரம் பேரும் ஆயிரம் பூர்ண சந்திரோதயம் போலே வதனங்களைக் காண்பித்து நிற்கப்பண்ணினான். அந்த நிதானத்தைக் கலிங்கக் கோட்டையார் கண்டு இந்த அதிசயத்தைப் போய் பார்த்து வர வேண்டுமென்று நாலு பேர் ஆறு பேர் புறப்பட்டுக் கள்ளப்பாதை வழியாய் சீக்கிரம் சமுத்திரக்கரை மாடி வீடுகளையடுத்துவந்து பார்க்கும்போது, அந்தந்த ஆளுக்கு ஒரு தாசியாக இறங்கி வந்து உபசாரம்பண்ணிக் கூட்டிப்போய் அறுசுவை பதார்த்தங்களுடனே சாப்பாடு பண்ணிவைத்துச், சப்பிர மஞ்சகோளத்தின் பேரில் அநேக லீலாவிநோதங்கள் நடத்துவித்து, வெகு நயங்களைக் கொடுத்து அனுப்புவிக்க அவர்கள் கோட்டை போய் சேர்ந்து, அவனவனுக்கு இஷ்டமான பேர்களைத் திரும்பக்கூட்டி வருகிறது. அவர்களும் (தாசிகளும்) அந்தப்படிக்குத் தாசிகள் நயங் கொடுக்கிறது. ஆக இந்த வகையாய் ஆயிரம் பேரும் ஆயிரந் தாசிகள் வீட்டிலும், ஒரு தினத்தில் வந்து சேரும்படி லாலினை (இச்சக வார்த்தை)ப் பண்ணி ஒரு தினத்தில் வந்து சேர்ந்தவுடனே ஆயிரம் வீட்டுக் கதவையும் கெட்டிப்பண்ணிச் சாத்திக் கொண்டவளவில் விடியற்கால மாச்சுதென்று, ஆயிரம் பெண்களையும் ஆயிரம் புருஷர்களும் கதவு திறந்துவிடச் சொல்லி, பரிதாபப்பட்டவர்களை, முன் பாடியிருக்கிற கலிங்கத்துப் பரணியைப் பாடச் சொல்லி அதற்கு உரை கேட்டால் அந்த நயமும், சிங்காரமும், அர்த்தபாவங்களும் (பொருள் நயங்கள்) தெரியவரும். அந்தப் பெண்கள் கதவு திறவாமல் விடிந்த பிறகு கருணாகரனும் படையுமாக வந்து கதவு திறந்து ஆயிரம் பேரையும் கைவசம்பண்ணி அவர்களைக்கொண்டு, தானே அந்தக் கலிங்கக் கோட்டையைக் கைவசம் பண்ணினான். ஆதலால், கைத்திகிரியாகிய சக்கரத்தைக் கையிலேஎடுக்கப்பட்டமகாவிஷ்ணுபணிபாதராகியசெயங்கொண்டாருலகத்திலே, **'புத்திமான் பலவானாவான்'**, என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (17)

## நடுச்சொல்வோர் அறிவுடையோர்.

ஆளைப்போல் வருமிருகந் தனக்கும்
வீமனுக்கும் வழக்கான நியாயம்
ஏழைக்கா தரவுதருமர் வீமனுடல்
பாதி மிருகத்துக் கென்றார்
வேழப்போர் வையைத்தரித்த செயங்கொண்
டாரே சீனிவெல்லம் போட்டு
நாழிப்பால் வார்த்தாலும் நடுச்சொல்வா
ரறிவுடைய நியாயத் தாரே.

என்றது:— மானிட முகம் பொருந்திய புருஷா மிருகத்தினறையிலே துரியோதன ராசன் சத்திரசாலை எச்சில் மாற்றுகிறதற்கு வீமனைப் பால் வாங்கி

வரச் சொல்லி அனுப்ப, வீமன் போய் மிருகத்தின் பிள்ளைகளிடம் அன்பாய்ப் பேசி அந்தப் பிள்ளைகள் தாய் மிருகத்திற்கு வீமனைக் கொல்லாதபடிக்குப் பிரமாணமாய்ப் பேசி, வீமனுக்கும் மிருகத்திற்கும் பேட்டி பண்ணிவிக்க, வீமன் மிருகத்தினிடத்தில் பால் வாங்க வந்த காரியஞ் சொல்ல மிருகமானது பாலுங் கொடுத்து, உன்னைப் பலவானென்று கேட்டிருக்கிறோம்; உன் பலமும் என் பலமும் அறிய வேண்டியிருப்பதால் அந்தப் பாலையுங்கொண்டு என் சாகையிலிருந்து உன் பட்டணத்தின் எல்லைவரைக்கும் நீ ஓடு; அதற்குள்ளாக நானுன்னைப் பிடித்தால் உன்னைக் கொன்று போடுவேன். நீ மிஞ்சி ஓடினால் நீ பலவான் தானென்று சொல்ல, வீமனும் சம்மதித்துப், பாலுங்கொண்டு விரைந்தோட, அப்போது அந்த மிருகமும் துரத்த வீமன் எல்லையிலொரு காலும் இப்புறமொரு காலுமாய் ஓடின விடத்தில் வீமனை மிருகம் பிடித்துக்கொள்ள, வீமன் எல்லையில் வந்திட்டேனென்று சொல்ல, அந்த மிருகம் எல்லையில் பிடித்தேனென்று சொல்லி இருவருக்கும் வழக்காகி, வீமன் தமையன் ஏழைக்காதரவாகிய தருமராசனிடத்தில் போய், வீமனும் மிருகமும் நடந்த வயணஞ்சொல்ல, தரும நியாயத்தைக் கேட்டு, உன்னெல்லையிலே ஒரு காலும் என்னெல்லையிலே ஒரு காலும் நிற்கையில் நீ பிடித்ததாலே தச்சனை அழைத்து உளியினாலே வீமனை இரண்டாய்ப் பகிர்ந்து நீ பாதி கொண்டு போ; என்னிடத்தில் பாதி கொடு என்று, தம்பியென்றும் பட்ச பாரம் நினையாமல் நியாயம் சொன்னதாலே, அந்தப் புருஷா மிருகத்திற்குச் சந்தோஷம் வந்து, உன்னைப்போல தரும நியாயம் யார் சொல்லப் போகிறார்களென்று உன்னை வேண்டி வீமனை விட்டுவிட்டேனென்று தர்மராசனைப் புகழ்ந்து வனம் போய்ச் சேர்ந்தது. ஆதலால், "நாழிப்பால் வார்த்தாலும் நடுத்தரம் சொல்ல வேண்டுமென்று," உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (18)

### மூப்பு இளமை பழிக்கு இல்லை.

விழியெதிர் நில் லாதொளித்து வாலியை
மாலெய்து கொன்றுவிட வேவாளி
வழியுடனே மறுசென்மத்தில் பிறந்தரியை
எய்துபழி வாங்கி னானே
அழலுமழு வணிகரத்தார் செயங்கொண்டார்
நன்னாட்டி லமர ரென்று
பழிகிழவ னாகிவிட்டுப் போறதில்லை
யென்றுலகம் பகரு வாரே.

என்றது:—கண்ணுக்கு முன்னே நின்று எதிராளிக்குத் தெரியத்தக்க தாய் சண்டை செய்து எதிரியை வெல்லுவது தருமம். அப்படிக்கில்லாமல் மகா விஷ்ணுவானவர் ராமாவதாரத்தில் ஒளிந்திருந்து வாலியை எய்து கொன்று போட்டதால், அந்தக் கொலையானது வெகுகாலம் ஓட்டுதலாயிருந்து, மறு யுகத்திலே மகா விஷ்ணுவானவர் கிருஷ்ணவதாரஞ் செய்து, துவாபர யுகத்தில்

நடப்புவிக்க வேண்டிய காரியமெல்லாம் நடப்பிவித்து யுக முடிவாய் கலியுக முன்னிட்ட தருவாயில் துவாரகாபுரி பட்டணத்திலிருந்து கொண்டு கிருஷ்ண தேவர் வைகுண்டத்திற்கு எழுந்தருள எத்தனம் (முயற்சி) பண்ணி இஷ்டமாகிய பாண்டவர்களை அழைப்பித்து, அவர்களுக்குமேல் வருங்காரியஞ்சொல்லப் பாண்டவர்களுக்கு ஆளனுப்பிப் போட்டு வனத்திலே போய் நிட்டையிலிருக்கும்போது வாலியானவன். வேடனுகப் பிறந்து வில்லம்புங் கையிலெடுத்து, மான் வேட்டையாடி அந்த வனத்தில் வரும்போது கிருஷ்ணமூர்த்தி நிட்டையிலிருந்தது வாலி கண்களுக்கு மான்போலத் தென்பட்டது. அப்போது அதிசீக்கிரம் கிருஷ்ணனை அம்பினலே எய்துபோட்டான். ஆனதால், அளியாகிய வண்டார்ந்த தும்பை மலரணிந்திருக்கும் செயங்கொண்ட நாயகருலகத்திலே, ''பழி கிழவனுகிவிட்டும் போகாதென்று,'' உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (19)

சரச மிஞ்சினல் கை போடொண்ணுது.

அரசன் மனையாளை அம்பிகாபதி
சேர்ந்தவை மன்னனறிந்து நாள்சென்
றரசுபிறந் தொருநாளத் தாட்சியுடன்
அவனுயிரை ஒழித்தா னன்றே
பரசணியுங் கரத்தாரே செயங்கொண்
டாரே மிகுந்த பழக்கமானுல்
சரசமிஞ்சி ரவிக்கையில் கைபோ
டொண்ணுதென் றுலகஞ் சாற்றுவாரோ.

என்றது :—சோழ ராசாவானவர் (மூன்ருங் குலோத்துங்க சோழன்) கம்பருக்குச் சரசுவதி கடாட்சம் பூர்ணமாயிருந்ததால், அரசன் அக் கம்பரை நேத்திர ஸ்தானமாய் (கண்களுக்கொப்பாக) வைத்திருந்தார். கம்பர் மகன் அம்பிகாபதி பேரிலும் ரொம்பப் பிரியமாய் ஒரு நாளைக்கு மூன்று தேச காலம் கம்பரும் அம்பிகாபதியும் அரண்மனைக்குத் தடையின்றிப் போய் கவிதைப் பிரசங்கம் பண்ணி வருகிறது. ராஜ ஸ்திரீகளும் இவர்கள் பேரில் ரொம்பப் பிரியமாய் இருக்கிறது. அந்த இடங்களிலும் (அந்தப்புறங்களிலும்), தடையில்லாமல் போய் வருகிறது. இப்படி இருக்கிற நாளையிலே அம்பிகாபதியானவர் ராஜ ஸ்திரீகளுடனே பழக்கமாகி காணுக் கூட்டாய்க் கூடிசிறிது நாள் நடப்பிவித்ததை ராஜா அறிந்தும் அறியாதுமாய்க் கம்பர் முகத்திற்காகக் கண்டிக்க மாட்டாமல் இருக்கையில், ஒரு நாள் கம்பரையும் அம்பிகாபதியையும் ராஜா கூட வைத்துப் போசனம் பண்ணும்போது, ராஜஸ்திரீயானவள், சாதங்கறி பரிமாறி வரும்போது, அந்த ராஜ கன்னிகையை அம்பிகாபதி (பார்த்து) பாதம் நோ மென்றும், இடை தள்ளாடு தென்றும், பாதிவெண்பாச் சொல்ல, ராஜா கம்பரைப் பார்த்து, பார்த்தீரோ இவன் பாடினதை என்று சொல்லும்போது வீதியிலே கொட்டிக் கிழங்கு விற்கிறவளைப் பாடினனென்று கம்பர் பாதி

வெண்பா பாடி முடிக்க, அதை ராஜா வீதியிலே ஆள்விட்டுப் பரிசோதிக்க, அப்போது சரசுவதி கம்பருக்கு மோசம் வரப்போகிற தென்று அதிசீக்கிரமாய் கூடையுங் கிழங்குமாய் வீதியிலே விலைகூறித் திரிந்தாள். அப்பால், அவர்கள் சாப்பிட்டு வெளியில் வந்து சந்தனத்தை ராஜா இருவருக்கும் கனமாய்க் குழைத்து மார்பு நிறையப் பூசி அம்பிகாபதியை அரண்மனையில்போய் தாம்பூலம் வாங்கிவரச் சொல்லியனுப்ப, அவன், அரண்மனையில் போனவன் ராஜ கன்னிகையை மார் போடணைத்து ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு தேகக் குறியைப் பாராமல் தாம்பூலம் வாங்கிக் கொண்டு வந்தான். அம்பிகாபதி மார்பில் பூசின சந்தனத்திலே கன்னிகை யின் மார்பும் ஆபரணுதிகளும் அழுந்தின குறியைப் பார்த்து கம்பருக்கு ராஜா ஒப்புவிக்க (காட்ட) கம்பரும் ' **நாய்க்காகாத பிள்ளை ஊருக்குமாகாதே,** ' இவ்விடத் திற்கு போனபடி சரி என்று சொல்லிப் போக, ராஜாவும் அம்பிகாபதியைத் தூண்டியிலே போடச் சொல்லி, நிச உத்தரவு (நியாய உத்தரவு) பண்ணிப் போட்டார். ஆதலால், பாசாகிய மூலத்தைத் தரிக்கப்பட்ட செயங் கொண்டாருல கத்தில், "**சரச மிஞ்சினுல் ரவிக்கையிலே கை போடலாகா தென்று**" உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (20)

### பங்காளிக்குப் பல்லிலே விஷம்.

கும்பகர்ணனுக் கிளையோன் தமயனுயிர்
நிலைநாட்டிக் கொல்லென் றேநீ
நிகும்பலைக்குத் துறவுசொல்லி இலங்கைமன்னன்
வலுவைமுற்றும் குறைத்தா னன்றோ
செம்பினுட்டவர் புகழும் தென்னியம
நாட்டில்வளர் செயங்கொண் டாரே
தம்பிபிறக்கப் பிறகு சொல்லியசொல்
லரக்கனுக்குத் தகுங்கண் டீரே.

என்றது :—கும்பகர்ணனுக்கு இளைய தம்பி விபீடணன் இராவணனுக்குப் பின்வருங் காரியமறிந்து சொன்னதிலும் கேளாத நிமித்தம், எதிராளி யிடத்தில் போய்ச் சேர்ந்துகொண்டு இந்திரச்சித்து செய்த நிகும்பலை வேள்வியும் அழிக்கும் படி பண்ணி, இராவணனுடைய உயிர் நிலையையும் காண்பித்து, இராவணனைக் கொல்லும்படி பண்ணி, இராவணன் எடுத்துச் செய்த காரியங்களை நாசம் பண்ணி இலங்காபுரியையும் விபீடணன் கைக்கொண்டான். ஆதலால், தம்பி பிறக்க அதன் பிறகு "**பங்காளிக்குப் பல்லிலே விஷம்**" என்று சொல்லுகிற சொல்லை உலகத்தில் சொல்வார்களென்றவாறு. (21)

### வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

கல்லான மாரியைஇந் திரனனுப்ப
ஆய்ப்பாடிக் கண்ணர்க் கன்பு

வில்லேது மன்றியொரு கற்குடையால்
வந்தமழை விலக்கி ஞரே
கொல்லாருங் குழலிசவுந் தரஞயகி
யிடப்பாகம் வைத்தசெயங் கொண்டாரே
வல்லார்க்குப் புல்லுமொரு ஆயுதமா
யெடுத்து மனவலுச் செய்வாரே.

என்றது :—கல்மாறி நடந்த வயணமென்னவென்ருல் ஆயர்பாடிப் பட்டணத்திலுள்ள ஆயர்குடி முழுவதும் வருஷத்திலொருதரம் தேவேந்திரனுக்குப் பொங்கல் நடப்பிவிக்கிறது. அந்தப் பட்டணத்தில் கிருஷ்ணன் பிறந்து பசு மேய்க்கத் தக்க பருவத்திலே, தேவேந்திரர்க்குப் பொங்கலிடத் தேவையில்லையென்று பட்டண முழுவதையும் நிறுத்திப் போட்டார். அதைத் தேவேந்திரனறிந்து மெத்தவுங் கோபமாகி சந்த மேகத்தையும் அழைப்பித்து ஆயர்பாடிப் பட்டணத்திலே ஏழுநாள் பதிஞன்கு பொழுது கல்மாரி வருஷிக்கச் சொல்லிக் கட்டளையிட்டான். அந்தப் படிக்குச் சத்த மேகமும் ஒன்ருய்த் திரண்டு கல் மாரியாய் வருஷிக்கும்போது, பட்டணத்திலுள்ள சனங்கள் முழுவதும் கிருஷ்ணன் பேச்சைக் கேட்டு தேவேந்திரர்க்குப் பொங்கலை நிறுத்திஞேம். முந்தி நடந்த பொங்கலையும் கிருஷ்ணன் சாப்பிட்டு துராக்கிரகம் பண்ணினதிஞலே தேவேந்திரன் இப்படிச் செய்தான். இந்தக் கல்மாரிக்கு யார் பிழைக்கப் போகிருேமென்று பட்டணமெல்லாம் கூக்குரலாகும் தருணத்தில், கிருஷ்ணன் அந்தப் பட்டணத்திலுள்ள சனங்களையும், ஆடு மாடுகளையும், வலசை (கூட்டம்) களையும் சகலத்தையும் அதி சீக்கிரமாய், பட்டணத்தை அடுத்திருந்த மலையின் பேரிலேற்றி வைத்து,மேல் அந்த மழையைத் தடுப்பதற்கு வில்லுமம்பு மில்லாதபடியிஞலே சரக் கூடமுங் கட்ட ஏதுகரமில்லாமல் அந்த வலசை யேத்தின மலையினருகே கோவர்த்தன கிரி யென்ெருரு மலையிலிருந்தது. அதை வேரோடு பிடுங்கி கையிலே குடைபோலே எடுத்துக்கொண்டு தாமும் வலசையேத்தின (ஏற்றிய) மலையின் பேரிலே ஏறி கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்தார். ஆடுமாடுகளெல்லாம் ஏழு நாளும் மலையிலே மேய்ந்து சுனையிலே தண்ணீர் குடித்து அடைந்தது. பட்டணத்து சனமெல்லாம் மலையின் பேரிலே சமையல் சாப்பாடு சகலமும் நடப்புவித்துக் கொண்டார்கள். ஊர்வன, பறப்பன, சகலமும் அந்த மலையிலே கோவர்த்தன கிரிக் குடைக்குள்ளாகக் காலக்ஷேபம் (வாழ்க்கை) பண்ணிற்று. கிருஷ்ணனும், ஏழுநாள் பதிஞன்கு பொழுதுங் கல் குடையை கைவிடாமல் நின்று சாதித்தார். சத்த மேகங்களும் பதிஞன்கு பொழுதும், அவைகளின் புராக்கிரமங்கள் உள்ள மட்டும் கல்மாரியை கோவர்த்தனக் கிரியின் பேரிலே வருஷித்தது, அப்பால் லச்சைப்பட்டு (வெட்கப்பட்டு) ஓடிப் போய்விட்டன. தேவேந்திரனும் பயஞ் செனித்து (பயம் உண்டாகி) கிருஷ்ணனைத் தோத்திரம் பண்ணிஞன். அப்பால், சகல சனமும் பழைய படிக்குப் பட்டணம் வந்து சேர்ந்தனர். ஆதலால், செல்

லாகிய மேகம்படிந்த கூந்தலுடைய சவுந்தர நாயகி பாகராகிய செயங்கொண்டா ருலகத்தில், "வல்லாருக்குப் புல்லும் ஆயுதம்" என்று உலகவழக்கஞ் சொல்லு மென்றவாறு. (22)

சிறுக்கி மனதறியாமல் செடிதனைத் துரத்தியவாறு போல.

உருக்குதலும் நயத்திலுஞ் சூர்ப்பனகை
இலக்குவன் தோளையுகந்து மேவ
சுருக்கிலேசென் றெடுக்கவவ னிணங்காமல்
மூக்குமுலை துணித்தா ரன்றே
மறிக்கிசைந்த கரத்தாரே செயங்கொண்
டாரே மகிழ்ந்தமய லுண்டாகி
சிறுக்கிமன தறியாமல் செடிதனைக்
கையாலத் தரத்துதிந்த வாறே.

என்றது :—உருக்குதலும் நயமும் காண்பித்த சூர்ப்பனகை இராமர் இலக்குமணர் சீதை மூன்று பேரும் வனவாசமாய் பஞ்சவடி தீரத்தில் வந்து பன்னகசாலைக் கட்டிக்கொண்டு இருக்கிறபோது, அந்த வனத்தில் தபசு செய்த மகனைப் பார்க்க வந்தவள் மகன் வெட்டுப்பட்டுக் கிடக்கிறதைக் கண்டு அழுது புலம்பி, இது யார் வெட்டினது, மானிடவர் அடிப்போலே இருக்கிறதென்று அந்த அடியைப்பற்றி வரும்போது கோமதி ஆற்றங்கரையில் இராமர் லக்ஷ்மணனைப் பார்த்து, இப்படி அழகுள்ள புருஷனை நம்முடைய வயதிற்குள்ளே கண்டதில்லையே! இவர்களை நாம் கொண்டுபோய் அங்கீகரிக்க வேண்டுமென்று (இவர்களிடத்தில் இன்பமனுப விக்க வேண்டுமென்று) இராக்கத வேடத்தோடே போகக் கூடாதென்று தெய்வ ரம்பை வடிவெடுத்து அதற்கான வஸ்திர பூஷணங்களால் அலங்காரம் செய்து கொண்டு, இராமசுவாமியிடத்தில் வந்து, சொல்ல (தன் விருப்பத்தைச் சொல்ல) நாணப்பட்டவள் போலே தங்களிடத்திற்கு வந்தேன்; என் பேரிலே மன்மத பாணம் வருத்தாமல் தயவு செய்ய வேண்டுமென்றாள். பின்னும் நான் காந்தர்வப் பெண் என்று சொன்னாள். அப்பொழுது இராமர் நகைத்து நம்முடைய தம்பி அதோ யிருக்கிறான்; அங்கே போவென்றார். அப்படியே இலக்குமணரிடத்திலே போக, அவர் பார்த்து நீ யார் பிள்ளாய்? எங்கே வந்தாய்? என்று கேட்க, நான் கந்தர்வப் பெண். பஞ்சவடி தீரத்திற்கு வந்தேன். உங்கள் பேரிலே மோகமாகி உம்முடைய தமயனிடத்திலே போனேன். அவர் உம்மிடத்திலே போகச் சொன்னார் என்றவுடனே, அவர் பதினான்கு வருஷமும் நித்திரையாகார மில்லாமல் விரதத்தோடு மிருக்கிறவர்; இவளைப் பார்த்து நகைத்து வாளா நேர்ந்தியாச்சுது; நாமிந்த வனத்திலே வந்து படும் பாட்டுக்கு பெண்டாட்டியில்லாத குறைதான் என்று (சொல்லி) பேசாத படிக்குப் போவென்று சொல்ல, அப்போது சூர்ப்பனகை யானவள் பெண்கள் விரும்பி வந்தால் புருஷாள் தள்ளுவது நீதியல்லவென்று

நயந்து சொன்னதிலும் அவருக்குச் சரிப்படாதபடியினாலே வலு வந்தத்தினாலே இவனை எடுத்துப் போவோமென்று, இராக்கத வேடங்கொண்டு இலக்குமண ருடைய மனதறியாமல் வந்து வாரியெடுத்தாள். அவளை உதறிப் பிரித்துக்கொண்டு சுரிகை வாளாலே சூர்ப்பனகையின் மூக்கு முலையுமறுத்துத் துரத்திவிட்டார். ஆதலால் மறியாகியு மானை யணிந்த கரத்தையுடைய செயங்கொண்டாருலகில், "சிறுக்கி மனதறியாமல் சேடிதனைத் துரத்திக்கொண்டு திரிகிறுனென்று," உலக வழக்கஞ் சொல்லுவார்களென்றவாறு. (23)

தான் பத்தினியானுல் தேவடியாள் தெருவில் குடியிருக்கலாம்.

தேன்மொழிச் சீதையை அரக்கன்சிறை
எடுத்துவனத் தில்வைத்துச் செயலாலுந்
தானுன மட்டும்பார்க்(க) வவள்கற்பு
அனைதக்கினியி லமிழ்ந்து மீண்டாள்
மான்பிழியின் சவுந்தரி பாகர்செயங்
கொண்டாரே வளஞ்சேர் நாட்டில்
தான்பத்தினி யானுல் தேவடியாள்
தெருவிலேயும் தரிக்க லாமே.

என்றது :—தேனினு மினிதாகிய மொழியுடைய சீதையை இராவணன் சிறை யெடுத்துப் போய் அசோக வனத்திலே வைத்து சேயாகிய தம்பி பெண்ணு கிய திரிசடையையுங் காவல் வைத்து சிற்றறிவினுலே சீதையை அவன் கைவசப் படுத்திக் கொள்வோமென்று நாளுக்கு நாள் மனது திரும்பத் தக்கதாக நயமும் பயமும் காண்பித்து சீதையை இராவணன் பார்த்து உன்னுடைய நாயகன் இந்த சமுத்திரத்தைத் தாண்டி வந்து, உன்னைத் திருப்பிக் கொள்வான் என்கிற எண் ணத்தைவிட்டு என்னுடைய இலங்கைப் பாக்கியத்தைப் போலே மும்மூர்த்தி களுக்குங் கிடைக்கமாட்டாது. இந்தப் பாக்கியமெல்லாம் உன் பாக்கியமேயல்லாது வேறில்லை. இந்தப் பாக்கியங்களை யனுபவியாமல் வீணுகக் காலங் கழிக்காதே யென்று நித்தியம் அசோக வனத்திற்கு வந்து சொல்லியும், பிள்ளையாகிய திரிசடை யைக் கொண்டு சமாசாரம் சொல்லச் சொல்லியும், வெகு பிரயாசப் பட்டதிலேயும் சீதையம்மன் பதிவிரதை யானதினுலே, இராவணன் முகம் பாராமல் ஒரு துரும்பை இராவணன் போல் உண்டுபண்ணி அந்தத் துரும்பைப் பாாத்து, ஏன் கெட்டுப் போகிறுய்? என் நாயகனை மனிதனென்றும் பலவானென்றும் சொன்னுயே ; நீ பலவானேயானுல் என் நாயகனைக் காணுத விடத்தில் புரட்டு வகையால் ஆண்டி வேடமெடுத்து, திறந்த வீட்டில் சுவானம் (நாய்) புகுந்தாற் போலே என்னைக் கொண்டு வந்தாய் ; உன்னைப் பத்துத்தலைப் பூச்சியென்று தன்மயிரில் கட்டிவைத்த வாலியானவன், என் நாயகன் கை அம்பால் இறந்தது உனக்குத் தெரியாதா ? உன் பாட்டி தாடகையின் மக்களும் இறந்தது தெரியாதா?

உன் தங்கையை மூக்கும் முலையும் என் கொழுந்தன் (இலக்குமணன்) அறுத்து விரட்டினது தெரியாதா? என் முன்னே நில்லாதேயடா, சண்டாளா - உன் சிரசையும் அறுத்து, உன் பட்டணத்தையு மழித்து என் நாயகனிடத்தில் போய் சேருகிறேன்; இல்லாவிட்டால் என் பிராணனை விட்டுக் கொள்ளுகிறேன். இதில் இரண்டிலொரு காரியம் முடியாமல் விடேனென்று சொல்லி அந்தப்படிக்கு முடித்து, அக்கினியிலும் முழுகி, தன் நாயகனிடத்தில் அனுமார் திரும்பக் கொண்டு வந்து விட்டார். ஆதலால், கானுலாவிய கூந்தலையுடைய சவுந்தர நாயகி சமேதராகிய செயங்கொண்டாருலகத்தில், "தூன் பத்தினியானால் தேவடியாள் தெருவிலே குடியிருக்கலா மென்று," உலகஞ் சொல்லியதென்றவாறு. (24)

கண்டது கற்கின்றவன் பண்டிதனாவான்.

பண்டுகிணற் றினிலெறிந்த பவுத்திரத்தை
துரோணர் சிலபாணம் போட்டுக்
கொண்டுவரக் கண்டதனஞ் சயனுமந்த
விற்றொழில்கைக் கொண்டா னன்றே
வண்டுலவு கன்னிசவுந் திரிபாகர்
செயங்கொண்டார் வளஞ்சேர் நாட்டில்
கண்டதுகற் கின்றவனே பண்டிதனா
வானெனவுங் கருது வாரே.

என்றது:—பண்டாகிய முற்காலத்திலே திரிதிராட்டிரன் பிள்ளைகள் துரியோதனாதிகள் நூறு பிள்ளைகளும் பாண்டு இராசன் பிள்ளைகள் தருமராதிகள் ஐந்து பிள்ளைகளும், சுண்டுவில் அம்மானைப் பந்துகளெடுத்துக் கொண்டு சிங்காரத் தோப்பில் போய் விளையாடித் திரியும்போது துரியோதனன் கையிலே போட்டிருந்த பவுத்திரமாகிய மோதிரத்தை அருச்சுனன் கழற்றித் தோப்புக்குள்ளே பாதாள வாகினி என்கின்ற கிணற்றுத் தண்ணீருக்குள்ளே போட்டு விட்டான். அப்போது துரியோதனன் என் மோதிரத்தை எடுத்துத் தா வென்று அருச்சுனனையுங் கேட்டால் அவர்களடிப்பார்களென்று அவர்களைக் கேளாமல், தருமரைப் பார்த்து உன் தம்பி என் மோதிரத்தைக் கிணற்றிலெறிந்து போட்டான். அதனை எடுத்துத் தாவென்று முந்தானை முடிந்து வழக்காடிக்கொண்டு நிற்கிற வேளையிலே, துரோணாசாரியார் பாஞ்சாலன் பிள்ளைக்கு வில்வித்தை தீர்க்கம் பண்ணிக் கொடுக்கிறது. அதற்குப் பாஞ்சால தேயத்திலே பாதி துரோணாசாரியார்க்குப் பாஞ்சால இராசன் கொடுக்கிறதென்று உடன்படிக்கையின் பேரிலே வித்தை கற்றுக்கொண்டு வித்தை தீர்க்கமானவுடனே பாதிச் சீமையுந் தாவென்று துரோணர் கேட்க, பாஞ்சாலர்கள் நீர் குருவாய் இருக்கிறவர்களுக்குச் சீமை நாடு எதற்கு? செலவுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டிரும் என்று சொல்ல, துரோணருக்குக் கோபம் வந்து இந்த வித்தையை இன்னமொரு தேயத்து இராசன் பிள்ளைக்கு வரப்பண்ணி, அந்தப் பிள்ளை கையினாலே உன்னைப்

பிடித்துத் தேர்க்காலிலே கட்டிவைத்துக்கொண்டு பாதிச் சீர்மையும் (நாடும்) வாங்குகிறேன் என்று கோபத்துடனே புறப்பட்டு துரோணரும், அவர் பெண்சாதியுமாய், அத்தினபுரத்திலே இந்தப் பிள்ளைகள் விளையாடுகிற கிணற்றடியிலே வந்து, இந்த மோதிர வழக்கை என்னவென்று வினவினார்கள். பிள்ளைகளும் நடந்த வர்த்தமானத்தைச் சொன்னார்கள். அப்போது துரோணாசாரியார் அர்ச்சுனனைக் கூப்பிட்டு அந்தக் கிணற்றிலே மோதிரத்தை எந்த லக்காகப் (இடம்) போட்டாயென்று லெக்குக் காண்பிக்கச் சொல்லி, வில்லெடுத்து நாணேற்றி அம்பைப் பூட்டி அந்த மோதிரத்தைக் கௌவிக்கொள்ளும்படியாய் ஓரம்பை விட்டு அந்த அம்புக்குத் தைக்கும்படியாய் ஒன்றன்பின்னொன்றாய் அந்தக் கிணற்றுக்கு மேலே அம்புக் கடை வந்து நிற்கும்படியாய் பாணங்களை இமைமூடித் திறப்பதற்கு முன்னதாய்ப் பாணங்களைப் போட்டு, அந்த அம்புக் கடையைப் பிடித்து வெளியிலே எடுக்கும்போது முன் போட்ட அம்பு நுனியிலே மோதிரம் வந்தது. அந்த மோதிரத்தை எடுத்து துரோணாசாரியார் தருமர் கையிலே கொடுக்க தருமர் அருச்சுனன் கையில் கொடுத்து, துரியோதனன் கையில் கொடுத்து விடச் சொன்னார், அர்ச்சுனன் வாங்கி, துரியோதனன் கையில் கொடாமல் திரும்பக் கிணற்றுக்குள்ளே போட்டு விட்டான். அப்போது எல்லோரும் அர்ச்சுனனைக் கோபித்துக் கொள்ளும்போது அர்ச்சுனனானவன் துரோணாசாரியாரை பிரதட்சணமாய் நமஸ்காரம் பண்ணி, தன் வில்லையும் அம்பையு மெடுத்து துரோணாசாரியார் நின்ற லக்கிலே நின்று அவர் எந்த முறையில் பாணப் பிரயோகம் பண்ணினாரோ, அந்த முறையில் பாணப் பிரயோகம் செய்து அவர் எடுத்தபடிக்கு மோதிரத்தை எடுத்துத் துரியோதனன் கையில் கொடுத்தான். துரோணாசாரியாரும் இவனுக்கு வில்வித்தை சொல்லிக் கொடுக்கலாமென்று சந்தோஷப்பட்டார். ஆதலால், வண்டார்ந்த நேத்திரத்தையுடைய சவுந்தர நாயகி சமேதரராகிய செயங்கொண்ட நாயகர் உலகத்திலே, "கண்டது கற்கின்றவனே பண்டிதனாவனென்று," உலக வழக்கஞ் சொல்வார்களென்றவாறு. (25)

**புண்ணியத்திற்கு உழும் எருத்தைப் பல்பிடித்துப் பார்த்தாப்போல்.**

நுண்ணுகழை வனமெரிய மேல்கிடந்த
பாம்பு செத்திடாமல் தாங்கி
மண்ணில்விட்ட நளன்கரத்தில் அரவுகடித்
தவனுடலை வடுச்செய் தாப்போல்
வெண்ணிலவைச் சடையில் வைத்தசெயங்
கொண்டாரே குடியின் மெலிவுதீர்
புண்ணியத்திற் குழுமெருத்தைப் பல்பிடித்துப்
பார்ப்பதெனப் புகலு வாரே.

என்றது:—நுண்ணுகழையாகிய மூங்கில் வனமானது அந்த மூங்கில் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புப் பிடித்து மூங்கில் வனம் வேகிறபோது

ஒரு சர்ப்பமானது மூங்கிலின் பேரிலே கிடந்தது. நெருப்புப்பற்றி எரியும்போது மரத்து நுனியிலே ஓடிப் பார்த்தது. அங்கேயும் புகையும் அனலும் ஆகும்போது கீழே விழுந்து ஓடுவோமானால், நிலத்திலே மூங்கில் சருகுகளிலும் மரத்திலும் அக்கினி ரொம்பவும் எரிகிறதினாலே அதில் விழுந்தாலும், எரிந்து பற்பமாய்ப் போய்விடும்; பிழைக்கிற வகையைக்காணேம் பகவானே யென்று உபாதைப்படும் வேளையிலே, நிடதனாட்டு இராசனாகிய நளராசன் சனீஸ்வரனுடைய புரட்டால் புஷ்கர ராசனுடனே சொக்கட்டான் ஆடித் தோற்று, நாடு இராச்சியமெல்லாம் புஷ்கரனுக்குக் கொடுத்துவிட்டு, பெண்டாட்டி பிள்ளை ஒரு பக்கம், நளராசன் ஒரு பக்கமாய் வன சஞ்சாரம் போகிறபோது, இந்தப் பாம்பானது, ஐயா! மகா ராசாவே! நானிந்த அக்கினியிலே வெந்து போகாமல் என்னை வெளியில் வரப் பண்ணிக் காப்பாற்றினால், உமக்கு ரொம்பவும் தருமம் வரும் என்று சொல்ல, நளமகராசன் பார்த்து நீ துர்ச்சனன்; விஷந்தை வாயிலே வைத்திருக்கிறாய்; நானுன்னை இறக்கிவிட்டால் நீ என்னைத் தீண்டுவாய். நான் துன்பப்பட்டுப் போவேன். (ஆதலால்) உன்னை இறக்கி விடுகிறது எந்த விதம், என்று சொல்ல, அந்தப் பாம்பானது இந்த வேளைக்கு உதவி ரட்சித்தால் நானுன்னை மானபங்கம் செய்கிறதில்லை. நீர் தருமப் பிரபுவாகையால் தயவு செய்ய வேண்டுமென்று சொல்ல, நள இராசனும் ஓர் மூங்கிற்கிளையை எடுத்து எரிகிற மூங்கில் நுனியிலே கிடக்கிற பாம்பில் நீட்டினார். அந்தக் கிளை வழியே பாம்புமிறங்கி வந்து நளராசன் கையிலே கடித்தது. உடனே நளராசன் சரீரமும் சூரியப் பிரகாசம்போலே இருந்த தேகம் பாம்பு விஷத்தினாலே கறுத்து கட்டியும் கழலையும் போலேயாயிற்று. பாம்பே! உன் துர்ச்சனப்புத்தி விட்டாயில்லை என்று நளராசன் சொல்ல, பாம்பு உம்முடைய சரீரம் இப்போதைக்கு இந்தப்படியிருக்கட்டும். உனக்குப் பழையபடி தேகமிருக்க, என்னை நினைந்தபோது, பழையபடி ஆவீரென்று சொல்லிவிட்டுப் போய்விட்டது. ஆகையாலே, வெண்ணிலவைச் சடையில் தரித்த செயங்கொண்டார் உலகத்திலே, 'புண்ணியத்திற்கு உழும் எருத்தைப், பல்லைப் பிடித்துப் பதம் பார்த்தால் போலே,' என்று உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (26)

அயல் வீட்டு ஆண்மகன் அவத்தைக் குதவான்.

நயல்வேந்தன் பாரியொரு துன்மார்க்க
ஞைசைகொண்டு நடந்தே ஆற்றில்
இயைவுடனே போய்ச்சலத்தில் நின்றதைச்
சிந்தாமணியி லியம்பி னாரே
கயல்விழிமண் டோதரியைப் புணர
செயங்கொண்டார் தன்கணவ னன்றி
அயல்வீட்டு ஆமக்கன் அவத்தைக்குத
வானென்பார் அவனி யோர்க்கே.

என்றது :—நயவேந்தன் பாரியாகிய ஓர் இராசாவின் பெண்சாதி அரண்மனைக்கு நித்தியப்படி வந்து ஊழியஞ் செய்கிற துன்மார்க்கன் எயினனென்றொரு வலையனிடம் ஆசையாகி நாள் விளம்பத்திலே (விடியற்காலையில்) பேசி முடித்து அரண்மனையில் சிறு திரவியத்தையும் எடுத்துக்கொண்டு இருவரும் தூரந் தொலையில் போய் இஷ்டமாயிருப்பதாக எச்சரிக்கை செய்கிற வேளையிலே இருவரும் புறப்பட்டு பட்டினம் விட்டு, நான்கு நாழிகைக்கப்புறம் போகும்போது, ஒரு சிற்றாறு பெருகிவர அந்த ஆற்றங் கரையில் போய் நின்று ஓர் யோசனை பண்ணினான். நாமிருக்கிற இளமைக்கும் இராச கன்னிகை யிருக்கிற ரூபகரத்திற்கும் வெகு தூரம். நாம் இவளைக் கூட்டிப் போயிருக்கு மிடத்தில், இவளும் நம்மிடத்தில் இருக்கமாட்டாள். இவளைக் காமுக செயலாளிகள் கைவசம்பண்ணிக்கொள்ளுவார்கள். இந்த இராசாவுக்கு நாம் கூட்டிப்போகிறது தெரிந்தால் நாமெங்கே போயிருந்தாலும் ஆள்விட்டுப் பிடித்துக்கொண்டுபோய் வெட்டிப் போடுவான். இனி (என்ன) யோசனைப் பண்ணுகிறது. "எறிந்துவிட்டதில் தெரிந்தெடுத்தாய்" (என்றாற் போல), இவளிடத்திலிருக்கிற ஆடை ஆபரணத்தை எல்லாம் கத்தரித்துக் கொண்டு இவளைத் தனியே விட்டுப் போட்டு நாமோடிப் போகிறது என்று (நினைத்து) இராச கன்னிகையைப் பார்த்து, உன்னிடத்திலிருக்கிற தாலியையும் ஆடை ஆபரணத்தையும், நீ உடுத்தியிருக்கும் வஸ்திரத்தில் மூட்டை சேர்த்துக் கட்டித்தா ; நான் இந்த ஆற்றுத் தண்ணீரை நீந்தி அக்கரையில் கொண்டு போய் வைத்துவிட்டு, திரும்ப வந்து உன்னை நீச்சலிலே கொண்டு போய்ச் சேர்க்கிறேன் என்று சொல்லி எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு அவளை நிர்மாணத்துடனே விட்டுப் போட்டு ஆற்றைத் தாண்டி, நாற்காத வழி விடிய ஓடிப் போய்விட்டான். அதை அந்த இராசகன்னிகை யறிந்து, நம்மை வலைப் பையல் மோசம்பண்ணி விட்டானே ; இனி வந்த வழியே போய் வீடு சேர வேண்டுமானாலும், நிர்வாணத்துடனே எப்படிப் போகிறதென்று, பாதையிலே யார் வந்து காணுவர்களோ! வெளியிலே நிற்கப்படாது என்று மாரளவு வரைச் சலத்தில் போய் நிற்கிறபோது ஓர் நரியானது மாட்டு வடக்கைக் கௌவிக்கொண்டு வந்து ஆற்றங்கரையிலே போட்டுப் புசிக்கும்போது, அடுத்தாப்போல், ஒரு மீன் துள்ளி விழுந்ததை நரியானது பாய்ந்து பிடிக்கப் போகிறபோது, மீனானது திரும்பத் தண்ணீரில் தாவிப் போய்விட்டது. அந்த நரி திரும்பி வருமுன்னே அந்த வடக்கையைப் பருந்து உராய்ந்து கொண்டு போய்விட்டது. நரியானது ஆகாசத்தை அண்ணாந்து பார்த்து நாம் இந்த இருவகையுங் கெட்டு வீணே போச்சுதென்று விசனப்பட்டதை அந்த இராச கன்னிகை பார்த்து, இந்த நரியானது இருவகையுங் கெட்டாற்போல நானும் (இந்தக் கதைபோல) இருவகையுங்கெட்டு, இராச்சிய பரிபாலனம் பண்ணப்பட்ட சொந்த நாயகனை விட்டுத் துன்மார்க்கச் சோரனுடன் வந்து இருவகையிலும் கெட்டேனென்று மனிதர் நகைக்கலாச்சுது. இந்த வர்த்தமானமெல்லாம் சிந்தாமணியில் விளங்கி வருகிறது. ஆதலால், கயல்போலும் நேத்திரத்தையுடைய மண்டோதரிக்கு இச்சையாகிய செயங்கொண்டாருலகத்திலே **"அயல் வீட்டு ஆமக்கன் (கணவன்) அவத்தைக் குதவானென்று,"** உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (27)

**எண்ணெய் போக முழுகலாம்; எழுத்துப் போக முழுக முடியாது.**

பெண்ணேவாழ்க் கைப்படுத்தச் சேதுமன்னன்
குறித்திடமும் பிசகி மாதா
கண்ணர்பரி சோதனைக்குத் தப்பிவிதிப்
படிமுடவன் கைக்கொண் டானே
பண்ணுலவும் புகழ்செயங் கொண்டாரே
மூவரும் கூடிப்பா ரித்தாலும்
எண்ணெய்தனைத் துடைத்திடலாம் எழுத்ததனைத்
துடைப்பவர்க ளில்லைத் தானே.

என்றது:—பெண்ணே வாழ்க்கைப்படுத்திய கதை என்னவென்றால், சேதுவென்றொரு இராசா. அவருக்கு ஒரு பெண். அருமையாய் பிறந்து வளர்ந்து சமைந்து நிறைந்திருக்கையில், ராசா, தமக்கையார் மகனுக்கு இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொடுக்க வேண்டுமென்றார். அந்த இராசாவின் பெண்சாதி, அவள் தமையன் மகனுக்குக் கட்டிக் கொடுப்பேனென்றாள். இந்த வகையில் ஒருத்தருக்கொருத்தர் தள்ளிச் செய்யமாட்டாமல் அந்தப்பெண் சிறையிருந்ததாலே அது மகா விஷ்ணுவுக்குத் தெரியப்பட்டு, பிரமதேவரைப் பார்த்து, இந்த இராச கன்னிகை சிறையிருக்கிறாளே, இவள் யாருக்குப் பாரி என்று கேட்டார். அதற்குப் பிரமா சொல்லுவார். பெண்ணுக்குத் தாயும் தகப்பனும் குறித்த மாப்பிள்ளை மாருக்குப் பாரியாளல்ல. அந்தப் பட்டணத்திலிருக்கிற செக்கடி முடவனுக்குப் பாரி என்று சொல்ல, அப்போது விட்டுணுவுக்குக் கோபம் வந்து இராச கன்னிகையை செக்கடி முடவனுக்குப் பாரியென்ற பிரமாவினுடைய நிதானத்தை யறிவோமென்று கெருடாழ்வரைக் கூப்பிட்டு, அந்தப்பட்டணத்துச் செக்கடியிலே கிடக்கிற முடவனை, ஐந்துலட்சம் காதவழிக்கப்பாலுள்ள தீவாந்தரத்திலே கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வாவென்றுசொல்ல கருடனும், அந்த முடவனைத் தீவாந்தரத்திலே கொண்டு போய்ப் போட்டுத் திரும்பும்போது, அந்த முடவன் கருடனைப் பார்த்து அந்தப் பட்டணத்தில் செக்கடியிலே கிடந்தேன். யாரும் எளியவனென்று இரங்கி ஒருவேளை தண்ணீர் ஊற்றக் குடித்துக்கொண்டு கிடந்தேன். இந்த அந்தரத்திலே என்னைக் கொண்டுவந்து போட்டாயே, நான் பட்டினியேகிடந்து சாவேனா? என்றான். அப்போது கருடனும் உனக்கு இரை கொண்டுவந்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு வரும்போது, சேது இராசாவின் பெண்சாதி, மகள் சிறையிருக்க எத்தனை நாள் பார்த்திருப்பேன்; இந்த இராசன் நம்மை வெட்டினாலும் வெட்டட்டும் என்று ஒரு மரப்பெட்டி சம்பாதித்து அதில் மகளை வைத்து, சீதனத்திற்காக சிறிது திரவியமும் பூஷணாதிகளும் வைத்து, திவ்யமான பலகாரங்களும் வைத்து, தன்னுடைய தமையனுக்காக "இந்தப் பெண்ணைத் தன் மகனுக்குக் கலியாணம் பண்ணி வைத்துக் கொள்ளவும்" என்று விண்ணப்பப் பத்திரமும் எழுதி மரப் பெட்டியிலே

வைத்து மகளுக்குச் செய்தி சொல்லிப் பெட்டியைப் பூட்டி தமையன் பட்டணத்திற்குப் பலகாரப் பெட்டியை அனுப்பினாள். அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு நடுவழியிலே போகிறபோது, முடவனை தீவாந்தரத்திலே விட்டு வருகிற கருடன் பார்த்து, பலகாரப் பெட்டியும் பலகார வாசனையையும் கண்டு, இதைக் கொண்டு போய் முடவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று நினைத்து, அந்தப் பெட்டியை உராய்ந்துக்கொண்டு போய் தீவாந்தரத்திலிருக்கிற முடவனிடத்தில் பலகாரம் இருக்கிறது என்று சொல்லி அவன் முன்னே போட்டுவிட்டு, மகா விட்டுணுவினிடத்தில் வந்து முடவனைத் தீவாந்தரத்திலே போட்டுவிட்டு வந்தேன் என்று சொல்லிற்று. அந்த முடவன் பசியினால் சீக்கிரம் பெட்டியைத் திறக்கும் போது சூரியப் பிரபை போலே பெண்ணும் பலகாரமும் ஆடையாபர பூஷணாதிகளு மிருந்ததைக் கண்டு முடவன் அதிக சந்தோஷப்பட்டு கருடாழ்வாரை தோத்திரம் பண்ணி இருவரும் சேர்ந்த வரலாறும் கருடாழ்வார் செய்த காரியமும் கலந்து பேசிக்கொண்டு மறு மனிதர் சஞ்சாரமில்லாத இடமானதினாலே இவ்வளவுக்கு மிப்படிச் செய்த பகவான் இன்ன மெப்படிச் செய்தாலும் கண்டறிவோமென்று அந்தப் பலகாரத்தையும் சாப்பிட்டுக்கொண்டு, கதை காரணங்களும் பேசிக் கொண்டு இருந்தார்கள். அப்படி யிருக்கையில் விட்டுணுவானவர் பிரம்மாவைப் பார்த்து அந்தப் பெண், செக்கடி முடவனுக்குப் பாரியென்று சொன்னீரே. அந்த முடவன் தீவாந்தரத்திலே போய்ச் சேர்ந்தான். நீ எழுதின வெழுத்துப் பிசகிப் போச்சுதோ? இருக்கிறதோ? வென்று நகைத்தார். அப்போது பிரம்மாவும் நான் விதித்தது ஒருபோதும் பிசகாது. முடவர் தீவாந்தரம் போய்ச் சேர்ந்தால், பெண்ணும் அங்கே சேர்ந்திருக்கும். நீர விசாரித்தால் தெரியும் என்றார். அப்போது விட்டுணுவானவர் ஞான திருஷ்டியால் பார்க்கும்போது பிரம்மா சொன்னது மெய்யாயிருந்தது. அப்போது மகாவிட்டுணு பிரம்மாவைக் குறித்து சந்தோஷப்பட்டுக் கருடனை அழைத்து அந்த முடவனையும் பெண்ணையும் விட்டுணுவிருக்கிற வைகுண்டத்திலே கொண்டுவரச் சொல்லி மும்மூர்த்திகளும் இருந்து, இந்த விருத்த வர்ணமெல்லாம் கேட்டு முடவனை வாலமதன்போல ஆகும்படி அனுக்கிரகம் பண்ணி பெண்ணையும் மாப்பிள்ளையையும் சேது இராசனிடத்தில் கருடனைக் கொண்டுபோய் விடச்சொல்லி கலியாணமும் செய்து ரதியும் மதனும் போலே இருந்தார்கள். ஆதலால், பண்ணுகிய கல்வியின் புகழோங்கிய செயங்கொண்டா ருலகத்திலே. பிரம்மா விட்டுணு, ருத்திரன் மும்மூர்த்திகளும் கூடி பிரயத்தனம் பண்ணினாலும், "**எண்ணெய் போக முழுகலாம், எழுத்துப் போக முழுகக் கூடாது**" என்று உலக வழக்கஞ் சொல்வார்களென்றவாறு. (28)

**தெய்வ முண்டென்பார்க்கு உண்டு; இல்லை என்பார்க்கு இல்லை.**

பண்டுகுட்ட ரோகியுந்தான் பாரதங்
கேட்டா னேயும்பஞ் சாயோடி
விண்டுவரும் கதையைப் பொய்யென்றான்
மறைந்தகுட்ட மேலாச் சன்றே

தண்டமிழ்க்கருள் புரியுஞ்செயங் கொண்டாரே
பூதங்க ளம்பா தீசன்
உண்டென்பார்க் குண்டில்லை யென்றோர்க்
கில்லையென உரைக்க லாமே.

என்றது:—முன்னாளிலே குரு குலந்தரசராகிய பாண்டு இராசா வங்கிசத்தில் செனமேசெயனென்றொரு இராசன் ஒரு முனீசுவரனிடத்தில் தன்னுடைய பாட்டன்மார் முற்காலத்தில் பாரத முடிந்த பேச்சைப் பேசிக்கொண்டு இருக்கும்போது எங்கள் பாட்டன்மார் பஞ்சபாண்டவர்கள் பெரிய தகப்பன் மக்கள் நூறு பேரையும் கூடப் பிறந்த கர்ணனையும் மற்றப் புத்திர மித்திராதிகளையும் கொன்று போட்டு சீமையை ஒப்புக்கொண்ட பேரை அதர்மரென்று சொல்லாமல் அவருக்குத் தருமரென்று பேர் வந்ததென்னவென்று உத்தண்டமாய் வாய்க்கர்வமாய்ப் பேசினான். அப்போது அந்தப் பெரியவர் கோபங்கொணடு நீ பிறகு துன்பத்தை யனுபவிப்பாய் என்று சொல்லிப் போனார். அதன் பிறகு செனமேசயன் யாகம் நடப்பிவித்தான். அந்த யாகந்திலே பிரம்மஹத்தி தோஷம் வந்து சம்பவித்தது. அவனுடைய சரீரத்திலும் குட்டரோகங்கண்டது. இதற்கு எந்த வகையாய் பிரம்மஹத்தியையும் ரோகத்தையும் தொலைப்பேனென்று மகா விஷ்ணுவின் பேரிலே பாரம்போட்டு நான் அறிந்து செய்தாலும் அறியாமற் செய்தாலும் என் பாட்டன்மார் பங்கிலிருந்து காப்பாற்றின சுவாமீ! என்னையுங் காக்க வேண்டிய கடன் உங்கள் பேரிலேயென்று மிகவும் வணங்கும்போது, விட்டுணுவானவர் அவனிடத்தில் வந்து உன் பாட்டன்மார் நாளில் நடந்த பாரதம் ஆதியிலே விக்கினேசுரன் ஒற்றைக் கொம்பினாலே மகா மேருவிலே பாரதம் நடக்கு முன்னே எழுதினார், அதன் பிறகு வேத வியாசர் கிரந்த வாக்கியமாய்ப் பாடினார். அந்தப் பாரதத்தைப் பெரியவர்கள் வாக்கினாலே சொல்லச் சொல்லி, சொல்லுகிற பேருக்கு ரொம்பவும் உபசரிந்து வணங்கி, வேண்டுவதுங் கொடுத்து, நீயும் உண்மையாய்க் காப்பேடு முதல் கடையேடு வரைக்கும் கேட்டால் உன்னுடைய குஷ்ட நோயும் தீரும். நாளுக்கு நாளாய் மறைந்து கதை முடியவும் நோயுந் தீரும். பிரம்மஹத்தியுந் தீரும். பிரம்மஹத்தி தீர்ந்தது உனக்குத் தெரிய ஒரு கருத்தப் பட்டாடையைக் கதைகேட்கிற விடத்திலே வைத்துக்கொள். கதை நடக்கையிலே நாளுக்குநாள் கருத்தப் பட்டாடையும் வெள்ளைப் பட்டாகும். அந்தச் சோதனையும் பார்த்துக்கொள். உனக்கு இது புத்தி யென்றார். அந்தப் பிரகாரம் பெரிய மனிதரை யழைப்பித்து செனமேசெயன் ரொம்பவும் அன்பாய் பாரதக் கதையைக் கேட்டு வந்தான். கதையும் முக்கால் திட்டம் நடந்தது. குட்ட ரோகமும் சிரசிலேயிருந்து இடைக்குங் கீழே தொடையளவும் மறைந்து நல்ல தேகமாச்சுது. கரிய பட்டும் முக்கால் திட்டம் வெள்ளப்பட்டாயிருந்தது. அப்போது கதைசொல்லுகிறவர் பதினான்காம் நாளை யுத்தத்திலே துரியோதனன் படை யானைகளை வீமசேனன் பிடித்து சுழற்றி ஆகாயத்திலே எறியும்போது யானைகள் வாயு மண்டலத்திலே சுழல் காற்றில் கீழே விழவொட்டாதபடிக்கு யானை யிறந்த உடல்களினின்றும் நாளுக்கு நாள் யானை யெலும்பு பூமியிலே விழுகிறதென்று சொன்னார். அந்த வச

னத்தைச் செனமேசயன் கேட்டு இது சுத்தப் பொய்யென்றுன். அப்போது மறைந்த குட்டம் பழையபடி தேகத்தை மூடிக்கொண்டது. பட்டும் சுத்தக் கருப் பாய்ப் போய்விட்டது. அப்போது திரும்பவும் செனமேசயன் விசனப்பட்டுப் பக வானை தோத்திரம் பண்ணும்போது பகவான் வந்து, "அடியைப் பிடியடா பாரதப் பட்டா"வென்று சொல்ல, திரும்பவும் பாரதம் உண்மையாய்க் கேட்டுக் குட்ட ரோகமும் தீர்ந்தது. பிரம்ம ஹத்தியுந்தீர்ந்தது. சுகமேயிருந்தான். ஆதலால், தமி ழாகிய கல்விக்குதவும் செயங்கொண்டாருலகத்தில் பஞ்ச பூதங்களை நம்பாமல் "தெய்வத்தை உண்டென்ற பேருக்கு உண்டு; இல்லை யென்ற பேருக்கு இல்லை" யென்று உலக வழக்கஞ் சொல்லுவார்களென்றவாறு. (29)

தன்னுயிர்போல் மன்னுயிரை நினை.

முன்னெருசோ ழன்புதல்வன் தேர்க்காலி
லான்குழவி முறியக் கண்டே
பின்னதற்கீ டாய்த்தனது பிள்ளையைத்
தேர்க்காலி லிட்டுபெருமை சேர்ந்தான்
தென்னியம நகரில்வளர் சவுந்தரநா
யகிமருவும் செயங்கொண் டாரே
தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணுவர்தே
வர்முனிவர் தனக்கீ டாமே.

என்றது :—முன்னுளிலே சோழராசா (மனு நீதிச் சோழன்) தபசு பண்ணி தியாகராசருக்கு இரக்கம் வந்து ஒரு புத்திர சந்தானம் கட்டளையிட்டார், அந்தப் பிள்ளைக்கு வீதி விடங்கன் என்று பெயருமிட்டு சகல சாத்திரமும் படிக்க வைத்து பிள்ளை பரிபாலனமாய் வளர்ந்துவரும் நாளையிலே ஒருநாள்பிள்ளை இரதத்தில் ஏறி வீதிவரும்போது தியாகராச ஈசுவரரானவர்சோழனுடைய நீதியை அறிவோமென்று தாமொரு பசுவும் எமதருமர் ஒரு கன்றுமாக(உருக்கொண்டு)தேர்வருகிற வீதியிலே வந்துகன்றுனது தடுமாறி தேர்வண்டிக்காலில் விழும்போது கன்றின் பேரில் வண்டி யேறி கன்றுனது நசுங்கி யிறந்துபோய்க் கிடக்க, பசுவானது கதறி சோழனுடைய ஆராய்ச்சி மணியைக் கொம்பினுலே யசைத்துக் கதறும்போது, சோழன் வெளிப் புறப்பட்டு மகன் ஏறிய தேர்க்காலிலே பசுவின் கன்று இறந்து போனது அறிந்து நன்றுய் விளங்கி, இராசாவும் தேவியும் யோசனையாகி மந்திரியையும் வரவழைத்து அநேக யோசனைபண்ணி இந்த தோஷத்திற்கென்ன செய்வோமென்று இராசா கேட்க, மந்திரிமார் காரியக்காரர் அந்த தோஷம் பரிகாரமாக சிவப்பிரதிஷ்டை பிரமப் பிரதிஷ்டை பசுபந்தனல யாகாதி கர்மங்கள் செய்யலாமென்று சொல்ல, இராசாவானவர் இவைகளிலே தீரமாட்டாது. அந்தப்பசுவின் கன்றுக்கொப்பாய், நான் தபசு பண்ணி ஈசுரன் கிருபையினுலே பெற்று வளர்த்த வீதிவிடங்கனைக் கன்று பழிக்குச்சரியாகக் கொடுத்தால் பசுவும் ஒப்புக்கொண்டு போம். பகவானுக்

கும் ஒப்புக் கொள்ளுமே ; என்னுடைய நியாயத்திற்கு அதுவே சரியென்று தன் பிள்ளை வீதிவிடங்களைத் தேர்க்காலிலே போட்டு தேரை நடத்திப் பழிக்குப்பழி கொடுத்தான். அப்போது, தியாகராச ஈசுவரருக்குக்கிருபைவந்து வீதிவிடங்கனையும் கன்றையும் எழுப்பிக் கொடுந்து நல்ல நீதிமானென்று வேண்டியவரங்களும் கொடுத்தார். ஆதலால், தென்னியமா நகரில்வந்த சவுந்தரநாயகி பாகம் பிரியாத செயங்கொண்டாருலகத்தில், 'தன்னுயிரைப்போல மன்னுயிரையும் எண்ணவேண்டுமென்று' உலகவழக்கஞ் சொல்லும் என்றவாறு. (30)

## வெண்ணெய் திரளும் போது தாழி உருண்டது போல்.

கண்ணர்படை தனைச்செயிக்க இந்திரசித்

நிகும்பலையைக் கருதிச் செய்தே

நண்ணியவேள் வியுமுடியும் தருணமதில்

இலக்குவன்போய் நாசஞ் செய்தான்

மண்ணையுண்டோன் விழிபதத்தில் அணிசெயங்

கொண்டாரே கொல்மத னூடாடி

வெண்ணெய்படும் வேளையிலே தாழிரெண்டா

யதுமுன் செய்தவிதி யென்பாரே.

என்றது:—இராமசுவாமி படையை செயம் பண்ண வேண்டுமென்று இந்திரசித்து நிகும்பலையாகம் செய்ய நினைந்து, ஒரு மாயா சீதையை யுண்டுபண்ணி அனுமார் முன்னுக்கு, கொத்தளத்தின் பேரிலே வைந்து அனுமாரே இந்தச் சீதை பொருட்டால் வெகுசனமிறக்க வேண்டியதென்ன, என் தகப்பன் வேண்டின பெண்ணை உங்களிடத்தில்விடுவேனோ? இதோவெட்டுகிறேன் பாருமென்று வெட்டி அகழியில் போட்டுவிட்டு, இனி உங்களுடனே சண்டை பண்ணுகிறதில்லை. அயோத்திக்குப்போய் பரத சந்துருக்கனரையும் மற்றுமுள்ள பேர்களையும் செயம்பண்ணப் போகிறேனென்று வடக்கு முகமாய்த் தேரை நடத்தி இராமசுவாமி பாளையத்திற்குத் (படைகட்கு) தெரியாதபடிக்கு நிகும்பலையாகம் நடப்பிவித்தான். இந்தச் செய்தியை அனுமார் வந்து பாளையத்திற்குச் சொல்ல, எல்லாரும் துக்கப்பட்டு இராமசுவாமி மயக்கமாகிற வேளையிலே, விபீடணன் மனந்தேற்றி வண்டு ரூபங் கொண்டு இலங்கையிலும் அசோகவனத்திலும் போய் சீதையம்மனையுங் கண்டு பேசி நிகும்பலை செய்யும் நடத்தையுந் தெரிந்து வந்து இராமசுவாமிக்குச் சொல்லி, இலக்குமணரையும் படையையுங் கூட்டிப்போய் நிகும்பலையாகம் முடியுந் தருவாயில் அந்த யாகத்தை யழிந்துப் போட்டுவிட்டார்கள். ஆதலால், மண்ணை யுண்ட மகாவிட்டுணுவின் கமலக்கண்ணைப் பாதத்தில் அணியப்பட்டச் செயங் கொண்டாருலகில், "வெண்ணெய்படும் வேளையிலே தாழி யுடைந்தது போலென்று", உலகஞ் சொல்லும் என்றவாறு.

## துன்புத்தி மந்திரியால் அரசுக்கீனம்.

அற்புதரா மன்கை வலிமுதனுள்
சண்டையி லரக்கனறிந் தும்புத்தி
சொற்பமகோ தரன்பேச்சைக் கேட்டலவோ
குலத்தோடுந் துஞ்சி னனே
தற்பரசதா சிவனே செயங்கொண்
டாரே நல்யோசனை பண்ணுத
துற்புத்தி மந்திரியா லரசுக்
கீனங்க ளென்றசொல் மெய்யதாமே.

என்றது:— இராமசுவாமியும் இராவணேசுவரனும் முதனுள் சண்டை பண்ணினதில் இராமசுவாமீ பாணப் பிரயோகங்களினுலே இராவணன் கூடவந்த தளங்களையுமறுத்து அவன் தேரையுமுடைத்து அவன் வில்லம்பு கவசங்களையு மறுத்து நிராயுதனுகப் பண்ணி, நிராயுதனுக நிற்கிருய், உன்னைக் கொல்வது தர்ம மல்ல. இன்று போய் உன் சரீர வருத்தங்களையும் தீர்த்துக் கொண்டு இன்னு மிருக்கப்பட்டப் படைகளையுங் கூட்டிக்கொண்டு நாளை வா வென்றனுப்ப, இராவணன் லச்சைப்பட்டு அரண்மனைப் போய்ச்சேர்ந்து பாட்டனுகிய மாலிய வானையும் மந்திரியாகிய மகோதரனையும் கூட்டி வந்து வைத்துக் கொண்டு சமர்க் களத்திலே நடந்த வர்த்தமானமெல்லாம் சொல்ல, அதற்குப்பதில் மாலியவான் அந்த இராமனை மனிதன் என்று சொல்லக்கூடாது. சீதையைக் கொண்டு போய் அந்த இராமனிடத்தில் விட்டு விடு. நல்ல வார்த்தை சொல்லுகிறதே காரியம் என்று சொல்ல, அப்போது இராவணேசுவரனுடைய நோக்கம் பார்த்து இராவண னுக்குச் சந்தோஷம் வரும்படியாய் மகோதரன் சொல்லுவான். இந்தக் கிழவன் கூறுகெட்டுப்போய் எதிராளிக்காலிலே போய், கும்பிட்டுவிழச் சொல்லுகிருன். நம்முடைய கோட்டையின் வலுவென்ன! நம்முடைய சேனு சமுத்திரப் பெருக் கென்ன! இந்திரசித்து முதலான மூந்த ஆண் பிள்ளைகளுடைய திராணி (வலிமை) யென்ன! இராவணேசுரன் பெற்றிருக்கின்ற வரப்பிரசாதங்களென்ன! இன்றைக்கு நம்முடைய படை சாய்ந்தால் நாளை அவன் படை சாயும். இந்த மட்டுக்கும் கும்பகர்ண இராசாவை யெழுப்பி அனுப்பினுல், அந்த இராமன் படை ஒரு வேளைப் பட்சணத்திற்குச் சரிகட்டு மென்று மகோதரன் சொல்ல, இராவண னுக்குச் சந்தோஷம் வந்து, இப்படியல்லோ யோசனை சொல்ல வேண்டும். மந்திரி சொன்னதே சரியென்று மகோதரன் சொல்லைக் கேட்டு, இராவணன் புத்திரமித்திர களத்திராதிகளுடனே இறந்து போனுன். ஆதலால், செல்காலம், நிகழ்காலம், வருங்கால மறியாத, "**துர்ப்புத்தி மந்திரியால் அரசுக் கீனம்**", என்று உலக வழக்கஞ் சொல்லும் என்றவாறு. (32)

**கோபமே சண்டாளம், பாவம்.**

ஆவலாய்ப் பரிதேடிக் கபிலரிஷி
யிடத்தினில்போ யகம்பா ராட்டித்
தாவியவெஞ் சினத்தாலே அறுபதினா
யிரம்பேர்கள் சகரான் மாய்ந்தார்
காவடருந் தென்னியமச் செயங்கொண்டா
ரேபொறுமை கருதிச் செய்யாக்
கோவமே பெரும்பாவம் பாவமும்
சண்டாள மெனக்கூறு வாரே.

என்றது:—சூரிய குலவமிசத்தி லொருராசாவானவர் அசுவமேதயாகம் பண்ணினார். அப்போது தேவேந்திரன் அந்த யாகம் நிறைவேறினால், அந்த இராசா தேவேந்திரப் பட்டத்திற்கு வருவார். நம்முடைய பட்டத்திற்குப் பிழை வருமென்று, மாயமாக வந்து அந்த யாகத்திற்கு நடத்துகிற குதிரையைப் பிடித்துப் பாதாள உலகத்திலே கொண்டு போய்க் கபிலரிஷி தபசு பண்ணினவர் பிறகே கட்டிவைத்துவிட்டுப் போய்விட்டான். அப்போது யாகம் பண்ணுகிறதற்கு குதிரையைக் காணோமென்று அந்த இராசாவுக்கு அறியப் பண்ணினார்கள். அந்த இராசாவின் பிள்ளைகள் அறுபதினாயிரம் பேரும் புறப்பட்டுப் பூலோகமும். தேவலோகமும் தேடிக்காணாமல் பாதாளலோகத்தையும் ஊடறுத்துப் பார்க்கும்போது கபிலரிஷி தபசு பண்ணுகிறவர் பிறகே நின்ற குதிரையைக் கண்டு இந்த ரிஷி குதிரையைக் களவு செய்து கொண்டுவந்து பாதாளத்திலே கட்டி வைத்துக் கொண்டானென்று அதை விளங்கச் செய்யாமல் ரிஷியைச் சுற்றி வளைந்தார்கள். அப்போது, நிஷ்டையிலிருந்த ரிஷியானவர் இவர்கள் கோபித்து வளைந்து நெருங்கினது தெரிந்து கோபத்தினாலே இவர்களை விழித்துப் பார்த்தார். அப்போது, அறுபதினாயிரம் பேரும் வெந்து, சாம்பலாய்ப் போனார்கள். அதன் பிறகு, அந்த வங்கிசத்திலே பகீரதன் என்றொரு பிள்ளை பிறந்து அநேகமாயிரந் தபசு பண்ணி ஆகாசக் கங்கையை அழைப்பித்து சகரான் அறுபதினாயிரம் பேருக்கும் முத்தி மோட்சத்திற்கு இடம் பண்ணினான். ஆதலால், காவலாகிய விருக்ஷங்கள் அடர்ந்த நியமநகரில் செயங்கொண்டாருலகத்தில் யாவரேனும் பொறுமையில்லாமல் செய்யில், "கோபம் பாவம் சண்டாளம்," என்று உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (33)

**காத்திருந்தோன் பெண்டுதனை நேற்று வந்தோன் கொண்டுபோன கதை.**

ஆத்தியணி வனைநோக்கி யொருநிருதன்
தவசுசெய்ய அவனுக் கேவாழ்
கூற்றையுதைத் தோனனுப்ப குறுக்கேசென்
றிலக்குவன்கை கொண்டா னன்றே

நாற்றிசையும் பணியவருஞ் செயங்கொண்
டாரே அனேகநா ளாயொட்டிக்
காத்திருந்தோன் பெண்டுதனை நேற்றுவந்தோன்
கொண்டுபோன கணக்குத் தானே.

என்றது:—ஆத்திமாலை யணியப்பட்ட ஈசுவரனை நோக்கி நிருதனுகிய இராக்கதன் சூர்ப்பனகைக் குமாரன் செம்புக் குமாரன் எதிர்த்தாரை சங்கரிக்கிற ஆயுதம் வாங்க வேண்டுமென்று கோமதி ஆற்றங்கரை பஞ்சவடி தீரத்தை அடுத்த வனத்தில் தபசு பண்ணினவன் பேரிலே அநேக நாளானதால் புற்று வளர்ந்து அதில் ஆல் முளைத்துப் பெரிய மரமாகி இருக்கும்போது, கூற்றுகிய எமனை உதைத்த ஈசுரன் வந்து உனக்கு என்ன வரம் வேண்டுமென்றுர். எனக்கு எதிராளியை வெல்ல ஆயுதம் வேண்டுமென்றுன். இன்ன நாளில் இன்ன வேளையில் உனக்கு ஆயுத மனுப்புகிறேமென்று சொல்லிப்போனுர். அப்போது, இராமலக்குமணர், சீதை, மூன்று பேரும் வன வாசம் வந்து பஞ்சவடிக்கரையிலிருக்கும் போது இலக்குமணர் ஒரு நாள் காய்கனி கொண்டுவரப் போனவர் அந்த ஆல மரத்திலே யேறி இலை பரித்துக் கொண்டிருக்கும் போது செம்புக் குமாரனுக்கு ஈசுரன் அந்த தினத்தில் ஒரு மந்திரவாள் அனுப்ப, அந்தவாள் ஆகாசமார்க்கமாய் வருகிறதைக் கண்டு இலக்குமணர் கையேந்தினுர். இராக்கதனும் ஆயுதம் வருமென்று கையேந்திக் கொண்டிருந்தான். அந்த வாளானது இரண்டு பேர் கை நீட்டவேண்டியது என்னவென்று, திரும்ப ஈசுரனிடத்தில் போய், நரன் கையும் இராக்கதன் கையும் இரண்டுகையும் வருகிறது. எந்தக் கையில் போவேனென்று கேட்க, ஈசுரன் முந்தின கையில் போவென்றுர். திரும்ப வந்து இலக்குமணர் மரத்தின் பேரிலே நின்றதால் கை உயர்ந்தது; வாள் அவர் கையிலே வந்தது. மரத்தை விட்டிறங்கி, இந்த வாள் கதுமை பார்க்க வேண்டுமென்று அந்த மரத்தை தூரேடே ஒரு வெட்டாய் வெட்டினுர். மரமும் இராட்சதனும் இரண்டு துண்டாய் விழுந்தனர். இராக்கதனுக்கு பிரமகற்பனை அப்படி முடிந்தது. இலக்குமணரும் வெட்டுப் பட்டது ரிஷியோ, இராக்கதரோ தெரியவில்லையென்று, வாளையுங் கொண்டு யோசனையின் பேரிலே தமயனிடத்தில் வந்து அறிவிக்க, இராமசுவாமியும் என்ன காரணமோ வந்ததை யனுபவிப் போமென்றிருந்தார்கள். ஆதலால், நாற்றிசையும் போற்றும் செயங் கொணடாருலகத்தில், "காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டானென்று" உலகவழக்குச் சொல் விளங்குமென்றவாறு. (34)

குதிரை நடவாவிடில் மாவுத்தர் பறப்பரோ.

விதுரனும் வில்முறித்தான் கர்ணனும்
பாம்பைமறுத் தொருக்கால்விட் டானில்லை
எதிரிபடை தனைத்துரியோ தனன்செயிக்கப்
படைத்தலைவ ரிணங்கி னுரோ

மதுரையிலிந் தனம்வளையல் விற்ற
செயங்கொண் டாரே மருவ
குதிரைநட வாவிடில்மா வுத்தர்பறந்
திடுவாரோ கொக்காய்த் தானே.

என்றது :—பாரத யுத்தத்திலே பாண்டவர்களும் துரியோதனுதிகளும் சண்டைபண்ணின காலபலத்தினுடைய வரலாறு என்னவென்றால், பாண்டவர்கள் ஐந்து பேரும் அவர்களில் புத்திரர்களும், சாத்தகி ஆழ்வாரும், விராடராசன் பிள்ளை உத்திரனும், விராட ராச்சியப் படைத்தளமும், ஆயுதம் எடுக்காமல் தந்திரம் சொல்லி தேரூர்ந்த கிருஷ்ண தேவரும் இவ்வளவு தான் தருமராசன் படையாவது,துரியோதன ராசனுக்குத் தம்பிமார் தொண் ணூற்றென்பது இராசாக்கள், கர்ணராசன், விதுரன், சகுனி, சல்லியன், தத்தராசன், கங்கை நாடாகிய அத்தினுபுரம் சீமை குருக்ஷேத்திர பூமியிலுண்டாகிய குருமன்னவர் அளவிறந்த கோடி இராசாக்கள், குருக்களாகிய துரோணுச்சாரியார், கிருபாசாரியார், அசுவத்தாமன் இப்படி அளவில்லாத சேனு சமுத்திரம் துரியோதன ராசன் பக்கலிலிருந்தொழிய, தருமராசாவின் படை அதில் மாகாணித் திட்டமுங் காணுது. அப்படி வலிகொண்ட துரியோதனன் படையை தருமர் படையினுலே தும்சம் பட்டு, அவ்வளவு பேரும் இறந்து தேசத்தையும் ஒப்புக்கொடுத்தது எதனுலேயென்றால், விதுரராசனுடைய வில்லின் வலிமையைச் சொல்ல முடியாது. துரியோதனன் பேரிலே கோபத்தினுலே அந்த வில்லை முறித்தெறிந்து விட்டுச் சண்டை முகத்திற்குப் போகிறதில்லை என்று இருந்துவிட்டான். கர்ணனிடத்தில் இருந்த நாகக்கணையை ஒருதரம் விட்டபோது பாண்டவர்கள் பொய்த் தலையைக் கட்டியிருந்தார்கள் ; அதைத் தலையென்றறுத்துவிட்டது. அதைப் பொய்த்தலை யென்றறிந்து இன்னமொருதரம் என்னைவிட்டால் பாண்டவர் தலையை அறுத்து விடுகிறேன் என்று ஆனமட்டும் நாகக்கணை சொல்ல, கர்ணன் திரும்ப விடுகிறதில்லையென்று நிறுத்திவிட்டான். அப்போது அசுவத்தாமா நடுப்படையிலே வில்லைக் கீழே போட்டு விட்டார். இப்படிப் படைத் தலைவரெல்லாம், துரியோதனனுக்குள்ளே அடக்கமில்லாமல் போனபடியினுலே துரியோதனன் படை இளைத்துப் போய்விட்டது. ஆனதால், மதுரைமா நகரில் விற்கும் வளையலும் விற்கத் துசங் கட்டிய செயங்கொண்டாருலகத்தில். ''குதிரை நடவாவிடில் மாவுத்தர் கொக்காய்ப் பறப்பாரோ'' என்று உலகஞ் சொல்லுமென்றவாறு. (35)

பாத்திரமறிந்து பிச்சை இடு.

சாத்திரவே தியர்வசிட்டர் தருமருட
சத்திரத்தில் சலச்சோ றுண்ட
மாத்திரமே லக்ஷமறை யோர்புசித்தா
லாடுமணி மலிந்தா டச்சே

நேத்திரத்தா லனங்கனுடல் பொடிபடுத்துஞ்
செயங்கொண்டார் நிமலர் நாட்டில்
பாத்திரத்தை அறிந்துபிச்சை யிடவேண்டு
மென்றுலகோர் பகரு வாரே.

என்றது :—தரும ராசாவின் சத்திரத்திலே தினம் இலட்சம் பிராமணுள் போசனம் நடக்கிறது. அந்த சத்திரத்திலே இலட்சம் பிராமணுள் சாப்பிட்ட வுடனே அந்த சத்திர மாளிகை முகப்பிலே கட்டியிருக்கிற ஆராய்ச்சி மணி தன் ஞலே அடியோசை காண்பிக்கிறது. அந்த சத்திரத்தில் ஒரு நாள் வசிட்ட ரிஷி வந்து சத்திரத்திற்குள் சுயம்பாகிகளிடத்தில் பசிக்கிறதென்று சாதம் வேண்டு மென்ருர். அவர்கள் இனிமேல்தான் சமையலாக வேண்டுமென்ருர்கள். சமைய லான உடனே சாப்பிடலாம் இருமென்று சொன்ஞர்கள். அவ்வளவு வரையிலும் பசிதாளாது. பழையதிருந்தாலும் சாப்பிடலாம் என்ருர். அந்த சுயம்பாகிகள் பழைய சோறு கொண்டு வந்து போட்டு சாப்பிடப் பண்ணிஞர்கள். சாப்பிட்டு எழுந்திருந்தவுடனே, 'இலட்சம் பிராமணுளும் சாப்பிட்டதன் பிறகு ஓசையிடுகிற ஆராய்ச்சி மணி,' வசிட்டர் ஒருவர் பழையது சாப்பிட்டு எழுந்திருந்த மாத்திரமே மிகுந்த சத்தத்தோடும் அந்த மணி யடிபட்டது. ஆனதால், அக்கினிக் கண்ணுலே மாரனை யெரித்த செயங்கொண்டாருலகில், "பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டும்" என்று உலகஞ் சொல்லியதென்றவாறு. (36)

### தன் பானை சாயப் பிடிப்பதுண்டோ.

அன்பான தருமரசு வத்தர்மா
வெனும்யானை யமரில் வீழ்க்க
வன்பான அசுவத்தா மாபட்டா
ரெனப்பிசகு வழுத்த லாச்சே
முன்பாத வருக்கெயிறைப் பறித்தெரிந்த
செயங்கொண்டார் முதல்வர் நாட்டில்
தன்பானை சாயப் பிடிப்பதுண்டோ
யெவருமென்று சாற்று வாரே.

என்றது :— பாரத யுத்தம் சமர்முகத்திலே பாண்டவர் படைக்கெதிரே துரியோதனன் பக்கல் சேனைக் காவலாகிய அசுவத்தாமா எதிரேநின்ற பாண்டவர் கள்பேரிலே சரவருஷமாய் வருஷிக்கிற போது, பாண்டவர்கள் இரத கஜ துரக பதாதிகளெல்லாம் கலக்கம் பிடித்துத் தட்டழிந்து விழித்து, யாதொருத்தரை ஒருத்தர் ஒப்பிட்டுக் கொள்ளாமல் படையிரியும் தருணத்தில் அசுவத்தாமா என்ற பேர்கொண்ட யானை இறந்தது. அவ் வேளையிலே கிருஷ்ண சுவாமியானவர் தர்ம

ராசனைப்பார்த்து, அசுவத்தாமா இறந்தார் என்று சொல்லென்றூர். தருமர் அப்படி பொய் சொல்லமாட்டேனென்றூர். அப்போது கிருஷ்ணசுவாமி தருமரைக் கோபித்துக் கொண்டு, க்ஷணப் பொழுதிலே அசுவத்தாமாவின் கையம்பினாலே நீங்கள் ஐந்துபேரும் உங்கள் படைத் தன்மை யெல்லாம் அதமாய்ப் போகிறீர்கள். நீர், சொல்லத்தேவையில்லை. ஒரு சாதுரியமாய் நான் சொல்லித் தருகிறேன். அப்படிச் சொல்லு. அசுவத்தாமா வென்கிற யானை பட்டத்துக் கஜமே யானதால் அசுவத்தாமா அதா குஞ்சர மென்று சொல்லும். அதற்குள்ளே வில்லைக் கீழே போட்டு விடுவார். நீ சொல்லியது பொய்யல்ல வென்றூர். தருமராசனும் இப்படிச் சொல்லாதவரையில் இவ் வேளைக்குச் சரிக்கட்டாது என்று அசுவத்தாமா அதாகுஞ்சரமேயென்றூர். குஞ்சரமே என்னும் சொல்லுப்பிறக்கிறதிற்குள்ளே தருமர் பொய் சொன்னூர் என்று அசுவத்தாமா வில்லைக் கீழே போட்டுவிட்டார். தருமராசனுக்கும் தன்காரியம் பிரதானமாச்சுது. ஆதலால், முன்னாளில் ஆதவனாகிய சூரிய பகவானுக்கு எயிறாகிய தந்தங்களை பின்னம் பண்ணிய செயங்கொண்டாருலகத்தில், **"யாருந் தன்பானை சாயப் பிடிப்பாருண்டோ"** என்று உலகம் சொல்லியது என்றவாறு. (37)

**சிறியபாம்பு ஆனாலும் பெரிய கம்பால்அடி.**

மன்னர்துரோ ணரையோனான் கொண்டு
போகுதென் றொருசொல் வந்ததாலே
பொன்னுரத மேறியம்பு வில்லெடுத்து
ஐவருஞ் சமர்க்குப்போ னாரன்றே
நன்னயவே தன்சிரசைக் கரத்தினில்
செயங்கொண்டார் நலஞ்சேர் நாட்டில்
சின்னப்பாம் பானாலும் பெரியகம்பா
லடியெனவுஞ் செப்பு வாரே.

என்றது :— அத்தினாபுரத்திலே திருதிராட்டிரன் ராஜரீகம் செய்து வருகிற நாளையிலே, திருதிராட்டிரன் பிள்ளைகள் நூறு பேருக்கும் பாண்டு இராசன்புத்திரர்கள் ஐந்து பேருக்கும் துரோணாச்சாரியார் ஆயுதப் பயிற்சிகள் கற்றுக் கொடுக்கிற நாளையிலே, திருதிராஷ்டிரன் துரோணாச்சாரியாரைப் பார்த்து என் பிள்ளைகட்கு நீர் கற்றுக் கொடுக்கிறவித்தை நன்றாய் வரவில்லை. என் தம்பி பிள்ளைகட்கு நன்றாய் வருகிறது. உம்மிடத்தில் வஞ்சகம் இருக்கும் போலிருக்கிறது என்று, சொன்ன மாத்திரத்திலே திருதிராட்டிரனை, துரோணர் கூட்டிக் கொண்டு சிங்காரத் தோப்பில் போய் இருவரும் மறைவாய் இருந்து கொண்டு ஒரு தூதன் வசமாய் பிள்ளைகள் படிக்கிற கெருடிக் கூட்டத்தில் போய், உங்கள் குல குருவாகிய துரோணாச்சாரியரை ஒரு ஓனான் கொண்டு போகுதென்று சொல்லச் சொன்னார்கள். தூதனும் போய்ச் சொன்னமாத்திரமே துரியோதனாதிகள் நம்முடைய குருவை

ஒனுன் கொண்டு போகவேண்டியதென்ன? அதையடித்து இழுத்தெறிந்து விட்டுக் குருவைக் கூட்டி வருவோமென்று ஒனுனை யடிக்கத் தக்க கம்பும் கடிகையு மெடுத்துக் கொண்டு நூறு பிள்ளைகளும் சிங்காரத் தோப்பில் போய் ஒனுன் கலைத்துக்கொண்டு திரிந்தார்கள். அப்போது பாண்டவர்கள் ஐந்து பேரும் நம்முடைய குருவானவர் மகாபராக்கிரமசாலி. அவரைக் கொண்டுபோய் என்ன செய்யவென்று ஐந்து பேரும் ஐந்து இரதத்திலேறி வில்லு மம்பு மெடுத்து அநேகம் படையும் பிறகே வரச்சொல்லிப் புறப்பட்டு சிங்காரத் தோப்பை வளைந்து ஒனுன் எந்தப் புறத்திலே கொண்டு போகுதென்று வினவினுர்கள். இருவகைப் பிள்ளைகளுடன் வந்த வரலாறுகளை திருதிராட்டிரனுக்குத் துரோணுச்சாரியார் ஒப்பித்து, உம்முடைய பிள்ளைகள் புத்தி இப்படியிருக்கிறது; நான் என்ன செய்யலா மென்றுர். ஆதலால், பிரமாவின் சிரத்தைக் கரத்திலணிந்த செயங்கொண்டாருலகத்தில், **"சின்னப் பாம்பானுலும் பெரியகம்பால் அடிக்க வேண்டு மென்று"**, உலகஞ் சொல்லிய தென்றவாறு. (38)

**காணியை நட்டுக் களத்தில் நில்.**

வேணியர சுப்பணியும் அச்சுதவா
ணக்குரிசில் வெள்ளா மைச்சீ
ராணிவல் லமையால்மூ வேந்தரையும்
காவலில் வைத்தவதி செய்தான்
பாணிமழு வணிசெயங் கொண்டாரே
எத்தொழில்களும் பழுதுண் டென்பார்
காணியைநட் டுக்களத்தில் நிற்பதுவே
நன்மையெனக் கருது வாரே.

என்றது:—காஞ்சீபுரம் சீமையிலே பேராளருக்கு அதிபதியாகிய அச்சுதவாணன் என்றெரு விவசாயி முயற்சியினுலே பெரிய குடித்தனமாயிருக்கும் நாளில், சேரன், சோழன் பாண்டியன் மூவரசர்களும் ஒரு முகூர்த்தத்திலெ வந்து வேட்டையாடி காஞ்சிபுரத்து வந்து இறங்கியிருக்கையில், முன் அச்சுதவாணனுக்கு எள்ளுங் கோட்டையுயர் ரொம்பக் கண்டு, முதலானது சேருக் களஞ்சியத்தில் போட்டு, மிஞ்சியதை உழவர்களிடந்தில் கொடுத்து இதை எண்ணெய் வடித்து, மாலை வேளையில் காவலுக்கு மொட்டைத் தீவட்டிப் பிடிந்துக்கொண்டு போகையில், பார்த்தவிடமெல்லாம் தீவட்டி வெளிச்சம் பரவியது. இதைக்கண்டு மூவரரசர்களும் உழவர்களைக் கூப்பிட்டு, உங்கட்குத் தீவட்டித் தந்தது யாரென்று கேட்க, அவர்கள் எங்கள் எசமான் அச்சுதவாணன் இப்படித் தீவட்டியோடும் காவலுக்குப் போகச் சொன்னுரென்று சொல்ல, அப்பால் அச்சுதவாணனை யழைப்பித்து உனக்கு இரட்டைத் தீவட்டி கொடுத்தது யாரென்று கேட்க, எனக்குத் தீவட்டித் தந்தது கோட்டைக் கொல்லைதானென்று சொல்ல, இராசாக்கள் தர நீ வாங்க வேண்டுமே

யன்னியில், நீ துராகிருதமாய்க் கோட்டைக் கொல்லை தந்ததென்று, சொல்ல வேண்டியதென்ன? வென்று கேட்க, உங்கட்குத் தீவட்டி முதல் சகலமான விருதும் ஏர்வேந்தர் தர, தேர் வேந்தர் வாங்க வேண்டுமேயல்லாமல் நீங்கள் தர நாங்கள் வாங்குகிற வழக்கமுண்டோ?வென்று இப்படிப் பேச்சு ரொம்ப நடந்ததில், ஏர் வேந்தர் பலமும் தேர்வேந்தர் பலமும் கண்டறிய வேண்டுமென்று இன்ன நாளை யிலே, இன்ன முகூர்த்தத்திலே இன்ன இடத்திலே அவரவர் சேனையும் வந்து சண்டை பண்ணுகிறதென்று பேசிவிட்டு இராச்சியத்தில் போய்ச் சேரவும், 'மேழியால் பிழைக்கிறவனெல்லாம் காஞ்சீபுரத்தில் வந்து சேரவுமென்று' எழுதிக் கொண்டதில், சகலரும், அச்சுதவாணன் பக்கலில் வந்து சேர்ந்தார்கள். மூவரசர் களும் ஒண்டி உள்ளிய (சேர்ந்த) வகுப்பும் வந்து சேர்ந்தது. இருவகைச் சனமும் சண்டை பண்ணின விடத்தில் அந்த மூவரசர்களும் தோர்வையாகி மூவரசர்களையும் பிடித்துக் காஞ்சிபுரத்தில் அச்சுதவாணன் கொண்டுபோய் காவலில் வைத்து, ஆறு மாதம் வரைக்கும் காவலிருக்கும். அப்பால், மூவரசர்களையும் அச்சுதவாணன் பார்த்து என்பேரில் ஆளுக்கொரு கவிதை சொன்னால் உங்களை விட்டு விடுகிறேன் என்று சொல்ல, அந்தப்படிக்குச் சேரன் சொன்ன வெண்பா:—

"சேனை தழையாகி செங்குருதி நீர்வார்த்து
ஆனை மிதித்த அருஞ்சேற்றில்—மாண்பான
மாவேந்தர் கொண்டாட வாணன் பறித்துநடு
மூவேந்தர் தங்கள் முடி."

இந்தப் படிக்கு, சோழ ராசனுமொரு கவிதை சொன்னார். அவர்களை விட்டு விட்டான். பாண்டிய இராசன் பார்த்து, நீ குடியானவன், உன்பேரில் நான் கவிதை பாடுகிறதில்லை. எங்கட்குமட்டுந்தான் அந்தக் கவிதை என்று சொன்ன வெண்பா—

"குறையுள்ளோ ரேங்கினர் கூர்வே லிளமா
குறையாறு திங்க ளிருந்தார்—அறைகழல்சூழ்
ஆலிக்குந் தானை அகளங்கா அச்சுதா
வாலிக் கிளையான் மனை"

ஸ்ரீ ராமனுக்கு, வந்த துன்பந் தீர்த்துக்கொள்ள, வாலி தம்பி சுக்கிரீபன் வாசலில் ஆறு மாதங் காத்திருக்கவில்லையா? உன் பேரில் பாட்டுப் பாடியா நாங்கள் இராச்சிய பரிபாலனம் செய்கிறது?என்று பாண்டிய இராசன்சொல்ல, அப்போது அச்சுதவாணன் இந்தப் பாட்டு எனக்குப் போதுமென்று பாண்டியனை விட்டுவிட்டான். ஆதலால், பாணியாகிய கரத்தில் மழுவை யணிந்த செயங்கொண்டார் உலகில், "**காணியை நட்டுக் களத்தில் நிற்பதுவே நன்மை,**" யென்று உலக வழக்கச் சொல் பிறக்குமென்றவாறு. (39)

## உயரத்தான் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ?

கயிலைத் தாருவைப்போல் அறுசிவனை
யுண்டுபண்ணக் கருதித் தக்கன்

செயலற்றே செயவேள்வி யுங்குலைந்து
வேற்றுமுகம் சேர்ந்தா னன்றே
அயிலைப்போல் விழித்துசவுந் தரியுமையாள்
பாகர்செயங் கொண்டார் பார்மேல்
**உயரத்தான் பறந்தாலும் ஊர்க்குருவி**
**பருந்தாமோ உலகுள் ளோரே.**

*என்றது :—தக்கனைனவன் ஈசுவரனை நோக்கி தவம் பண்ணி பரமேஸ்வரியைப் பெற்று, பரமேஸ்வரனுக்குக் கலியாணம் பண்ணிக் கொடுத்திருக்கிற நாளையிலே, தக்கனுக்கு ஒரு அகமானது (கர்வம்) வந்து தலைப்பட்டு இந்தச் சிவனைப் பார்க்க, அதிகமாகவொரு சிவனை யுண்டுபண்ண வேண்டுமென்று, சகல தேவதைகளையும் அழைப்பித்து வேள்வி நடத்தினான். அந்த வேள்வி மகத்துவம் பார்க்க, மகளாகிய பரமேஸ்வரி வந்து தாய் தகப்பனை வணங்கிய போதும், திரும்பிப் பாராமல் மகத்துவ மடைந்திருந்தான். அப்போது உமையவளுக்குக் கோபம் வந்து, இந்த வேள்வி "சுடலையாகப் போகக் கடவது" என்று சபித்தாள். இந்த வரலாறுகளை ஈசுரன் அறிந்து மனது வெகுண்டார். அப்போது விக்கினேசுரன் சுப்பிரமணியரை விட்டு வேள்வியை அழித்துவரச் சொல்லி யனுப்ப, முடியாத நிமித்தம் கோபாக்கினியாலே தேகம் வியர்வை கண்டது. அந்த வியர்வையிலே பதினாலு லோகத்தையும் நொடிப் போதிலே வேகப்பண்ண வல்லவனாகிய வீரபத்திரன் பிறந்தான். உடனே தக்கனையும் வேள்வியையும் அழித்துவரச் சொல்லி ஈசுரன் உத்தரவு கொடுக்க, அந்தப் படிக்கு வீரபத்திரன் சென்று தக்கனுடைய படையாகிய தேவதைகளை, யெல்லா மறுத்து யாகத்தையு மழித்துத் தக்கன் தலையு மறுத்தார். அந்தத் தலையை பூதமெடுத்து விழுங்கி விட்டது. அப்பாலே, ஈசுவரியைப் பெற்றவனென்று ஈசுவரன் அயத்து (ஆடு) அறுந்து அத்தலையை ஒட்டி எழுப்பச் சொன்னார். அந்தத்தலையைப் பூதம் விழுங்கி விட்ட படியினாலே, ஆட்டுக் கிடாத் தலையை எடுத்து ஒட்டவைத்து எழுப்பினார். ஆதலால், சிவனை எதிர்த்து மறுசிவனை யுண்டு பண்ண வேண்டுமென்று அகம் (கர்வம்) நினைத்ததால், சகல ஆணவமெல்லா மிழந்து தக்கன் வேற்று முகமானான். ஆதலால், அயிலாகிய வேல் விழி சவுந்தர நாயகி இடப்பாகமாகிய செயங்கொண்டாருலகத்தில்,* **"உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ!"** *வென்று உலக வழக்கஞ் சொல்வார்கள் என்றவாறு.* (40)

**ஊணன் உள்ள கருமம் இழப்பான்.**

அனியாய தக்கனக மழிக்கவந்த
கணபதி பட்சணத்துக் காசை
தோணியுண்டங் கிருந்தல்லோ காரியம்
காட்டாமல் முகம்தும்பி யானான்

பாணிதனில் மானணிந்த செயங்கொண்டா
ரேருசியும் பசியும் பார்த்த
ஊணனுந்தன் கருமமிழிந் தானெனவுஞ்
சொல்வாரிவ் வுலகுள் ளோரே.

என்றது :— தக்கன் செய்த வேள்வியை அழித்துவிடச் சொல்லி, விக்கினே சுரனை சிவனனுப்ப, விக்கினேசுரன் ஆகுவாகனத்தி லேறிக்கொண்டு பதினான்கு லோகமும் நடுங்கும்படிக்கு, மகாவுக்கிரந்தோடும் புறப்பட்டு, தக்கன் வேள்வியை நோக்கி வரும்போது, தக்கனும் தேவதைகளும் ஒரு யோசனை பண்ணி விக்கினேசு ரன் வருகிற வழியிலே, அளவில்லாத பலகார வகைகளும் கனி வர்க்கங்களையும் கொண்டு வந்து மலைபோல் குவிந்து வைத்தார்கள். அதை விக்கினேசுரன் கண்ட வுடனே வாகனம் விட்டிறங்கி, அதைப் பக்ஷணம் பண்ணிக் கொண்டிருந்தார். அந்த விக்கினேசுரன் தாமதமாயிருந்ததை யறிந்து, ஈசுரனானவன் தக்கன் வேள்வி யை அழிக்க சுப்பிரமணியரை யனுப்பினார். அதற்குத் தக்கனும் தேவதைகளும் யோசனை பண்ணி சுப்பிரமணியர் வருகிறவழியிலே அநேகந் தெய்வ அரம்பைகளை நாட்டியமாடச் சொல்லித் திட்டம் பண்ணினார்கள். சுப்பிரமணியரும் அந்த நாட்டி யத்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இட்ட லாபமாயிருந்து விட்டார். பிறகு ஈசுரனுக்குக் கோபம் வந்து, வீரபந்திரனை அனுப்ப, அந்த வீரபத்திரன் வருகிற வேகத்தைக் கண்டு சுப்பிரமணியர் மயில்மேலேறிக் கொண்டு வீரபத்திரனுக் கெட்டாமல் பறந்தோடிப் போனார். விக்கினேசுரன் தொட்டோட மாட்டாமல் தட்டழிகிறபோது வீரபத்திரன் முதல்வெட்டால் விக்கினேசுரன் தலையை அறுத் துப் போட்டார். அப்பால், தக்கன் வேள்வி யழிந்து இறந்தவர்களை யெழுப்புகிற போது, முன் விக்கினேசுரன் தலையை ஓம குண்டத்து அக்கினியிலே போட்டு விட்டபடியினாலே யானைத்தலையை வைத்து விக்கினேசுரனை எழுப்பினார். விக்கினே சுரன் உணவுக்காக இருந்ததால் எதிரியையுஞ் செயம் பண்ணாமல் உள்ள முகமும் போய் வேற்று முகமானார். ஆதலால், கையிலே மானணிந்த செயங் கொண்டாருல கில், "ஊணன் உள்ள கருமம் இழந்தானென்று" உலகஞ் சொல்லிய தென்ற வாறு. (41)

உனக்கு மழை பெய்யுமிப்போ எனக்கு இரவை கொடுத்தால்.

வனத்திலிந் திரன்நளன்பால் சென்றுனக்கு
வருமான மாதைத் தானே
தனக்குவரும் படிபேசி தமயந்தி
தனையெனக்குத் தாவென் றாற்போல்
சினக்குமர வணிந்தடியார் மனக்கவலை
தீர்க்கவந்த செயங்கொண் டாரே

உனக்குமழை பெய்யுமிப்போ நினக்கிரவை
பிறந்தாலென் றுரைத்த வாறே.

என்றது :—நள ராசனுக்கும் தமயந்திக்கும் அன்னம் தூது நடந்து நள ராசன் தமயந்தியை விட்டு வேறு பெண் கொள்ளுகிறதில்லை யென்றும், தமயந்தி நள ராசனை யல்லாது வேறு ராசாக்களுக்கு வாழ்க்கைப் படுகிறதில்லை யென்றும் பிரதிக்கினை பேசி, கலியாணத்திற்கு துலைமரம் நாட்டுகிற தருணத்திலே நாரதரான வர் தேவேந்திரனிடத்தில் போய் பூலோகத்திலே வீம ராசாவின் மகள் தமயந்தி யென்றொரு பெண்ணிருக்கிறாள். அவள் அழகுக்கு ஒப்ப பதினான்கு உலகிலுங் கிடையாது. அவளை நிடத நாட்டு நளராசன் கலியாணம் பண்ணப் போகிறான். அந்தப் பெண்ணை நீர் கலியாணம் பண்ணி வந்தாலும் உன்னுடைய இந்திராணி அவளுக்கு ஒரு திரணமாகும். அந்தப் பெண்ணை நீர் கலியாணம் பண்ண வேண்டு மானால் ஒருத்தராலேயும் அதற்கு இசைப்பு நடக்க மாட்டாது. அந்த நளனிடத் தில் தானே நீர் போய் அந்தப் பெண்ணை எனக்கு வாழ்க்கைப் படும்படிக்கு நீர் தயவு செய்ய வேண்டுமென்று சொன்னால், நீ தேவலோகத்து இராசாவானதால், அவன் பூலோகத்து இராசன் ஆவதால் உன்னைப் பெரியதாய் எண்ணி தாட்சிணியம் தள்ள மாட்டாமல் அது காரியம் சேரிட்டுத் தருவாரென்று துரவு (தந்திரம்) சொன்னார். அந்தப் படிக்குத் தேவேந்திரன் நளனிடத்தில் வந்து ரொம்பவும் தண்மையாய்ப் பேசி,தமயந்தி உனக்கு வாழ்க்கைப்படுகிறேனென் றிருக்கிறாளாம்.நீயே என்பேரில் தயவு வைத்து அந்தப் பெண்ணை எனக்கு வரும்படிப் பேசித் தரவேண்டு மென்று கேட்டார். நள இராசனும் வஞ்சக மில்லாமல் தமயந்தி யிடத்தில் போய் ஆன பிரயத்தினம் பண்ணிப் பேசினதில் அவள் சரிப்பட மாட்டோமென்று நளனுக்கே வாழ்க்கைப் பட்டாள். தேவேந்திரனும் நளராசனாலே வஞ்சகமில்லை. அந்தப் பெண்ணுக்கு நான் கொடுத்து வைக்கவில்லை யென்று, புறப்பட்டுத் தேவேந்திர லோகம்போய்ச் சேர்ந்தான். ஆதலால், சினந்தானே மிகையாகிய அரவை ஆபரண மாய்ப் பூண்டும், அன்பராயிருக்கிற அடியார்களுடைய மனக்கவலை எல்லாந் தீர்த்த செயங்கொண்டாருலகத்தில், "உனக்கு மழை பெய்யும் எனக்கு இரவை பிறந்தா லென்று" உகல வழக்கஞ் சொல்லு மென்றவாறு. (42)

நல்லது சொன்னால் பொல்லாப்பு இல்லை.

கஞ்சனுக்குப் புலியில் கோவில்
பூசையில்லை யெனக்கடிந்தா ரீசன்
கெஞ்சியபின் மறையவர்செய் பூசையெல்லாம்
உனக்கெனவே கிருபை செய்தார்
பஞ்சனுக்காய் மாறிநடித் திட்டசெயங்
கொண்டாரே பகைவோ ரண்டி
அஞ்சிநல்ல வார்த்தைசொன்னால் பொல்லாப்பு
வருவதில்லை யவனி யோர்க்கே.

என்றது :—கஞ்சனுகிய பிரம தேவரும் மகா விஷ்ணுவும் இருவருக்கும் வார்த்தை தர்க்கம் வந்து ஈசுரனுடைய அடியும் முடியும் தேடிக்கண்டு வருகிறோ மென்று வீறுகள் பேசி விஷ்ணுவானவர் வராக ரூபமெடுத்து பூமியைத் துளைத்து பாதாள லோக பரியந்தம் தேடியும் ஈசுரனுடைய பாதம் காணமாட்டாமல் வெளி யில் வந்து நான் பாதம்காண வல்லவனல்லவென்று உள்ளதைச் சொல்லிப் போட் டார். அப்பொழுது பிரமாவானவர் அன்ன ரூபமெடுத்துப் பறந்து அநேகங் காலம் தேடியுங் காணுமல் அண்ட கோளத்தையும் பிரமாண்ட கோளத்தையும் பூலோக முதல் மகாலோகம் வரைக்கும் தேடியும் முடி காண மாட்டாமல் சிறகுக ளெல்லா முதிர்ந்து மனமெலிவான வேளையிலே ஈசுரன் சடா மகுடத்திலிருந்து ஓலைப் பூவானது தவறிவந்து பிரமாவைப் பார்த்து எங்கே போகிருயென்று கேட்க, ஈசுரனுடைய முடியறிந்து வரப் போகிறேனென்று பிரம்மா சொல்ல, அந்த ஓலைப் பூவானது நகைத்து நான், ஈசுரனுடைய சடா மகுடத்திலிருந்து தவறிவந்து வெகு காலமாச்சுது. இன்னம் பூமி காணவில்லை. நீராவது போய்க் காணவாவது என்று சொல்ல, அப்போது ஓலைப் பூவைப் பார்த்து, நீ எனக்கொரு சகாயம் பண்ண வேண்டும். பிரம்மா வந்து ஈசுரன்முடி கண்டாரென்றும், கண்டதற்கு சாட்சிக்காக என்னைக் கூட்டி வந்தாரென்று சொல்ல வேண்டுமென்று தாழம் பூவுக்கு உபசாரம் பண்ண, அந்த வார்த்தைக்குத் தாழம் பூவும் சம்மதித்து வந்து ஈசுரன் முடிகண்டு வந்தோ மென்று பொய் சொன்னுர்கள். ஓலைப் பூவும் பொய் சாட்சி சொல்லியது. அப்போது மகா தேவர் பிரம்மாவைப் பார்த்து மிகுந்த கோபம் கொண்டு இந்தப் பொய் சொன்னதற்கு பூலோகத்திலே உனக்குக் கோவிலும் பூசையுமில்லாமல் போகக் கடவது என்று சபித்தார். அப்போது பிரம்மாவானவர் பயந்து ஈசுரனை வணங்கி அடியேன் தெரியாமல் செய்த அபசாரம் பொறுத்து ரட்சிக்க வேண்டு மென்று கெஞ்சினுர். அப்போது மகா தேவருக்கு இரக்கம் வந்து பூலோகத்திலே பிராமணன் செய்கிற பூசையெல்லாம் உனக்காம் என்று திருவுளம் பற்றினுர். ஆதலால், பஞ்சவனுகிய பாண்டிய ராசனுக்காக துவாத சாந்தத்திலே மாறியாடிய செயங் கொண்டார் உலகத்திலே, "நல்ல வார்த்தைக்குப் பொல்லாப் பில்லை" என்று உலகம் சொல்லு மென்றவாறு. (43)

அனுபோகம் தொலையும் போது அவிழ்தம் சித்திக்கும்.

முனியகலி தனைக்கல்லாய்ச் சபித்துமணி
விரத்திருக்கு முரைசொன் னுப்போல்
மறுவேந்த னுகியரி நடந்திருந்தாள்
படப்பழைய வடிவா னுளே
தனவானைத் தோழனென்ற செயங்கொண்டார்
எவர்க்கும் துலைநாள் செய்த
அனுபோகம் தொலைந்திடும்போ தவிழ்தஞ்
சித்திக்கு மென்பா ரவனியோரே.

என்பது:— கௌதம ரிஷியானவர் அகலியைக் கல்லாகச் சபித்தார். அதன் பிறகு நிவர்த்திக்கும் வழி சொன்னார். அவர் சொன்ன பிறகாரம் அநேக நாள் கிரமித்து (கழித்து) மகா விஷ்ணுவானவர் இராமாவதாரஞ் செய்து விசுவா மித்திரருடைய வேள்வி காத்து, அப்பால் மிதிலைக்குப் போகிறபோது இராம சுவாமியினுடைய பாததூளி அகலி கருங்கல்லாய்க் கிடக்கிறவள்மேல் பட்ட மாத்திரத்தினாலே பழைய வடிவாய் கௌதம ரிஷியிடத்தில் போய்ச் சேர்ந்தாள். ஆதலால், தனவானாகிய குபேரனைத் தோழமையாய் வைத்துக்கொண்ட செயங் கொண்டாருலகத்திலே, "அனுபோகந் தொலையும்போது ஔஷதம் சித்திக்கும்," என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (44)

**நிழலருமை வெயிலில் போனால் தெரியும்.**

வளமையுள்ள ராமனை விபீடணன்
சேர்ந்திலங்கை மகுடந்தான் பெற்றான்
தளருமரக் கருனிருஞ்சு மறவேந்த
னவனையொக்கச் சதிப்பா ரன்றே
களபமணி தனத்திசவுந் தரிபாகர்
செயங்கொண்டார் தனஞ்சேர் நாட்டில்
நிழலருமை வெய்யினில்போ னால்தெரியு
மென்பதுவும் நிசங்கண் டீரே.

என்றது :—வளமையாகிய கற்பக விருட்சத்தின் நிழல் போலே யாருக்கு மாதரவாயிருக்கின்ற ஸ்ரீ ராமச்சந்திரனிடத்தில் அக்கினி ஜ்வாலையை சொலித்துக் கொண்டிருக்கிற மனமும் குணமுமுடைய இலங்கைப் பட்டணத்திலிருந்த விபீஷணன் வந்து அடைக்கலம் புகுந்ததால் இலங்காபுரி நகரத்திற்கு மணி மகுடம் பெற்றான். அப்படிக்கு இராமசுவாமியிடத்தில் வந்து சேராமல் இலங்கை இராக்கதருடனேயிருந்து இராக்கதர் சண்டை சமரத்திற்கு வந்த பேருடனே விபீடணனும் கூட சண்டை சமரத்திற்கு வந்தால், அரக்கருக் கொப்பக்தந்தானல்லவா விபீடணனும். ஆதலால், களப வாசனை பொருந்திய சவுந்தரி நாயகி பாகர் செயங்கொண்டாருலகத்திலே, "நிழலருமை வெயிலில் போனால் தெரியுமென்று," உலகஞ் சொல்லுமென்றவாறு. (45)

**குப்பையிலே கிடந்தாலும் குன்றிமணி மங்காது.**

செப்புமரிச் சந்திரன்தான் நிசனுக்கு
விலையாகச் சென்றே நெஞ்சம்
ஒப்பிமயா னமும்காத்த நிமித்தியத்தால்
இழுக்கவனுக் கொருபோ துண்டோ

**மைப்படியும் குழலிசவுந் தரிபாகர்**
**செயங்கொண்டார் வளஞ்சேர் நாட்டில்**
**குப்பையிலே போட்டாலும் குன்றிமணி**
**நிறத்திலொன்றும் குறைவ ராதே.**

என்பது :—அரிச்சந்திர இராசனுக்கு ருணந்தீரவேண்டிய இமிசைக்காகத் தரகுகாரனைச் சுமந்தும், பெண்சாதியை விற்றும், மயான பூமி காத்திருந்தும், வாய்க்கரிசியைப் புசித்தும் அநேகஞ் சிறுமைகள் பட்டும், பூமி உள்ள வரைக்கும் (சத்திய அரிச்சந்திரனுக்கு சமானமான இராசர்களுமில்லை) யென்று பேராக் கினனே ; அவரை சீரிதமாய் (குறைவாய்) ஒருத்தரும் சொல்வாரில்லை. ஆதலால், மையாகிய மேகம் படிந்த அளகா பாரத்தையுடையச வுந்தரனுயகி பாகர் செயங்கொண்டாருலகத்திலே, **"குப்பையிலே போட்டாலும் குன்றிமணி மங்கா தென்று"** உலகஞ் சொல்லுமென்றவாறு. (46)

**கணக்கனுக்கும் கைக்கூலி கட்டி குடியிருப்பது கடன்.**

**வணக்கமுடன் சித்திரபுத் திரற்கமரர்**
**பதிதான் மகிழ்ந்தே பொங்கல்**
**இணக்கமுடன் செய்யாத நிமித்தத்தால்**
**வழக்குமெத்த இடைஞ்ச லன்றே**
**அணைக்கடல்மேல் நடந்தமுகில் பணிசெயங்**
**கொண்டாரே மெய்யருள்சேர் நாட்டில்**
**கணக்கனுக்கும் கைக்கூலி கட்டியல்லோ**
**குடியிருக்கக் கடனென் பாரே.**

என்றது :—சித்திரபுத்திர சுவாமியார் உலகத்தார் செய்கிற பாவபுண்ணிய மெல்லாம் பகிர்ந்து பார்த்துக் கணக்கெழுதுகின்ற நாயனென்று உலகத்தாரெல் லாம் சித்திராபௌர்ணமியில் பொங்கலிட்டு ஆராதனை செய்து வருகிறதில், அந்த அமராபதியாகிறவள் சகல விரதமும் சகல தருமமும் செய்து வருகிறவள் சித்திரா பௌர்ணமி நோன்பு செய்கிறதுமில்லை. சித்திராபுத்திரனை நினைக்கிறது மில்லை. அதனுல் சித்திரபுத்திரர் அமராபதி பேரில் கோபம்பண்ணின நிமித்தம் அமராபதிக்கு வந்த துன்பங்களுக்கு அமராபதி கதையில் கேட்கத் தெரியுமே. பின்னுங் கணக்கர் விரோதமாகாதென்று கம்பரும் பாடியிருப்பதால், இராசாக்கள் சிநேகமிருந்தாலும் கணக்கன் பகை கொஞ்சம் இருந்தால் காரியம் குந்தகம் வருமே; ஆதலால், மகாவிஷ்ணு பணிபாதராகிய செயங்கொண்டாருலகத்தில் **"கணக்கனுக்கும் கைக்கூலிக் கட்டி குடியிருக்க வேண்டுமென்று,"** உலகஞ் சொல்லு மென்றவாறு. (47)

**படைக்கு ஓடி வாழ், பஞ்சத்திற்கு இருந்து வாழ்.**

கடியகனல் முனிக்கோடிப் பயந்தீசன்
ஐவிரலிக் (ஐவேலன்காய்) காய்க்குள் சென்றூர்
திடமார னிருந்துமஞ்சை விலங்கிலிட்டுப்
புவிக்குமழை செழிக்கச் செய்தான்
கொடியிடைப்பெண் சௌந்தரி பாகர்
செயங்கொண்டார் பொன்குலவு நாட்டில்
படைதனக் கோடிப்பிழைப் பார்பஞ்ச
மதற்கிருந்து பிழைப்பா ரென்பாரே.

என்பது:—பற்பமா ரிஷி (பத்மாசூரன்) தவம் பண்ண இறைவன் தோன்றினூர். இறைவனை ரிஷி "நான் தொட்ட விடமெல்லாம் வெந்து நீராகப் போக வேண்டுமென்று" வரங்கேட்டான். இறைவனும் தந்தோமென்றூர். அப்பொழுது பற்ப மகாரிஷி முதல் சோதனை உம்முடைய சிரசைத் தொட வேண்டு மென்று வந்தான். இறைவன் பயந்தோடி ஐவிரலிக் காய்க்குள்ளே (ஐவேலங்காய்) புகுந்து கொண்டார். இந்த வரலாறுகள் மகா விஷ்ணுவுக்குத் தெரியப்பட்டு அவர் மோகினி வேடமெடுத்து பற்பமாரிஷி மோகினிபேரில் மிகுதியும் மோகித்து ஆலிங்கனம்பண்ண வரும்போது, மோகினி கையமர்த்தி தீர்த்தமாடி விட்டு என்னிடத்தில் வாவென்று சொல்ல, பற்பமா ரிஷி தீர்த்தமாடப் போனவிடத்தில் தீர்த்தமில்லாமல் போக, தீர்த்தம் காணேமென்று வர, மோகினியானவள் கொஞ்சம் தண்ணீரைத் தொட்டு சிரசில் வைத்துக்கொண்டு வா வென்று சொல்ல, அவ்விடத்திலே மாட்டுக்குளம்படியிலே கொஞ்சம் தண்ணீர் கிடக்க, அந்த ஜலத்தைத் தொட்டு அவன் சிரசிலே வைக்கும்போது பற்பமா ரிஷி வெந்து சாம்பலானுன். அப்பால் இறைவனும் வெளியானூர். பின்னும், பாண்டியன் தேயத்தில் பன்னிரண்டு வருஷம் மழை பெய்யாமல் பஞ்ச நாடாய்ப் போனபோதும், பாண்டியனை நம்பின சனங்களை எடுபடாதபடிக்கு நிறுத்திக்கொண்டு, சப்தமேகத்தையும் பிடித்து விலங்கிலடைத்து அப்பால், வேளாளர் வசமாய் விலங்கு வெட்டி மழை வருஷிக்கும்படி பண்ணி, மழை அவதியும் பஞ்சத்தின் அவதியும் தீர்த்தான். ஆதலால், கொடி மருங்குடைய சவுந்தரநாயகி இடப்பாகராயகி செயங்கொண்டாருலகத்தில், "**படைக்கு ஓடிப் பிழை, பஞ்சத்திற்கு இருந்து பிழை,**" என்று உலகஞ் சொல்லுமென்றவாறு. (48)

**உறவுதனைப் போலிருந்து குளவியைப்போல் கொட்டுவதா ?**

திறமுளசஞ் சீஷகனைத் தமரகன்கண்
டழைத்துவந்து சிங்கத் திற்கு
நிறையுள்ள மந்திரியாய் வைத்தபின்சிங்
கந்தனக்கும் ரிஷபத் திற்கும்

சறுவபகை யுண்டுபண்ணி விட்டதன்றே
செயங்கொண்டார் தமிழ்சேர் நாட்டில்
உறவுதனைப் போலிருந்து குளவியைப்போல்
கொட்டுவதில் வுவமை தானே.

என்றது:—பிங்கலனென்றொரு சிங்கம் அகன்ற கானகத்திற்கு அதிபதியாய் இராஜரீகம் செய்துவர, அந்தச் சிங்கத்தின் வாசலில் கரடகன் தமனகன் என்ற இரண்டு நரிகள் பிரதானிகளாக இருந்தன. அந்தக் கானகத்திலுள்ள மற்ற மிருக சாதிகளில் தினம் ஒரு சாதிக்கு ஒரு சீவன் வீதம் சிங்க இராசனுக்கு இரையாக வந்து சேரும்படி இருந்தது. கரடகன் தமனகன் காவல்பண்ணி நித்தியப்படி வருகிற பன்றி, மான், முயல்களை சிங்க இராசன் புசித்ததுபோக மீதியுள்ளதை இந்த கரடகன் தமனகன் புசித்துக்கொண்டு சுகஜீவனம் பண்ணிக்கொண்டிருக்கிற நாளில், ஒரு வர்த்தகன் சஞ்சீவகனென்றொரு எருதில் சரக்குப் பொதியை ஏற்றிக் கொண்டு போகையில் அந்த எருதுக்கு நடுக்காட்டில் கட்டைப்பட்டுத் தடுமாறி கால்கள் உதவாமல் போனதால், அந்த வர்த்தகன் மறுமாட்டில் பொதியை வைத்துக்கொண்டு இந்த சஞ்சீவகன் என்ற எருதைக் காட்டிலேயே விட்டுப் போய் விட்டான். அந்த சஞ்சீவகனுக்குக் கால் முடமும் லகுவாகி அந்தக் காட்டிலே புல்லுந் தண்ணீரும் குடித்து உடலுமுயிரும் திறப்பட்டு எருது கெர்ச்சிதம் பண்ணிக்கொண்டிருக்கையில் அந்தக் கரடகன் தமனகன் இரண்டுபேரும் சஞ்சீவகனைக் கண்டு பேசி, மிகவும் அன்னியோனியமாய் எங்கள் சிங்க இராசாவின் வாசலுக்கு நீர்காத்திரமான தேகமுடையவராதலால் பிரதானிகத்திற்கு இருந்தால்ரொம்பவும் கனம் பொருந்தி அழகாயிருக்குமென்று சிங்கத்திற்கும் ரிஷபத்திற்கும் ஸ்தானுபத்தியம்பண்ணி சஞ்சீவகனைக் கூட்டிப்போய் சிங்கத்தினிடத்திலே போட்டி பண்ணவைத்து, தாங்கள் பார்த்த காருபாரையும் சஞ்சீவகனுக்கு வாங்கிக் கொடுத்து சிறிது நாள் இப்படி இஷ்டமாக இருக்கையில் சஞ்சீவகன் புல்லுத் தின்கிற மாடாகையால் சிங்கத்திற்கு நித்தியப்படி புசிப்புக்குத் தக்கதாய் பெரிதான மிருகங்களை அழைப்பியாமல், மட்டுக்கு மட்டாய் சின்னம் சிறியதாய மிருகங்களை வரும்படி பண்ணினான். அவைகளை சிங்கம் புசித்து மிகுந்ததைக் கரடகன் தமரகன் புசிக்கிறதில், கரடகன் தமரகனுக்கு ஆகாரக் குறைச்சலாய்ப் போய் விட்டது. அப்போதுக்கு இரண்டு நரியும் கூடிப் பேசி நம்முடைய காரியத்தை நாம் தானே கெடுத்துக்கொண்டோம். இனி சஞ்சீவகன் காறுபாறு பார்த்தால் நம்முடைய காரியம் ரொம்பவும் குந்தகமாகிறது. இனி சஞ்சீவகனுக்கும் சிங்க இராசனுக்கும் மித்திர பேதங்களை உண்டுபண்ணி, சஞ்சீவகனைக் கொன்றுபோட வேண்டுமென்று பேசிக்கொண்டு சஞ்சீவகனிடத்தில் வந்து, இந்த சிங்கம் உன் வலிமையிலே கால் பங்கு வலிமைகூடக் காணமாட்டாது. இது துரைத்தனம் பண்ணுகிறேனென்று பேரிட்டுக்கொண்டு காட்டிலே உள்ள மிருகங்களை எல்லாம் தின்று தீர்த்துவிட்டது. அதற்கொரு தந்திரம் சொல்லுகிறோம். நீர் காலமே சிங்கத்தினிடத்தில் வரும்போது கர்ச்சிதமாய் குரல் போட்டுக்கொண்டு கொம்பைக் குலுக்கிக்கொண்டு வா. சிங்கம் பயந்தோடிப் போனாலும் போகும். ஒரு வேளை

எதிர்த்து வந்தால் கொம்பினுலே ஒரு குத்தாய் குத்திவிட்டால் அது இறந்து போகும். அப்பாலுன்னை இராசாவாக வைத்து நாங்கள் மந்திரியாக நெடுகிலும் இட்டமாக விருக்கலாமென்று சொல்ல, அது, மாட்டுப் புத்தியினுலே நரியின் பேச்சைக் கேட்டது. அப்பால், இரண்டு நரியும் சிங்கத்தினிடம் போய் தேவரீரை சஞ்சீவகன் ஒரு பொருட்டாய் நினைக்கவில்லை. காலமே சாமி சமுகத்திற்கு வரும் போது தங்கள் பேரில் சண்டைபண்ண வேண்டுமென்று எங்களிடத்தில் சொல்லி யிருக்கிருன். அப்படி வந்த காலையிலே அவனை சாமி சரிப்படுத்திவிட வேண்டும். அதனுடைய காத்திரம் (தேகம்) நிணத்ததேகம். நல்ல மாமிசமாயிருக்கும். சாமிக்கு எட்டு நாளைக்குப் புசிக்கக் காணுமென்று சிங்கத்திற்கு மிப்படிச்சொல்லி, சிங்கமும் துட்டப் புத்தியினுலே நரியின் பேச்சை விசுவாசித்து காலமே சஞ்சீவ கனும் நரிகள் சொன்ன பரிகாரத்திற்கு வரவே, சிங்கம் ஒரே பாய்ச்சலில் அடித்து இடபத்தையும் பிளந்து போட்டுவிட்டது. முன் நரிகள் இரண்டும் உதட்டளவிலே உறவு பிடித்துப்பிறகு உயிரளவிலே கெடுதல்பண்ணிவிட்டது. ஆகையாலே, தமிழ் வாசனை பொருந்திய செயங்கொண்டாருலகத்தில், **"உறவுபோல் இருந்து குளவிபோலக் கொட்டினுர்களென்று"** உலகஞ் சொல்லுமென்றவாறு. (49)

## எறும்பிற்கும் தன் கையால் எண்சாண்.

அறம்பெற்ற சோழனை மண்தின்னி
மரப்பாவா யென்றதுவோர் பாட்டாய்
வெறும்பித்தன் சொல்லவந்த வேந்தர்சபை
அதைநிகராய் வியார்த்தி சொல்ல
திறம்பெற்ற பரிசுகொண்டான் தென்னியம
நகரினில்வாழ் செயங்கொண் டாரோ
எறும்பிற்கும் தன்கையா லெண்சாணென்
றுலகிலுள்ளோ ரியம்பு வாரே.

என்றது :—அறமாகிய தர்மக்குரிசிலான சோழராசன் சமுகத்திலே வித்துவ ஜனங்கள் (புலவர் பெருமக்கள்) நித்தியம் கவிதைப் பிரசங்கம் பண்ணுகிறது. இராசன் அந்தக்கவிதை கேட்டு அவரவருக்குத் தேவையான ஆடையாபரணம் பூஷணுதிகள் கொடுக்கிறது. இராசா சமுகத்திலிருந்து பரிசு வாங்கிப்போகிற சனம் வழிவிலகி நிற்கவேண்டும். இப்படி நடக்கிற காரியம் எங்கும் தெரிந் திருக்கும். அந்தப் பட்டணத்திலே புருடன் பெண்சாதி ஆகிய இரண்டு பேர் கூலிவேலை செய்து நாள்தோறும் வயிறு வளர்க்கிறது. ஒருநாள் பெண்சாதி புருஷனைப்பார்த்து, உன் தகப்பன் உன்னைப் பள்ளிக்கூடத்தில் வைத்து வித்தை வரப் பண்ணவில்லையே ; இந்த இராசன் முன்னிலையில் பாடுகிறேன் ; அதனுல் வரும் வருமானத்தை அறிவோமென்று வீதியில் புறப்பட்டு வரும்போது, அந்தத் தெருவில் சிறுபிள்ளைகள் மண்ணைக் குவித்துக்கொண்டு விளையாடுகிற

போது, மண் தின்னி மரப்பாவாய்! கோவில் பெருச்சாளி! என்று சொல்லி விளையாடினதை இதுவும் ஒருபாட்டாச்சென்று, அப்பால் போனபோது, வழியை யடுத்த விட்டில் மாமியாரானவள் மருமகளைப் பார்த்து என்மகன், காதரையனோ! கூதரையனோ! அவனை நீ பழிப்புச் சொல்ல வேண்டியதென்ன? வென்றாள் இதுவுமொரு பாட்டு ஆச்சென்று உடனே இராச சமுகத்தில் நின்றுகொண்டு கேவலமாய்த் தானே, "மண் தின்னி மரப்பாவாய்! கோவில் பெருச்சாளி! காதரையா கூதரையா சோழங்கப் பெருமானே!" என்று சொன்னான். அப்போது இராசாவும் அந்த சபையில் இருந்த வித்துவான்களைப் பார்த்து, இதை இலக்கண வழக்கமாய்ப் பிரித்துச் சொல்லச் சொன்னதில், அந்த வித்துவ சனங்கள் சொன்னது, மண்ணுண்டது மகாவிஷ்ணுவை என்று எண்ணி இதைப் பெரியதாய் அர்த்தம் பண்ணினதில் இராசனுக்கு சந்தோஷம் வந்து அவனுக்கு வெகுமதி செய்தார். ஆதலால், தெற்குத் திசையாகிய அழகுசிறந்த நியம நகர் வாசராகிய செயங்கொண்டாருலகத்திலே, "எறும்புக்கும் தன்கையா லெண்சாண் உடம்பு," என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (50)

**நாளை என்பார்க்கு, இன்று இல்லை என்பார் நல்லவர்.**

வாளிரவி சுதன்வலக்கை யாலெடுத்துக்
கொடுக்குமுன்னே மனம்வே றுமென்
றேழைமறை யோர்க்கிடக்கை யாலெள்ளைக்
கிண்ணமெடுத் தீந்தா ரன்றே
ஆழிதனிற் பள்ளிகொள்ளும் மால்பணியும்
பொற்பர்செயங் கொண்டார் நாட்டில்
நாளையென்பார் கொடைதனக்குச் சடுதியிலே
இல்லையென்பார் நல்லோர் தானே.

என்பது:—இரவியாகிய சூரியபகவான் பிள்ளை, கர்ணராசனிடத்தில் எளிய பிராமணன் கன்னிகாதானத்திற்கு வந்து காத்திருக்க, ஒருநாள் கர்ண ராசனுக்கு சொர்ணக் கிண்ணத்தில் தையிலம் கொண்டுவந்து, அந்தத் தையிலம் தேய்த்துக் கொண்டிருக்கிறபோது, அந்தப் பிராமணன் போய் முன் நிற்கிறதைக் கண்டமாத்திரத்திலே அந்தச் சொர்ணக் கிண்ணம் கர்ணராசன் இடது கைப் பக்கத்திலிருந்தது. அதை அந்த இடது கையால் எடுத்து, இந்தாரும் பிள்ளாய்! இதைக் கொண்டுபோய் விற்று, கலியாணம் பண்ணிக் கொள்ளென்று கொடுக்க, அந்தப் பிராமணன் கர்ண ராசனைப் பார்த்து வலது கையாலே தரலாகாதா வென்று கேட்க, கர்ணராசன் கிண்ணம் வலதுகை கிட்டாமலிருந்தது. எட்ட இருந்த கையாலே கொடுக்கிறதற்குள்ளாய் எண்ணெய்க் கிண்ணத்தை ஏன் கொடுக்கிறோம்; நாளை, பின்னைப் பணம் சேகரித்துக் கொடுப்போமென்று மனம் நினைக்கும். அப்பால் நான்கு நாள் தாமதமாகும் என்று, சுகம் சீக்கிரத்தில் தருமஞ்செய்ய வேண்டும். ஆதலால், கிட்ட இருந்த இடதுகையால் தந்தோ

மென்ருர். ஆதலால், ஆழியில் துயிலும் மகாவிஷ்ணு பணிபாதராகிய செயங் கொண்டாருலகில், "நாளை நாளையென்று அலையச் சொல்லுகிறதற்கு வந்தநாளில் உனக்கு உண்டு, இல்லை, என்று சொல்வது நலம்," என்று உலகஞ் சொல்லு மென்றவாறு. (51)

## தீராக்கோபம் போராய் முடியும்.

புகழரிச் சந்திரன் நிசவானென
வசிட்டன் சொல்லதனைப் பொய்யனுக்க
மிகவெகுண்டு சபதமைத்து ஆனமட்டும்
பார்த்தயர்ந்து விசுவா மித்திரர்
செகமறிய வரக்கன்பட் டிறந்ததை
யாவருமறி வார்செயங் கொண்டாரே
முகடுமுட்ட வருங்கோபம் துரும்புகுத்த
வேர்க்குமென மொழிந்த வாறே.

என்றது:—தேவேந்திர சபையிலே இருந்த ரிஷீசுவர்களைப் பார்த்து பூமி, யந்தர, சொர்க்கம், இந்த மூன்று லோகத்திலும் நீங்கள் சஞ்சரியாத இடமில்லையே. அதிதே புண்ணிய புருஷனுகவும், ஈவதிரக்கம், பூத தயவோடும் சத்தியவானுகி இருக்கிற பேருண்டோ என்று கேட்க, வசிஷ்டரானவர் அயோத்தியாபுரியில் நம்முடைய சீடன் அரிச்சந்திரன் பொய் சொல்லாத புண்ணிய புருஷன் ஒருத்தனிருக்கிருன் என்று சொன்ன உடனே, விசுவாமித்திரரானவர் வசிஷ்டருடைய சீடன் சத்தியவானென்று பெருமையாய்ச் சொல்ல வேண்டிய தென்னவென்று மிகுந்த கோபம் வந்து, அரிச்சந்திரன் சுத்தப் பொய்யனென்று தேவேந்திர சபையிலே சொன்ஞர். அப்போது வசிஷ்ட மகாரிஷியானவர் சமுத்திரம் சுவரித்தூளெழுந்தாலும் சந்திர சூரியர் தெற்கு வடக்காஞலும் அரிச்சந்திரன் வாக்கினுலே பொய் வராதென்று சொல்ல, அப்போது, விசுவா மித்திரன் வெகுண்டு அரிச்சந்திரன் வாக்கினுலே விசுவாமித்திரர் பொய் சொல்லப் பண்ணிஞல் வசிட்டர் குடுமியும் பூணூலையும் அறுத்துப் போட்டு நாயின் தலையோட்டிலே சுராபானம் ஏந்திக்கொண்டு தெற்கே நோக்கிறதென்றும், அரிச்சந்திரன் நிசவானுகும் காலையில், அந்தச் சபதம்படிக்கு விசுவாமித்திரன் போகிறதென்றும் தேவேந்திர சபையிலே இருவரும் சபதம் வைத்துக்கொண்டு அரிச்சந்திரன் இடத்திலே விசுவாமித்திரர் போய் அவரால் ஆன சாமர்த்திய மெல்லாம் பண்ணி, பண்ணுத இடுக்கண் எல்லாம் பண்ணினதிலும் அரிச்சந்திரன் மும்மூர்த்திகள் முன்னுக்கும் சகல தேவதைகள் முன்னுக்கும் நிசவானென்கிற பேர் நிலைநிறுத்திக் கொண்டான். அப்போது, விசுவாமித்திரன் தலைகவிழ்ந்து துரும்பு குத்தினவனுக்கு அநேகம் மார்க்கம் வந்தது, வசிட்டருக்கு அநேக மகிமை வந்தது. ஆகையாலே, பெரியோர்களுக்குப் பிழைதனைப் பொறுத்த லென்று கோபத்தை மிஞ்சவிடப்படாது. ஆதலால், செகத்தீசுவரராகிய செயங்

கொண்டாருலகத்தில், "முகடுமுட்டிய கோபம் துரும்பு குத்த வேணுமென்று" உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (52)

## பெண்ணென்ருல் பேயும் இரங்கும்.

அண்ணலருள் சரவணவேள் புனக்குறப்பெண்
வெயிலினிற்கு மவதி பார்த்து
தண்ணுலவு வேங்கைமர நிழலாய்நின்
றவள்வருந்துந் தகைதீர்த் தாரே
விண்ணவர்க்காய் விடத்தை யுண்டசெயங்
கொண்டாரே கனதை விளங்குநாட்டில்
பெண்ணென்ருல் பேயுமொக்க இரங்குமென
உலகிலுள்ளோர் பேசு வாரே.

என்றது :—அண்ணலாகிய பரமசிவனருளிய சரவணக் கடவுளாரிடத்தில் அருமறைப் பகவருக்கு கபிலருள்பட ஆண்பிள்ளைகள் மூன்று பேர். உப்பை, உறுவை, ஔவை, வள்ளியென்னும் பெண்பிள்ளைகள் நால்வர். காரண வகையாய்ப் பிறந்ததில் வள்ளியென்கிற பெண்ணை எயினர் கூட்டமெடுத்து வளர்த்துத் தினைப்புனத்திற்குக் காவல் வைத்திருந்த வகையை நாரதபகவானறிந்து அது சமாசாரம் கடவுளாராகிய சரவணக் கடவுளாரிடத்தில் அறியப்பண்ணி அந்தப் பெண் தேவரீருக்கு ஒப்பான பெண்; அவளிடத்தில் தேவரீர் வேஷமாறுதலாய் அவளிருக்கிற தினைப்புனத்திற்கு வந்து அவளைப் பேச்சிட்டுக் கொண்டிருக்கையில், அவளுக்கு நிழலில்லாதபடிக்கு வெய்யிலிலே இருந்ததைக்கண்டு, இவரும் மிகவும் விசனப்பட்டு அவள் இருக்கிற இடத்திலே ஒரு வேங்கைமரமாய் அவளுக்கும் நிழலாகும்படியாயிருந்தார். அப்பால் விக்கினேசுவரன் கடைப் பிடியினாலே வள்ளியை சரவணக்கடவுளார் காந்தர்வ விவாகம் செய்துகொண்டார். ஆதலாலே, விண்ணவர்களெல்லாம் பிழைக்கும்படியாய் ஆலகால விடத்தை யுண்டு சகல தேவர்களையும் இரட்சித்த செயங்கொண்டாருலகத்திலே, "பெண்ணென்ருல் பேயுமிரங்குமென்று," உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு.(53)

## வெள்ளம் வருமுன் அணைகோல வேண்டும்.

வள்ளல்கர் ணன்கையில் நாகக்கணைப்
புலன்மாலறிந் தவன்மாதா வையேபோய்
பிள்ளைகள்மேல் நாசமொரு தரம்விட்டப்
பால்நிறுத்தென வும்பேசச் சொல்லி
தெள்ளியபஞ் சவருயிரை காத்தார்தென்
னியமநகர் செயங்கொண் டாரே

**வெள்ளம்வரு முன்னணையைக் கோலிவைப்போர்**
**காரியங்கள் மிகநன் ருமே.**

என்றது :—கர்ணன் சண்டையிலே அர்ச்சுனனுக்குப் பகையாய் ஒரு நாகக் கணை வந்து வளர்கிறது. அந்த நாகக்கணையானது பஞ்சவர் ஐந்துபேர் பேரிலும் என்னையனுப்பினல் ஒரேதரத்திலே ஐந்து பேர் தலைகொண்டு வருகிறேன் என்று சொல்லிக் கர்ணனிடத்தில் அது வந்திருப்பது கிருஷ்ணதேவருக்குத் தெரியப்பட்டு பாண்டவர்களுடைய தாயார் குந்திதேவியை அழைத்து கர்ணனிடத்தில் போய், நான் தான் உன்னுடைய தாயென்று சொல்லு. அவன் நம்முடைய தாயார் இன்னார் என்று தெரியாததினலே ஒரு பொற்படாகத்துகில் சோதனைக்கு வைத்திருக்கிருன். அதை உடுத்திக் கொள்ளச் சொல்லித் தருவான். அந்தத்துகில் கர்ணனைப் பெருதவள் உடுத்திஞல் உடனே வெந்து நீராய்ப்போவள். பெற்றவளுடுத்திஞல் எதார்த்தமாய்ப் பால்சுரக்கும். அவள்தான் என்றறிந்து வணங்கி இப்போது வந்தகாரியம் என்ன தாயே என்று கேட்பான். அப்பா! மகனே! நாளைச் சண்டையிலே உன் தம்பிமார் ஐந்துபேர் பேரிலும் உன்னிடத்தில் வளர்கின்ற நாகக் கணையை ஒருதரம் அனுப்பு. இரண்டாந்தரம் அனுப்புகிறதில்லையென்று வலக்கை தரச்சொல்லு. அப்படிக்குத் தருவான். போய் வாங்கிவா என்று அனுப்ப, அவளும் அந்தப் படியே வலக்கை வாங்கி வந்தாள். அப்போது சண்டைமுகத்தில் நாகக்கணை வருகிறதறிந்து பாண்டவர்கள் ஐந்துபேரும் பொய்த்தலை யுண்டுபண்ணி வைத்திருந்தார்கள். அந்த நாகக்கணையானது அந்தப் பொய்த்தலைகளைக் கொண்டு போய்விட்டது. மறுபடியும், திரும்ப அனுப்பினல் ஐந்துபேர் தலையையும் வாங்கிப் போய்விடுவோம். அப்படியில்லாமல் பின்வருங்காரியமறிந்து கிருஷ்ணமூர்த்தி முன்னெச்சரிக்கையாய் வழிபண்ணிக் கொண்டார். ஆனதினலே, கங்காதரராகிய செயங்கொண்டாருலகத்திலே, **"வெள்ளம் வருமுன் அணைகோலவேண்டுமென்று,"** உலகம் சொல்லுமென்றவாறு. (54)

**நீந்தமாட்டாதவனை ஆறு கொண்டுபோம்.**

ஆச்சரிய மிரணியனட் டாக்ஷரத்தை
இகழ்ந்தே பொல்லாப் பெண்ணல்
கூச்சமறத் தள்ளி யிரணியநமா
வென்றதினல் குலைந்தான் தேகம்
பேச்சிமுலை உண்டமுகில் பணிசெயங்
கொண்டாரே நீள்பெருக்காற் றிற்குள்
நீச்சறியா மாந்தரைவெள் ளங்கொண்டு
போமென்பது நிசங்கண் டீரே.

என்பது:—ஆச்சரியமான வாழ்க்கையும் பலமுமுடைய இரணியன் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் மும்மூர்த்திகளுக்கும், நாமதிகமென்பதாய் எண்ணி மூலமந்திரம் ஆகிய, அட்டாட்சரம், பஞ்சாட்சரம் இவைகளைத் தள்ளி, "அரி ஓம் நம" என்கிறதற்குப் பதில், "இரணியா நம" வென்று சொல்லும்படி திட்டம் பண்ணியிருந்ததை மகாவிஷ்ணுவறிந்து, தூணிலே நரசிம்ம ரூபமாய்ப் பிறந்து இரணியனைச் சம்மாரம் பண்ணிப் போட்டார். செய்யாத வேலை செய்தால் பொல்லாப்பு வருமென்று நினையாமல் ஓரறிவாய் நினைத்தபடியினாலே சீவனள விலே வந்து விடிந்தது. ஆகையினாலே, பேச்சி முலையுண்ட முகில்மேனியன் பணிபாதராகிய செயங்கொண்டாருலகில், **"நீச்சல் அறியாதவனை வெள்ளங் கொண்டுபோமென்று"** உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (55)

### மன்னவன் எப்படி மன்னுயிரும் அப்படி.

நன்னிலத்தி லுருக்குமாங் கதராசன்
ஒருவிரதம் நடத்தி னனென்
றன்னகரு மவ்விரதந் தொடங்கியதால்
நமனவரை யணுகக் கூடா
தென்னியம தண்டனைசெல் லாதிருந்தான்
செயங்கொண்டா ரிலகும் நாட்டில்
**மன்னவ னெப்படியோ மன்னுயிரு**
**மந்தப்படி யெனவும் வழுத்துவாரே.**

என்றது:—உருக்குமாங்கத ராசாவானவர் நூதனமாய் ஏகாதசி விரதம் நடப்பிவித்து அதிகப் பலன்களைப்பெற்றுத் திரும்ப, அந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்கள் முழுவதையும் அந்த விரதம் நடப்பிவிக்கச் சொல்லி, அந்தவிதப் பலன் எமதூதரை அந்தப் பட்டணத்தில் வரவொட்டாதபடிக்கு அடித்துத் துமிசம் பண்ணின வரலாறுகளை உலகமெல்லாமறிந்து, அந்த இராசன் நடப்பிவித்த விரதத்தை இராச்சியமெல்லாம் நடப்பிவிக்கவேண்டியதாயிற்று. ஆதலால், செயங்கொண்டாருலகத்திலே, **'மன்னவனெப்படியோ மன்னுயிருமப்படியென்று'**, உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (56)

### கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.

அடவிசென்று நகரிழந்து வறுமைதங்கி
உடல்மெலிந்து அம்மா னூர்வந்
திடவுமம்மான் ஏவலினால் அமைச்சரழைத்
திடவருவ திலைப்போ வென்ற

திடநளனை ராசனெதிர் கொண்டழைக்கச்
சம்மதித்தான் செயங்கொண் டாரே
கடுகுசிறுத் தாலுமென்ன காரம்போ
காதெனவுங் கருது வாரே.

என்றது:—விடது நாட்டு நளராசன் புட்கரராசனுடனே சொக்கட்டாணுடித் தோற்று, நாடு இராச்சியமெல்லாம் புட்கர இராசனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு வனவாசம் போய் பெண்சாதியொருபக்கம், பிள்ளையொருபக்கம், தானொருபக்கமாகத் திரிந்து வறுமையை அனுசரித்து உடல் மெலிந்து வெகுதூரந் தொலையிலே ஒரு இராசாவிடத்தில் நளனென்கிற பெயர் காண்பியாமல் வேற்றுருவமாய் அந்த இராசனுக்கு சுயம்பாகியாகவும் தேர்ச்சாரதியாகவுமிருந்து வயிறு வளர்த்துக் கொண்டிருக்கிற நாளையிலே, நளன் பெண்சாதி தமயந்தி தப்பித் தவறி தகப்பனுரிடத்தில் பிள்ளையுமவளும் வீமராசன் பட்டணம் போய்ச் சேர்ந்து இருக்கும்போது, வெகுநாள் வரையில் நள இராசன் வெளிப்படாததனுலே தமயந்தி தகப்பனிடத்தில் இன்னமொரு இராசனுக்கு என்னை விவாகம் பண்ணுகிறதாக துலைமரம் நாட்டி தேசதேசங்களுக்கு ஓலை யெழுதியனுப்பினுல் என் நாயகன் வருவாரென்று சொல்லி வீமராசனும் அந்தப்படிக்கு ஓலையெழுதியனுப்ப நளனிருக்கிற பட்டணத்திற்கும் அந்த ஓலை வந்து அந்தப் பட்டணத்து இராசாவும் புறப்பட்டு வர, நளனும் அந்த இராசனுக்கு தேர்ச்சாரதியாக வெகு இராசாக்களுடனே கூட வந்திருக்க, தமயந்தி ஆள் விட்டு நளனைச் சோதித்து நளனையறிந்து தகப்பனிடத்தில் சொல்ல, அந்த வீமராசனை தன் மந்திரிமாரை விட்டு நளனைக் கூட்டிவரச் சொல்ல, நளனும் நாம் மெலிந்திருக்கிறேமென்று மாமனுர் வந்து கூப்பிடாமல் மந்திரிமார் அழைத்தால் நான் போகிறதாவென்று நினைத்து வரமாட்டோமென்று சொல்லிப்போட அப்பால், மாமனுர் வந்தழைத்த பிறகு தன் பெண்சாதியிடம் போய்ச்சேர்ந்தான். ஆதலால், சர்வஜீவ தயாபர மூர்த்தியாகிய செயங்கொண்டாருலகில். 'கடுகு சிறுத்தாலும் காரம் போகாதென்று', உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (57)

காதமோடியு முயல்தான் கைத்தூக்கு.

பூதலமும் பொன்னுலகு மேவல்கொண்ட
சூரன் அரன்புதல்வர்க் கஞ்சி
சூதமர மாயொளித்து கடைசியில்
செவ்வேள் கரத்தில் தும்சமானுன்
தாதவிழுங் கொன்றையணி செயங்கொண்டார்
பெரிய செடியைத் தாண்டிக்
காதமோடியு முயல்தான் கைத்தூக்கென்
றுலகிலுள்ளோர் கருது வாரே.

என்பது :—பூமி, அந்தரம், சொர்க்கம் இம்மூன்று லோகமுங் கூடியாண்ட சூரன். இவன் செய்த தவத்திற்காக ஈசுவரன் கொடுத்த பாக்கியமேயன்னியில் வேறல்லவென்று நினையாமல் சகல தேவதைகட்கும் இடுக்கண் பண்ணத் தொடங்கினன். ஆனதால், ஈசுரன் வரப்பிரசாதமாய் சுப்பிரமணியர் பிறந்து சூரனுடனே சண்டைக்குப் புறப்பட்டு யுத்தம் நடக்குங் காலையில் சூரன் நிலைக்க மாட்டாமல் வேலாயுதத்திற்குப் பயந்து மரமாக நின்றதை வேலாயுதம் இரண்டாகப் பிளக்க, சூரன் மயிலும் சேவலுமானன். அந்த மயிலை சுப்பிரமணியர் வாகனமாகவும், சேவலை துசமாகிய கொடியாகவும் கையிலே பிடித்துக்கொண்டார். ஆதலால், கொன்றைமாலையணியப்பட்ட செயங்கொண்டாருலகில், '**காதுமோடியு முயல் தூக்கென்று**', உலக வழக்குஞ் சொல்லு மென்றவாறு, (58)

தூக்கு — உயர்ச்சி

**மாமியார் தலையில் கையும் வேலிப்புறத்திலே கண்ணும்.**

பூமிதனிற் சிலருண்டு இருகரமுங்
குவித்திருகண் பொருத்திக் கொண்டே
காமியர்களாய்ப் பாரில் மனங்கிடக்க
வாயிலர ஹரவென் ருற்போல்
நேமியணி வான்பெரிய தேடரிய
செயங்கொண்டார் நியமவான் நாட்டில்
மாமிதலை மேல்கையும் வேலிப்புறத்
தினில்கண்ணும் வைத்த வாறே.

என்றது :—பூமியின் கண்ணிலே சிவபக்தர்கள், ஞானவான்கள், அறிவாளிகள், உத்தமர்களாயிருக்கப்பட்ட பேர்கள், இருகால பூசையிலும் விபூதி, ருத்திராக்கம், திருநாமம், துளசிமணிகளோடும் பகவானுடைய பாதத்திலே தங்கள் உத்தமர்கள் மனங்களைச் செலுத்தி பூசாபலன்கள் பெறுகிற பேர்களுடனே நாங்களும் பூசை பண்ணுகிறோமென்று, அறிவில்லாத பேர்கள் திருநீற்றையும் பூசி இருகையும் சிரசிலே கூப்பி இரண்டு நேத்திரத்தையும் இறுகப் பொத்திக் கொண்டு மனமானது ஸ்திரீ ஜனதிகளின் அவயவங்களிலும் பண்டபதார்த்தங்களிலும் போய்க் கிடக்க, வாயினாலே, அரகரா சிவா, என்று சொல்லி வெளியிலே கேட்கும்படியாய் பூசை பண்ணுகிறதற்குத் திருஷ்டாந்தம் நேமியணிந்த விஷ்ணு பணிபாதராகிய செயங்கொண்டாருலகத்தில், '**மாமி தலையிலே கையும் வேலிப் புறத்திலே கண்ணுமென்று**', உலக வழக்குஞ் சொல்லுமென்றவாறு.

**கண்ணாரக் கண்டதும் காதாரக் கேட்டதும் பொய்; தீர விசாரிப்பது மெய்.**

பெண்ணிறக்கத் தொங்கலம்பால் வில்வேட
னடுத்துவரப் பெண்ணுக் காளன்

கொன்றதுநீ யென்றிழுக்க மதுரையில்
சுந்தரர்நியா யம்கொடுத்துத் தீர்த்தார்
அண்ணலரா னேசெயங் கொண்டாரே
காதாற் கேட்டதும் பொய்யாகும்
கண்ணாரக் கண்டதும் பொய்தீர்க்க
விசாரிப்பது மெய்காணுந் தானே.

என்றது :—திருப்புத்தூரிலிருந்து ஓர் பிராமணனும் அவன் பெண்சாதியும் மதுரைக்கு வந்தார்கள். மதுரையை அடுத்துவரும்போது பிராமணத்தி தண்ணீர்த் தாகமானதால் ஒரு மரத்தடியிலே அவளை இருக்கச்சொல்லி ஐயர் ஜலம் கொண்டுவரப் போனார். பிராமணத்தி கெற்பத்தோடே மரத்தூரிலே சாய்ந்து கொண்டிருந்தாள். அந்த மரத்திலே முதல் நாள் வேட்டையில் ஒரு பட்சியை ஒரு வேடன் அம்பாலே எய்தான். அந்த அம்பு மரத்திலே தொங்கியிருந்தது. காற்றடித்ததினால் அது அவள் வயிற்றில் விழுந்து குருதிசிந்த, அதனாலே அவள் வயிற்றில் அம்பு சொருகிநின்றதையும் அவள் செத்துக் கிடக்கிறதையும் வேடன் கையில் இருக்கிற அம்பு வில்லையுங்கண்டு, அடா! வேடா! பாவி! ஏனடா இப்படி எய்தா யென்ன, அவன் நான் எய்யவில்லை யென்ன, ஆனால் அது ஞாயம் பாண்டியன் முன்னுக்குப் பேசிக்கொள்வோம் என்று, அந்தப் பெண்ணை ஐயன் முதுகிலே தூக்கிக் கட்டிக்கொண்டு வேடன் முந்தானியைப் பிடித்து இழுத்துக் கொண்டு, பாண்டியன் அரண்மனை வாயிலில் வந்து கூக்குரல்போட சகலரும் வந்துகூடி வேடனைப் பார்த்து, இப்படியேனடா துஷ்கிருதம் செய்ய வேண்டியது? என்று கேட்க அவன் நானென்று மறியேனென்று சொல்ல, வேடனைக் கட்டிவைத்து மிகவும் அடித்துக் கொல்லும்போது வேடனும் வெயிலுக்காக அந்த மரத்து நிழலுக்கு வந்தது உண்டு. அந்த பிராமணப் பெண்ணை எய்து நானென்னபாவம் தொலைப்பேனென்று சொன்னான். என்னை நீங்கள் அநியாயமாய்க் கொல்லவேண்டுமானால், கொல்லுங்களென்று வேடன் சொல்ல, பாண்டியன் இது என்ன காரணம்? வேடனை இவ்வளவு கண்டிப்புச் செய்யவும், நான் கொல்லவில்லை என்கிறானே; இதையறிந்து சொல்வது மீனாட்சிசுந்தரராலே ஆகவேண்டுமென்று சுவாமி சன்னதியில் போய், இது காரணம் இந்த பிராமணியிறந்த வழிபாடும் எனக்குத் தெரியவேண்டும் கர்த்தாவே! என்று தோத்திரம் பண்ண, அப்போது சுந்தரேசர் அந்தரவர்க்கமாய், "இந்தப் பட்டணத்திலே இன்று இரவு ஓர் செட்டியார் வீட்டிலே கலியாணமானதால் அந்தப் பிராமணனைக் கூட்டிக்கொண்டு அந்தக் கலியாண வீட்டிற்கு வந்தால் அந்தப் பிராமணியிறந்த வகை தெரியப்படுத்துகிறோம்." என்றார். அப்போது பாண்டியன் சீக்கிரம் வந்து அந்த வேடனை சுண்ணாம்புவறையில் அடைத்துவைத்து, பிராமணனுக்குச் செலவுக்குப் பணம் கொடுத்து பிராமணியை யடக்கம்பண்ணி வரச்சொல்லி கலியாண வீட்டையும் விளங்கி (தெரிந்து), இரவு பத்து நாழிகை அளவில் அந்த பிராமணனையுங்

கூட்டிக்கொண்டு, இராசா அந்தக் கலியாண வீட்டில் ஒரு பக்கமாய் ஒதுங்கப் போயிருந்தார்கள். அப்போது எம தூதர் மூன்று பேரில் அந்த வீட்டோரமாய் வந்தவர்களிலொருத்தன், இந்த மாப்பிள்ளை உயிரைக் கொண்டுபோக வந்தோமே, இந்த மாப்பிள்ளைக்கு ஒரு சஞ்சலமுமில்லையே, எப்படிக் கொண்டு போகிறதென் ருன். பின்னை ஒருத்தன் பகல் நிழலுக்கொதுங்க வந்த பிராமணத்தி வயிற்றிலே மரத்திலே தொங்கியிருந்த அம்பு விழுந்து இமைக்கு முன்னே இறந்து போனுளே; அப்படி இந்த மாப்பிள்ளையையும் உபாயமாய்க் கொண்டுபோவோமென்ருன். அப்போது அந்த இராசாவும் என்ன பிராமணு கேட்டதாவென்ருர். அப்போ இந்த மாப்பிள்ளையை இப்போ இவர்கள் கொண்டுபோனுல் இந்தச் சொல் நிசமென்ருர். அப்போது கலியாணத்திற்கு வந்த சனங்கள் சாப்பாடு பண்ணி வைத்து சந்தனம் பாக்கு வெற்றிலையையும் கொடுத்து மாப்பிள்ளையையும் பெண்ணையும் மணையில் விட்டு திருமங்கலியம் பூட்டுகிறதற்குப் பதினெட்டு வகை மேளத் தொனியும் முழக்கினுர்கள். அப்போது வாசலிலே நின்ற பசு மாடு தும்பை அறுத்துக்கொண்டு அந்தச் சனத்தில் விழுந்து மாப்பிள்ளை நடுவே நிற்கையில் அவன் வயிற்றிலெ குத்தி குடல்வந்து உடனே இறந்தான். இராசாவும் பிராமணனும் பிராமணி யிறந்த நிசத்தை யறிந்துசொண்டு வந்து, வேடனை அழைத்து ராசா அவனுக்கு உபசார வார்த்தை சொல்லி, வஸ்திர பூஷணுதிகளும் கொடுத்து அனுப்பிவித்து, அந்தப் பிராமணனுக்கும் கன்னிகாதானத்திற்கு செல்லுமான பணங்கொடுத்து அனுப்புவித்தான். இந்த நியாயம் சுந்தரேசுவரர் வெளியாக்கினுர். இதற்குத் திட்டாந்திரம் அண்ணலாகிய செயங்கொண்டா ருலகில், "கண்ணுரக் கண்டதும் பொய், காதாரக் கேட்டதும் பொய், தீர விசாரிப் பது மெய்," என்று உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (60)

**ஆற்ருேடே போனுலும் போகிறதேயல்லாமல் தெப்பக்காரனுக்கு ஒரு காசும் கொடுக்கிறதில்லை.**

கூறுமரவக் கொடியோன் பாண்டவர்க்கு
ஐந்திலமும் கொடுக்கே னென்று
வீறுசொன்னுன் சமர்கொடுத்த பிறகுயிரோ
டுலகமூன்றும் விட்டா னன்ருே
நீறணிமெய்ச் செயங்கொண் டாரே
ஆற்ருேடே போனுலும் போவதல்லால்
ஓடக் காரனுக்கு அரைக்காசும்
கொடுக்கப் பொருந்தி டாரே.

என்பது:—அரவத் துசனுகிய துரியோதனனிடத்தில் கிருஷ்ண தேவர் திவ்வியப் பதாம்புஜம் சிவக்கத் தூது வந்து, உன் சிறிய தகப்பனுர் மக்கள் சீமையைப் பாதி பிரித்துக் கொடுமென்றும், தப்பினுல் ஐந்து பேருக்கும் ஐந்து

ஊர்கள் விட்டுக்கொடுக்க வேண்டுமென்றும், தப்பினுல் ஐந்து பேருக்கு ஐந்து வீடு விட்டுக் கொடுவென்றும் கேட்குமிடத்தில், கொழுப்பதியும் பூமியுமவர்களுக்குக் கிடையாது என்று சொல்லிவிட்டான். அப்பால், பாண்டவர்கள் சினந்து யுத்தம் பண்ணி துரியோதனுதிகள் சகல பேரையும் வதைத்து சீர்மையும் ஒருமிக்க ஒப்புக் கொண்டார்கள். எள்ளளவாகிலும் பூமி விட்டுக் கொடுத்திருந்தால் அவன் சோலிக்குப் போரதில்லையே. ஆதலால், வெண் பொடியைத் தூளிதமாய் அணிந்த செயங்கொண்டார் உலகில், "ஆற்ரேடு போனுலும் போகிறதல்லாமல், ஓடக்காரனுக்கு அரைக்காசுங் கொடாரென்று," உலக வழக்கஞ் சொல்லு மென்றவாறு. (61)

### தாய்க்கு விளைந்தாலும் தனக்கு விளைய வேண்டும்.

வேக்கிமகன் மூத்தபிள்ளை கரத்தினில்மாங்
கனிகொடுக்க வெகுண்டு வேலர்
வாக்கினிய கனிநமக்குத் தரலையென்று
கோபமுடன் மலைமேல் சென்ருர்
பாக்கியஞ்செந் தமிழ்க்குதவும் செயங்கொண்டார்
விரைத்த பள்ளந் தோறும்
தாய்க்குவிளைந் தாலுமென்ன தனக்கு
விளைந்திடவேண் டித்தவஞ் செய்வாரே.

என்றது:—வேயாகிய மூங்கிலுக்குப் புத்திரனுகிய பரமசிவன் கரத்திலிருந்த மாங்கனியை அவர் பிள்ளை விநாயகர் சுப்பிரமணியர் இருவரையும் பார்த்து நம் முடைய கைலாசகிரியைச் சுற்றி முந்திவந்த பிள்ளைக்குக் கொடுப்போமென்ருர். அப்போது சுப்பிரமணியர் மயிலின் மேலேறி சுத்தி வேகமாய் வரும்போது, விநாயகர் நம்முடைய ஆகுவாகனம் மயில் வாகனத்துடனே சரிக்கட்டி வர மாட்டாதென்று பரமசிவனைச் சுற்றி வந்து மாங்கனியை வாங்கிக்கொண்டார். அப்போது, சுப்பிரமணியர் வந்து தமையன் கனி வாங்கினதை சகிக்க மாட்டாமல் கோபமாய்ப் பிரிந்து மலையின்பேரிலே போய் இருந்துகொண்டார். அப்போது பார்வதி வந்து மகனை, "தமையன் புசித்த பழம் உனக் கருமையோ? தெவிட்டாப் பழமே!," என்று சொன்னுள். அதுவே சுப்பிரமணியருக்கு பழனீ என்று பேராயிற்று. ஆதலால், தமிழ்க்குதவிய செயங்கொண்டருலகில் "தாய்க்கு விளைந்தாலும் தனக்கு விளைய வேண்டும்," என்று உலகஞ் சொல்லு மென்றவாறு. (62)

### குலவித்தைக் கல்லாமல் பாகம்படும்.

பிலமுற்ற சிங்கமொரு கன்றினும்
படியெழுதி பின்னே செம்பொன்

விலைபெற்ற கரியையரிக் கன்றுதுள்ளிப்
பாய்ந்தகதை மெய்யா மென்றே
சிலைபெற்ற கூளேந்திரன் விறலிதனில்
விளங்குதன்றே செயங்கொண் டாரே
குலவித்தை கல்லாமல் பாதிவரு
மென்றுலகங் கூறு வாரே.

என்றது:—சிவனுக்கு ஒரு பெண். அந்தப் பெண்ணுக்கு சிறு போதிலே பதினெண் பாஷையும், அறுபத்து நாலு கலைக்கியானமும், கொக்கோக சாத்திர முதல் படிக்க வைத்திருந்த பெண்ணை, ஒரு மாப்பிள்ளைக்குப் பாரியாகியிருந்த தில் இருவரும் படுக்கை வீட்டில் சரசசல்லாபமாயிருக்கும்போது, இந்தப் பெண் கொக்கோக சாத்திர முறைப்படிக்கு அனுபோகங்களைக் காண்பிக்க, அந்த மாப்பிள்ளை இவளுக்கு இந்த வழிபாடெல்லாம் புதுப்பெண்ணுக்குத் தெரியவராதே. இவள் முன் யாரிடத்திலேயாகிலும் அனுபோகியாயிருப்பாள் என்று சந்தேகம் நினைத்து, சிறிதுநாள் பள்ளியறைக்கு வாராதிருந்தான். அந்த வகையை அந்தப் பெண் அறிந்து நம்முடைய நாயகன் நம்முடைய மனதறியாமல் தானே யோசனைபண்ணியிருக்கிறார். அவருடைய மனம் தெளியும்படியாய் ஒருயோசனை பண்ணுவோமென்று, அந்த மாப்பிள்ளையினுடைய அரண்மனை முகப்பு வாசல் சுவரிலே ஒரு பெண் சிங்கத்தை பூர்ண கெர்ப்பமாய் சித்திரத்திலெழுதி அதன் பின்னொரு யானையை எழுதி அந்தப் பெண் சிங்கத்தினுடைய கெர்ப்பத்தில் பாதிக்குட்டி வயிற்றிலேயும் பாதிக்குட்டி வெளியிலுமாய்ப் பிரசவிக்கிறது போலவும், வெளியாகின பாதிக்குட்டி அந்த யானை மத்தகத்திலே பாய்ந்து அடிக்கிற பாவனையாக எழுதிவைத்தாள். அதை அந்த மாப்பிள்ளை பார்த்து சிங்கத்தின் குட்டி பிறக்கு முன்னே பாரவாசி யானையை அடிப்பது அதனுடைய குலாசாரம். இந்தச் சித்திரம் யாரெழுதினதென்று விளங்கி நம்முடைய பாரியை நாம் கலங்கப்பட்ட நிமித்தம் அவள் படிப்பினாலே வந்த வித்தையென்று நமக்குத் தெரியும்படி இந்தச் சித்திரம் எழுதினாளென்று சந்தேகம் தீர்ந்தான். இந்தக் கதை கூளப்ப நாயக்கன் விறலிவிடுதூதில் விளங்குகிறது. ஆதலால், உலக ரட்சகராகிய செயங்கொண்டாருலகில், **குலவித்தை கல்லாமல் பாதி வருமென்று,'** உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (63)

### கொன்றுரைக் கொல்லும் கொலை.

தண்ணீர்மீன் களைச்சர்வ சீவதயா
பரிபகந்தான் தயவாய்ப் பேசி
எண்ணாமல் சதித்தபழி தனக்கலவன்
பகக்கழுத்தை யிடறிச் சென்றே

பண்ணுர்சிந் தாமணியில் விளங்குதன்ரு
செயங்கொண்டார் பரவும் நாட்டில்
கொன்ருரைக் கொல்லுமல்லால் கொலைவிடா
தென்றுலகங் கூறுங் காலே.

என்பது :—குறுகிய குளத்திலே சர்வசீவ தயாபரன் என்ெருரு கொக்கு தண்ணீரிலே ஒற்றைக் காலிலே நின்று கண்ணை மூடிக்கொண்டு தவம் செய்து கொண்டிருக்க காலோரத்திலே உராய்ந்துகொண்டு போகிற மீன்களையும் தீண்டாதபடிக்கிருக்கையில் அந்த மீன்களெல்லாம், இதென்ன காரணம் என்று கூடிப்பேசி கொக்கினிடத்திலே வந்து, ஏனையா சர்வசீவ தயாபரா! எங்களினத்தைக் கண்டமாத்திரத்திலே விரட்டி வந்து கொன்று விழுங்கிப் போடுகிறவர், இப்படி எட்டு நாளாய் இரையுமில்லாமல் ஒரே நிலையாய் இப்படித் தவம் செய்கிறீரே, இது காரணம் என்னவென்று கேட்க, அந்தக் கொக்கானது மீன்களை விழித்துப் பார்த்து இந்தக் குளத்திலே தண்ணீர் மிகுந்திருந்தது. நீங்களும் பரிபாலனமாயிருந்தீர்கள். நானும் பசியாமல் உங்கட்குப் பாரமில்லாமல் அன்ருடகம் வயிறு வளர்த்துக் கொண்டிருந்தேன். இப்போது ஜலம் குறுகிப் போய்விட்டது. வலைக்காரர் வந்து, நாளை சனத்தைச் சேகரித்துக் கொண்டு வந்து இந்த மீன்களையெல்லாம் பிடித்துப் போவதாகப் பேசிப் போயிருக்கிருர்கள். குளமழிந்து மீன்களைப் பிடித்தபிறகு நாமென்ன யோசனைப் பண்ணப் போகிருேமென்று வருண பகவானை நோக்கி மழை பெய்யவேண்டு மென்று தவம் பண்ணுகிறேன். இன்னமொரு யோசனையிருக்கிறது. இதற்கு வடக்கே பாதாளவாகினி என்ெருரு தடாகம் இருக்கிறது. அதனுடைய ஆழமும் விஸ்தீரணமும் வெகுகாலத்திற்கு வற்ருத மடுவாய் இருக்கிறது. இந்த மச்சங்களில் இரண்டு மச்சங்களை நான் கொண்டுபோய் அந்த மடுவில் சேர்த்து விடுகிறேன். அப்பால் எல்லாம் சுகசீவனம் பண்ணிக் கொண்டிருக்கலாம் என்று சொல்ல, புத்தியீனமான மீன்களெல்லாம் இதை நிசமென்று சம்மதித்துச் சோதனை பார்த்துக் கொண்டுவந்து மீன்களுக்கெல்லாம் இது நல்லவழி என்று சொல்ல, அப்போது மீன்களெல்லாம் என்னை முன்னே கொண்டு போ, உன்னை முன்னே கொண்டு போ என்று கொக்கினிடத்திலே வந்து விழவே, கொக்கானது வாயினுலேயும் காலினுலேயும் சில மீன்களை வாரியும் சிறிது மீன்களை அதனுடைய உரோமங்களைக் கௌவிக் கொள்ளச் சொல்லி, மீன்களையெல்லாம் வாரிக்கொண்டுபோய் அது காண்பித்த மடுவுக்கு வடகரையிலே பெரியபாறை, அந்தப் பாறையில் மச்சங்களைக் கொண்டுபோய் உதறி, ஒரு பாறைக் குடப்பிலே வாரியடைத்து வைத்துக்கொண்டு, பசித்த வேளையில் சாப்பிடுவோமென்று, குளத்திலுள்ள மீன்களையெல்லாம் வாரிவந்து பாறையிலுதரி, கடைசியாய் மீன்கள் ஓடியொளிந்திருந்ததை யெல்லாம் வாரி சீமை சேர்க்கும்போது அலவனுகிய பார்வாசியான நண்டு, என்னையுங்கூடக் கொண்டு போய் மீன்களுடன் சேர்த்துவிட வேண்டுமென்று கொக்கின் கழுத்தில் ஏறிக் கொண்டது. பகமாகிய கொக்கானது கடைசியாய் மீன்களையும் நண்டையும்

வாரிக் கொண்டு அந்த மடுவுக்குமேல் பறந்து போனபோது, கழுத்தின்பேரிலே இருந்த நண்டுக்கு மீன்களை முன் கொண்டுபோனதை வடகரைப் பாரையிலே கருவாடு காய்கிறது கண்டு, நண்டு கண்ணுக்குத் தெரிந்தமாத்திரத்திலே கொக்கு மோசம் பண்ணி மீன்களையெல்லாம் கொண்டுபோய்க் கருவாடு காயப்போட்டதே, நம்மையும் கொண்டுபோய் பாறையிலுதறுகிறபோது நாம் உடைந்துபோவோ மென்று, அதிசீக்கிரமாய் அந்தத் தடாகத்து நடுவிலே பறந்துபோகிற கொக்கின் கழுத்தை நண்டு பெருங்காலினுலே பிடுக்கி அதனுடைய வலுவையெல்லாம் அதிலே செலுத்தி கொக்கின் கழுத்தை இரண்டாய்க் கத்தரித்தது. கடைசியில் வந்த மீன்களும் கொக்கும் நடுத்தடாகத்திலே விழுந்து மீன்களும் நண்டும் பிழைத்தன. ஆனல் நண்டு இறந்துபோய் விட்டது. இந்தக் கதை சிந்தாமணியில் பாட்டாகிய பஞ்ச தந்திரத்தில் கதையாய் விளங்குகின்றது. ஆதலால், தென்னியமாபுரி செயங்கொண்டாருலகில், "கொன்றுரைக் கொல்லும் கொலை," என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (64)

## மலையைத் துளைக்கச் சிற்றுளி போதாதோ?

உலகிடவி சாலமென்ன சிறியவா
மனனளந்தான் ஒருபா தத்தால்
அலகையின்காத் திரங்களென்ன வாலகிருஷ்ணன்
பாலருந்தி யவளை மாய்த்தான்
சிலைநுதலாள் சவுந்தரநா யகியையிடப்
பாகம்வைத்த செயங்கொண் டாரே
மலைபெரிதா னுலுமென்ன சிற்றுளிக்குப்
பயன்செனிக்கும் வண்மை தானே.

என்றது :—மாவலிவாணனிடத்தில் மகாவிஷ்ணு வாமனரூபமாய் சிறு பிள்ளையாய் வந்து, அவர் காலால் மூன்றடிமண் தானம் வாங்கி பூமியெல்லாம் ஓரடியாயளந்து கொண்டார். வடமதுரைக் கஞ்சன் ஆயர்பாடியில் வளர்ந்த கிருஷ்ணனை குழந்தையைக் கொன்றுபோடச் சொல்ல, பூதகியும் அவள் முலையிலே விடத்தையும் ஊட்டிக் கொண்டுவந்து கிருஷ்ணனுகிய குழந்தையை எடுத்து மார்போடேயணைத்துப் பால் கொடுக்க, அந்த விஷப்பாலையும் அவளு யிரையும் கூட சாப்பிட்டுப் போட்டது. ஆதலால், சிலைபோன்ற புருவத் தோடுங்கூடிய சௌந்தரனுயகி பாகனை செயங்கொண்டாருலகில், "மலை எவ்வளவு இருந்தாலும் சிற்றுளி செயித்துப் போடும்," என்றவாறு. (65)

## சூதும் வாதும் வேதனை செய்யும்.

காவலன்புட் கரநளனைச் சூதாட
வரவழைக்கும் கபடங் கண்டே

மேவியசூ தாடாமல் தள்ளிவிட்டால்
சனிநளனை வினைசெய் வானே
வாவிதிகழ் தென்னியமச் செயங்கொண்டா
ரேமிகுந்த வளஞ்சேர் நாட்டில்
நாவிதன்சே தியையறிந்தால் குடுமியைப்பத்
திரப்படுத்தல் நலமென் பாரே.

என்றது :—நளராசன் சனிசுவரனுக்கு அறியப் பண்ணுமல் கலியாண முடித்துக் கொண்டதிஞலே, நளராசனை சனிசுவரன் பகைத்து, புட்கர ராசனுக்கு சூதாடக் கொண்டுவந்து விட்டபோது, இந்த வர்த்தமானம் தெரிந்திருந்து புட்கர ராசனுடனே சூதாட வருகிறதில்லையென்று சொல்லிவிட்டால் நளராசன் நாடிழந்து, காடுறைய வேண்டியதில்லையே. அப்படிக்கில்லாமல் எந்தப் புத்தி யால் புட்கரன் கூப்பிட்ட மாத்திரத்தில் சூதாடப் போனதால் நளனுக்கு சல்லியம் வந்து விடிந்தது. ஆதலால், வாவிசிறந்த நியமாபுரி செயங்கொண்டாருலகில், "நாவிதன் சேதியறிந்தால் குடுமியைப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று," உலகஞ் சொல்லுமென்றவாறு. (66)

**கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொள்ளவேண்டும்.**

சிம்மாச னன்குமணன் சிரம்போலே
விழிமூக்குச் செவிவாய் செய்து
சம்மாரம் பண்ணிரத்தச் சொரிசிந்தக்
கொடுத்ததுவுந் தட்டா னன்றோ
பெம்மானே தென்னியமச் செயங்கொண்டா
ரேமலையைப் பிரட்டுங் கையான்
கம்மாளன் பசுவைத்தான் காதறுத்துக்
கொள்ளுமெனக் கழறு வாரே.

என்றது :—குமணராசன் சீர்மையில் வருமான திரவியத்தையெல்லாம் பொக்கிஷ வீட்டிலே, கால்காசளவும் வையாமல் வித்துவாங்கிசாளுக்கு செலவு பண்ணிக்கொண்டு வருகிற நாளில், தம்பி அமணனுகிறவன், தமையன் ஒரு பணத்தளவிலேயும் வைத்துச் செய்யாமல் செலவு பண்ணுகிருனென்று, அரண் மனை முகப்புச்சுவரிலே, "ஆபத்து வருங்காலத்தில் அரும்பொருள் வேண்டு மையா," என்று எழுதி வைத்தான். அதைக் குமணன் கண்டு, "ஆபத்து வருங்காலத்தில் அரும்பொருள் உதவாது," என்று அதற்குக் கிழே எழுதி வைத்தான். அப்பால் அமணனுகிறவன் இனிமேல்தமையன் ஒருகாசளவில் வைக்க மாட்டான் என்றறிந்து, மந்திரியை ஏக்கிட்டு தூக்கிவிட்டுக் கொண்டு தமையனைத்

தள்ளி நடப்புவித்து, தானே துரைத்தனம் பண்ணினன். அப்பால், குமணராசன் வெளியே புறப்பட்டு கிராமங்களிலிருக்கின்ற ஆயக்கங்களை வருவாய் அந்த ஊர்க் குடியானவன், கணக்கன், மணியக்காரனைக் கொண்டுவரச்சொல்லி, பிறகே திரிகிற வித்வான்களுக்கு வாங்கிக் கொடுத்தான். அதைத் தம்பியறிந்து என் தமையன் குமணன் தலையை யறுத்துக்கொண்டு வந்தவனுக்கு, கோடி திரவியங் கொடுக்கிறேனென்று கிழிகட்டி வைத்தான். அதுகாரியம் சீர்மைக் கெல்லாம் தெரியப்பட்டு பெரிய மனிதர்களாயிருக்கப்பட்டவர்கள் குமணனைப் பெருங் காட்டிலே கொண்டுபோய் விட்டு, பிறருக்குத் தெரியாமல் சாப்பாடுங் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்படிக் குமணராசன் சிறிது நாள் வனசஞ்சாரமாயிருக்கையில் மறு தேயத்தில் ஒருவித்துவான் சமர்த்தன். அவனுக்கு மிகுந்த தாபந்தமாய் சமுசாரம் போற்றமாட்டாமல் அந்தக் குமணராசன் நல்ல தியாகியென்று சொல்லுகிறார்களே, அவனிடத்திலே ஏதாகிலும் போய் வெகுமதி வாங்கி வருவோமென்று புறப்பட்டுக் குமணராசன் பட்டணத்தில் வந்து விசாரிக்கும்போது, ராசாவுட சரித்திரம் இப்படியாயிருக்கிறதென்று சொன்னார்கள். ஆனால், அந்தக் காட்டிலே போய் அந்தக் குமணராசன் முகத்தைப் பார்த்தால் நம்முடைய கலிக்கடல் கடந்தோடிப் போமென்று குமணனிருக்கிற விடத்தை விளக்கிக்கொண்டு, அந்தக் காட்டிலே போய் குமணனைக்கண்டு, நீர் யாரையா வென்று கேட்டான். நான் தான் குமண ராசன் என்று சொன்னார். அப்போது அந்த வித்துவான் ஒரு கவிதை எப்படிச் சொல்லுகிறானென்றால் ;

" ஆடரி படர்ந்த கோடிய ரடுப்பு
ஆம்பல் பூப்ப தெம்பசி ஊர்வ
பொல்லா வறுமையால் சுவைதொறும் சுவைதொறும்
பால்கா ணுமல் மகவும் தாய்முகம்
நோக்க மனைவி யென்முகம் நோக்க
யானும்உன் முகம்நோக்கி வந்தனன் குமண "

என்று சொல்ல, அதற்குப் பதில், குமணராசன் ஒரு கவிதை எப்படிச் சொல்லுகிறானென்றால்:—

" அந்த நாளையில் வந்திலை புலவீர் !
இந்த நாளையில் வந்தீரானல் யானென் செய்வேன்
என் தலைகொடுபோய் தம்பிகைக் கொடுத்து
விலைதரக் கொடுபோய் வறுமைநோய் களையே "

என்று குமணராசன் சொல்ல, வித்துவான் ராசாவே! நீர் வெகுஜன ரக்ஷகர். உம்முடைய கழுத்தை நானறுத்துத் தலைகொண்டுபோய் அந்தத் திரவியத்தை வாங்கி நான் சமுசாரம் போற்றும்போது இருபத்தொரு தலைமுறைக்கும் எனக்கு ஈடேற்ற முண்டோவென்று சொல்ல, வாருமையா வித்துவஜனரே! நானின்னமொரு கவிதை சொல்லுகிறேன், கேளுமென்று குமணராசன் சொல்லுவான் :—

" வெம்புங் காலையில் வெந்தெறி யுந்தலை
செம்பொன் கோம னிலையெனச் செயித்தனன்
உம்பர் நாடு முலகமும் பெற்றனன்
எம்பி போலினி யாரெனக் காவரே "

வாரும் புலவீர்! பத்து நாள் முன்னேப்பின்னே இந்த தேகம் இறந்துபோம். அன்றைக்கு இந்தத் தலே வெந்து சாம்பலாய்ப் போய்விடும். அப்படி நீராய்ப் போகிற தலேயை என் தம்பி கோடி திரவியத்திற்கு ஈடுபண்ணி வைத்தான். இந்தத் தலேயை நீர் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, கோடி திரவியத்தையும் வாங்கினீரானல் வெகுகாலம் ஜீவனம் பண்ணலாம். அந்தத் தருமத்தினுலே எனக்குத் தேவேந்திரப் பட்டமும் அநேக மோட்ச காரியமுண்டு. இப்படி யெனக்கு வீணே யெரிந்துபோகிற தலேயை இவ்வளவு மகிமை வரும்படியாய்ப் பண்ணிவைத்தத் தம்பியைப்போல் மூன்று லோகத்திலும் ஒருவருக்கும் கிடையாது ஆனதால், யோசனே பண்ணுமல் என் தலேயை யறுத்துக்கொண்டு போமென்று குமணராசன் சொல்ல, வித்துவானும் நல்லதுதான்; நாளேய தினம் வந்து உம்முடையத் தலேயைக் கொண்டுபோகிறேனென்று புறப்பட்டு, குமணனுடைய பட்டணத்தில் தட்டான் பட்டடையில் வந்தான். அப்போது, தட்டான் ராஜ கிரீடத்தை இரண்டு காலிலு மிடுக்கிக்கொண்டு இரண்டு கையாலும் வேலே செய்கிறவனேப் பார்த்து வித்துவானுகிறவன் ஒரு வெண்பாச் சொல்லுகிறுன்?—

"மாந்தநக ராளு மகுடத் தியாகியருக்
கேந்துதமும் புங்களுக் கிரண்டுண்டே—வேந்தர்
முடித்தமும்பு காலிலே முத்தமிழோர்க் கீந்த
படித்தமும்பு கையிலே பார்"

இப்படி, வெண்பாச் சொன்னமாத்திரத்திலே தட்டானுக்குச் சந்தோஷம் வந்து அந்தக் கீரிடத்தைக் கொடுத்தான். அதற்கு வித்துவான் இந்தக் கிரீடம் நான் வாங்கிப் போனல் உனக்கும் நமக்கும் ரொம்பத் தொந்தரவு வருமென்று குமணராசனுடைய தலேயைப்போல் ஒருதலே செய்து தாவென்றுன். அந்தப் படிக்குத் தட்டானும் வாழைக் கிழங்கினுலே கண், மூக்கு, வாய், காது, சகலமும் குமணராசன் தலேயைப்போலவும், அறுத்த கழுத்தைப் போலவும், ரத்தச் சொரி சிந்திக்கொண்டு இருக்கிறது போலவுஞ் செய்து கொடுத்தான். அந்தத் தலேயைக் குடுமியிலே பிடித்து வித்துவான் தூக்கிக்கொண்டு அமணராசன் அரண்மனே வாசலிலே வைத்துத் தெரியப்படுத்தினுன். அந்தச் செய்தியை, அமணராசன் கேட்ட மாத்திரத்திலே, சரேலென்று வந்து அந்தத் தலேயின் பேரிலே அலறி விழுந்து மூர்ச்சை போனுன். போனவனே ஜனங்கள் சுக்கு வைத்தூதி தெளியப்படுத்திய மாத்திரமே அமணன் வித்துவானேப் பார்த்து, அடா பாவி! என் தமையன் சர்வசீவதயாபீனுயிற்றே! எவனுகிலும் இவன் தலேயைத் துணிந்து தொடுகிறபேரில்லேயே. நான் விளேயாட்டுக்குச் சொல்லி வைத்தேனல்லாமல், நீ, பாவி! மெய்யாக முடித்துப் போட்டாயே. இனி தமையனே வெட்டிவிட்டு தம்பிபட்ட மாளுகிருனென்று பூமி உள்ளவரைக்கும் சொலப் (பழி) போகாதே. ஆதலால், நான் பிராணத்தியாகம் பண்ணக் கடவே னென்று சமுதாட்டை உழுவுகிறபோது, வித்துவான் பார்த்து, வாருமையா அமண ராசாவே! எனக்குத் தலேவெட்டுகிற வித்தையும் தெரியும். வெட்டின தலேயை ஒட்டுகிற வித்தையும் தெரியும். இந்தத் தலேயைக் கொண்டு போய் ஒட்டி உன் தமையனே எழுப்பிக்கூட்டி வருகிறேமென்று சொல்ல, அந்தப்

படிக்கு என் தமையனைக் கூட்டி வந்தால் இந்தத் திரவியத்திற்கு இரட்டிப் பாய்த் தருகிறேனென்று சொல்ல, வித்துவானும், அந்தத் தலையை எடுத்துக் கொண்டுபோய் காட்டிலே எறிந்துவிட்டு, குமணராசனிடத்திலேவந்து உம்முடைய தலையை உம்முடைய பட்டணத்திலே போய் வெட்டுகிறேன், வாருமென்ன உன் தலை தந்திட்டேன். நீர் எந்த விடத்தில் கொண்டுபோய் வெட்டினாலும் சரி யென்று குமணன் வர, வித்துவான் குமணராசனைக் கூட்டிக்கொண்டு அரண்மனை வாசலில் வந்தான். அப்போது அமணன் தமையனைக் கண்டவுடனே சாஷ்டாங்க மாய் விழுந்து தெண்டம்பண்ணி அடியேன் தெரியாமல் செய்த காரியத்தைப் பொறுத்து ரக்ஷியுமென்று சிம்மாசனத்தில் வைத்து மகுடமும் சூட்டி வித்து வானுக்குச் சொன்ன திரவியமும் கொடுத்து அனுப்புவித்து, சுகமேயிருந்தார்கள். ஆதலால், கம்மாளன் லோகத்தாருக்கெல்லாம் சீவன முயற்சிக்கு இடம்பண்ணு கிறவனாயிற்றே. அவனை பிரட்டுவானென்று சொல்லாமல் மலையைப் பிரட்டுங் கையானென்று பாடியிருக்கிறது. ஆதலால், அழகு பொருந்திய நியமாபுரியி லிருக்கும் செயங்கொண்டாருலகில், "கம்மாளன் பசுவைக் காதறுத்துப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று," உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (67)

## கெடுப்பதும் வாயால் படிப்பதும் வாயால்.

கொடியினிலே ஓதிமங்கள் கவ்விப்
 பறக்க நடுக்கூர்மங் கொள்வ
நொடியிலொரு சேதிசொல்ல வாய்திறந்தா
 மையும்விழுந்து நொறுங்கிற் றன்றே
வடிவுளதந் திரகதையில் விளங்கிவரு
 தென்றே செயங்கொண்டார் நாட்டில்
நெடுங்கிணறும் வாயாலே தூருமென்று
 சொல்லுவர் நிசங்கண் டீரே.

என்றது:—தேவலோகத்திலிருந்து ஓதிமமாகிய இரண்டு அன்னப் பட்சிகள் பூலோகத்திலே ஒரு தாமரை தடாகத்திலே வந்து இருந்தன. அந்த தடாகத்திலே ஒரு ஆமையானது அன்னப்பட்சிகளுடனே ரொம்பவும் சிநேகிதமாய் ஒரு மாதம் வரையில் இருக்கையில் அந்த அன்னங்களானது எங்கள் தெய்வலோகத்திற்குப் போகிறோமென்று கூற, அப்போது கூர்மம் நானும் ஒரு மாதமாய் உங்களுடனே சிநேகிதமாய் இருந்தேனே. இப்போது நீங்கள் தெய்வலோகத்திற்குப் போனால் உங்களை விட்டு ஒரு நிமிடமும் இருக்க மாட்டேன். நானுங் கூட வருகிறேனென்று சொல்ல, அன்னங்கள் நாங்கள் பறந்துபோவோமே. நீ யெப்படி வருவாய் என்று கேட்க, ஆமையானது இந்தத்தாமரைக் கொடியைக் கவ்விக்கொண்டு கிடக்கிறேன். நீங்கள் பறந்து போனால் நாம் மூன்று பேரும் தெய்வலோகம் போய்ச் சேரலா மென்று சொல்ல, அன்னங்களும் சம்மதித்து அந்தப் பிரகாரம் பறந்து போகை யிலே அந்தக் கிராமத்து ஜனங்கள் இதுவென்ன அதிசயமாயிருக்கிறது. ஒரு தாம

ரைக் கொடியை இரண்டு பட்சிகள் கௌவிக்கொண்டு பறக்கின்றன. நடுவிலே ஒரு ஆமை காலையும் கையையும் பரப்பிக்கொண்டு கிடக்கிறது என்று, வெகு ஜனங்கள் கூடிவந்து பார்ப்பதை, ஆமையானது பார்த்து, நாம் தான் தேவலோகத் திற்குப் போகிறோம். இந்தச் சனங்களெல்லாம் விழுந்து, கெட்டு, ஏனோடி வரு கிறார்கள் என்று அன்னங்களிடத்தில் சொல்ல வாய்திறந்தது. வாய்திறந்த உடனே பூமியிலே விழுந்து உடைந்து நொறுங்கி மரணமடைந்தது. ஆமையானது வாயாலே கெட்டது, நாமென்ன செய்வோமென்று அன்னங்கள் போய்ச் சேர்ந்தன. இந்தக் கதை பஞ்சதந்திரக் கதையில் விளங்கி வருகிறது. ஆதலால், சௌந்தரநாயகி பாகரா்கிய செயங்கொண்டாருலகத்தில்,'**நண்டு வாயாலே நூடும்'** என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (68)

**அம்பு கிடைக்கையிலே ஆனைக் கட்டலாகாது.**

நம்புகுரு வசிட்டர்பகை மிகுந்திருக்கும்
போதுதிரி சங்கு ராசன்
வம்புரைத்த கோசிகரால் சொர்க்கமதில்
ஏறியதால் மகிமை யுண்டோ
சம்புமகா தேவசெயங் கொண்டாரே
எதிராளி தனுவா லெய்த
அம்புகிடக் கையிலானைக் கட்டினல்
மெய்யினில்புண் ஆறி டாதே.

என்றது :—திரிசங்கு ராஜாவிடத்தில் விசுவாமித்திரர் வந்து ராசாவை பூமியின்கண்ணிலே யிருக்கும் வரைக்கும் இருந்து, மரணமான பிறகு அல்லவா சொர்க்கமடைவாய். அதற்கு நானொரு வழி சொல்லுகிறேன். உன்னுடைய குருவாகிய வசிட்டர் வருவாரே, அவரிடத்தில் என்னைச் சரீரத்துடனே சொர்க்க மேற்றி வைக்கவேண்டும் சாமி, என்று சொல்லு. அப்படிக் கூடாதென்று சொல்லிவிடுவார். அப்பால் நான் வந்து உன்னை சரீரத்தோடே சொர்க்கம் ஏற்றிப் போடுகிறேன் என்று சொன்னார். என்று சொன்ன மாத்திரத்திலே வசிட்டருக்குக் கோபம் வந்து பூமியில் பிறந்து நர சன்மத்திற்கு சரீரத்துடனே சொர்க்கம் சேர்வ துண்டோ. விசுவாமித்திரன் கெர்வத்திற்குச் சொன்னால் அதை நீ யென்னிடத்தில் சொல்ல வேண்டியதென்ன? நீ நீசனாகப் போகக் கடவது. அவனைத் தானே சொர்க்க மேற்றச் சொல்லென்று பகைத்துக்கொண்டு போய்விட்டார். அப்பால் விசுவாமித்திரர் பார்த்து இந்தச் சொர்க்கத்தில் சேர்க்க சம்மதியார்களென்று ஆறு நட்சத்திரங்களைப் பிடுங்கி தெக்கணத்திலே யெறிந்து தென் கைலாசம் திரிசங்கு சொர்க்கமென்று ஒருசொர்க்கமுண்டுபண்ணி வீழச்சன் (சிங்களதேயம்)பார்வையாய் திரிசங்குஇராசனை சொர்க்கத்திலேற்றினர். அந்தஇராசாவுக்கு நீசத்துவம் வந்திருந் ததால்அந்த சுவர்க்கம் இவனைப் புறம்பிடித்துத் தள்ளிவிட்டது. இவன் தலைகீழாய் விழும்போது விசுவாமித்திரனுக்கு அபயமென்றான். அப்போது, விசுவாமித்திரரும்

அப்படி நில்லென்று கையாலே அமர்த்திப் போட்டார். ஆதலால், இன்னமும் திரிசங்கு ராஜா தலைகீழாய்க் கிடக்கிறாரென்று உலகம் சொல்லுகிறது. வசிட்டர் சாபம் இருந்ததால் விசுவாமித்திரராலே கொண்டு முடிக்கக்கூடவில்லை. ஆதலால், சிவசாம்பமூர்த்தியாகிய செயங்கொண்டாருலகத்தில், "அம்பு கிடைக்கையில் ஆனைக் கட்டப்படாது" என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு (69)

இராமராண்டாலென்ன இராவணனாண்டாலென்ன.

கூச்சமற மாவலிபூ மியைக்கொடுக்க
மால்வாங்கக் குறுக்கே சுக்கிரன்
பேச்சறியா மல்பேசிக் கண்ணிழப்பா
னேனாதுங்கிப் பிழைக்கொண் ணாதோ
ஆச்சரியம் செயங்கொண்டா ரிலங்காபுரி
ராமராண் டாலென்ன ராக்கதராண்
டாலென்ன வென்ரேதுங் கலையே
குரங்குமுன்னுள் நடத்தை தானே.

என்றது:—மாவலிவாணனிடத்தில் மகா விஷ்ணுவானவர் வாமன ரூபமாய் வந்து மூன்றடி மண் பூமிதானங் கேட்க, மாவலியுந் தருகிறேன் என்று சொல்ல, அந்த மாவலிக்கு குருவாகிய சுக்கிரபகவான் வந்து பூமி தானம் வாங்க வந்தவன் பிராமணனல்லவே, மகா விஷ்ணுவானவர் உன்னைக் கெடுக்க வேண்டுமென்று பிராமணனாக வந்திருக்கிறார். நீ கொடாதேயென்று தடுக்க, மாவலி சுக்கிர பகவானைப் பார்த்து யாராகட்டும் பிச்சையென்று வந்த பேருக்கு இல்லையென்று சொல்வதைப் பார்க்க வேறே கெடுதலுண்டோ? நீர் குருவாயிருந்தும் கொடுப்பதைத் தடுப்பது நல்லதல்லவென்று சொல்லி பிராமணப்பிள்ளை கையிலே கெண்டி சலத்தை யெடுத்துத் தாரை வார்த்தான். அப்போது சுக்கிர பகவான் இந்த மாவலியானவர் நான் சொல்வதைக் கேட்கிறானில்லையென்று, தும்பி வடிவெடுத்துக் கெண்டி மூக்கிலே தண்ணீர் விழ வொட்டாதபடிக்கு அடைத்துக் கொண்டார். அப்போது, தானம் வாங்க பிராமணப் பிள்ளை கையிலிருந்த தெர்ப்பைப் புல்லாலே கெண்டி மூக்கிலே குத்தினார். அப்போது சுக்கிரனுக்கு ஒரு கண் கெட்டுப் போய்விட்டது. அதன் பிறகு இராம ராவணர் யுத்தத்திலே மூல பலங்களானது சண்டை செய்ய ரணகளத்தில் வந்து நிற்பதை, இராமசுவாமியுடைய குரங்குப் படை பார்த்து, இங்கே பூதங்கள் போலேயும், பப்பறவன்கள் (பம்பரம் என்று பொருள் போல) போலேயும் வந்து நிற்கிறதே. இதில் ஒரு இராக்கதன் இவ்வளவு குரங்கையும் பக்ஷணம்பண்ணிப் போடுவானே. இந்த இலங்கை தேசத்தை இராமராண்டாலென்ன, இராக்கதராண்டாலென்ன, நமக்கொரு பக்கத்திலே பசி வேளைக்குக் காய்கனி கிடையாதா. இவ்விடத்தில் நிற்கப் படாது. சாவுக்குத் தப்பி ஓடிப் போவோமென்று எல்லோரும் பேசிக்கொண்டு

ஓடிப்போய் அந்தத் தத்துக்குப் பிழைத்தனவே, அதுபோலே சுக்கிர பகவானும் இந்த இராசா பின்வரும் காரியமறியாமல் கொடுக்கிருனே. இந்த இராசனைப் போலே நமக்கு அநேக சீடன்கள் இருக்கிருர்களே, நாம் கொடுப்பதைத் தடுப் பானே யென்று பேசாதிருந்தால் கண்ணிழக்கிறதில்லையே. ஆதலால், சர்வ சீவ தயாபரரான செயங்கொண்டாருலகில், ‘ இராமராண்டாலென்ன. இராக்கத ராண்டாலென்ன வையகமென்று, உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (70)

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே.

நீரெடுத்தோர் கலசமதில் சவுசமுஞ்செய்
தோனதுதான் நெடுநா ளைக்குப்
பாரில்விழுந் துடையவின்னம் ஒருகலசம்
என்மானம் பார்க்கும் போது
சீரிலைவென் றழுதானென் றொருகதைசொல்
வார் நியமச் செயங்கொண் டாரே
ஆரெனினு மானமழிந் திடிலுயிர்
காவலென்ன வென்பா ரவனியோரே.

என்றது:—ஒரு பட்டணத்திலே ஒரு வர்த்தகனுனவன் ஒரு பெண்ணைக் கலி யாணம் பண்ணி முறை வைத்துவிட்டு (இவளுக்கு நான் ‘ கணவன் ’’ என்ற முறை மட்டும் தெரிவித்துவிட்டு) நீர் தீவாந்தரம் போகின்றீரே ! இரண்டாண்டு கள் கழியுமே. நீர் வருகிற மட்டுக்கும் நான் (பெண்) தனிப் படுக்கையி லிருக்கிறதாவென்று கேட்க, அப்போது அந்த வர்த்தகன் சொல்வான். இந்தப் பட்டணத்திலே மானஸ்தனுகயிருக்கிறவனைப்பார்த்துக்கூட்டிவந்து,அவனிடத்தில் நீ இஷ்டமாக யிருக்கலாம். அப்படியிருவென்று சொல்லிவிட்டு வர்த்தகன் போய் விட்டான். அப்போது, அந்தப் பெண்ணுனவள் தன்னுடைய தாதிமார் உயிர்ப் பாங்கியை யழைத்து, தன்னுடைய நாயகன் சொன்ன சேதியைச் சொல்லி, மானஸ்தனைப் பார்த்துக் கூட்டி வாருங்களென்று சொல்ல, அந்தப் பெண்கள் காலமே குளத்தங்கரையில் போய் நிற்கிறபோது பட்டிணத்து சனங்கள் மலபாதை ஜலபாதை தீர்த்துக்கொண்டு குளத்திலே, கால் கை சுத்திபண்ணி அலுவல் முடித்துக்கொண்டு போனுர்கள். அந்தச் சனத்திலே சவுசம்பண்ண கலசம்கொண்டு வந்து தண்ணீர் முகந்துகொண்டு வெகு தூரம் செடி மறைவாய்ப் போய் மலபாதை ஜலபாதை தீர்த்துக்கொண்டு கலசத்து ஜலத்தாலே சவுசம் பண்ணிக்கொண்டு அப்பால் குளத்திற்கு வந்து பூஜை மற்றது முடித்துக்கொண்டு வீட்டிற்குப் போக லெக்குப் பண்ணினதை, இந்த தாதிமார் அவன் நடத்தையெல் லாம் பார்த்துக்கொண்டேயிருந்து, இவன் மானஸ்தன், இவனைக் கூட்டிப்போவோ மென்று அந்த மனிதனிடத்தில் வந்து, வர்த்தகன் பெண்சாதியிடத்துக்கு

வாவென்ன, எனக்கு அங்கே அலுவலென்ன, நான் அங்கே வரக் கூடாதென்று தன் வீட்டு வழியே போகிறபோது, அவன் கையிலிருந்த கலசம் கீழே விழுந்து, உடைந்து போயிற்று. அந்தக் கலசம் உடைந்த விசனத்தைச் சகிக்கமாட்டாமல் கூக்குரல் போட்டு அழுது அலறினன். அவனை அந்த வர்த்தகன் பெண்சாதியிடம் கொண்டுவந்து சேர்த்து, இவன்தான் மானஸ்தன் என்று முன்னே விட்டார்கள். அப்போது அந்த மனிதனைப் பார்த்து, நான் பாங்கியர்களையனுப்பி உம்மையழைந்தால் நீர் இவ்விதமாய் அழவேண்டிய தென்னவென்று கேட்க, அடிபாவி! என்னிடத்தில் உனக்கு என்ன அலுவலிருக்கிறது? என்னைப் பிடித்து மல்லுக்கட்டி என் கலசத்தையுமுடைத்துப் போட்டார்களே, நானென்ன செய்யப்போகிறேன் என்று அழுதவனை, அந்தப் பெண்பார்த்து, வாருங்காணும்! மண்கலசமுடைந்ததற்கு நான் சொர்ணக் கலசம் தருகிறேன்; நீர் விசனத்தை விட்டுவிடும் என்று சொல்ல, அந்த மனிதன் அந்தப் பெண்ணைப் பார்த்து, அடி பைத்தியக்காரி, உன் தங்கக் கலசமும் சரி, எனக்குத் திரணமும் சரி, எனக்கு விவரந்தெரிந்த நாள்முதல் என் மானத்தை அந்தக் கலசம் கண்டதேயல்லாமல், ஊரிலுள்ள குளங்களாவது, மறு கலச சொம்புகளாவது கண்டதில்லையே. நாளைமுதல் மறுகலசம் என் மானத்தைக் கொண்டுபோகிறதே என்று விசனப்படுகிறதேயல்லாது, கலசம் உடைந்ததற்கு விசனப்படவில்லையென்று சொல்லிவிட்டு வீட்டிற்குப் போனன். அப்போது அந்தப் பெண்ணானவள் நம்முடைய நாயகன் புத்தி வரவேண்டுமென்று மானஸ்தனைச் சேர்ந்திருவென்றுர். மானஸ்தன், அவனுடைய கலசத்தை ஒரு கலசம் கண்டதேயல்லாமல் இன்னமொரு கலசம் காணுகிறதாவென்று சொல்வதால், நம்முடைய நாயகனுக்கு நம்முடைய மானத்தை ஒப்புவிக்கிறதேயல்லாமல், இரண்டாம் பேருக்கு நம்முடைய மானம் ஒப்புவிக்கிறதெவ்விதம் என்று, நல்ல புத்தியோடுங் கூடியிருந்தாள். ஆதலால், சீர் பொருந்திய தென்னியமச் செயங்கொண்டாருலகில், **"மானமழிந்து உயிர் காவலா?"** வென்று உலக வழக்கஞ் சொல்லும் என்றவாறு. (71)

**நெருப்பைக் கண்டு மிதித்தாலும் காணமல் மிதித்தாலும் சுடும்.**

விருப்பமறை யோர்தனக்குப் பிறந்தநிரு
வனைஉவணன் விழுங்கு வாயில்
நெருப்பெனச்சுட் டதனல்செங் கருடனிரு
தனைவிடுத்தா னெனவோர் பாட்டில்
திருப்பதிவேங் கடசதகந் தனிலுரைத்தார்
முன்பெரியோர் செயங்கொண் டாரே
நெருப்பிருப்ப தறியாமல் தொட்டாலும்
சுடுமெனவும் நிகழ்த்து வாரே.

என்பது :—பிரமதேவர்பிள்ளை மரீசிரிஷி. அவர் பிள்ளை காசிபர் அந்தக் காசிபருக்கு பதினன்கு மனைவியரில், வினுதை யென்றொருத்தி கருடனைப் பெற்றிருந்தாள். 'கத்துரு' என்பவள் அஷ்ட நாகமுதல் சர்ப்பங்களையெல்லாம் பெற்றிருந்தாள், அந்தக் கத்துருவான பெண் அக்காளாகிய வினுதையைப் பார்த்து, தேவேந்திரன் வெள்ளையானைக்குக் கருப்புண்டோவென்று கேட்க, வினுதை வெள்ளையானைக்குக் கருப்பு இருக்கிறதென்று சொல்ல, கத்துருவானவள் தேவலோகத்தில் தேவேந்திரனுடைய பொக்கிஷ வீட்டில் கருவூலத்தில் அமிர்த கலசம் எனக்குக் கொண்டுவந்து தந்தால், இந்தப் புழுக்கை வேலைச் சபதம் அன்றைக்கு நிவர்த்தியென்றாள். நல்லதென்று வினுதையும் அன்றுமுதல் கத்துருவுக்குப் புழுக்கை வேலை செய்துகொண்டிருந்தாள். அப்பால், வினுதை யுடைய பிள்ளை கெருடபகவான் பரிபாலனமாய் பெரிய பிள்ளையானபிறகு தாயாரைப் பார்த்து, உனக்கிளையவளுக்கு நீ புழுக்கை வேலை செய்யவேண்டிய தென்ன? என்று கேட்க, அவள் நடந்தவயணம் எல்லாம் சொல்லக்கேட்டு கெருடனுக்குக் கோபம் வந்து வெள்ளையானைக்குக் கருப்பில்லையே நம்முடைய சிறியதாயார் மோசம்பண்ணி, நம்முடைய தாயை வேலை கொள்ள வேண்டிய தென்னவென்று ஆக்கிரமித்து, ஆனால், நம்முடைய தாயார் சம்மதித்த சபதத் திற்கு அகிதமில்லாமல் அமிர்தக் கலசத்தைக் கொண்டு வந்து கொடுத்துப் போட்டல்லவா? சிறிய தாயார் பண்ணின பிரட்டுக்கு வகைசொல்ல வேண்டு மென்று தெய்வலோகத்திற்குப் புறப்பட்டது. அந்த அமிர்தக் கலசம் ஏதென்றால் முன் திருப்பாற்கடலிலே மகாவிஷ்ணு கடைந்து அமிர்தமெடுத்து தேவேந்திரன் அரண்மனையில் கார்வானகிய பொக்கிஷ வீட்டையும் திறந்து, அந்த அமிர்த கலசத்தை எடுத்துக் கொண்டுவந்து, சிறிய தாயாராகிய கத்துருவினிடத்தில் கொடுத்துத் தாயாராகிய வினுதை ஊழியஞ்செய்த அவதியும் தீர்த்துவிட்டு, அப்பால் கத்துருவானவள் வெள்ளையானைக்குக் கருப்புகக் காண்பித்தது என்று அந்த சர்ப்பங்களை அடித்து நிர்த்தூளி பண்ணி பாதாள பரியந்தம் விரட்டி விட்டு, இதற்குமுன் கருடன் தகப்பனகிய காசிபர் கருடனைப் பார்த்து, தீவிலே கோடி அசுரர் இருந்துகொண்டு தேவதைகட்கெல்லாம் இடுக்கண் பண்ணுகிறார்கள். அந்த இடுக்கண் தீர்ந்தாப்போலேயும் இருக்கட்டும்; உன் பசியடங்கியது போலேயுமிருக்கட்டும். அந்தக் கோடி இராக்கதரையும் சாப் பிட்டுத் தீர்த்துப் போடு என்று சொல்லியிருந்தார். அந்தக் கிரவுஞ்சக தீவிலே கருடன் சென்று அந்த இராக்கதரையெல்லாம் எடுத்து விழுங்குகிற போது, அதிலோர் இராக்கதன் பிராமண விந்துவுக்குப் பிறந்தவன். அவனைத் தூக்கி விழுங்குகிறபோது கருடன் வாயிலே சுட்டு கருடனந்த இராக்கதனைக் கக்கி விட்டான். பிராமணன் முதல்சாதி. அக்கினி ஹோத்திரியாதலால் ராக் கத்தி வயிற்றில் பிராமண விந்துவுக்குப் பிறந்த பிள்ளையாதலால் கருடன் வாயில் சுடலாச்சுது. இந்தக் கதை மணவாள சதகத்தில் முதல் பாட்டில் பிராமணர் நெறியைப்பற்றி பாடினபாட்டில், 'வால் கெருடன் பண்டு கண்ட கதையல்லவோ, மணவாள நாராயணனே,'' என்று பாடியிருக்கிறார், ஆதலால், மழுவணிந்த செயங்கொண்டாருலகத்தில், "**நெருப்பைக் கண்டு தொட்டாலும் சுடும்; நெருப்பு இருப்பதறியாமல் தொட்டாலும் சுடும்,**" என்று உலக வழக் கஞ் சொல்லும் என்றவாறு. (72)

### செய்தவினை செய்தவர்க்கு எய்திடும்

கையினில்பட் டினத்தார்க்குத் தமக்கைநஞ்சு
கலந்து பலகாரம் செய்து
ஐயமறக் கொல்லவென்றே கொடுக்க
அவள்மனை நெருப்பா லழிந்ததன்றே
துய்யபிஞு கச்சிலையீர் செயங்கொண்டா
ரேபிறர்க்குத் துன்பங் காணச்
செய்ததீ வினைதானும் செய்தவர்க்கே
சாருமெனச் செப்பு வாரே.

என்றது :—காவிரிப்பூம் பட்டினத்துச் செட்டியாருக்கு திருவிடை மருதூர் மருதப்பர் அனுக்கிரகத்தினாலே, ஞானவறிவு வந்து ஒன்பதுகோடி திரவியத்தையும் சூரையிட்டுக் கைதட்டிப் பரதேசியாய், யார் அன்னங்கொடுத்தாலும் பசியாறிக் கொண்டு பைத்தியக்காரரைப்போல திரிகிறதை, அவர் தமக்கையார் பார்த்து, நம்முடைய தம்பி நவகோடி திரவியத்திற்கு அதிபதியாயிருந்து ஊரிலே பிச்சை வாங்கிப் புசிக்கிறது நமக்கு லச்சையாய் இருக்கிறதென்று பச்சை நாவியைப் பலகாரத்தில் சேர்த்து செய்து இதை சாப்பிடுமென்று கொடுத்தாள். அந்த வஞ்சகம் பட்டிணத்தாருக்கு ஞானக்கண்ணாலே தெரிந்தது. அப்படியிருந்தும், அந்தப்பலகாரத்தை வாங்கிக்கொண்டு, தன்வினை தன்னைச் சுடும்; இந்த ஓட்டப்பம் வீட்டைச் சுடும்,'' என்று அவள் வீட்டுக் கூறையிலே சொருக, அந்த வீடும் வெந்து பற்பமாய்ப் போய்விட்டது. ஆதலால், பிஞகமாகிய வில்லைத் தரிக்கும் செயங்கொண்டாருலகில், "செய்த தீவினை செய்தவர்க்கே பலிக்கும்,'' என்று உலகம் சொல்லுமென்றவாறு. (73)

### மந்திரங் கால் மதி முக்கால்.

சிந்தைமகிழ் விக்கிரமா தித்தனுக்கா
யிரவருஷம் தேவி யீந்தாள்
புந்திவலி மந்திரிசொல் லாலிரண்டா
யிரவருஷம் புவியை ஆண்டான்
சுந்தரரற்கு தூதுசென்ற செயங்கொண்டா
ரேதருமந் துலங்கு நாட்டில்
மத்திரங்கால் மதிமுக்கால் என்றுலகந்
தனிலுள்ளோர் வழுத்து வாரே.

என்றது :—விக்கிரமாதித்திய இராசனுக்கு பத்திரகாளி பிரசன்னமாகி, ஏறின சிம்மாசன மிறங்காமல் ஆயிரம் வருஷம் இராச்சிய பரிபாலனம் பண்ணச் சொல்லி உத்திரவு கொடுக்க, விக்கிரமாதித்தன் வந்து, இந்தப்படி வரம் வாங்கி வந்தேனென்று மந்திரிக்குச் சொல்ல, பட்டியான மந்திரி இராசாவைப் பார்த்து பத்திரகாளி உமக்கு ஆயிரம் வருடம் தேசம் ஆளும்படி உத்திரவு கொடுத்தாளே, நானும் ஆயிரம் வருஷம் கூடத்தருகிறேன். அது எப்படியென்றால் ஆறுமாதம் சிம்மாசனத்திலிருந்து ராச்சியபரிபாலனம் செய்கிறது. ஆறுமாதம் வனாந்திரமும் மறுதேசமுமாய்ச் சஞ்சரித்து வருகிறது. இந்த வகையாய் ஏறின சிம்மாசன மிறங்காமல் ஆயிரவருஷம் ராச்சிய பரிபாலனமாய் ஆளுகிறது. அம்மன் தந்தது பிசகாது. நாம் நாடாறு மாதம், காடாறு மாதம் இருக்க, இரண்டாயிர வருஷம் சரிக்கட்டி யிருக்கலாமென்று மந்திரி புத்திகோசாரத்தினாலே உண்டு பண்ணிக் கொடுத்தான். அதன் பிற்பாடு பட்டியாகிய மந்திரி பத்திரகாளியை நோக்கித் தவம் செய்தான். அப்படியே பத்திரகாளி பிரசன்னமாகி உனக்கு வேண்டிய தென்ன வென்று கேட்க, நான் இந்தப் பூமியின்கண் இரண்டாயிரம் வருடம் இருக்கும்படி வரந்தர வேண்டுமென்று சொல்ல, அம்மன், அந்த விக்கரமாதித்தன் தலையை அறுத்து எனக்கு ஒப்பிக் கொடுத்தால், உனக்கு இரண்டாயிரம் வருடம் இருக்கும்படிக்கு வரந்தருகிறேன் என்று சொல்ல, பட்டியுமந்தப் படிக்கு அரண்மனையில் வந்து விக்ரமாதித்தன் நித்திரை பண்ணுகையில், அவரைத் தூக்கிக் கொண்டு அம்மன் முன்னே கொண்டுவந்து விட்டுக் கழுத்தை அறுக்கிற போது, இராசா விழித்துப் பார்த்து காரியத்திற்காக வேண்டியல்லோ நம்முடைய கழுத்தை யறுக்கிறானென்று யோசனை பண்ணி அறுத்தாலறுக்கட்டு மென்றிருக்க, பட்டியும் ராசாக் கழுத்தை யறுத்து அம்மனுக்கு முன்னே வைத்தான். அம்மன் உனக்கு இரண்டாயிரம் வருஷம் இருக்க வேண்டு மென்று வரந் தந்தாள், வரத்தை வாங்கிக் கொண்டு நேற்றுந்தானல்லோ இராசாவுக்கு ஆயிரம் வருஷம் இருக்க வரங்கொடுத்தாய். அவர்கழுத்து அறுபட்டுப் போனாரே. எனக்குத் தந்தவரம் நிசமோமென்று மந்திரி கேட்க, அப்போது அம்மனுக்கு சந்தோஷம் வந்து இராசாவையும் எழுப்பிவிட்டார். இதுவெல்லாம் மந்திரி புத்தியினாலே உண்டுபண்ணிக் கொண்டான். ஆதலால், சுந்தரற்குத் தூது நடந்த பாதாம் புயத்தையுடைய செயங்கொண்டாருலகில், **"மந்திரங் கால் மதி, முக்கால்,"** என்று உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. **(74)**

### பசுத்தோல் போர்த்த புலியதுபோல.

நிசகாளி தாசனரண் மனைவாசல்
புகவேண்டி நிருபன் கீர்த்தி
சுகஞசி பல்போலென் றுரைத்ததில்
செல்லவிட்டார் தோன்றப் போவென்
றிசைவாங்க கீர்வாணம் போசன்மேல்
பகர்ந்தனனே செயங்கொண் டாரே

**பசுமாட்டுத் தோலதனைப் புலிபோர்த்துக்**
**கொண்டிருந்த பண்பு தானே.**

என்றது :—போஜராசன் வாசலிலே இரண்டுபேர் வித்துவாம்சர்களிருப்பார்கள். அதிலொருத்தன் யாராகிலும் பாடின கவிதையை ஒருதரம் சொன்னவுடனே, அவனுக்கு முன்னே பாடமாயிருந்த கவிதைபோலத் திரும்பச் சொல்லிவிடுகிறது. ஒருதரம் சொல்லச் சொல்லி அப்பால் அவனுக்கு முன் பாடம் பண்ணின பழைய கவிதைபோல சொல்லி விடுகிறது. எந்த வித்துவானும் போஜராசன் பேரில் ஒரு கவிதை பாடிக்கொண்டு போனால், வாசல் வித்துவான்கள் இரண்டு பேரும் வந்த வித்துவானைத் தடுத்து பாடின கவிதையைச் சொல்லச் சொல்லி இது முன்னொரு வித்துவான் பாடின கவிதை. இது எங்கட்குமுன் பாடந்தான், என்று சொல்லிக் காண்பித்து வந்த வித்துவானை மறுப்புக்கள் செய்து விரட்டி விடுகிறது. இந்த வரலாறு காளிதாசன் அறிந்து, நானும் போஜன் பேரில் கவிதைபாடியிருக்கிறேனென்று வாசல் வித்துவான்களிடத்தில் சொல்ல, அவர்கள் அந்தக் கவிதையைச் சொல்லச் சொன்னார்கள். அப்போது காளிதாசன் நாமங்கே வளமான கவிதையாய்ச் சொல்லிக் காண்பிக்க வேண்டுமென்று இராசாவுடைய கீர்த்தி, சுண்ணம்பைப் போலவும், வெள்ளைச் சுவாரம் போலவும் இருக்கிறதென்று கிரந்த சுலோகமாய்ச் சொன்னவுடனே, இந்த வித்துவானை போசன் சமூகத்தில் கூட்டிப் போய்விட்டு, வேடிக்கை பார்க்க வேண்டுமென்று விட்டார்கள். போஜன் சமூகத்தில் போனவுடனே போசனுடைய கீர்த்தி ஈசுரன் வெள்ளிமலை போலவும், மகாவிஷ்ணு பாற்கடல் போலவும், பிரம்மாவினுடைய அன்ன வாகனம் போலவும், லோகமெல்லாம் ஒரே வெண்மயமாய் மூடிக்கொண்டதென்று கீர்வாணத்தில் நான்கு சுலோகம் பாடினான். போஜன் வெகு ஆச்சரியத்தையடைந்து இந்த நான்கு திசையும் இராச்சிய முழுவதும் இந்த வித்துவானுக்குக் கொடுத்துவிட்டோமென்று சிம்மாசனத்தை விட்டிறங்கி அரண்மனை போய்ச்சேர்ந்தான். அப்பால் மந்திரி உபாயத்தினாலே காளிதாசனிடத்தில் சீர்மையை வாங்கிக் கொண்டு, பொக்கிஷ வீட்டிலிருந்த திரவியமெல்லாம் காளிதாசனுக்குக் கொடுத்து சந்தோஷம் பண்ணினான். காளிதாசன் முன்னே சுபாவமாகப் பாடினால் வித்துவான் கவிதை பழைய கவிதையென்று சொல்லி விரட்டி விடுவார்கள் என்றறிந்து அப்போதைக்குப் பசுபோலவும், அதன்பிறகு புலியினுடைய வீரமும் காண்பித்தான். ஆதலால், உலக ரட்சகராகிய செயங்கொண்டாருலகில், "பசு மாட்டுத் தோலைப் புலி போர்த்துக் கொண்டாப் போல்," என்று உலக வழக்கம் சொல்லும் என்றவாறு.(75)

**சாகத் துணிந்தவர்க்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்.**

யாகத்தால் செயமுமில்லை யிறப்பதினி
நிசமெனச்சொன் னவளைப் பெண்ணே!
லோகத்தார் ராமாவென் றுரைக்குமட்டும்
ராவணனென் றுரைப்பார் போருக்குப்

போகத்தான் துணிந்தனனென் றுன்செயங்
கொண்டாரே அரக்கன்பொறுப் பாயெண்ணி
சாகத்தான் துணிந்தவர்க்கு சமுத்திரமுழங்
காலளவு தானென் பாரே.

என்றது :—மண்டோதரி தன் புருடனை இராவணனைப் பார்த்து இந்திரசித்து செய்த வேள்வியும் வரமும் அழிந்து போயிற்று. இந்திரசித்து, அட்சயகுமாரன், அதிகாயன் மக்கள் முதலாகிய மந்திரிமார் சகலருமிருந்தும், உபகாரத்திற்கு மூலபலங்களுமிருந்தும், எல்லாம் போய்விட்டது. இனி உன்னுயிரளவிலே வந்திருக்கிறது. ஒருவன் தாரத்தை விரும்பின பாதகர் என்ன பலன் கண்டார் என்று சொல்ல, இராவணனுனவன், அடி பைத்தியக்காரி! நானென்ன சாகப் பயந்தோயிருக்கிறேன்! இதோ புறப்படுகிறேன் சண்டைக்கு. அதாமிஞ்சி நானிறந்துபோனல் இராமாவென்கிற நாளைக்கெல்லாம் இராவணுவென்கிற பேருமிருக்குமென்று புறப்பட்டான். ஆதலால், சௌந்தர நாயகி பாகராகிய செயங்கொண்டாருலகத்தில், "சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்காலளவென்று," உலக வழக்கஞ் சொல்லும் என்றவாறு. (76)

## வித்துவானும் சரி மதயானையும் சரி.

அத்தர்கையா லெழுதவுமை விளக்கேந்த
வரதர் ஓரானே கூறும்
நத்திருசித் தம்பக்கோ வைமதுரைச்
சங்கத்தார் நாவி லொன்று
குத்தமெனத் தள்ளினர்சற் றுள்பயமில்
லாதசெயங் கொண்டா ரேசொல்
வித்துவான் மதயானை இரண்டுமொப்பென்
றுரைப்பதுவும் மெய்ய தாமே.

என்றது :—சிதம்பரத்திலே வாதவூரராகிய மாணிக்கவாசக மூர்த்தி கவிவல்லவராய், திருச்சிற்றம்பலக் கோவை பாட, உமையாகிய பார்வதி திருவிளக்கேந்த சபாநாயகர் கத்துச் சொல்லியாயிருந்து எழுதி திருச்சிற்றம்பலம் கையெழுத்தென்று எழுதித் தெரியப்படுத்தியிருக்க, அந்தக் கோவை தில்லை மூவாயிரமவர் மதுரைப் பாண்டியனிடமும் சங்கத்தாரிடமும் உரைபண்ணச் சொல்லி அனுப்புவிக்க, சங்கத்தார் அதில் முந்நூறு கவியை ஒப்புக்கொண்டு நூறு கவியைக் குற்றமென்று தள்ளிப்போட சங்கத்தாரிலொருவர் கல்லாடகர் பரமசிவன் கையெழுத்து மாணிக்கவாசகர் பாடல் தள்ளப் போகாதென்று சொல்ல, யாருபாடினுலென்ன, அது குற்றந்தானென்று சங்கத்தார் தள்ளிப்

போட, அப்பால் கல்லாடகர் அந்த நூறு பாட்டிற்கு நூறு கல்லாடக அகவல் பாடி, அகவலாலே ஓத்துக் கொடுத்து அந்த நூறு கவியும் ஒப்பேற்றி வைத்தார். சங்கத்தார் வித்துவான்களாயிருந்தும் பயப்படாமல் ஈசுவரன் சொன்ன கவிதைக்குக் குற்றம் சொன்னார்கள். ஆதலால் சந்திரசடாதரராகிய செயங் கொண்டாருலகத்தில், **"வித்துவானும் சரி மதயானையும் சரி,"** என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (77)

### காமத்துக்கு கண்கண்ட விடத்திலே

உச்சிதமாய்த் துரோணருட வருதியின்மேல்
அவர்மனையா ளுடையில் லாமல்
பிச்சையிடக் கொள்சிவனுக் கக்கணமே
யிந்திரியம் பிரிந்த தன்றோ
தெக்கணமா முனிபரவு தென்னியம
நகரில்வரும் செயங்கொண் டாரே
**இச்சையுள்ள காமனுக்குக் கண்ணுகண்ட**
**விடத்தினிலென் றியம்பு வாரே.**

என்றது :—பூமி, அந்தர, சொர்க்கம் இந்த மூன்று லோகத்திலுள்ள ஸ்திரீ ஜனதிகளில் சுந்தரம் போன்ற ரூபவதிகளில் ஐந்து பேர் - அகலியா, துரோபதா, தாரகை, மண்டோதரி, அருந்ததி, "பஞ்ச கன்னியா ஸ்மரேந் நித்யம் மகா பாதக நாசனம்" என்று கிரந்த சுலோகம் விளங்குவதால், ஈசுரன் இந்த ரூபாவதி ஐந்து பேரையும் கண்ணாரக் கண்டிருக்கிறோமே. இவர்களையல்லாமல் துரோணசாரியார் பெண்சாதிக்குப் பெண் குறி அதிசயம் என்று கேட்டிருந் தோமே. அந்த ரூபீகரத்தையும் காண வேண்டுமென்று மனதில் ஆசையாகி, தொண்ணூறு வயது சென்ற சன்னியாசியாகி துரோணசாரியாரிடத்தில் வந்தார். துரோணரும் இவரைக் கண்டவுடனே பெரிய யோகீசுவரரென்று நமஸ்காரம் பண்ணி, ஆசனம் போட்டு கிட்டவைத்துக்கொண்டு, இருவரும் வேதாந்தங்களையும், லோகாந்தங்களையும் பேசுங்காலையில் துரோணசரியார், இந்த சன்னியாசியாரைப் பார்த்து, "தேவரீர் அடியேன் மனையில் அமுது புசிக்க வேண்டு"மென்று சொல்ல சன்னியாசியார், 'நான் முதுவன். எனக்கு அமுது படைக்கிற ஸ்திரீ ஜனதிகள் நிர்வாணியாய் உடையில்லாமல் அமுதுபடைத்தால் புசிக்கலாம்" என்று சொல்ல, துரோணரும் இது காரணமாய் இருக்கிறதென்று எவ்விதத்திலும் இவரைச் சாப் பிடப்பண்ண வேணடுமே, எந்தப் பெண்களும் சம்மதியார்களே, இந்த வழி பாட்டை நம்முடைய வீட்டுக்காரியிடத்தில் சொல்லி அவள் மனதை அறிவோ மென்று தன் மனையாளிடத்தில் வந்து பிராமண சந்நியாசியார் ரொம்பவும் விருத்தர் ; கரைகண்ட ஞானியாய் இருக்கிறார் ; அவருக்கொருவேளை சாப்பாடு பண்ணிவைத்தால் அசுவமேத யாகம் பண்ணின பலனுண்டு ; அதற்கொரு வில்லங்

கம் குறுக்கே கிடக்கிறது; ஸ்திரீ ஜனுநிகள் நிர்வாணியாய் உடையில்லாமல் சாதம் போட்டால் சாப்பிடுகிறோம், என்று சொல்லுகிறார். இதற்கு யார் சம்மதிப்பார்களோ! யாரைச் சாதம் போடச் சொல்லலாம் பெண்ணே யென்றார். அப்போது அவர் மனையாள் பக்கத்துப் பெண்கள் சாதம் போட்டால் நமக்கென்ன பலனிருக்கிறது. தேவரீர் உத்தரவுகொடுத்தால், அந்தப் பணிவிடையை யடியாள் செய்கிறேன் என்று சொல்ல, துரோணருக்குச் சந்தோஷம் வந்து சன்னியாசியாரை வளவிலே கூட்டி வந்து ஆசனத்திலே வைத்து மனையாளைச் சாதங்கொண்டு வந்து பரிமாறச் சொன்னார். அவளும் சன்னியாசியாருக்கு ஜலம் கொண்டு வந்து கொடுத்தும், புதுப் பொற்பள்ளயம் கொண்டுவந்து முன்னேவைத்துச் சாதம் கறி வகைகளெல்லாம் வைத்துக்கொண்டு, துகிலைக் களைய வெட்கப்பட்டுக்கொண்டு நிற்கிறதை துரோணர் கண்டு பெண்ணே! நானிந்த தூண் மறைவிலே ஒதுங்கி நிற்கிறேன்; நீ சாதம் பரிமாறு என்று சொல்லி ஒதுங்கிப் போய் நின்றார். அப்போது மனையாளும் தன்னுடைய துகிலைக்களைந்துபோட்டுக் கூந்தலை அவிழ்த்து விட்டு பாதாதி கேசம் வரைக்கும் சரீரம் தெரியாமல் மறைந்துக்கொண்டு சன்னியாசிக்கு முன்னே சாதங்கொண்டு வந்தாள். அப்போது சந்நியாசி பார்த்து இவள் கூந்தலாலே மறைத்துக்கொண்டல்லவோ வருகிறாளென்று வாயுபகவானை நினைத்தார். வாயு பகவான் வந்து கூந்தலை ஒதுக்கிவிட்டது. சன்னியாசியாரும் காணவேண்டிய அபீஷ்டம் நிறைவேற்றிக்கொண்டார். அந்த ரிஷி கண்டமாத்திரமே சன்னியாசி ரூபமாகி வந்த ஈசுவரருக்கு இருந்த ஆசனத்தின் பேரிலே இந்திரியம் கலிதமாகிவிட்டது. ஈசுரனும் மாயையாய்ப் போய்விட்டார். துரோணருடைய மனையாளும் காற்றடியில் அலமந்து சன்னியாசியையும் காணேமேவென்று சீலையெடுத்துக் கட்டிக்கொள்ள, துரோணரும் வந்து பார்த்து இது என்ன மாயமென்று யோசித்துப் பார்க்கும்போது ஈசுரன் வந்தவர்; உன்னுடைய ரூபம் கண்டவுடனே, இந்த ஆசனத்தில் அவருடைய இந்திரியம் பிரவேசமாகியிருந்தது. இதை யெடுத்து நீ உட்கொண்டால் வேதவல்லவனாக உலகத்திற்கொருவனான புத்திரனுண்டாகுமென்று சொல்ல, அந்தப் பெண் உம்முடைய இந்திரியத்திற்கு நான் யோக்கியமே யல்லாமல் இந்த விந்துவுக்கு நான் யோக்கியமில்லையென்று சொல்லிவிட்டாள். அப்போது அவர் வாசலிலே ஒரு கொளியல் (தெழுவம்) குதிரை கட்டிப் புல்லுந் தின்றுகொண்டிருந்தது. அந்தப் புல்லிலே இந்த இந்திரியத்தை யெடுத்து அந்தக் குதிரைக்குக் கொடுத்தார். அந்தக் குதிரை வயிற்றில் அந்தக் கணம் அசுவத்தாமா பிறந்தார். அவரைத் துரோணர் பிள்ளையாக எடுத்துக்கொண்டார். ஆகையால், தெக்கணமா முனியாகிய அகத்தியர் பணியப்பட்ட பாதாம்புயத்தையுடைய செயங்கொண்டாருலகில், "**காமனுக்குக் கண் கண்ட விடத்திலென்று**" உலகம் சொல்லுமென்றவாறு. (78)

## கட்டப்பாலை முற்றப் பழுக்குமோ?

**மெத்தநாள் வாதாபி வேதியர்களை**
**யுண்டோ மெனவே கும்பச்**

சித்தனைச் சாப்பிட நினைந்தான்
சித்தனவ னுயிரைமட்டுஞ் சிதைத்துவிட்டான்
மத்தகெஜந் தனையுரித்த செயங்கொண்டா
ருலகுதனில் மனத்துக் கேற்ப
நித்தியம்கட் டப்பாலை முற்றவுந்தான்
பழுத்திடுமோ நிலத்து ளோரே.

என்றது:—தெக்கணம் பொதிகை மாமலையைச் சேர்ந்த வனத்திலே பிராமண சந்நியாசிகள், ரிஷீசுவரர்கள், முனீசுவரர்கள் அநேகம் பேர் ஆசிரமங்கள் உண்டுபண்ணி தவம் செய்துகொண்டிருக்கிற தலத்திலே இல்வலனென்றும் அவன் தம்பி வாதாபி யென்றும் இரண்டு இராக்கதாளும் ஒரு பக்கத்திலே பர்ணகசாலை கட்டிக்கொண்டு அவர்களும் தவசிகளுக் கொப்பந்தமாயிருக்கிறது. அந்த இல்வலனுகிறவன் வெளியில் புறப்பட்டு வனத்திலே தவம்பண்ணுகிற இடத்தில் போய் எங்கள் தகப்பன் தாய்க்குத் திதியென்று அவர்களிடத்தில் பிராமணரை வீட்டிற்கு வரச்சொல்லி தன்னுடைய தம்பி வாதாபி பேரில் தண்ணீர் தெளித்துப் பிரம்பால் தட்டினுலவன் ஆட்டுக் கிடாயாகிறது. அந்தக் கிடாயை அறுத்துச் சமைத்துப் பிராமணார்த்தத்திற்கு வந்த பெரியவர்களையும் அப்பியங்கனத்தானம் பண்ணுவித்து (எண்ணெய் தேய்த்துக் குளித்தல்) அதன் பிறகு சாப்பிட்டவர்கள் வாய் கை அலம்பும்போது இல்வலனுகிறவன், "வாதாபி வா" என்று சொல்லுகிறது. அப்போது சாப்பிட்ட பேருக்கு வயிறு பொருமல் காணுகிறது. இரண்டாந்தரம் "வாதாபிவா," என்று சொல்லுகிறது. அப்போது சாப்பிட்டவர்கள் வயிற்றிலே அதிகப் பொருமலும் ஆட்டுக்குரல் சப்தமும் காண்கிறது. மூன்றுந்தரம், "வாதாபி வா," வென்று சொல்லவே வயிற்றைக் கிழித்துக்கொண்டு ஆட்டுக்குட்டி வெளியில் வந்த உடனே பிரம்பால் தட்ட பழையபடி வாதாபியாகி அண்ணன் தம்பி இரண்டு பேரும் அந்த வயிறுவெடித்து மறிந்த தவசிகளை பட்சணம் பண்ணிப் போடுகிறது. ஒருத்தர் புலன் ஒருத்தருக்குத் தெரியாமல் இப்படி அநேகந் தவசிகளைச் சாப்பிட்டுந் தீர்த்துப் போட்டார்கள். ஒரு நாள் அகத்தியருக்குப் பிராமணார்த்தம் சொல்லி வரவிட்டு அவர் வந்து சாப்பிட்டுக் கைகால் அலம்பும்போது இல்வலனுகிறவன் "வாதாபி, வாதாபி" யென்றுன். அப்போது அகத்திய முனிக்கு வயிறு பொருமல் கண்டது. இரண்டாவது கூப்பிட்டான். அப்போது வயிறு மிகுந்த பொருமலும் ஆட்டுக்குரலும் ஆயிற்று. மூன்றுவது கூப்பிடுகிறதற்கு (முன்) அகத்தியருக்கு ஞானதிருஷ்டியால் தெரியப்பட்டது. அகத்தியர் தன் கையினுலே "வாதாபி ஜீர்ணம் வாதாபி ஜீர்ணம்" என்று வயிற்றைத் தடவ, வாதாபி அகத்தியர் வயிற்றில் தானே ஜீர்ணமாய்ப் போனுன். நீண்டநாள் தவசிகளைச் சாப்பிட்டபடிக்கு அகத்தியரையும் சாப்பிட இலக்குப் பண்ணினுர்கள். அகத்தியர் அவனைச் சாப்பிட்டுத் தீர்த்துவிட்டார். ஆதலால் மத்தகஜத் தோலுரித்த ஜெயங்கொண்டாருலகில், "கட்டப்பாலை முற்றப் பழுக்குமோ," வென உலக வழக்குஞ் சொல்லுமென்றவாறு. (79)

மனிதன் ஆகாசத்தையும் வடிக்கட்டி விடுவான்.

பார்புகழும் பாண்டியற்குச் சங்கத்தார்
பேரறிவால் பகரொண் ணுத
நாரைமூக் குவமைபனங் கிழங்கென்றே
ஒருபுலவன் நவின்ற னன்றே
சீருலவு கங்கைதிங்கள் அக்கரவு
கொன்றையணி செயங்கொண் டாரே
காருலவு புவியிலுள்ளோர் ஆகாசந்
தனையும்வடிக் கட்டு வாரே.

என்றது:—பாண்டிய இராசாவானவர் சங்கப் புலவர்களைப் பார்த்து நாரை மூக்குக்கு உவமை சொல்லுங்கள் என்று சொன்னார். சங்கத்தாரனை வரும் அதற்கு உவமை தெரிந்து சொல்லமாட்டாமலிருக்க சத்திமுற்ற மென்றொரு ஊரில் ஒரு எளிய வித்துவான் தாபந்தரியத்தினாலே வழி நெடுக யாசக விருத்தியால் வயிறு வளர்த்துக்கொண்டு மதுரைப் பட்டணம் வந்து சேர்ந்து அங்கே யாசக விருத்தியால் வயிறு வளர்த்துக் கொண்டிருந்தார். வீட்டிலும் பெண்டாட்டி பிள்ளைகள் மிகவும் தாபந்தரியமடைந்திருக்கிறது. ஒரு நாள் இரவு வித்துவானுக்குப் புசிப்புக் கிட்டாமல் பட்டினியுடனே போர்த்திக்கொள்ள ஆடையுமில்லாமல் பனிக்கும் ஊதலுக்கும் பயந்து, குயவன் சூளையில் காற்று மறைவாய் முடக்கிக்கொண்டு கிடந்தான். அப்போது பாண்டிய இராசன் நகர் சோதனைக்குப் புறப்பட்டு சூளை லெக்கிலே (திசையிலே) வரும் போது இரண்டு நாரை தெற்கேயிருந்து வடக்கே கத்திக்கொண்டு போனதை வித்துவான் பார்த்து,—

“ நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கது போன்ற
பவளக் கூர்வாய் செங்கால் நாராய்
நீயும் தேவியும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராகில் எம்மூர், சத்திமுற்றம்
எனது சிறுகுடில் நனைசுவர்க் கூரை
கனைகுரல் பல்லியென் மனைவிபாற் சென்று
வரவுபார்த் திருப்பள் எங்கோ மாறன்
செங்கோல் நாட்டில் வந்து கூடலில்
ஆடை யின்றியே வாடையால் மெலிந்து
கையது கொண்டு மெய்யது போர்த்தி
காலது கொண்டு தோளுற வணங்கி
பேழையி லடைந்த பாம்பது போல
ஏழை யாளனைக் கண்டன மெனவே.”

என்று தன்னுடைய தாபந்தரியத்தைச் சொல்லிப் பாடினன். இந்த வசனமெல்லாம் பாண்டியன் அவ்விடத்திலே நின்று கேட்டுக்கொண்டு, நாரை மூக்குக்கு உவமை சொல்ல சங்கத்தாருக்குத் தெரியாத பொருளைப் பனங்கிழங்கென்பதாய் அறிந்து சொன்ன இவ்வித்துவானுக்கு இவ்வளவு தாபந்தரியம் வரலாமா? மீனாட்சி சுந்தரரே! என்று ரொம்பவும் விசனப்பட்டு வித்துவான் கண்ணசந்தது பார்த்துத் தன்னுடைய பீதாம்பரத்தை வித்துவான் பேரில் போர்த்திப் போட்டு அரண்மனைக்கு வந்து, காலமே காவல்காரரைப் பார்த்து, அரண்மனைப் பீதாம்பரம் களவு போயிருப்பதனாலே, அந்தக் களவாளியைத் தேடிப் பிடித்து அவன்பேரில் ஒரு துரும்பெடுத்துப் போடாதபடிக்குக் கூட்டி வாருங்களென்று சொன்னார். காவல்காரர் ஓடி யெங்குந் தேடிப் பார்த்து, குயவன் சூளையை நாடி வரும்போது வித்துவானுக்கு காற்றும் பனியுமில்லாமல் பீதாம்பரம் போர்த்தியிருப்பதால் விடிந்து இரண்டு நாழிகை வரைக்கும் நித்திரை பண்ண காவல்காரர் கண்டு பிடித்து அரண்மனைப் பீதாம்பரத்தைக் களவு செய்து வந்து போர்த்திக்கொண்டு நல்ல நித்திரை பண்ணினன் களவாளி! நீ கெட்டிக்காரன் என்று அடியாமல் தள்ளி வந்து, இராசன் முன்னே விட்டார்கள். அப்போது வித்துவான் பயமும் மயக்கமும் தெளிந்து இராசாவின் சமூகத்தில் நின்று ஒரு பாட்டுச் சொல்லுகிறான்:—

"வெறும்புக்கையு மரிதாய்க் கிள்ளைசோர் என் வீட்டில் வந்த
எறும்புக்கும் அர்ப்பித மில்லை மன்னா"

வென்று பாதிக் கவித்துறை சொல்லுகிறதற்குள்ளாக, இராசன் கையமர்த்தி சேவகரிடத்தில் அவனைக் காவலிலே வைத்துக்கொண்டு சாப்பாடும் பாக்கிலையும் தாழ்வில்லாமல் கொடுத்து அந்தப் பீதாம்பரமும் அவனிடத்திலே யிருக்கட்டும். வைத்துக்கொள்ளுங்கள் என்று உத்தரவு கொடுத்தார். அவர்களும் அந்தப்படி ஒரு மாதம் வரைக்கும் காவலில் வைத்திருந்தார்கள். இதற்குள்ளாக இராசனவர் சத்திமுற்றத்திற்கு மனிதனை யனுப்பி 'வித்வான் இராசாவைக் கண்டு கவிதை பாடினதாயும், வெகு திரவியம் பரிசு கொடுத்ததாயும், அதையெல்லாம் வீட்டிற்கு அனுப்பினதாயும் வித்துவான் ஓலையாக எழுதி, அந்த வித்துவான் வீட்டையும் மாடி வீடாகக் கட்டி களஞ்சியங்களும் செய்து துவசங்கள் நிரப்பி யானைப் பந்தி, குதிரைப்பந்தி, அதில் யானை, குதிரை, வீட்டிற்கு அநேகம் நகை வகை, ஒரு அரண்மனைக்கும் அதிகம் நடப்புவித்து அந்த அரண்மனையில் வித்துவான் பெண்டாட்டி, பிள்ளை சகலருமிருந்து தாதியாள் மூப்பியன் பணிவிடை செய்ய சுகசீவனமாய் இருக்கவைத்துத் தீர்மானமான பிறகு, இராசாவானவர் காவல்காரரிடத்தில் சொல்லி, வித்துவான் களவாடின பீதாம்பரத்தை வாங்கப்படாது; வழிச் செலவுக்குச் செல்லுமானதைக் கொடுத்து அவனூருக்குப் போகச்சொல்லி விட்டுவிடுங்களென்று உத்தரவு கொடுத்தார். அந்தப் படிக்கு அனுப்பி, வித்துவானும் புறப்பட்டுப் போகிறபோது இந்தப் பீதாம்பரத்தை விற்றால் இரண்டு வருடத்துச் சாப்பாட்டு செலவுக்குக் காணுமென்று வெகு சந்தோஷத்துடனே ஊருக்குப் போய்ச் சேர்ந்து, தன் வீடு இலக்குத் தெரியாமல் நிற்கும்போது, தன்னுடைய பெண்டாட்டி, பிள்ளைகள் குளத்தில்

ஸ்நானம் பண்ண வந்த பேர் கண்டு கூட்டிப்போய் சகலமான சமாசாரமும் சொல்லி வித்துவான் எழுதியனுப்பினதாக வந்த ஓலையும் காண்பிக்கும்போது, வித்துவானுக்கு இராசன் நடப்புவித்த காரியங்களெல்லாம் தெரியப்படுத்தினார்கள். ரொம்ப சந்தோஷமாகி மதுரையில் நடந்த காரியமும் அந்த ஊர்ச் சனங்கட்கும் சொல்லி, பாண்டிய இராசன் செய்த உதவிக்கு நான் கைம்மாறு என்ன செய்யப் போகிறேன். என்று திரும்பப் பல்லக்கிலேறிக்கொண்டு மதுரைக்குப் போய்ப் பாண்டிய ராசனுக்குத் தெரியப்படுத்தச் சொல்லி, வித்துவானுக்கு இராசன் வாசல் விட்டுவிடச் சொல்லி உத்திரவாகி, பாண்டியன் முன்னுக்குப் போய், முன் சொன்ன பாதிக் கலித்துறையை ஓட்டிச் சொல்லுகிறான்.

"என்னிருங் கலியை
குறும்பைத் தவிர்ந்துக் குடிதாங்கியைச் சென்று கூறிப்பின்
தெறும்புழைக்கை யானை கவளங் கொள்ளாமல் தெகுட்டியதே."

என்று கலித்துறையும் முடிந்து வேண பரிசும் வாங்கித் தன்னூர் வந்து சேர்ந்தான். ஆதலால், கங்கையணிந்த சடாபாரந்தையுடைய செயங்கொண்டாருலகில், "மனிதன் ஆகாசத்தையும் வடிக்கட்டிப் போடுவான்," என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு (80)

## பிடித்தவருக்குப் பேறுண்டாம்.

ஆரூரெல் லையில்மிதி யேனென்ற
விறன்மிண்டர் தனையரன் சோதித்துப்
பாரிலொரு கால்மிதிக்கச் செய்தது
கண்டக்கா லைப்பதறி வெட்டும்
சீருகண்டு சிவன்காட்சி கொடுத்தாரன்றோ
நியமச் செயங்கொண் டாரே
பேருலகில் மனங்கலங்கிப் பிரியாமல்
பிடித்தவர்க்குப் பேறுண் டாமே,

என்றது:—திருவாரூர் தியாகர் சன்னிதியில் மெய்க்காவல் விறன்மிண்டர் காத்திருக்கிறது. ஆசாரத் தப்பாய் விபூதி பூசாமல் வந்தபேரை கோவிலுக்குள் வரவிடுகிறதில்லை. சிவபூசை வேளையும் புசிப்பு வேளையும்போக, மற்ற வேளை இரவு பகல் கோவில் வாசலில் ஆஜராய் சேவுகமாயிருக்கிற நாளையில் தியாகேசுவரர்க்கு அன்பராகிய சுந்தரர்க்கும் பரவை நாச்சியாருக்கும் சுவாமி தூது நடந்து சுந்தரற்கு நித்தம் ஆயிரம் பொன்னும் கொடுத்து அவர்களுக்கு வந்த ஊடலும் தீர்த்துவிட்டுச் சுவாமி சுந்தரர்க்கு ரொம்பவும் சகாயமாயிருக்கிற நாளையில் சுந்தரர் பரவையிடத்தில் அனுதினம் போயிருந்து, தீபாராதனை வேளைக்குச் சுவாமி தெரிசனத்திற்குக் கோவிலுக்குள்ளே வந்து நிற்கிறது. இந்த வரலாற்றை விறன்மிண்டர் அறிந்து சுந்தரரைப் பார்த்து நீ

தேவடியாள் வீட்டில் போயிருந்து ஆசாரத் தப்பாய்க் கோவிலுக்குள்ளே வருகிறீர்! நாளை முதல் இப்படி வந்தீரேயானால் நான் சகிக்க மாட்டேனென்று கோபம் பண்ணும்போது தியாகேசர் பண்டாரங்களிடத்திலும் விறன்மிண்டரிடத்திலும் வந்து சுந்தரரைக் கண்டியாதே, அவன் எப்படி வந்தாலும் வரட்டும் என்று சொன்ன மாத்திரமே, விறன்மிண்டருக்குக் கோபம் வந்து அவன் தேவடியாள் வீட்டிலிருந்து ஆசாரத் தப்பாய் வருகிறது, அது சம்மதியென்று சொன்னபோதே, இந்தத் தேவடியாச் சாமியிருக்கிற ஊரிலே நான் குடியிருக்கிறதுமில்லை; இந்தத் திருவாரூர் எல்லையில் வந்து அடிமிதிக்கிறதுமில்லை என்று புறப்பட்டுப் பெண்சாதியையுங் கூட்டிக்கொண்டு திருவாரூர் எல்லைக்கப்புறம் ஒரு கிராமத்தில் போய் ஒரு சாகையில் இருந்துகொண்டு நித்தம் ஒரு பண்டாரத்தைக் கூட்டி வந்து பாத பூஜை பண்ணிக்கொண்டு திருவாரூர் என்று சொன்ன பேரைக் கண்டிர கோடலியால் வெட்டுகிறது. பாதபூசை பண்ணுகிறபோது வலது பக்கத்தில் கண்டிர கோடலியை வைத்துக் கொண்டு இடது கையால் பண்டாரத்தின் காலைப் பிடித்துக்கொண்டு "சாமி! நீர் எந்தவூர்?" என்று கேட்கிறது. வேறே ஊர் பெயர் சொன்னால் பாத பூசை பண்ணுகிறது. திருவாரூர் என்றால் காலிலே வெட்டுகிறது. இதையறிந்து விறன்மிண்டர் பெண்சாதி வந்து திருவாரூர் என்று சொல்லாமல் வேறே ஊர் பேர் சொல்லுங்களென்று சொல்லிவைக்கிறது. இப்படியிருக்கையில் தியாகேசர் விறன்மிண்டரைப் பக்தி சோதிக்க வேண்டி ஒரு பண்டார வேடமாய் வந்தார். வந்தவரை விறன்மிண்டர் தேவி, சுவாமி! எந்த ஊர்? என்று கேட்க, நாம் திருவாரூர் என்றார். "என் நாயகனிடத்தில் இந்தப் பெயர் சொல்லப்படாது. வேறு ஊர்ப் பெயர் சொல்லவேண்டும்" என்று சொல்ல, "நான் பொய்சொல்ல மாட்டேன் அம்மா, திருவாரூர் என்றுதான் சொல்வேன்" என்றார். அப்போது அந்தப் பெண் பிள்ளை இன்றைக்கு இந்தப் பண்டாரத்தின் சொல்லாலே தொல்லை வரும்போல் இருக்கிறதே யென்று பாதபூசைபண்ணுகிற இடத்திலே எப்போதும் வலது பக்கத்தில்வைக்கிற கண்டர கோடலியை இத்தினத்தில் இடது பக்கத்தில் போட்டு வைத்தாள். விறன்மிண்டர் பூசை பண்ணிக்கொண்டு வந்து பண்டாரத்தைக் கண்டு நமஸ்காரம்பண்ணி பாதபூசைக்கு எத்தனம்பண்ணி பண்டாரத்தின் இடது காலைப் பிடித்துக்கொண்டு வலது கையாலே கோடலியை எடுக்கிறபோது, "சாமி! யெந்தவூர்?" என்றார். பண்டாரம் நான் செல்வத் திருவாரூர் என்றார். அப்போது வலது பக்கத்தில் கோடலியில்லாமல் இடது பக்கத்தில் இருந்ததை யெடுக்கக் காலைப்பிடித்த இடது கையை விட்டு, இடக் கையால் கோடலியை எடுத்து வலக்கையால் காலைப் பிடிக்கிறதற்குள்ளே பண்டாரம் காலைப் பறித்துக்கொண்டு வேகமாய் ஓடவே விறன்மிண்டரும் கோடலியைக் கையில் பிடித்துக்கொண்டு விரட்டித் தொட்டோடும்போது பண்டாரமும் ஆரூர் எல்லையில் மிதிக்கவே விறன்மிண்டரும் ஒரு கால் அந்த எல்லையில் மிதித்திட்டார். அப்போது பண்டாரம் என் எல்லையில் மிதிக்கலாமோ வென்றார். மிதித்த காலை வைக்கப்போகிறேனோவென்று அதைக் கண்டரக் கோடலியால் இரு துண்டமாய் விறன்மிண்டர் வெட்டிக்கொண்டார். அப்போது தியாகேசர் கிருபை சுரந்து, இவன் மகா வைராக்கிய பக்தனென்று, அங்ஙனே

தானே இடபவாகன ரூபராய் பார்வதி சமேதராய், மானும் மழுவும் சதுர்ப்புசமுமாய்த் தோற்றி விறன்மிண்டருக்கும் அவன் பெண்சாதிக்கும் வேண்டிய வரங்கள் கொடுத்து, திரும்பவும், அறுபத்து மூவருக்கு முதன்மையாக வைத்து ரட்சித்தார். ஆதலால், மழுவணிகரத்தோடு கூடிய செயங்கொண்டாருலகத்தில், "பிடித்தவர்க்குப் பேறு," என்று உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (81)

## இறைவன் அடியார் நெஞ்சில் குடியாய் இருப்பன்.

உற்றசெந் நாப்புலவர் மிக்ககணி
வண்ணன்மேல் கோபமா யுலகுண்டோனை
இத்தனையாம் பாடுகிறோம் நீயுமுன்பாய்
சுருட்டி யெழுந்திரு வென்றோத
சித்தசனன் தாதைவரப் பெருமாள்
எழுந்தனரே செயங்கொண் டாரே
பத்தருள்ளத் தினிலீசன் குடியிருப்பா
ரென்றுலகோர் பகரு வாரே.

என்றது :—காஞ்சீபுரத்திலே ஒரு வித்துவான்; அவர் நாவினாலே சொல்வதெல்லாம் தள்ளுபடியில்லாமல் செல்லுகிற நாளையிலே அவருக்குச் செந்நாப் புலவர் என்று பெயர். அந்தப் புலவர் அந்தப் பட்டணத்தில் விஷ்ணு கோவில் வரதராஜப் பெருமாளுக்கு மிகவும் அன்பராயிருக்கிறவர். யாரும் அந்தப் புலவரை வந்தனை வழிபாடு செய்கிறது. அந்தப்பட்டணத்தில் ஒரு நீசனானவன் சேரியில் சேலை நெய்து கூலி வாங்கிப் பிழைத்துக்கொண்டிருக்கும் நாளில், அவன் மிகுந்த ஞானவான்; இந்தப் புலவர் அந்த நீசன் சேரியில் போய் அவனுடனே ஞான மார்க்கங்கள் பேசிக்கொண்டு பெருமாள் சன்னிதியில் தீபாராதனை வேளைக்கு, அங்கிருந்து புறப்பட்டு கோவிலுக்குள்ளே வந்து சுவாமி தெரிசனம் பண்ணுகிறது. இப்படித் தினசரி நடக்கிறதை அந்தக் கோவில் ஸ்தானிகாளறிந்து புலவரிடத்தில், இப்படி வரலாமா? என்று சொல்லப் பயந்து, அந்தப் பட்டணத்து இராஜா கணிவண்ணனிடத்தில் தெரியப்படுத்தினார்கள். அந்த இராஜாவும் புலவரை யழைத்துச் சொல்லமாட்டாமல் அந்த நீசனை யழைத்து, நீ இந்தப் பட்டணம் விட்டு, மறுபட்டணம் போய் இருவென்று உத்தரவு கொடுத்தார். நீசனும் அதி சீக்கிரம், தன் குஞ்சு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு மறுபட்டணம் போய்ச் சேர்ந்தான். புலவர் என்றும் போலே நீசன் வீட்டிற்குப் போய் அவனைக் காணாததினாலே அவன் வலசையுடனே, இராஜா உத்தரவினாலே நம்முடைய சிநேகிதனை விரட்டி விட்டார்கள் என்று மிகுந்த கோபமாகி, அதிசீக்கிரம் வரதராஜப் பெருமாள் கோவிலில் வரவே, அப்போது இராசா, மந்திரி சகலரும் வந்து சுவாமி

தெரிசனம் பண்ணும்போது, புலவர், வரதராஜப் பெருமாளுக்கு நேரே நின்று ஒரு வெண்பா சொல்லுகிறார் :—

" கணிவண்ணன் போவென்றான் காமுறுவல் கச்சி
மணிவண்ணா நீயிருக்க வேண்டாம்—துணிவுடனே
செந்நாப் புலவர்யாம் செல்கிறோம் நீயுமுந்தன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்."

என்று சொன்ன மாத்திரமே வரதராஜப்பெருமாள், கோவில், மண்டபம், சகலத்தையும் பாய் சுருட்டினாற் போலே சுருட்டும்போது, இராஜா, மந்திரி, ஸ்தானிகள் சகலரும் பயந்து, இராஜாவானவர் புலவரிடத்தில் வந்து ரொம்பவும் வணங்கி, அதிசீக்கிரம் தம்முடைய சிநேகிதனாகிய நீசனைக் கொண்டுவந்து அவனை சேரியில் வைத்துவிடுகிறேன். நான் தோணாமல் செய்த பிழையைப் பொறுத்து தயவுசெய்ய வேண்டுமென்று இராசா சொல்ல, புலவருக்கு மிகுந்த தயவும் இரக்கமும் வந்து சித்தசனாகிய மன்மதனைப் பயின்ற வரதராஜப் பெருமாளைப் பார்த்து, வெண்பா திரும்பச் சொல்லுகிறார்.

" கணிவண்ணா வாவென்றான் காமுறுவல் கச்சி
மணிவண்ணா நீ வருக வாவென்றான்—துணிவுடனே
செந்நாப் புலவர்யாம் செல்லவில்லை நீயுமுந்தன்
பைந்நாகப் பாய்விரித்துக் கொள்."

இந்தப்படி சொன்ன மாத்திரமே பெருமாளும் பழையபடி கோவில், மண்டபம் சகலத்தையும் திருப்பிக்கொண்டார். ஆதலால், நம்பினோர்க்கு இரங்குதலாகிய செயங்கொண்டாருலகில், "பத்தருள்ளத்திலும் ஈசன் குடியிருப்பார்," என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (82)

## தகப்பனொரு பாக்கு பிள்ளையொரு தோப்பு.

மிகப்பெரிய மாலசுவந் தனைப்பிடித்துக்
கட்டிவந்த வினைப்போர் தன்னைப்
பகற்பொழுதில் பொடியாக்கித் தாதைதனை
வென்றகுசன் பண்பு பாரீர்
செகத்தரசர் புகழவரும் தென்னியம
நாட்டதிபர் செயங்கொண் டாரே
தகப்பனொரு பாக்கெனவும் பிள்ளையொரு
தோப்பெனவும் சாற்று வாரே.

என்றது:—இராமசுவாமியானவர் சீதையை வனத்தில்விட்டு வரச்சொல்லி, இலக்குமணர் கொண்டுபோய் வனத்தில்விட்டு வந்தார். சீதையுங் கெர்ப்பத்தோடே போயிருந்ததால் குசனும், லவனும் பிறந்து, அந்தப் பிள்ளைகட்கு

வால்மீகர் சகல வித்தையும் கற்றுவித்து வனத்திலிருக்கையில், இராமசுவாமி அசுவமேதயாகம் பண்ண அந்தக் குதிரை, அந்த வன மார்க்கமாகப் போக, லவகுசன் இரண்டு பேரும் அந்தக் குதிரையைப் பிடித்துக் கட்டிவிட்டார்கள். அதற்காக இராமசுவாமியானவர், இலக்குமணர், பரதர், சத்துருக்கனர் முதலியவர்களோடு சேனைகள் சகலத்துடனும் வந்து, வனத்திலே லவகுசருடனே சண்டைபண்ணி, குசனும் லவனும் அந்தப்படை யெல்லாவற்றையும் க்ஷணப் பொழுதிலே செயித்து,இராமசுவாமியையும் மூர்ச்சையாகும்படிப் பண்ணிப்போட, அப்போது, இந்தச் சேதி வால்மீக ரிஷி கேட்டு ஓடிவந்து, உங்களுக்குத் தகப்பன் என்றும், இராமசுவாமிக்கு நீங்கள் பிள்ளைகளென்றும், தெரியப்படுத்தி எல்லாரையும் எழுப்பிவிட்டு சகலருக்கும் சந்தோஷமாகி சீதை முதலான சகல பேர்களும் அயோத்தியாபுரிக்கு இராச்சிய பரிபாலனம் செய்துகொண்டு சுகமேயிருந்தார்கள். ஆதலால், செகமெல்லாம் பணிபாதராகிய செயங்கொண்டாருலகத்தில், "**தகப்பனொரு பாக்கும் பிள்ளையொரு தோப்பும்,**" என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (83)

**எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்.**

> தண்பரசு ராமருட தாயுடலில்
> பறைச்சிதலை தரித்த மின்னாள்
> நண்பரிடம் கொண்டுவர இவள்முழுதும்
> பறைச்சியென நகைத்து நாதன்
> திண்புயனே யிவளையப்பால் துரத்தெனச்சொல்
> குறைத்தனரே செயங்கொண் டாரே
> பண்புளவெண் சாணுடம்பில் சிரசுபிர
> தானமெனப் பகரு வாரே.

என்றது;—சமதக்கினி மகரிஷியின் பெண்சாதி இரேணுகாதேவி ரிஷியார் பூசைக்குத் தடாகத்தில் போய் ஜலம் திரட்டுகிறபோது கார்த்தவீரிய அர்ச்சுனன் ஆகாய மார்க்கத்திலே பவனி விலாசமாய்ப் போகையில் அவனுடைய நிழல்பட்டு அந்த அழகைக் கண்டு அதிசயப்பட்டதால் இரேணுகாதேவிக்கு ஜலம் திரளவில்லை. ஆதலால், இரேணுகாதேவி ரிஷியாரிடத்தில் போய் இன்றைக்கு ஏதோ ஜலம் திரளவில்லை யென்றாள். அப்போது, சமதக்கினி பார்த்து இவளுடைய கற்புக்கு இடையூறு வந்தது. ஆதலால், அவளைக் கொண்டு போய் வெட்டிப்போட்டு வரச் சொல்லி தன் புதல்வனாகிய பரசுராமனுக்கு உத்திரவு கொடுக்க, அவர் தாயைக் கொண்டுபோய் ஒரு வனத்தில் வைத்துத் தலையை வெட்டினார். அந்தத் தலை, பந்து உருண்டதுபோல உருண்டு மறு வனத்தில் போய்க் கிடந்தது. பரசுராமரும் ரிஷியாரிடத்தில் வந்து என் தாயை வெட்டிப்போட்டு வந்தேன் என்றார். அப்போது ரிஷியாருக்கு சந்தோஷம் வந்து உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளென்றார். பரசுராமரும்

என் தாயை எழுப்பித்தர வேண்டுமென்றுர். ரிஷியாரும் உன் தாயுடலிலே வெட்டின தலையை யெடுத்துவைத்து ஒட்டிக் கூட்டிக்கொண்டு வாவென்றுர். அந்தப் படிக்குப் போய் வெட்டின இடத்திலே போய் தலையைக் காணுமல் தேடுகிறபோது, அவ்விடத்திலே ஒரு பறைச்சியை வியாச்சியமாய் வெட்டின தலை கிடந்தது. இதுதான் நம்முடைய தாயார் தலையென்று எடுத்து ஒட்டிக் கூட்டி வந்து ரிஷியார் முன்னே விட்டான். ரிஷியார் பார்த்து நகைத்து இந்த உடல் உன் தாயுடல், முகம் பறைச்சி முகம்; ஆனதால் இவள் முழுவதும் பறைச்சி. இவளைத் தூரக் கொண்டுபோய் விட்டுவிடு. உன் தாயாருடைய தலை, நீ வெட்டின இடத்தில் ஈசானிய வனத்தில் கிடக்கிறது. இனி உடலில்லாத தலையை என்ன பண்ணுகிறது. அந்தத் தலையை எடுத்துவந்து வைத்து எல்லை அம்மனென்று பேரும் கொடுத்து பூசை பண்ணிக்கொண்டிருவென்று உத்தரவு கொடுத்தார். ஆனதால், முப்புராதிகளை யெறித்த செயங்கொண்டாருலகில், "எண்சாணுடம்பிற்கு சிரசே பிரதானம்," என்று உலக வழக்கஞ் சொல்லுமென்றவாறு. (84)

### முத்தது மோழை இளையது காளை.

பார்த்தனுக்கு ரதமூர்ந்தோன் மூத்தபல
பத்திரனை பாரைச் சுற்றென்
றேய்த்தனுப்பித் தனைச்சார்ந்தோர் ரட்சித்
தண்ணனைச் சார்ந்திருந்து வாழ்ந்த
நூற்றுவரை மடியவுஞ்செய் தான்செயங்கொண்
டாரேநீர் நுவலக் கேண்மோ
மூத்ததுவை மோழையென்றும் இளையதுவைக்
காளையென்றும் மொழிகு வாரே.

என்றது:—பார்த்தனுக்குத் தேரூர்ந்த கிருஷ்ணன் பாண்டவர்க்குச் சகாயமாகவும், பலபத்திரர் துரியோதனுதியர்க்குச் சகாயமாகவும், இருக்கிற நாளில் கிருஷ்ணசுவாமி யோசனைபண்ணி பலபத்திரர் இங்கேயிருந்தால் துரியோதனுதிகளை வெல்லவும் கூடாது. பாரதம் முடிகிறதுமில்லை. இவரை உபாயமாய் விலக்கிவைக்க வேண்டுமென்று, கிழமாய், தொத்தலாய், அப்போதைக்குச் சாகிற பசு மாட்டை பலபத்திரர் வளவில் தலைவாசற் கடையிலே பற்றிக்கொண்டு போய், விட்டு வந்தார். பலபத்திரர் வளவிலிருந்து வெளியே வந்தார். மாடு கதவைக் கட்டிக்கொண்டு நிற்கிறதென்று கையினுலே தள்ளுகிறபோது, மாடு அங்ஙனே விழுந்து மரணமடைந்தது. அப்போது கிருஷ்ணனுனவர் ஓடி வந்து இது என்ன காரணம்? தன்னுலே சாகிற பசு உம்மாலே மரணமாயிற்றே. அபகீர்த்தியும் தோஷமும் வந்ததே. இந்த தோஷம் பூமி பிரதக்ஷிணம் வந்தாலல்லாமல் தீராது. சாக்கிறுதிக்கு புறப்படலாமென்றுர். அப்போது பலபத்திரருக்கு சூதுவாது தெரியாத

னிலே தம்பி, நான் பூமி பிரதக்ஷிணம் வருகிறதற்குள்ளாய் நூற்றுவருக்கும் பாண்டவருக்கும் யுத்தம் நாளையே நடக்கும்போலே யிருக்கிறதே. நான் போனால் நீ பாண்டவருக்கு உதவியாயிருந்து நூற்றுவரையும் எடுத்து விடுவையே. அதற்கெப்படி யென்று கேட்க, கிருஷ்ணனிருந்து, நீர் சகாயமாக இருக்கிற நூற்றுவர் பேரில் நானொருபோதும் ஆயுதமெடுக்கிறதில்லை யென்று பிரதிக்கினை சொன்னார். அதை நிசமென்று பலபத்திரரும் பூமி பிரதக்ஷிணத்திற்குப் போனார். இங்கே கிருஷ்ணனனவர் பாண்டவருக்கும் நூற்றுவருக்கும் சண்டை உண்டுபண்ணி பார்த்தனுக்குத் தேரும் நடத்தி சக்கரத்தாலே பொழுதை மறைத்தும் அசுவத்தாமாவை வில்லைக் கீழே போடும்படி பண்ணியும் இந்த வகையால் தன்னைச் சார்ந்த பாண்டவர்களை உலகமாளும்படி பண்ணியும், பலபத்திரரைச் சார்ந்த நூற்றுவரையும் மடியப்பண்ணினார். ஆதலால், சந்திர சேகரரான செயங்கொண்டாருலகத்தில், "மூத்தது மோழை யென்றும், இளையது காளை யென்றும்," உலக வழக்கச் சொல் விளங்கும் என்றவாறு. (85)

**தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என் செய்வான்.**

பொன்னார்செல் வமும்தமிழும் பொருந்துகம்ப
ரெதிரி புகழேந்தி தன்னை
என்மீதில் கவியுரையென் றியம்பவவர்
பாடியதா லிடைஞ்ச லாச்சே
பன்னக மணிசெயங் கொண்டாரே
பாக்கியந் தழைந்துபட ருங்காலம்
தன்னாலே தான்மெலிந்தால் அண்ணாவி
யென்செய்வான் தரணியோரே.

என்றது:—சோழராசனுக்குப் பரம்பரையான வாசல் வித்துவான் ஒட்டக்கூத்தன், சோழராசனுக்குப் பாண்டிய ராசன் பெண் கொடுத்ததால் சீதன வித்வான் மதுரையிலிருந்து வந்தவனான புகழேந்தி, கவி வல்லமையால் நூதனமாய் வந்தவர் கம்பர், இந்த மூன்று பேர் வித்வாம்சாளில் இராசாவுக்கும் கம்பர் பேரில் பிரியம். ஆதலால் ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் கம்பர்பேரிலே நித்தியம் வாட்கையாயிருக்கிறது. இப்படியிருக்கிற நாளில் ஒருநாள் கம்பர் ஒட்டக்கூத்தரையும், புகழேந்தியையும் பார்த்து என்பேரில் நீங்கள் ஒரு கவிதை பாடுங்களென்று சொல்ல, அவர்கள், இப்போதைக்கு உம்முடைய பேரில் பாடுகிறதில்லை. நீ இறந்தவன்றைக்குப் பாடுகிறோமென்று சொன்னார்கள். கம்பர் நமக்குப் பிறகு நம்முடைய பேரில் இவர்கள் பாடினால் அது நமக்குத் தெரிய மாட்டாதேயென்று, நான்கு நாள் வரைக்கும் அரண்மனைக்குப் போகாமல் சஞ்சலமென்று பேர்பண்ணி வீட்டு ஜனங்களையும் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு அப்பால், மரித்தோமென்று பேர் பண்ணினார். அந்தக் கணமே ஒட்டக்கூத்தனும்

புகழேந்தியும் வந்து, அவர் படுத்து இருக்கிற இடத்திலே வந்து இருந்து கொண்டு சொன்னவெண்பா:—

“ இன்றைக்கோ கம்ப னிறந்தநாள் சோழனுக்கு
இன்றைக்கோ என்கவிதை ஏற்குநாள்—இன்றைக்கோ
பூமாது வாழ்க புவிமடந்தை வீற்றிருக்க
நாமாது நூல்வாங்கி னுள்.”

இப்படிப் பாடவே அந்தக்கணம் சரசுவதி கலலவென்று ஒதுங்கிவிட்டாள். அன்று முதல் கம்பருக்கு பாடவும் வராமல், கற்றுச்சொல்லிகள் நம்பின ஜனங்களும் பிரிந்துபோய் கம்பரும் எடுபட்டுப் போய் கூலிவேலைக்கு ஆளானுர். அன்றையத் தினம் கம்பர் மரணம் என்கிற பேர் பண்ணுமலிருந்தால் இவ்வளவு அபகீர்த்தி வருவதில்லையே! ஆதலால், பன்னகபூஷணராகிய செயங்கொண்டாருலகில், “ தன்னுலே தான் செய்துகொண்டால் அண்ணுவி என்ன செய்வானென்று,” உலகம் சொல்லும் என்றவாறு. (86)

## புகழும் இகழும் வந்தால் போகாது.

சூத்திரப்பா வையைநிகராய் மெய்யதனை
நம்பொண்ணுத் துணைவன் கலவி
காத்துமத்தைக் கொடுத்துலக முள்ளமட்டும்
புகழ்படைத்தா னன்றே நந்தி
போற்றியசுந் தரர்க்காய்முன் முறிகாட்டும்
செயங்கொண்டார் புனித மு(க)ட்டில்
கீர்த்தியப கீர்த்திரண்டும் வந்தால்போ
காதெனவும் கிளற்று வாரே.

என்றது.—சூத்திரப் பாவையைக் கள்ளக் கயிறுகொண்டு ஆட்டிவைக்கு மட்டும் ஆடும். கயிறை விட்ட மாத்திரம் கட்டைபோலக் கீழே கிடக்கும். மனிதர் தேகமும் மூச்சுக் கயிறு ஓடி மீளுமட்டும் திரியும். வெளிப்பட்ட வாய்வு மீளாத வரையில் தேகமும் கட்டைப்போலே விழும். ஆதலால், நீர்மேற் குமிழியோடொத்த தேகம் சாவது நிசம். ஆகையால் சாகிறது சாகையிலே சதிராகச் சாவோமென்று நந்திராசாவாகிறவன் சகோதரன் பாடின கவிதை என்னவென்றல்,—

நந்தி ராசனுடைய தகப்பன் நந்தி ராஜன் பட்டத்துப் பெண்சாதிக்கு ஐந்து பேர் பிள்ளைகளிருக்கையில் இராசா வேட்டைக்குப் போனவன் வழி மார்க்கத்தில் வந்த சக்கிலியப் பெண்ணைக் கூட்டிவந்து வேறே அரண்மனை கட்டிவைத்துக்கொண்டு அவளுக்கு ஆண் பிள்ளை பிறந்த உடனே அந்தப் பிள்ளைக்குக் கலியாணமும்பண்ணி தேசத்துக்குப் பட்டமும்கட்டி சகல உடம்படிக்கை

யும் துரைத்தனமும் சக்கிலிச்சி மகன் வசமாகவும் மூத்த குடியாள் மக்கள் ஐந்து பேருக்கும் சிறிது கிராமத்தை விட்டு, அப்பால் தகப்பனுனவன் சிவ லோகப் பிராப்தியடைந்தார். அப்போது மூத்த பிள்ளைகள் ஐந்து பேரும் பரிபாலனமாகி சக்கிலிச்சி மகன் தேசமாள, நாம் சொந்தக்காரர். அவனுக் குள்ளே கைவினைப் பெயர்களாய் இருக்கத் தக்கதாய் நம்முடைய தகப்பன் செய்துவைத்தானே. இனி அவனைத் தள்ளிச் செய்ய வேண்டுமானுல் நாடு இராச்சியம் படை பண்டாரம் சகலமும் சக்கிலிச்சி மகன் வசமிருப்பதால், அவனைச் செயிக்க நம்மாலே முடியாது, நம்முடைய வீட்டிற்கும் அவன் படுக்கை வீட்டிற்கும் சுரங்க மறுத்து நிசி வேளையில் நித்திரையில் அவனைச் சதிபண்ணிப் போடுகிறதாக லெக்குப்பண்ணிச் செய்தார்கள். அந்தக் கபடத்தை சக்கிலிச்சி மகன் அறிந்து அதற்கு உள்ளாள் வைத்துக்கொண்டு அன்றைய தினத்தில் அவன் படுத்திருக்கிற பாவனைபோலப்பண்ணி விளக்கு வைத்துக் கொண்டு ஆயுதபாணியுடனே தூண் மறைவிலே நின்ருன். ஐந்து பேர் கன்ன வாசல் திறந்து மூத்தவன் வெளியேறி ராசாவைப் போலே லெக்குப்பண்ணிப் படுக்கை போட்டிருக்கிறதை வெட்டுகிறபோது சங்கிலிச்சி மகன் பிறகே நின்று அவனை வெட்டி இரண்டு துண்டாய்ச் செய்து வெளியே எடுத்துப் போட்டு விட்டான். இப்படி ஒற்றையாய் வந்து இந்த வகையாய் நான்கு பேரு மிறந்து போனுர்கள். கடையாகிறவன் ஏதோ கபடமாக யிருக்கிறதென்று ஒரு கரி மூட்டையைக் கம்பு கோர்த்துக் கன்னவாசலுக்கு முன்னே நீட்டினுன். அது தலைபோலே யிருந்ததால் சக்கிலிச்சி மகன் அந்த மூட்டையிலே வெட்டினுன். அந்தக் கடைகுட்டி சரேரென்று கீழேயிறங்கி வீட்டிலும் சொல்லாமல் ஓட்ட மும் நடையுமாய் விடிகிறதற்குள்ளே நாற்காத வழி தக்ஷிணம் போய்ச் சேர்ந்து அப்பால் வெகு தொலைவிலே போய் ஒரு கவிராயர் வீட்டிற் சேர்ந்து, அந்தக் கவிராயருக்குத் தவசிப் பிள்ளையாய் முப்பது வருஷம் வரைக்கும் இருந்து, இயற்கை வாசனை செயற்கை வாசனையாய், சகல கலைக்கியானமும் பாடவல்லவ னுகி நம்முடைய ராச்சியமும் அண்ணன்மார் பழியும் வாங்க வேண்டுமென்று சக்கிலிச்சி மகன்பேரில், நந்திக் கலம்பகம் நூறு கவிதையும்பாடி கவிதைகள் மதுரமாய் நேர்த்தியான பொருள் கொண்டதாய் இருக்கிறது. சொல்லானந்தம், பொருளானந்தம், பாட்டுக்குப் பாட்டு மனசரிய சுரம் விழுந்த கவியாகப் பாடி, பாடினவன் இன்னுனென்று தெரியாமல் கவிதையை எங்கும் பிரபலப்படுத்தி னுன். அந்த நந்திராசா பட்டணம் வரைக்கும் போய்ச் சேர்ந்து அந்தக் கவிதையை விளக்கி இராசா சமூகத்திலும் விளக்கமாகி, இது யார் பாடினதோ, நல்ல கவியாயிருக்கிறது. பின்னும் பாட்டிலே சோரமிருக்கிறது. நம்முடைய தேசத்தில் இதை யாதொருத்தராகிலும் பாடக்கூடாது, பாடம் பண்ணின பேருக்கு ஒரு பாட்டிற்கு ஆயிரம் பொன் வாங்குகிறதென்று எங்கும், தமுக்குப் போட்டிருக்கையில், அந்தப் பட்டணத்தில் ஒரு தாசி விரக தாபத்தினுலே, இரவு காலத்தில் அந்தப் பாட்டில் ஒரு வெண்பாவில் பாதி சொல்லுகிருள் :—

"செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீத
சந்தனமேன் ருரோ தடவினுர்—,"

என்ருள். அப்போது பாராக்காரருக்குத் தெரியப்பட்டு அவளைக் கண்டுபிடித்து, அரைப்பாட்டுப் பாடினையே. ஐந்நூறு பொன் கொடுவென்ருர்கள். இன்னும் அரைப் பாட்டுப் பாடிவிட்டு, ஆயிரம் பொன்னும் தருகிறேனென்று, அந்த அரைப்பாட்டும் சொல்லுகிருள்.

"—சந்ததமும்

ஆகின்ற கோனந்தி ஆகந் தழுவாமல்
வேகின்ற பாவியெந்தன் மேல்.'

இந்தப் படிக்கு பாதி வெண்பாவும் முடித்துவிட்டு ஆயிரம் பொன்னும் கொடுத்தாள். இந்தச் சேதியை நந்திராசனுக்கு அறியப்பண்ணிருர்கள். அப்போது நந்தி யோசனைபண்ணிப் பார்த்து ஒரு தாசிக்குள்ள அறிவு நமக்கில்லையே, இந்தப் பாட்டின் அருமையைக் கண்டு, அவள் ஆயிரம் பொன் கொடுத்தாள், ஆனதால், நாம் இந்தப் பாட்டைக் கேட்க வேண்டுமென்று, நந்தி ஒப்பமும் நிருபமும் எழுதி தேச தேசங்களுக்கெல்லாம் அனுப்ப, அந்த ஒப்பந்தத்தின் ஓலையை நந்தி ராசாவின் மகன் இளையவன் வாங்கிக் கட்டிக் கொண்டு, நந்தி இருக்கிற பட்டணம் வந்து சேர்ந்து நந்திராசனுக்கறியப் பண்ணி, சமுகத்தில் சேர்ந்து நான்தான் பாடின வித்துவான் என்ருன். அப்போது நந்தி பார்த்து நம்மிடத்தில் வந்து இந்தப் பாட்டை அரங்கேற்ருமல் இருக்க வேண்டியதென்ன? இப்போது பாட்டை அரங்கேற்றுமென்ருன், வித்வானும் இராசனைப் பார்த்து உன் அரண்மனை வாசலிலிருந்து தொண்ணூற்றென்பது பச்சைக் குடில் செய்துபோட்டு நூருவது மயானத்தில் கட்டையடுக்கி வைத்து நீ முதற் குடிலில் நிற்கிறது. நான் இரண்டாங் குடிவில் நின்று ஒரு பாட்டுப் பாடுகிறது. நீ நின்ற குடில் வெந்து போகிறது. இந்த வகையாய் தொண்ணூற்றென்பது குடிலும் வெந்துபோம். அப்பால் மயானத்தில் கட்டை யேறுகிறது. நூருவது பாட்டு பாடுகிறபோது, கட்டையும் நீயும் வெந்து போகிறது. இதற்குச் சம்மதித்தால், நான் பாட்டரங்கேற்றுகிறேன் என்ருன். இப்படிக் கொல்ல வேண்டுமென்று, நீ பாடின வயணம் என்னவென்று கேட்க, நீ சொந்தக்காரனை கொன்றுபோட்டு சக்கிலிச்சி மகன் சீர்மையை யாண்டதாய்க் கேட்டிருந்தேன். வித்துவானுனவன், எனக்குச் சகியாமல் உன்னைக் கொல்லவேண்டுமென்றே பாடினேனென்ருன். இது உள்ள எதார்த்தமே. சரி இந்த பூமி உள்ளவரைக்கும் நமக்குப் புண்ணியமும் புகழும் உண்டென்று தேகத்தைக் கொடுத்துப் பாட்டுக் கேட்கத் துணிந்து, அந்தப் படிப் பாட்டுக் கேட்டு. தொண்ணூற்றென்பது குடிலும் வெந்து, நூருவது கட்டையிலேறினன். சகோதரனை வித்வானுகிறவன் நூருங் கவிதை எப்படிச் சொல்லுகிருன் என்ருல்,—

" செய்ய கமல திருவுக்கு முன்பிறந்த
தையய லுறவு தவிர்த்தோமே—வைய்ய
மணக்கும் பெரும்புகழான் மானபரநந்தி
குணக்கம் பிறிந்தனு லின்று."

இப்படிச் சொன்ன மாத்திரமே நந்திக்கு நம்முடைய தமையனென்பது தெளிதலாகி, அப்பா! நீ, கன்னவாசல் கரிப்பாணேயோ? வென்றான். நான்தான் என்று பேர் சொல்லவே உன் தேசந்தையும் நீ ஒப்புக்கொள் ஐயாவென்று, சொல்லவே, கட்டைவெந்து நந்தியிறந்தான். அப்போது, வித்துவானாக வந்த இராச குமாரனானவன், இப்படி தேகத்தையும் தேசத்தையும் கொடுத்து கவி கேட்டபேருண்டோ? இவன் மனதைப் போலே மனது மும்மூர்த்திகளுக்கும் வாராதென்று சந்தோஷம் பாதி, விசனம் பாதியாயிருந்து, நூற்றோராங் கவிதை ஒரு பாட்டுப் பாடுகிறான்.

## விருத்தம்

97. " வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
வையக மடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பக மடைந்ததுன் கரங்கள்
தேனுறு குழலாள் மாலிடம் புகுந்தாள்
செந்தண லடைந்ததுன் தேகம்
நானும் வறுமை எவ்விடம் புகுமோ
நகிசித நந்திகா வலனே."

இப்படிப் பாடி, அப் பாலவன் தேசத்தை யாண்டுகொண்டிருந்தான். ஆதலால், நம்பிய சுந்தரனைக் காக்கும் பொருட்டாய், பெற்ற பிராமணியிருக்க எனக்கடிமைத் திறம் என்று முன் முறிகொண்டு வந்து காட்டி ரட்சித்த செயங்கொண்டார் உலகில், " கீர்த்தி, அபகீர்த்தி இரண்டும் வந்தால் போகாதென்று," உலக வழக்கச் சொல் விளங்கும் என்றவாறு. (87)

வார விதி வந்ததென்றால் வளைந்தாடும் பிரானே.

ஆறுரிஷி பத்தினிமார் பழுதுபடா
திருக்கையிலே அவர்கள் ரூப்பின்
கூறுசுவா காளெடுத்தக் கினியோனைத்
தழுவரிஷி கூட்டங் கூடி
சீறிஅறு வரைத்துரத்த தவசுகெதி
யென்றடைந்தார் செயங்கொண் டாரே
வாரவிதி வந்ததென்றால் வளைந்தாடும்
பிரானேயென வழுத்து வாரே.

என்றது :—சப்த ரிஷிகள் பத்தினிமார் ஏழு பேரும் தடாகத்திற்கு வந்து ஜலம் கொண்டு போகும்போது, அக்கினி பகவான், வழிமார்க்கத்திலே அவர்களைக்

கண்டு அதிக மோகமாகி காம விகாரத்தினாலே தன் வீட்டில் வந்து, நீர் பூசை போசனமில்லாமல் இருக்க, இவ்வளவு விசனம் அடைந்திருக்கிறவிதம் என்னவென்று பாரியாள் கேட்கும்படி அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது அக்கினி பகவான், சப்த ரிஷி பத்தினிகளைக் கண்டு, காம பாணத்தால் துன்பப் படுகிறேன். அவர்களைக் கண்டு நான் கையாலே தொட்டாலும், வாயாலே சொன்னாலும் சபித்து விடுவார்கள். நான், மலை தேனுக்கு முடவன் ஆசைப் பட்டேன். அந்த விசனமேயல்லாமல் வேறில்லை யென்றார். அப்போது சுவாகா தேவி, இது தானா பாரம், நீர் பூசை பண்ணிச் சாப்பிட்டு, படுக்கையில் போயிரும், நான் போய் அவர்களை ருசிபண்ணி ஒவ்வொருத்தியாய் உம்மிடத்திற்கு அனுப்புகிறேன். அவர்களை ஆலிங்கனம் பண்ணிக்கொள்ளுமென்று சொன்னாள். அந்த அக்கினி பகவானும் இது மெய்யன்பதாய் ஒப்புக்கொண்டு சாப்பிட்டுவிட்டுப் படுக்கை வீட்டில் வந்திருந்தார். சுவாகாதேவி வெளிப்பட்டுப் போய் அந்த ரிஷிபத்தினிகள் போலே தானே கோலங்கொண்டு ஒவ்வொருத்தியாய் அக்கினி பகவானும் அவர்களைத் தழுவிக்கொண்டு இந்தப்படியாய் ஆறு ரிஷி பத்தினிமாருடைய ரூபமெடுத்து வந்தாள். அப்பால், வசிட்டர் பெண்சாதி அருந்ததி ரூபமெடுக்கத் தெரியாமல், சுவாகாதேவி புருஷனிடத்தில் வந்து, ரிஷி பத்தினியார்கள் வந்தார்களோவென்று கேட்டாள். அவர் ஆறு பேர்களும் வந்தார்கள். ஒருத்தி மட்டும் வரவில்லை யென்றார். அப்போது சுவாகாதேவி உம்முடைய மோக விகாரம் தீர நான் செய்த காரியமே சரி. வந்தவர்களை ரிஷி பத்தினிகள் என்று நினைத்தால் பொல்லாப்பு வருமென்று சொன்னாள். அக்கினி பகவானும் சுவாகாதானென்றிருந்தான். இது சமாசாரமெல்லாம் ரிஷிகட்கு ஞான திருஷ்டியால் தெரிந்து ஆறு பெண்களையும் அழைத்து ஏது சொன்னார்களென்றால் அருந்ததி கற்புக்குப் பிசகில்லை. உங்கள் ஆறுபேர் கற்புக்குப் பிசகு வந்திருக்கிறது. நீங்கள் சாபத்தை ஏற்றுக் கொள்ளுங்களென்று சொல்ல, அந்த ஆறு பெண்களும் ஒரு வஞ்சகமும் அறியோமே. எங்களுக்கு இந்தவினை வர வேண்டியதென்ன? என்று கேட்க, உங்களையறியாமல் உங்களுக்குப் பொல்லாப்பு வந்தது. விதி வந்தால் தள்ளப் போகாதென்று சொல்ல, எங்களைத் தள்ளி வைக்கின்றீர்களே, எங்கள் விமோசனத்திற்கு வழியென்னவென்று கேட்க, நீங்கள் ஆறு பெண்களும் போய் சரவணப் பொய்கையில் தவம் பண்ணுங்கள். உங்களுக்காக சரவணப் பொய்கையில் ஒரு பிள்ளை பிறக்கும். அந்தப் பிள்ளையாலே உங்களுக்கு விமோசனமாகுமென்று சொல்ல, அவர்களும், அந்தப்படி போய் தவம்பண்ணினார்கள். சூரன் செய்த இடுக்கண்களை ஈசுவரனுக்கு அறியப்பண்ணச் சொல்லி, தேவதைகள் அக்கினி பகவானை அனுப்ப, அக்கினி பகவானும் சிவனிடத்தில் போக, அப்போது சிவனும் உமையும் ஏகபோகமாயிருக்கையில், அக்கினி பகவான் வருகிற வெளிச்சங் கண்டு ஈசுரன் சங்கோசமாய் எழுந்திருக்க, ஈசுரனுக்கும் இந்திரியம் பிரவேசமாக, அந்த இந்திரியத்தை அக்கினி பகவானைக் கையிலேந்தச் சொல்லி சரவணப் பொய்கையில் கொண்டு போய்ப் போட்டுவரச் சொல்லி ஈசுவரன் உத்தரவாக, அக்கினி பகவானும் இந்திரியத்தைக் கொண்டு போய் சரவணப் பொய்கையில் போடவே, ஆறுமுகத்தோடும் சுப்பிரமணியர் பிறந்து கார்த்திகை முதலிய ஆறு நட்சத்திரப் பதவியில் வந்த ஆறு தாய்மாரையுமிருக்கச் சொல்லிவைத்து, சுவாகாதேவிக்கும் உன்னாலே

இவ்வளவு காரியமும் வெளியாயிற்றே. உலகத்தில் என்ன வியாதிக்கும் மந்திரஞ் செய்யும்போது தீர்ந்துபோக "சுவாகா," என்று உன் பெயர் சொல்ல, அந்த வியாதி தீருமென்று அந்த மகிமையை சுவாகா தேவிக்குக் கொடுத்து அப்பால், சிவசந்தியிடத்தில் வளர்ந்து சூரர் கிளையை மடித்து தேவர் சிறைமீட்டு ரட்சித்தார். ரிஷி பத்தினிகள் ஆறு பேருக்கும் சும்மாயிருக்கையில் ஈசுர சங்கற்பம் இப்படி வந்தது. ஆதலால், புலி உரியுடைய செயங்கொண்டாருலகில், "வரவிதி வந்ததென்ருல் வளைந்தாடும் பிரானே," வென்று, உலக வழக்கஞ்சொல்லி விளங்குமென்றவாறு. (88)

## பத்தினி உத்தமி வாக்குப் பலிக்கும்.

நித்தியஞ்சன் னியாசியென்றும் நித்தியம்
ஓவாசியென்று ரிஷிகள் கூற
அத்தைமென் றருந்ததியார் கங்கைதனக்
குரைத்துவழி யன்பாய்க் கேட்க
சித்தமகிழ்ந் தருந்ததிசொல் தனக்குவழி
கங்கைவிட்டான் செயங்கொண் டாரே
பத்தினியுத் தமிவாக்குப் பலிக்குமெனத்
தேவர்களும் பணிசெய் வாரே.

என்றது:—கங்கை நதியின் தென்கரையிலே வசிட்ட மகரிஷிக்கு அருந்ததி சாதம்பரிமாறிக் கொண்டிருக்கும்போது, வசிட்டர் அருந்ததியைப் பார்த்துப் பெண்ணே! விசுவாமித்திரர் பசியோடே வடகரையில் இருக்கிருர். அவருக்கு சாதங்கொண்டுபோய்க் கொடுத்து, சாப்பிடப்பண்ணிப்போட்டு வாவென்று சொல்லவே, அருந்ததியும், சாமி! கங்கைப் பிரவாகம் ரொம்ப வருகிறதே; போவதற்கு வழியெங்கே யென்று கேட்க, நித்திய சன்னியாசி வழிவிடச் சொன்ஞர் என்று கங்கையை வழிவிடும்படிக் கேள். வழிவிடும் போவென்ருர். அந்தப் படிக்கு அருந்ததி சாதங்கொண்டுபோய் கெங்கைத்துறையில் நின்று "நித்திய சன்னியாசியார் வழிவிடச் சொன்ஞர் கங்காதேவி, வழிவிடு" என்று கேட்க, கங்கையும் வழிவிட்டாள். அருந்ததி விசுவாமித்திரரிடத்திற்குப் போய் சாதம் போட்டுத் திரும்பி வருகிறதற்கு விசுவாமித்திரரைப் பார்த்து, சாமி! கங்கையில் பிரவாகம் பெருகிவருகிறதே; நான் வழியெப்படிப்போவதுவென்று கேட்க, விசுவாமித்திரர், தாயே! நீர் வருகிறபோது என்னமாய் வந்தாய் என்று கேட்க, அருந்ததியும் எங்கள் எஜமான் "நித்திய சன்னியாசி வழிவிடச் சொன்ஞர் என்று சொல்லு, கங்கை வழிவிடும்" என்ருர். அப்படிச் சொன்னேன்; வழிவிட்டது; வந்தேனென்ருள். ஆனல், இப்போது நித்த உபவாசியார் வழிவிடச் சொன்ஞர். கங்கையே வழிவிடு என்று சொல்லு. வழிவிடும் போவென்ருர். அருந்ததியும் கங்கைத் துரையில் வந்து, நித்த உபவாசியார் வழிவிடச் சொன்ஞர். கங்கையே வழிவிடு என்று கேட்க, கங்கையும் வழிவிட்டது. அருந்ததியும் வசிட்டரிடத்தில் போய், சுவாமி! தேவரீர், அடியாளிடத்தில் பிரியாதிருக்கிறீர். உமக்கு நித்தம்

சன்னியாசமேது? விசுவாமித்திரருக்கு இப்பொழுதுதான் சாப்பாடு பண்ணி வைத்தேன். அவருக்கு நித்தம் உபவாசமேது? நிசப்பேச்சுக்களுக்கு அல்லவா கங்கை வழிவிட வேண்டும் என்றாள். அவரும் இந்தப் புரட்டிற்கு கங்கை வழி விடவில்லை: கங்கையே வழிவிடு என்று உன் பத்தினி வாக்கினாலே சொன்னதற்காக, கங்கை வழிவிட்டான் என்று சொன்னார். ஆதலால், அன்பருக்கன்பராகிய செயங்கொண்டாருலகில், "பத்தினி உத்தமி வாக்குப் பலிக்குமென்று," உலக வழக்கச் சொல் விளங்குமென்றவாறு. (89)

சாணி யொருகூடை சவ்வாது ஒரு பணவெடை.

மதியிலியாய் நூறாண்டு வயதுளனாய் வியன்மதியாய்
பதினாறு வயதுப் புத்திரன்
எதுதருவோ மெனச்சிவனே நல்ல பிள்ளை
வயதிரண் டிருந்தால் போதும்
அதுதருவீ ரெனமிரு கண்டா ருரைத்தனரே
செயங்கொண் டாரே நாட்டில்
இதைச்சாணி ஒருகூடை மியக்கசவ்வா தொருபண
வெடையெனவுஞ் சாற்று வாரே.

மிருகண்டு மகரிஷி புத்திரசந்தானம் வேண்டி ஈசுரனை நோக்கித் தவம் செய்யும்போது, ஈசுரன் வந்து உனக்கென்ன வரம் அருளவேண்டுமென்று கேட்க, மிருகண்டாரும் புத்திரசந்தானம் கட்டளையிட வேண்டுமென்று கேட்க, அதற்கு, ஈசுரன் புத்தி மெதுவானபிள்ளையாய் நூறு வயதிற்கு இருக்க வேண்டுமா? புத்திர கோசரமான பிள்ளையாய் பதினாறு வயதிற்கு இருக்கக் கட்டளையிட வேண்டுமா? வென்று கேட்க, மிருகண்டர் புத்தியீனமான பிள்ளை நூறுவயதிற்கு இருந்தும் பயனென்ன? புத்தி கோசரமான சற்புத்திரனைப் பதினாறு வயதிற்கிருந்தால் போதும். அது வேண்டுமென்று வரம் வாங்கினான். அந்த வரத்தினால் மார்க்கண்டன் பிறந்து அவன் புத்தி கோசரத்தினாலே என்றும் பதினாறு வயதாய் இருக்கின்றான். ஆதலால், சகல லோகமும் பராபரியாகிய செயங்கொண்டாருலகில், "சாணி ஒரு கூடை சவ்வாது ஒரு பணவெடை," யென்று உலக வழக்கம் சொல்லி வழங்கும் என்றவாறு. (90)

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.

சலியாமல் கடல்தாண்டி மறுத்துமலை
கொணர்ந்தனுமான் தடந்தோள் தன்னை
நலியாமல் இந்திரசித்தன் பாசத்தால்
கட்டிவிட்டான் நலம தாக

கலியாண முரசொலிசார் நியமசெயங்
கொண்டாரே நற்கவிதை கூறும்
வலியார்க்கு வலியாரு மிருப்பரென்
றுலகிலுள்ளோர் வசனிப் பாரே.

என்றது:—வாயு பகவான் புத்திரன் அஞ்சனாதேவிகுமாரன் அனுமார். அவருடைய பலத்தை இவ்வளவென்று மதிக்கக்கூடாது. சமுத்திரம் முழுதும் தாண்டினவர். இலங்கையிலிருந்து அந்த மருத்துமாமலை யிடத்திலே போய்ச் சேரும்படியாகிய பலாட்டியன். அவர் பலத்தைப் பார்க்கிலும் அதிகம் எந்த லோகத்திலும் உண்டோ! அப்படிக்கொத்த பலவானையும் இராவணேசுரன் பிள்ளை இந்திரசித்து நாகபாசத்தால் கட்டிப் போட்டானே. ஆதலால், சதா காலமும் கலியாண முரசத்தொனி முழங்கிய நியமநகரில் உலவிய செயங் கொண்டாருலகில், "வலியாருக்கும் வலியார் இருப்பாரென்று," உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (91)

**புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டு போகிறது.**

மதுரைமன்ன னிடத்திருந்த குதிரைபற்று
தெனவிலைக்கு மாவ னேகம்
இதமுடனே சேகரிக்கும் நிமித்தத்தால்
முன்பரி யெல்லா மிழந்தான்
நிதியனைத்தோ ழமைவேண்டும் செயங்கொண்டா
ரேஏரிநிரம்ப வேண்டி
புதியவெள்ளம் வரப்போய் முன்னிருந்த
வெள்ளமு மிழந்து போனவாரே.

என்றது:—மதுரைப் பாண்டிய இராசாவானவர் லாயத்திலிருந்தக் குதிரை போதாதென்று, உயர்ந்தவை போகிமட்டங்கள், அச்சி மட்டங்கள், மான் சாதிக் குதிரைகள், அராபிக் குதிரைகள் அலைமான் குதிரைகள், இப்படி உயர்ந்த தேசக் குதிரைகள் அழைப்பித்து லாயத்தில் கட்டிவைத்துக்கொண்டு அழகு பார்க்க வேண்டுமென்று தன் வாசல் பிரதானியாகிய திருவாதவூர் அந்தணர் குலத்தென்ற பிரமராயராகிய மாணிக்கவாசகரிடத்தில் ஏழுகோடி பசும் பொன்னும் கொடுத்து தீவாந்தரங்களில்போய் குதிரை வாங்கிவரச் சொல்லி அனுப்புவிக்க, அவர் திரவியத்தை வாங்கி, ஒட்டகங்களில் ஏற்றிக்கொண்டு அதற்கான மனிதர்களையும் கூட்டிக்கொண்டு கிழக்கே தொண்டித் துறைமுகத்தில் கப்பலேறி அட்சி தேசத்திற்குப் போய் குதிரைகள் வரவழைக்க நியமித்துப் போகிறபோது, தொண்டித் துறைக்கு வட பாரிசத்தில் பத்து நாழிகை வழிக்கப் பால் திருப்பெருந்துறையில் போயிருந்ததில் ஒரு குருந்த விருட்சத்து நிழலில்

யோகாம்பிகை மணாளர் ஆத்மநாயகராகிய பரமசிவன், மாணிக்கவாசகருக்குத் தெரிசனங் கொடுத்து ஞான உபதேசமும் பண்ணி, குதிரை கொள்ளக் கொண்டு வந்த திரவியத்தை எல்லாம் இந்தத் தலத்திலே திருப்பணி நடப்பிவித்து, அந்தத் திரவியத்திற்கெல்லாம் தகுமானதாய் தீவுதீவாந்தரங்களிலிருக்கப்பட்ட உயர்ந்த சாதிக் குதிரைகளாய் அழைப்பித்து மதுரை கொண்டு வந்து சேர்த்து, பாண்டிய இராசனுக்குச் சந்தோஷம் வரும்படிப்பண்ணி விடுகிறோம் என்று, பரமசிவன் உத்திரவு கொடுத்தார். அந்த சொல்படிக்குத் தானே மாணிக்கவாசகரும் அவ்வளவு திரவியத்தையும் திருப்பணிக்குக் கொடுத்து, வான் முதல் ஸ்தூபி வரைக்கும் சகல திருப்பணியும் முடித்தார். இந்தச் சேதி பாண்டிய ராசனுக்குத் தெரிந்து, இவன் குதிரைகொள்ளக் கொண்டுபோன திரவிய முழுவதும் நம்முடைய உத்திரவு இல்லாமல் திருப்பணி செய்ய வேண்டியதென்ன வென்று, அரிக்காரர் (சேனைத் தலைவர்) மாலுதாரிகளை (காவல்காரர்) யனுப்பிக் கண்டித்துக் கூட்டிவரச் சொன்னார். அவர்களும் வந்து மாணிக்கவாசகரைக்கண்டு கண்டிக்கும்போது உடனே, சுவாமியும் மாணிக்கவாசகரிடத்தில் வந்து, நீ இப்பொழுதே துறை போய்ச் சேர்ந்து நாளை ஒரு பொழுது கிரமித்து (கழித்து) குதிரை வரும் என்று சொல்லிக்கொண்டு இரு. நாம் சொன்ன பிரகாரத்திற்குக் குதிரை கொண்டு வந்து, சேர்த்துப் போடுகிறோமென்று சொல்ல, அந்தக் கணமே மாணிக்கவாசகரும், மதுரை போய்ச் சேர்ந்து பாண்டியனையுங் (அரிமர்த்தன பாண்டியனை) கண்டு, பிறகே குதிரை வருகிறதென்று சொல்ல, பாண்டியராசனுக்குக் கோபம் வந்து மாணிக்கவாசகரை நெற்றியில் கல்லுவைத்துக் கோட்டை வாசலுக்குள் நிறுத்திப் போட்டார். அதற்குள்ளாய் ஆத்ம நாயகரும் காட்டு நரிகளையெல்லாம் வரவழைத்துக் குதிரையாக்கி, அந்தக் குதிரைகட்கு முஸ்திகளு முண்டுபண்ணி வைத்து தேவாதிகளை யெல்லாம் வரவழைத்து சவுதாரியாக்கி (குதிரை யோட்டுபவன்), சாமியும் சவுதாரிகளுக்கெல்லாம் முதன்மையாய் வெள்ளைக் குதிரையிலேறிக் கொண்டு, அநேகம் குதிரைத் திரள்களோடும் மதுரை வைகை நதியில் போய்ச் சேரவும், குதிரைகள்வந்திருக்கிற தூளிப்படலம், சந்திர சூரியரெல்லாம் மறைந்து போகவும், குதிரை அனுமானிப்பு கடல் முழக்கம் போலேயும், குதிரை மிதிகள் கொண்டுவருகிற இடத்தில் வான் முதல் தூபி வரைக்கும் தூசிமண்டி யெழும்பின விடம் அன்று முதல் **மண்டியூர்** என்று பேராயிற்று. அப்படியிருக்கும் போது, அந்தக் குதிரைகள் வருகிற சிங்காரம் பார்க்க, பாண்டிய ராசனும் படைபசுவுடனே வைகைக் கரையில் வந்து, ஏறின குதிரை யிறங்காமல், சவுதாரிக்கு முதன்மையானவருக்கும் பாண்டியனுக்கும் பேட்டியாகி, திருப்பணி கட்டியத்திரவியத்திற்கு மேல்கொண்ட கணக்குப் பண்ணினார். பாண்டியனுக்குச் சந்தோஷம் வந்து அநேகம் பூஷணாதிகதிள் வஸ்திரங்கள் கொடுக்க, சவுதாரியானவர் குதிரைச் சவுக்காலே வாங்கி குதிரை பித்தட்டிலே போட, அப்பொழுது பாண்டியனுக்குக் கோபம் வர, மாணிக்கவாசகர் சமுதாயித்துக்கு குதிரை கொண்டு வந்தவர் இந்தக் குதிரைகள் மாவுத்தனுக்குள்ளேயடங்காது. உம்முடைய லாயத்திருக்கிற குதிரைகளுடனே இந்தக் குதிரைகளையும் கலந்து லாயத்தில் கட்டிவையுங்களென்று சொல்லி, நம்முடைய சீமைக்கு நாம் போகிறோமென்று சுவாமியும் தேவதை

களும் போய்விட்டார்கள். பாண்டியனும் குதிரைகளைக் கொண்டுபோய் பழைய குதிரைகளையும் புதியக் குதிரைகளையும் கலந்து கட்டி வைத்தார்கள். இரவு ஒரு சாமத்திற்குமேல் புதியக் குதிரையெல்லாம் பழைய நரிகளாகி கால்கயிறு, கழுத்துக் கயிறெல்லாம் அறுத்துக்கொண்டு பாண்டியனுடைய பழைய குதிரைகளைப் பாய்ந்து, கடித்து விலாக்களைத் திறந்து குதிரைகளையெல்லாம் கொன்று போட்டு, பட்டணமெல்லாம் நரி கூக்குரலாகி எதிர்ப்பட்ட மனிதரையும் கடித்துக் காயப்படுத்தியும், அது முதல் நரிக் கூக்குரல் கடல் கரையை முட்டிவைத்து வாங்கி ஓடிப்போய் விட்டன. விரட்டியடிக்கப் போனாலும் ஊக்கை ஊக்கை யென்று ஓலமிட்டுக்கொண்டு போய்விட்டன. பாண்டியனும் புன்சிரிப்புக் கொண்டு புதியக் குதிரை கொள்ளப்போய் பழையக் குதிரைகளும் போய்விட்டன. அப்பால், சுவாமியும் மதுரையில் அநேகங் காரணமாக திருவிளையாடல் காண்பித்து பாண்டியனுக்குப் புண்ணியமும் புகழும் கிடைத்தது. மாணிக்கவாசகருக்கு முத்தி மோட்சங் கிடைத்தது. அவர்களை நம்பின பேருக்கு ஈடேற்றம் கிடைத்தது. மாணிக்கவாசகர் செய்த ஆவுடையார்கோவில் திருப்பணி அடங்கலுக்குப் பிரத்தியமென்று பெயராகி விளங்கி வருகிறது. ஆதலால், நிதியனுகிய குபேரனைத் தோழமைகொண்ட செயங்கொண்டாருலகில், "புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டுபோய் விட்டது," என்று உலக வழக்கம் சொல்லுமென்றவாறு. (92)

**பகட்டிப் பங்கெடுத்தாலென்? இடியடி பொறியரிசி.**

தெகுட்டாக்கா தலைவிறகு தலையன்மனை
　　யாட்டிகம்பன் திகிலிட் டேங்க
புகட்டியல்லோ கற்பழியா மல்கவிதை
　　கட்டினுள் தனதுபுரு ஷன்பேரில்
முகட்டாலிலை யில்துயில்வோன் பணிசெயங்
　　கொண்டாரே சீர்முதிர்ந்த நாட்டில்
பகட்டால்பங் கெடுத்தாலென் பொறியரிசி
　　யிடியெனவும் பகர்ந்த வாரே.

என்றது :—சோழன் பட்டணத்தில் ஒரு கூலிவேலைக்காரன் தினம் ஒரு கட்டு விறகு கொண்டுவந்து விற்றுப் புருஷனும் பெண்சாதியும் ஜீவனம் பண்ணுகிற நாளில், அந்த விறகு தலையன் கம்பர் வாக்காலே பாட்டுக் கேட்க வேண்டுமென்று தினம் இரண்டு கட்டு விறகு கொண்டு வந்து விற்று, புருஷன் ஒரு கட்டு விறகைப் புறக்கடையில் போட்டுவைக்கிறது. இப்படி ஆறு மாதம் நித்தம் ஒரு கட்டு விறகு மிச்சம் பிடித்து வைக்கிறது. அந்த விறகுதலையன் பெண்சாதி நல்ல ரூபவதி. எவ்வன காலம், அவளோ பதிவிரதைக்கெல்லாம் சிரோமணி. அந்தப் பெண் புருஷனைப் பார்த்து, விறகு ஆஸ்தி கூட்டி வைக்கிருயே. நான் உன்னை நகை நாணயம் பண்ணித்தரச் சொன்னேனே. நீயிந்த ஆறுமாதம் அவதிப்பட்டுத்

தேகமும் அரை, வாணுளாக வேண்டியதென்னவென்று கேட்க, அவன் அடி பையத்தியக்காரி. உனக்கு நகைபண்ணவா நான் விறகு சுமக்கிறேன். விறகு சேர்த்துவைத்து ஆயிரம் பொன் சம்பாதித்துக் கம்பரிடத்தில் கவி கேட்க வேண்டு மென்ருன். அப்போது, அந்தப்பெண் புருஷனைப்பார்த்து நம்முடைய தலைமுறைக் குள்ளே ஆயிரம் பொன்னுக்கு விறகு சம்பாதிக்க மாட்டோம். இப்போது வந் திருக்கிற விறகை விற்றுப் பணத்தைத் தந்தால் நான் பாட்டுக் கேட்கும்படி பண்ணுகிறேன் என்ருள். அந்தப்படிக்கு விறகை விற்றுப் பணத்தைப் பெண் சாதியிடத்தில் கொடுத்தான். அந்தப் பெண்ணுனவள், கம்பர் பல்லக்கு அரண் மனைக்குப் போகிற வீதியிலே பத்துப் பணத்தைக் கொடுத்து ஒரு சிறு வீடாய்க் கட்டிக்கொண்டாள், நாணயக்காரரிடத்தில் பத்தஞ்சைக் கொடுத்து வாக்கு நாணயமாய் காதுக்கும் கழுத்துக்கும் வர்க்கமாய் சிறிது நகைகளை வாங்கிப் போட்டுக்கொண்டு, கம்பர் பல்லக்கு அரண்மனைக்கு வரும்போது நிறைய மஞ்சள் குளித்து மையிட்டுப் பொட்டிட்டுக்கொண்டு வாய் நிரம்பப் பாக்கும் வெற்றிலையும் போட்டுக்கொண்டு ஒரு குந்தாணியை வாசலிலே கவிழ்த்து, அந்தக் குந்தாணியின் பேரில் நின்று கூந்தலை அவிழ்த்துவிட்டுக் கோதுகிறது போலேயும், கம்பரைப் பார்த்து கண் சமிக்ஞை பண்ணுகிறது போலவும், மார்பிலே போட்ட உத்தரிகம் சோறுவது போலவும், கம்பரைப்பார்த்து சிறு நகை கொள்வது போலவும் இப்படி யெல்லாம் உபாயம் பண்ணிஞள். கம்பரானவர் போக்கிலும் வரத்திலும் இவளைப் பார்த்து, இவள் யார்? என்று வினவ, இந்த ஊர் விறகுத் தலையன் பெண்சாதி யென்ருர்கள். இவள் இப்படிப் பகட்டுப் பண்ணுகிற வகை என்னவென்று ஒரு தூது விட்டுக்கேட்கச் சொன்னுர். அந்தத் தூதியிடத்தில் என்னை விறகுத்தலையன் பெண்டாட்டி யென்ருே, பெரிய மனதராயிருந்தும் இலேசான வார்த்தை சொல்லி அனுப்பிஞரென்று சொல்லிவிட்டாள். அதைத் தூதி வந்து சொல்ல, கம்பர் கேட்டு, ஆனுல் பதிவிரதையே தெரியவில்லை; இன்னம் கண்டறிவோமென்றிருக் கையில் அந்தப் பெண்ணுனவள் திரும்பத் திரும்ப நிதசரி கம்பருக்கு காம விகாரம் தலைகொள்ளும்படியாய் சாடையிலே மயக்கம் பண்ணினதை, கம்பர் சகிக்கமாட்டா மல் திரும்பவும் வெகு பொருள் தருகிருேமென்று தூதனுப்பினுர். அந்தத் தூதி யிடத்தில் அந்தப் பெண் இந்தப் பெரியவன் கையைப் பிடித்தால் எப்படித்தான் தள்ளுகிறது. இது என்னளவில் வந்திருக்கிறது. என் புருஷன் பொல்லாதவன். அவன் தன்னூருக்குப் போனது பார்த்து நான் சொல்லியனுப்புகிறேன். அப்போது வரச்சொல் என்று சொல்லி, அனுப்பிவிட்டுப் புருஷனிடத்தில் இந்தப் புலனெல்லாம் சொல்லி, இரவுக்கே கம்பரை வீட்டிற்கு அழைப்பிக் கிறேன். நீ இந்தத் திண்ணையில் ஒரு தூண் மறைவில் ஒதுங்கியிரு. அவரும் நானும் பேசிக்கொண்டிருந்து அப்பால் அவரென்னைத் தொடுகிற வேளையறிந்து நீ புறப்பட்டு இந்தக் குறுந்தடியை கையில் வைத்துக்கொண்டு திடீரென்று வீட் டில் நுழைந்து, யார்டா! நானில்லாத வேளை பார்த்து வந்தது? இனி விடுவேஞே வென்று அவரைத் தொடாமல் தரையிலும், மரத்திலுமாயடி. அப்போது கவிதை நமக்குக் கிடைக்குமென்று சொல்லிவைத்து, அந்தப்படி புருஷனை யொளித்துவைத்துவிட்டு, அயல் வீட்டாரிடத்திலே வர்க்கமாய் (வழக்கம்) கட்டில் மெத்தை, தலையணி, படிகம், குத்துவிளக்கு, அலகு, பாக்கு, வெள்ளைவெற்றிலை, களப கஸ்தூரி, பரிமளசுகந்தங்கள் சகலமும் சேகரித்து, தீபமும் வைத்துக்

கொண்டு கம்பரைஒத்தையாய் வரச்சொல்லி ஒரு தூது அனுப்பினுள். கம்பரும் ஒரு சாளிகை பழமும் வாங்கிக்கொண்டு, ஊர் அரவம் அடங்கின பிறகு புறப் பட்டு, ஐயமாகத்தானே விறகுத் தலையன் வாசலுக்கு வரவே, அந்தப் பெண் வாசலில் வந்து கம்பரை நமஸ்காரம்பணணி ரொம்பவும் உபசாரத்தோடு வீட் டில் கூட்டிப்போய் மெத்தையில் வைத்து, களபகஸ்தூரி பூசி பரிமளங்களை யணிந்து பாக்கு வெற்றிலை மடித்துக்கொடுத்து விசிறிகொண்டு வீசி நிற்க, கம்பரானவர் அந்தப் பெண்ணைப் பார்த்து உன் தாய் தகப்பன் பெயரென்ன? ஊரென்ன? உங்கள் ஜீவன முயற்சியென்ன? உன் பெயரென்ன? உன் புருஷன் பெயரென்ன? உன் புருஷன் குணபாடு வழியென்ன? என்று கேட்க, அவள் கேட்பதற்கெல்லாம் மறுவுத்தரவு கொடுத்து சாமி என் புருஷன் நடத்தை விறகு விற்றுப் பிழைக்கிறது. அவன் மோசக் கள்வன். என்னை நம்புகிறதில்லை. ஐங்காத வழி ஊருக்குப் போனாலும் தங்காதபடிக்கு சாம சாமங்களில் சோதித்து அப்பால் வீடு வந்து சேருகிறது. இப்பவும் தங்கூருக்குப் போகிறேனென்று போனான். இப்பவும், எங்ஙனே வந்திருக்கிறானோ! தெரியவில்லை. அவன் சேதி அறிந்து இத்தனை நாளும் தகரார் சொல்லிக்கொண்டிருந்தேன் என்றாள். ஆனால் பெண்ணே! நான் சாக்கிரதைக்கு வீட்டுக்குப் போகவேண்டுமென்று, மெத்தையின் மேல் வந்து அவள் முந்தாணியைப் பிடித்து இழுக்கும்போது, அப்போது சக்களவன் இது சமாசாரமெல்லாம் கேட்டுக்கொண்டிருந்து வீட்டிற்குள்வந்து, குருந்தடியைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியிலிருந்து வருகிறதுபோலே திடுக்கிட்டு வீட்டிற் குள் வந்து, நானில்லாத வேளையில் பெண்டு பிடிக்க வந்தவன் யாரடா? என்று, இனியல்லோ தப்ப வேண்டுமென்று கம்பரை யடிக்கின்றது போலே உத்திரத்தி லும் தூணிலுமாய் அடிக்கிறபோது, கம்பர் தட்டுக்கெட்டு தலைவிரிகோலமாய், வாய் வரண்டு, கொண்டு வந்ததெல்லாம் போட்டுவிட்டு, ஒத்தை வேட்டியோடே வெளியிலே ஓடும்போது சக்களவன் துரத்தித் தரையிலே அடிக்கவே, கம்பர் வாக் கிலே சுரசுவதி எப்படிப் பாடுகிறாள் என்றால்,

(விருத்தம்)

மைக்கள கானவிழிக் கணைகொண்டு
மருட்டி யிருட்டறையில்
பொய்க்கள வாகயிருந் ததுமுண்டு
புணர்ச்சியு மில்லையடா
கைக்கள வான்குருந் தடிகொண்டு
கழுத்தை ஒடிக்கவரும்
சக்களவா யென்தங்கை யடாவவள்
தன்னோடு உன்னோடுமே.

என்று சொல்லிவிட்டு அவர் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்து இந்தப் புருஷன் பெண்சாதி இரண்டு பேரும் நம்முடைய வாக்காலே கவி கேட்டால் நமக்கு ஜீவன முயற்சியாய்க் கூடிவரும் என்று இவர்களிருவரும் உள்ளீடாய்ப் பேசியிருந்தல்லோ இந்தக் கபடம் செய்தார்களென்று யோசனை பிறந்து ஒரு பெண்டாட்டி இவ்வளவு சாமர்த்தியம் பண்ணினாளே என்கிற ஆச்சரியமும், இவள் அவகடத்திற்குள்

பட்டுத் தப்பி வந்த தொந்தரவையும் நினைத்து, விடியு மட்டும் தூங்காமல் விசனமும் சந்தோஷமுமாய் இருந்தார். இங்கே சக்களவனும் பெண்சாதியும் நித்தியம் சரசுவதி பீடமாய் இருக்கப்பட்ட பிரபுவை, இவ்வளவு மோசம் பண்ணிப் போட்டோமே. இந்தப் பாட்டும் நமக்கு லபிக்க வேண்டுமென்றும் அவர் கோபந் தணிய வேண்டுமென்றும் அநேக யோசனை பண்ணி அவர் வாக்கில் நல்ல வசனமாய் என்ன பாடுகிருரோ என்று விழித்திருந்து, விடிந்த உடனே, அவர் கொண்டு வந்த பழத்தையும், போட்டுவிட்டோடின சோமனையும் எடுத்துக்கொண்டு தாம்பூலமும் கொண்டு புருஷனும் பெண்சாதியும் போய் கம்பரைச் சுற்றி வந்து நமஸ்காரம் செய்து, சுவாமி ! நான் பதிவிரதையானவள், உம்முடைய வாக்கினுலே பாட்டுக் கேட்க வேண்டுமென்று நடப்பிவித்த காரியமல்லவாவென்று உள்ளபடிக்குச் சொல்லி, அடியாள் செய்த குற்றம் பொறுத்து ரட்சிக்க வேண்டுமென்று சொல்ல, கம்பருக்கு சந்தோஷம் வந்து இந்தப் பாட்டு உங்கட்குப் பூமி உள்ளவரைக்கும் நீங்கள் பெரிய குடியாய் இருப்பீர்களென்று உத்தரவுகொடுத்து பாக்கு வெற்றிலை யும் கொடுத்து அனுப்பிவைத்தார். ஆதலால், ஆலிலையில் பள்ளிகொள்ளும் மகாவிஷ்ணு பணிபாதராகிய செயங்கொண்டாருலகில், **"பகட்டிப் பங்கெடுத்தால் என் ! இடியடி பொறியரிசி"** என்று உலக வழக்கஞ் சொல்லி விளங்கு மென்றவாறு. (93)

**வேண்டுமென்று நூற்றுல் வெண்ணெய்க் கட்டிபோல நூற்கலாம்.**

வாணிமா துலன்தோழ னிறவாமல்
பிழைக்க வென்னவகை செய்வோமென்
ருேணிரவி யைத்திகிரி யால்மறைத்துப்
பார்த்தனைக் காத்தருளி ஞரே
நாணரவால் பொன்மலையை வளைத்தசெயங்
கொண்டாரே நலஞ்சேர் நாட்டில்
வேணுமென்று நூற்றுல்மெல் லியநூலாய்
நூற்றிடுவரா மின்னுர் தானே.

என்றது : வாணியாகிய சரசுவதிக்கு மாதுலனுகிய கிருஷ்ணதேவர் தோழனுகிய அர்ச்சுனன் இறவாமல் பிழைக்க வேண்டி, பண்டு அவர்களுக்கு மேமிசை யெல்லாம் கலக்குகிறதற்காக சக்கரத்தாலே பொழுதை மறைத்தும் அசுவத்தாமாவை வில்லைக் கீழே போடும்படி பண்ணியும், கர்ணனை நாகக்கணையை இரண்டாந்தரம் விடாதபடிக்கு உபாயம்பண்ணியும், விதுரன் வில்லை எடுக்க வொட்டாதபடி எத்துப்பண்ணியும், பொய்கையில் கழுவில் விழுந்து பாண்டவர் கள் சாகாமல் வண்டாயிருந்து குறிகாட்டியும், அநேகஞ் சாதுரிய உபாயத்தினுலே எந்த விதமும் பாண்டவர்களைக் கிருஷ்ணன் காத்து ரட்சித்தாரே. ஆதலால், வாசுகி யென்னும் பாம்பினுலே மகாமேருவாய் வில்லாய்வளைத்த செயங்கொண்டா

ருலகில், "வேண்டுமென்று நூற்றால் மெல்லிய நூலாய் நூற்கலாம்," என்று உலக வழக்கச் சொல் விளங்குமென்றவாறு. (94)

**துஷ்டனைக் கண்டால் தூர விலகு.**

அச்சமில்லாத் துராகிருத ராவணனை
மயில்ராவணன் சேர்ந்தழிந்து போனான்
பச்சமுள்ள விபீடணன்தான் அரக்கனை
விட்டொதுங்கி வெகுபண்பாய் வாழ்ந்தான்
கச்சணியுந் தனத்திசவுந் தரிபாகர்
செயங்கொண்டார் கனஞ்சேர் நாட்டில்
**துச்சனர்தா னுறவுகண்டால் தூரப்போ**
**வென்றுலகஞ் சொல்லுங் காலே.**

என்றது: அச்சப்படாத மனத்தோடுங் கூடி, துராகிருதமே பிரதான மாகிய இராவணேசுவரனைச் சேர்ந்த மயில் இராவணனும் இறந்து போனான். இராவணனுக்குப் புத்தி சொன்னதிலும் கேளாததினாலே விபீடணனவன் தமையனாகட்டும், யாராகட்டும் துன்மார்க்க வேலையிலே தலைவைத்தவுடனே சேர்ந்தால் துன்பம் வருமென்று ஒதுங்கி, இராமசுவாமியிடத்தில் சேர்ந்து இலங்கைத் தேசத்தை ஆண்டுகொண்டிருந்தான். ஆதலால், கச்சணி தனத்தியாகிய சவுந்தர நாயகி பாகரான செயங்கொண்டாருலகத்தில், "**துர்ச்சனனைக்கண்டால் தூரப்போ,**" வென்று உலக வழக்கச் சொல் வழங்குமென்றவாறு. (95)

**நல்லது கண்டால் நாயனுக்கு என்பார் நல்லோர்.**

வல்லவர குணசோழன் மகளைமணம்
செய்தருளி வடிவைப் பார்த்து
அல்லிருக்கும் குழலியிவள் மருதப்பர்க்
காவள்நமக் கணையா மென்றே
தில்லைமன்றி லாடிமெய்யில் ஐக்கியமாம்
படிசேர்த்தாள் செயங்கொண்டார் நாட்டில்
**நல்லதுகண் டால்நாயன் தனக்கென்றே**
**உலகிலுள் ளோர்நவிலு வாரே.**

என்றது: மதுரையிலிருந்து வரகுண பாண்டியன், திருவிடைமருதூரில் வந்து சோழ ராசாவின் மகளைக் கலியாணம்பண்ணி, படுக்கை வீட்டில் சப்பிர கூட மஞ்சத்தில் மாப்பிள்ளையாகிய பாண்டியன் போயிருக்க, சோழன் மகளாகிய

பெண்ணை, தாதிமார் பாங்கிமார் படுக்கை வீட்டிற்குக் கூட்டி வந்து விட்டுப்போக, அந்தப் பெண்ணானவள் நாயகனிடத்தில் போய்ச்சேர நாணமாய் நின்று சப்பிர கூட மஞ்சத்திற்கு வரும்போது வரகுண பாண்டியன் கண்ணுக்கு இந்தப் பெண்ணைப் பாக்கும்போது பரமேசுவரியைப் போலே தோன்றப்பட்டது. அது எப்படியென்றால், திருவிடைமருதூர்ப் புராணத்தில் விளங்கும்பாட்டு :—

" அளக பாரமும் ஆதிதன் பாரமு மிடையும்
களப வண்டலும் கண்ணிமை வண்டையும் கண்டு
இளகு நெஞ்சுடன் எம்பிராற் கிவள்தகு மென்றே
புளகி தத்துடன் மனைவியைக் கொடுபுறப் பட்டான்."

அப்படி பெண்ணினுடைய கூந்தலையும், ஸ்தனபார வடிவையும், நூல் போன்ற மருங்கையும் களபகத்தூரி சுகந்தாதிகளின் வாசனையும் வண்டொப்பினையான நேத்திரங்களையும் கண்டு, மனது ஒடிந்து இளகி, இந்தப் பெண் எம்பிரானாகிய மருதப்பருக்குத் தகுமென்றெண்ணி புளகிதமாகத் தானே அந்தப் பெண்ணினுடைய கையைப் பிடித்து அந்த நிசி வேளையிலே மருதப்பர் சன்னிதிக்குக் கூட்டிக்கொண்டு போய் ஒரு பாட்டுச் சொல்வான்,—

" கோயிலில் புகுந்திடை மருதிறைவனைக் கூவி
வாயினைத் திறந்திறைவனும் வரகுண வென்ன
தாயினும் நலமெனக்கிவ ளுமக்கிவள் தகுமென்
றுயிலுய்கு வேனல்ல துய்யேனென வறைந்தான்."

இப்படி வரகுண பாண்டியன் இந்தப் பெண்ணைக் கோவில் வாசலில் கூட்டிக் கொண்டுபோய் நிருத்திக்கொண்டு மருதப்பரே என்று கூப்பிட்டான். சுவாமியும், ஏன் பிள்ளாய், வரகுணவென்று கதவைத் திறந்து வெளியே வந்தார். அப்போது, வரகுணன் சுவாமியைப் பார்த்து, இந்தப் பெண், எனக்குத் தாயினும் நல்லவள். உமக்கே இவள் தகும். அப்படியானால் என்னுயிர் தரிப்பேன். இல்லாதவரையில் என்னுயிர் தரியேனென்றான். அப்போது, சுவாமியும் நாமே ஒப்புக்கொள்ளு கிறோமென்று அந்தச் சோழன் மகளை சுவாமி கோவிலுக்குள்ளே கூட்டிப் போய் சிவலிங்கத்தோடே ஐக்கியம்பண்ணிக் கொண்டார். இந்தப் பாண்டியனானவன் இரவு படுத்திருக்கப்போன பெண்ணைத் தேடிக் காணாமல் எங்கேயோ கொண்டு போய், என்ன காரியத்திற்கோ, கொன்றுபோட்டானென்று யாருஞ் சொல்லு வார்களே யென்று, அந்தப் பெண்ணினுடைய கையும் வளையும் சிவலிங்கத்தின் மேலே கிடக்கத் தக்கதாகவும், மீதியுள்ள தேகத்தையெல்லாம் லிங்கத்தோடே ஐக்கியம் பண்ணிக்கொண்டு, கதவையும் தாள் போட்டுக்கொண்டார். வரகுண பாண்டியனும் திரும்ப வந்து படுக்கை வீட்டில் படுத்துக்கொண்டான். விடிந்த பிறகு படுக்கை வீட்டிலிருந்து வரகுணன் வெளியேவந்தான். பெண் இன்னம் எழுந் திருக்கவில்லையோவென்று பாங்கிகள் வந்து பார்த்துக் காணாமல் எங்கேயென்று தேடும்போது, கோவில் சுயம்பாகி பரிசாரகர் வந்து கோவில் திறந்து திருவனந்தல் விளக்கேற்றினார்கள். அந்த வெளிச்சத்திலே சிவலிங்கத்தின் பேரிலே பெண் பிள்ளை கையும், வளையும் முளைத்தெழுந்தது போலே இருந்ததைக் கண்டு, இது என்ன காரணம்? இன்றைய தினத்தில் சுவாமியிப்படி யிருக்கவேண்டிய

தென்ன? என்று வெம்படையாகி சோழ ராசனும் இந்தச் சமாசாரத்தைக் கேட்டு சகல சனமும் கோவில் போய்ச் சேர்ந்து, இராசன் முதல் சகல சனங்களும் அந்தக் கையும் வளையும் கண்ட பிறகு, சுவாமி, அந்தக் கையையுங் கூட லிங்கத்தோடே, ஐக்கியம்பண்ணிக் கொண்டார். அப்போது பெண்ணைக் காணேமென்று அரண்மனையிலுள்ள தாதிகள், பாங்கிகள் ஆண்பெண் சர்வத்திராளும் வெம்படையாகிறபோது. வரகுண பாண்டியன் சகல பேருக்கும் தெரியும்படியாய், ராத்திரி அந்தப் பெண் என் கண்ணுக்குப் பரமேசுவரி போலே காணப்பட்டாள். நான் சுவாமி மருதப்பரிடத்தில் அந்தப் பெண்ணைக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டேன் என்று சொல்ல, அந்தச் சொல் எல்லாருக்கும் ஒப்புக்கொண்டது. ஆதலால், தில்லை மன்றிலாடிய செயங் கொண்டாருலகில், "நல்லது கண்டால் நாயகனுக்கு" என்று உலக வழக்கச் சொல் விளங்குமென்றவாறு. (96)

## செய்தவ மறந்தால் கைதவமாகும்.

அரசிலையில் பாதிபட்சி பாதிமச்ச
மானவிந்தை யதனைப் பார்த்து
விரவுளநிட் டைமறந்துநக் கீரர்தனைப்
பூதம் விழுங்கத் தூக்கி
திரள்மலையி லடைக்கவள்ளி கணவனென்றே
விலக்கிவிட்டார் செயங்கொண் டாரே
உரமுளசெய் தவமறந்தால் கைதவமா
மென்றவ்வையா ருறைத்த வாரே.

என்றது: மதுரையில் சங்கத்தாருக்கு முதன்மையாகிய நக்கீர தேவரைப் பார்த்து சுப்பிரமணியக் கடவுளார், நம்முடைய பேரில் கவிதை பாடும் பிள்ளாய் என்று சொல்ல, நீர் சிறுபிள்ளை. உம்முடைய பேரில் கவிதை என்ன பாடுகிறது. பின்னாலே ஆகட்டுமென்று சொன்னதால் சுப்பிரமணியக் கடவுளாருக்கு நக்கீரர் பேரில் ஆயாசமாயிற்று. அந்த ஆயாசம் நக்கீரரை என்ன பண்ணிவைக்கிற தென்றால், முற்காலத்தில் சாபங் காரணமாய் ஒரு பூதமானது இரை எவ் விதத்தில் புசிக்கிறதென்றால். படித்தெடுத்த அறிவாளிகள் பேரில் குற்றம் கண்டது பார்த்து அவர்களைக் கொண்டுபோய் ஒரு மலைப்புடவில் அடைத்து வைக்கிறது. இப்படி யாயிரம் பேர் சம்பாதித்து ஒன்றாய்ச் சேகரமான பிறகு அந்தப் பூதம் ஆயிரம்பேரையும் புசிக்கிறது. இதைவிட அதற்கு வேறு புசிப்பு ஆகாது. அந்தப் பூதம் வெகு காலமாய் தொளாயிரத்துத் தொண்ணூற் றொன்பது பேரைக் கொண்டு போய் கிரௌஞ்சகிரிப் புடவிலே அடைத்து வைத்து இன்னம் ஒரு ஆளுக்கு வெகு காலமாய்த் தேடித் திரிகிற நாளில், ஒருநாள் ஒரு தடாகத்துக் கரையில் ஒரு அரச மரம். அந்த அரச மரத்திலை

தண்ணீரில் விழுந்தால் மச்சமாய்ப் போகிறது. நிலத்தில் விழுந்தால் பறவையாய்ப் போகிறது. அப்படி இருக்கையில் ஒரு நாள் அந்தத் தடாகத்தில் நக்கீரர் வந்து தீர்த்தமாடிப் பூசையிலிருக்கும்போது, அந்த அரச மரத்தில் ஒரு இலை தண்ணீரில் பாதியும் தரையில் பாதியுமாய் நக்கீரருக்கு எதிரில் விழுந்தது. தண்ணீரில் விழுந்த பாதி யிலையானது மச்சமாகத் தண்ணீரிலிருக்கிறது. தரையில் விழுந்த பாதியிலையானது பறவையாக வெளி யெழும்பி யிருக்கிறது இதை நக்கீரர் கண்டு இதுவுமொரு காரணமாக இருக்கிறதென்று நிட்டையை விட்டு, இந்த வேடிக்கையைத் தானே பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது அந்தப் பூதமானது நக்கீரர் நிட்டையை மறந்து வேடிக்கைப் பார்த்ததினால், அவர் பேரில் குற்றம் பொறுத்தது என்று, அதிசீக்கிரம் பூதமானது நக்கீரரைத் தூக்கிக்கொண்டு போய் ஆயிரம் பேரும் சரியென்று மலைப்புடவிலே சேர்த்துவிட்டு, மற்றொரு மலையை எடுத்து, அந்தக் கதவை யடைத்துப்போட்டு பூதமானது பூசை முடிக்கப் போய் விட்டது. அப்போது நக்கீர தேவரானவர் இந்தத் துயரம் நமக்கு வர வேண்டியதென்னவென்று யோசனை பண்ணிக்கொண்டு, இது சுப்பிரமணியக் கடவுளாருடைய ஆயாசம் நமக்கு வந்து லபித்ததென்று, அந்த மலைப்புடவிலே தானேயிருந்துகொண்டு. சுப்பிரமணிய சுவாமி பேரில் அகவல் பாடினார். பாடின விருத்தங்களெல்லாம் சுப்பிரமணியருக்குத் தோன்றி, நம்மை நம்பினவன் அவதியைத் தீர்த்துவிட வேண்டுமென்று கிருபை கூர்ந்து, வேலாயுதத்தை அந்தக் கிரௌஞ்ச மலையின் பேரிலே எறிந்தார். அந்த வேலாயுதம் போய் அந்த மலையை இரு பிளவாய் பிளந்துவிட்டு அந்த ஆயிரம்பேரையும் விலக்கி அந்தப் பூதம் பூசைபண்ணி வருமுன்னே அவரவர் எதாஸ்தானம் சேர்ந்தார்கள். ஆதலால், கங்காதரனாகிய செயங்கொண்டாருலகில், "**செய்தவ மறந்தால் கைதவ மாகும்,**" என்று உலக வழக்கச்சொல் விளங்குமென்றவாறு. (97)

### இடுவதே பிச்சை; பெறுவதே மோட்சம்.

அடவியில் வேதியர்க் கொருவேடன்
  திணைமாப் பகிர்ந்ததனால் காசிபர்க்கு
திடமுளமன் னவன்செயலாய்த் தனையறியப்
  பொற்கலத்தில் செனித்தா ரன்றே
வடவரையைச் சிலையாக வளைத்தசெயங்
  கொண்டாரே வையகந் தன்னில்
இடுவபிச்சை யதனாலே பெறுவதுவும்
  மோட்சமென இயம்பு வாரே.

என்றது: வேதாந்தபுரம் என்றொரு அக்கிராகாரத்தில் ஒரு பிராமணன் சென்ம விரதமாய் சோம வாரம் நடப்பிவித்துக்கொண்டு சோம வாரத்திற்கு சோம வாரம் பத்துப் பிராமணர்கட்கு அன்னதானம் நடப்பிவித்துக்கொண்டு வந்தார். அவருக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அப்பால், அந்தப் பிராமணன்

மரித்துப் போனான். அதன் பிறகு அந்தப் பிள்ளையை பிராமணத்தி பரிபால னம் பண்ணிக்கொண்டு ஐயரிருந்து நடப்பிவித்தபடி சோம வாரமும் அன்னதான மும் நடப்பிவித்துக் கொண்டு வந்தாள். பிள்ளைக்குப் பதினாறு வயதாயிற்று. ஒருநாள் சோம வாரத்திலே சாப்பிட வந்திருக்கிற பிராமணர்களைப் பார்த்து, இந்த அன்னதானத்திற்குப் பலன் என்ன என்று கேட்க, அதில் பெரியோர் களாய் இருந்தவர்கள் இந்த அன்னதானப் பலன் ஈசுரன் சொல்ல வேண்டுமே யல்லாது, எங்களாலே சொல்லத்தகாதென்றார்கள். ஆனால் அந்த ஈசுவரனைப் போய்க் கண்டு, அந்த அன்னதானப் பலன் கேட்டு வரவேண்டுமென்று அந்தப் பிள்ளை வெளிப்புறப்பட்டு வழிநெடுக, அக்கிராகாரங்களில் ஆகாரம் கிடைத் தால் அருந்தியும் இல்லாவிட்டால் பட்டினியாயும் ஈசுவரன் பேரில் பாரம் போட்டுக்கொண்டு வடக்கே நாடிப் போகிற வழியிலே காசிமா நகரத்திற்குத் தெற்கே மூன்றரைக் காதவழி வனாந்தரம் காடு. அதில் மிருக சஞ்சாரங்கள் ரொம்பவும் உண்டு. அதில், ஊர்கள், குடியிருப்புகள் கிடையாது. அந்த வனத் தகத்தில் சில வேடர்கள் அந்தக் காட்டுப் புலனறிந்து, அதில், சஞ்சாரம்பண்ணிக் கொண்டு பகல் வேளையில் தேனும் தினைமாவும் சம்பாதித்துப் புசித்துக் கீழே படுத்தால், புலியடித்துப் போடுமென்று பட்டரைகள் போட்டு, இராக்காலம் அந்தப் பட்டரையில் படுக்கிறது. இப்பேர்ப்பட்ட வனத்தில் ஒருநாள் இந்தப் பிராமணப் பிள்ளை சாயரட்சை வேளையில் ஒரு வேடனிடத்தில் போய்ச் சேர்ந்தான். அந்த வேடன் இந்தப் பிராமணனுக்கு சுனைத்தண்ணீர் காண் பித்து அனுஷ்டானம் முடித்துக்கொள்ளச் சொல்லி, தன் பட்டரைக்குக் கூட்டி வந்து தன் பெண்டாட்டியைப் பார்த்து, நமக்குத் தினைமாவை இரண்டு பங்காய்ப் பகுக்கிறதை இந்த ஐயருமிருப்பதால் மூன்று பங்காய் வைத்துக் கொடுப்போமென்று சொல்ல, அந்த வேடச்சி, அப்படி மூன்றுபங்கு வைக்கிற தில்லை யென்றும், பாதி யெடுத்துக் கொள்ளுகிறேன். உன் பாதியை இரண்டாய்ப் பகிர்ந்து ஐயருக்குக் கொடுத்துக்கொள் என்றும் சொல்லிவிட்டாள். வேடனும் ஐயர் பட்டினியிராதபடிக்குத் தன் பங்கில் பாதியைப் பிரித்துப் போட்டு நம்முடைய பட்டரையில் மூன்று பேரும் நிரந்து படுத்துக்கொள்வோ மென்று சொல்ல, அந்த வேடச்சியானவள், நான், இடம் இடஞ்சலாய்ப் படுக்க மாட்டேன். உன் பாதி இடத்தில் வேண்டுமானால் விட்டுக்கொடு என்று சொல்லி விட்டாள். அப்போது வேடன் பாதியிடத்தில் ஐயரை முன்னாடிப் போடாமல் உறக்க வேலையில் புரண்டு விழுவாரென்று ஐயரை நடுவே படுக்கச் சொல்லி, தான் ஓரத்தில் படுத்துக்கொண்டான். வேடனுக்கு இடம் நெருக்கடியாயிருந்ததால் நித்திரையில் தவறிக் கீழே விழவே, வேடனைப் புலி பாய்ந்துகொண்டு போய் விட்டது. அந்தப் பிராமணப் பிள்ளையும் நமக்கு உபசாரம் பண்ணின வேட னிறந்து போனானென்று விசனமாய்ப் புறப்பட்டு வடக்குமுகமாய் வெகு தூரம் போனதில் பட்டணங்களும் ஊருமில்லாமல், பாதை மார்க்கமுமில்லாமல் அன்ன பானாதியுங் கிடையாமல் காய்கனி பறித்துப் புசிக்கவும் செயலில்லாமல், தட்டழி கிறவேளையில் ஈசுவரானுக்கிரகம் வந்து, அந்தப் பிராமணப் பிள்ளைக்கு எதிராகப் பிரசன்னமாகி நம்முடைய பேரில் பக்தி காரணமாகத் தேடி வருகிற காரிய மென்னவென்று கேட்க, நான் சுவாமியிடத்தில் அன்னதானப் பலன் கேட்க வேண்டுமென்று வந்தேனென்றான். அப்போது, ஈசுவரனும் அன்னதானப்

பலனுக்கு வழி சொல்லுகிறோம். அந்தக் காசி இராசாவின் பெண்சாதி கெற்பமாயிருக்கிறாள். அவளுக்கு ஆண் பிள்ளை பிறக்கும். அது பிரசவிக்கிறதுபோது, தங்கத் தாம்பாளத்திலேந்தி வெளியில் கொண்டு வந்து அந்தக் குழந்தையை அன்னதானப் பலன் என்னவென்றுகேள். அதற்கு வழி சொல்லும். அது காரியத்திற்கு, காசி ராஜாயிருக்கிற விடத்தில் போவென்று உத்திரவு பண்ணினார். அந்தப் பிராமணனும் காசி பட்டணத்திற்கு வந்து இராஜாவின் சமுகத்தில் போய்க் கண்டுகொண்டு, இது சமாசாரமெல்லாம் தெரியப்படுத்தினான். ராசாவும் சந்தோஷப்பட்டு இந்த அதிசயங் காண்போமென்று தங்கத் தாம்பாளமும் செய்விக்கச் சொல்லி பிரசவிக்கிறபோது தாம்பாளத்தில் ஏந்தி, வெளியில் கொண்டு வரச் சொல்லி, அந்தப் பிள்ளை பிறந்த உடனே, தாம்பாளத்தோடே தாதிமார் வெளியில் கொண்டு வந்தார்கள். இராசாவும் பிராமணனுமாய் அந்தப் பிள்ளையைப் பார்த்து அன்னதானப் பலன் என்னவென்று கேட்க, அந்தப் பிள்ளையானது தன் கையை வெருகடிப்பிரமாணமாய் காண்பித்து, இத்தனை யப்பால்யத்தனையுங் காண்பித்து, இத்தனையானால் அத்தனை யெத்தனையாகுமென்று பார்த்துக்கொள் என்றும். அப்பால், உனக்குத் தினைமாவும் படுக்க இடமும் இல்லையென்ற வேடச்சி, ஒரு மிருகமான பன்றி வயிற்றில் ஏழு குட்டியோடே வெள்ளைமறைக் குட்டியாய்ப் பிறந்து, இந்தப் பட்டணத்திலே பாதை மார்க்கத்தில் திரிகிறது. அதுவும், உம்முடைய கண்ணில் காணப்படுமென்று சொல்லி மறுத்துக் கேட்டக் கேள்விக்குப் பேசாமலிருந்தது. அப்போது, இராசாவிடத்தில் பிராமணன் முன்னடத்தை பின்னடத்தை வரலாறு எல்லாம் சொல்லி, வேடனும் வேடச்சியும் நடப்பிவித்ததும், ஈசுவரன் உத்திரவு கொடுத்ததுவும் குழந்தை சொன்ன சேதியுங் கலந்து பேசி வேடன் உமக்குக் கொஞ்சம் தருண வேளையில் தினைமாக் கொடுத்தது. உம்மை நடுவே வைத்து அவன் ஓரத்தில் படுத்திருந்ததால அந்தப் பலன் வேடனை ராஜா வம்சத்தில் சென்மிக்கச் செய்து தங்கத் தாம்பாளத்தில் பிறக்கவும், கொடுத்துவைத்தான். வேடச்சி கொடுமைக்கு பன்றி வடிவெடுத்தாள். வேடன் பாக்களவு தினைமாக் கொடுக்க இவ்வளவு மகிமை பெற்றதால், இத்தனை யத்தனையானால், அத்தனை எத்தனையாகுமென்று பார்த்துக்கொள்ளச் சொல்லி குழந்தை சொல்லி குழந்தை சொல்லிற்று. ஆகையால், உம்முடைய அன்னதானப் பலனுக்கு அளவும் பிராமணமும் இல்லை. நீர் உம்முடைய ஊருக்குப் போய் வாருமென்று, ராஜா வேண்டிய வெகுமதியும் செய்து பிராமணனை அனுப்பிவித்தார். ஆதலால், மகாமேருகிரியை வில்லாய் வளைத்த செயங்கொண்டாருகில், "**இடுவதே பிச்சை பெறுவதே மோட்சம்,**" என்று உலக வழக்கச் சொல் வழங்குமென்றவாறு (98)

**சாட்சிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்.**

௯௯ வாச்சுதெனத் துருவாசர் உருக்குமாங்
கதனைமெத்த வருத்த நேமி
பாய்ச்சலினால் ரிஷியைவெல்ல வரருக்மாங்
கதன்தாப மரித்தா ரன்றே

**கூச்சமறச் சிலந்திப்பூச் சியைக்கெதிசேர்த்**
**திட்டசெயங் கொண்டார் நாட்டில்**
**சாட்சிக்கா ரனைப்பணியச் சண்டைக்கா**
**ரனைப்பணிதல் தகுமென் பாரே.**

என்றது: தெய்வ லோகத்தில் தேவந்திரன் சபையில் அநேகம் ரிஷிகள் கூடியிருந்து, பூலோகத்திலே உருக்கு மாங்கத ராசன் ஏகாதசி விருத்தத்தைக் கொண்டாடி அந்த விரதப் பலன் அவன் பட்டணத்தில் எமதூதரைச் செல்ல வொட்டாதபடிக்கு அவ்வளவு அதியுக்தியாய் விரதம் செய்ய வேண்டியதென்ன? அந்த விரதத்தை நான் போய் அழித்துவிடுகிறேனென்று புறப்பட்டு உருக்கு மாங்கதனிடத்தில் வந்தார். உருக்குமாங்கதனும் ரிஷியை நமஸ்காரம் செய்து, ரொம்பவும் வந்தனை வழிபாடாய், கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு சென்ருடத் தீர்த்தம் வந்திடப் பெற்றதுபோலே, அடியேனை ஒரு பொருட்டாய் எண்ணி, தேவரீர் வந்தபோதே, அடியேன் செய்த பாக்கியமேயல்லாமல் வேறில்லை. தேவரீர் வந்த காரியத்தை இன்னபடியென்று திருவாக்கருள வேண்டுமென்று சொல்ல, ரிஷியும் இராசாவைப் பார்த்து, ஏகாதசி விரதப்பலனிலே நீர் மெத்தவும் பக்தி உள்ளவனென்று தேவலோகத்திலே பிரஸ்தாபமாயிற்று. ஆனதால், உன்னைப் பார்க்க வேண்டுமென்று வந்தேனென்ருர். அடியேன் மனையில் சுவாமி புசிப்புக்கொள்ள வேண்டுமென்று ராஜா சொல்ல, ரிஷியார் இப்போது, எனக்குப் புசிப்புக்கொள்ளக்கூடாது. நானும் இதுமுதல் ஏகாதசி விரதம் இருக்கிறேனென்றும் துவாதசி, பாரணைபண்ண உன் மனைக்கு வருகிறேன். அப்போது புசிப்புக் கொள்ளுகிறேன் என்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டார். இராசாவும் அரண் மனையிலுள்ள ஜனமும், தசமி, ஒரு சந்தியுமிருந்து ஏகாதசி நிர்ச்சலமுமாயிருந்து, துவாதசி பாரணைக்கு விடிய நாலு நாழிகைக்கு முன்னதாய், ஜனங்களெல்லாம் தீர்த்தமாடி வளவிலே சமையல்பண்ணி அநேக பதார்த்தங்களெல்லாம் சேகரம்பண்ணி, விடிந்து மூன்று நாழிகை வரையிலும் ரிஷியார் வரவு பார்த்துக் கொண்டிருந்தார்கள். ரிஷியார் வரவில்லை, ராஜாவானவர் விடிந்து ஒரு முகூர்த்தம் மூன்றே முக்கால் நாழிகைக்குள்ளாய் பாரணைபண்ணுத வரையில் அப்பால் விரதப்பலன் இலேசாய்ப் போய்விடுமே. ரிஷி வரக் காணுமே ரிஷியார் வருகிறதற்கு முன்னே சாப்பிடவும் போகாது. நம்முடைய விரதமும் தப்பிப் போகக்கூடாது. ரிஷியார் வந்த பிறகு சகல சனமும் ஒரு சந்திக்கு ரிஷியார் சாப்பிட்டப் பிறகு சாப்பிடலாம் இருங்களென்று சொல்லி விட்டு தடாகத்திற் குப் போய் ஜலத்தை மொண்டு அதில் துளசியைப்போட்டு நைவேத்தியம்பண்ணி துவாதசி பாரணை பண்ணினதற்குச் சரியென்று, அந்த ஜலத்தை மூன்று கை சாப்பிட்டு விட்டு அரண்மனைக்கு வரவே ரிஷியாரும் வந்தார். வந்த ரிஷியாரை ராஜா மிகவும் வணங்கி தேசகாலமாகி விட்டதே. பாரணை ஒரு சந்திபண்ண வாருமென்று, வீட்டில் கூட்டிப்போய் வைத்து. இலை விரித்துச் சாதம் பரிமாறுகிறபோது, ராஜாவே! நீருங் கூடயிருந்து சாப்பிட வேண்டுமென்ருர். அப்போது இராஜாவானவர், சாமி! விடிந்து மூன்றே முக்கால் நாழிகைக்குள்ளே ஒரு

சந்திபண்ண வேண்டும். சாமி வருமென்று காத்துக் கிடந்தேன். சாமியவர்கள் வரவில்லை. ஆனதால், வளவிலே சமையலானதை சாமி வந்த பிறகு தேவ பூஜை பண்ணிக்கொள்ளட்டுமென்று நான் தடாகத்திற்குப் போய், பாரணை ஒரு சந்திபண்ணினதற்குச் சரியென்று மூன்று கை ஜலத்தை ஆபோசனம் பண்ணிக்கொண்டு வந்துவிட்டேன். இனி யெனக்கு நாளைச் சாப்பாடேயல்லாமல் இப்பொழுது சாப்பிடக் கூடாது. தேவரீர் ஒரு சந்திபண்ண வேண்டுமென்று சொல்ல, ரிஷியும் அப்படியா சேதி, நீ ஒரு சந்திபண்ணி யாச்சோ வென்ருர். நான் ஒரு சந்திபண்ணினதற்குச் சரிதானென்ருர். அப்போது ரிஷியாருக்குக் கோபம் வந்து அக்கினிப் பொறி சிந்தத்தக்கதாய், ராஜாவை ஏறிட்டுப் பார்த்து, ஆமடா! நீ சாப்பிட்ட பிற்பாடு, உன்னுடைய உச்சிட்ட மா நான் சாப் பிடுகிறது என்று அண்டகடாகமெல்லாம் நடுங்கும்படி ஆக்கிரமித்துச் சடையைக் குலைத்து, அதிலொரு சடையை யெடுத்து பூமியிலே அடித்தார். அந்த அடிபட்ட விடத்தில் பூமி வெடித்து, அந்த வெடிப்பிலேயிருந்து ஒரு பூதம் புறப்பட்டது. அந்த பூதத்தைப் பார்த்து இந்த உருக்குமாங்கதனை எடுத்து விழுங்கிவிடு என்று உத்தரவு கொடுத்தார். அப்போது பூதமானது ராசாவை விரட்டவே ராஜாவும் பயந்து இறகில்லாத பட்சியைப் போலே ஓடவே, ஓடின பக்கமெல்லாம் பூதம் விரட்டிப் போவதை, பாற்கடலிலே மகாவிஷ்ணுவினிடமிருந்து சக்கிராயுதத் திற்கு உருக்குமாங்கதன் அபயக்குரல் கேட்டு, சுவாமி! நம்முடைய பக்தன் உருக்குமாங்கதனை, துருவாச ரிஷி பூதத்தைவிட்டுக் கொல்ல, உருக்குமாங்கதன் பயந்து ஓடுகிருன். அடியேனுக்கு உத்திரவுபண்ணிருல், அந்தப் பூதத்தையும் துருவாசரையும் சரிப்படுத்திவிட்டு வருகிறேன் என்று சொல்ல, மகா விஷ்ணுவும் அப்படியே ஆகட்டும் என்று உத்திரவுகொடுக்க சக்கிராயுதமானது கோடி சூரியப் பிரகாசம்போலே ஒளிகாட்டிப் புறப்பட்டு இமைக்குமளவிலே வந்து பூதத்தை இரண்டு துண்டா யறுத்துப்போட்டு துருவாசர் பேரில் திரும்புகிறதற்குள்ளாய் ரிஷியாருக்கு சக்கிரத்தினுடைய வரலாறு இமைக்குமுன்னே ஈசுவரனிடத்தில் போய் என்னைக் கொல்லச் சக்கிரம் வருகிறது. உன்னிடத்திலே அடைக்கல மாய் வந்தேனென்ருர். அப்போது ஈசுவரன் நான் உன்னைக்காப்பேன். அதனாலே எனக்கும் அந்த விஷ்ணுவுக்கும் விரோதங்களாகும். அதனாலே, உலகத்திற் கெல்லாம் தொந்தரவு வரும் என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு பிரம்ம தேவரிடத்தில் தானே போகிறது குணமென்ருர். அப்போது ரிஷியும் மகா விஷ்ணுவிடத்தில் போய், சுவாமி சக்கரம் என்னைக் கொல்ல வருகிறது. காப்பாற்ற வேண்டுமென்ருர். அப்போது விஷ்ணுவானவர் ரிஷியைப் பார்த்து, வாரும் துருவாசரே! நமக்கு யாகச் செலவுக்குச் சிறிது திரவியம் வேண்டும். நம்முடைய சக்கரத்தை உருக்குமாங்கதனிடத்தில் அடகுவைத்துவிட்டேன். ஆனதால் சக்கரமானது உருக்குமாங்கதன் வருதிப்படி நடக்குமேயல்லாமல் நான் சொன்னபடி கேளாது. அந்த ருக்குமாங்கதனிடத்தில் நீர் போகிறது, குண மென்ருர். அப்போது சக்கிரமானது நீர் எங்கே போனாலும் நான் உன்னை பிடியாமல் விடுகிறதில்லை யென்று விரட்ட, துர்வாசரும் வெட்கைத்தைக் கக்கத்திலிடுக்கிக்கொண்டு, உருக்குமாங்கதனிடத்தில் வந்து, இந்த சக்கரத்திற்கு என்னைக் காரும் பிள்ளாய்! என்று சொல்லவே, உருக்குமாங்கதன் தேவரீர் ஏன் பிறகே நில்லும். நான் முன்னே நிற்கிறேனென்று நிற்கச் சொல்ல, சக்கிர

மானது உருக்குமாங்கதனைப் பார்த்து, உன்னைப் பூதத்தைவிட்டுக் கொல்லவந்த ரிஷியை நான் கொல்ல வந்தால், நீ பிறகே விட்டுக்கொண்டு மன்றாட்டுப் பண்ணுகிறது என்னவென்று கேட்க, ராசாவும் சக்கரத்தைப் பார்த்து என்னிடத்தில் வந்தவரை நான் ஒப்புக்கொடுப்பேனோ! நீ கொல்லுகிறதானால், என்னைக் கொன்று போட்டு ரிஷியைப் பிறகே கொல்லலாம் என்றார். அப்போது சக்கரம் நகைத்து உருக்குமாங்கத ராஜாவே! உன்னை வேண்டி ரிஷியை விட்டுவிட்டுப் போகிறேனென்று சக்கரம் விஷ்ணுவிடத்தில் போய்ச் சேர்ந்தது. ரிஷியும், "தாலி பிழைத்தது தலைமுறைக்குப் போதும்," என்று போய்ச் சேர்ந்தார். ஆதலால், சிலந்திப் பூச்சிக்கும் கிருபை செய்து லோகத்திற்கு இறையாகும்படி பண்ணிய செயங்கொண்டாருலகில், "**சராட்சிக்காரன் காலில் விழுவதற்கு சண்டைக்காரன் காலில் விழலாம்,**" என்று உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (99)

## பெரியோர் உள்ளம் பேதிக்கலாகாது.

சிவயோகி வெகுளியினால் வரரிஷியும்
மகிடமெனச் செனித்தான் பாரில்
பவமடியா ரகத்துமைலிங் கப்புராணியை
வதைத்த பழியின் தோஷம்
நவதீர்த்த மாடியன்றோ தீர்ந்ததென்றார்
செயங்கொண்டார் நலஞ்சேர் நாட்டில்
தவமுடையோர் மனமுறியச் செய்தவர்க்குப்
படர்வினைதா னென்ன பாரே.

என்றது: பூலோகத்திலே வரரிஷி யென்றொரு ரிஷி அதிசயமாகத் தவம் பண்ணிக்கொண்டிருந்தார். அவர் தவசு மகிமைகளை மற்ற ரிஷியெல்லாம் கேட்டிருந்து அகத்தியரோடு ஐம்பது பேர் தபோதனர்கள் அவரைப் பார்க்க வேண்டுமென்று அந்த ரிஷியிடத்தில்வந்தார்கள். வந்தவர்களை வரரிஷியானவர் அங்கீகாரம் பண்ணி வணங்காமல் தன்னுடைய தவசின் கர்வத்தினாலே அவமதிப்பாய் சட்டை பண்ணாமலிருந்தார். அது கண்டு தவத்தை ஆதரிக்கப்பட்ட தபோதனர்கள் ஐம்பது பேரும் வெகுண்டு கோபமாகி எங்களை இகழ்ச்சியாய் சட்டைபண்ணாமலிருந்த ஆங்காரத்தினாலே எருமைக் கிடாவாய்ப் பிறக்கக் கடவதென்று சபித்தார்கள். அந்த சாபமொழி கேட்டவுடனே வர ரிஷி பயந்து ரொம்பவும் வணங்கினான். அடியேன் செய்த பிழை பொறுத்து ரட்சிக்க வேண்டுமென்று சொல்ல, அப்போது தபோதனர்கள் இரக்கமாகி, வர ரிஷியைப் பார்த்து, நீ அசுரர் பெருங்குலத்திலே மகிஷாசுரனென்று பிறந்திருந்து ராச்சியத்தை ஆண்டு கொண்டிரு. பிறகு அர்த்த சரீரம்பெற வேண்டி பரமேசுவரி திருவண்ணாமலையிலே தவம்பண்ண வருவாள். அப்போது உன்னுடைய சாபமுந் தீபமுஞ் சனப்

பொழுதிலே அவள் தீர்த்து விடுவாளென்றும், அப்பால், நீ பரகெதியடைவாயென்றும் சொல்லிவிட்டுப் போனார்கள். அந்தச் சொல்படி வர ரிஷியும் தாருடபெருங்குலத்திலே மகிஷமாகி எருமைக்கிடா முகமாய்ப் பிறந்துமகிஷாசுரனென்று பேராகி மயிடமாபுரத்தில் ராசாவாக கொடுங்கோன்மையாகி தீமைகளைச் செய்து லோகமெல்லாம் ஆண்டுகொண்டிருக்கையில் மிருகங்களைப் பட்சிக்கிற நிமித்தம் வேட்டைக்குப் போய் மூலாக்கினிக் கொடுமையாய்த் திரியும்போது அந்த வனத்திலே மன்னத ரிஷி யென்றொரு தவசி படிகலிங்கம் கையிலே வைத்துக்கொண்டு அர்ச்சனைப் பண்ணிக்கொண்டிருந்தவன், அந்த மகிஷாசுரனுக்கெதிரே அகப்பட்டான். அந்த மன்னத ரிஷியை மகிஷாசுரன் எடுத்து விழுங்கினான். அந்த ரிஷி கையிலிருந்த படிக லிங்கமானது அந்த மகிஷாசுரன் கழுத்தளவில் சிக்கியிருந்தது. அப்பால், அநேகநாள் சென்ற பிறகு பரமேசுவரி அர்த்த சரீரம் பெறவேண்டி அருணாசல ஸ்தலத்திலே தவம் பண்ணிக்கொண்டிருக்கையில் மகிஷாசுரனின் சேவகர் பார்வதி தவம்பண்ணுகிற வனத்திலே வந்து வேட்டையாடுகிறபோது, அந்த ஈசுவரி தவச்சாலைக்குக் காவலாய் இருந்த அட்டவயிரவர் சப்த மாதர்கள், சிவ கணங்கள் சகலரும் போய் அந்த வேட்டையாடிய நிருதரை அடித்துத் தும்சம்பண்ணி விட்டார்கள். அந்தச் சேதி மகிஷாசுரன் கேட்டு ஈசுவரி பேரில் படையெடுத்து வந்தான். அப்போது பரமேசுவரி விந்தையாகிய துர்க்கையை அழைத்து அந்த மகிஷாசுரனுடனே சண்டைபண்ணி அவன் தலையை அறுத்துப் போட்டு வாவென்று உத்தரவு கொடுத்தாள். துர்க்கையும் பரமேசுவரி உத்தரவு வாங்கிக்கொண்டு ஈசுவரியுடைய படை பெருக்கத் தண்டையுங் கூட்டிக்கொண்டு போய் மகிஷாசுரனுடனே அளவில்லாத சண்டைபண்ணி கடைசியில் அவன் தலையை அறுத்தாள். அவன் பிடரியிலே படிகலிங்கம் சோதி மயமாயிருந்தது. அதைத் துர்க்கைகண்டு ஆச்சரியப்பட்டு, எடுத்து வந்து பரமேசுவரி கையில் அந்தப் படிக லிங்கத்தைக் கொடுத்து மகிஷாசுரன் தொலைந்த வர்த்தமானம் சொன்னாள். அப்போது அந்த படிக லிங்கமானது ஈசுவரி கையில் ஒட்டிக்கொண்டது. அப்போது பரமேசுவரியானவள் நம்முடைய சுவாமி நம்முடைய கையில் ஒட்டிக்கொண்டு விடாமலிருக்கிற காரணமென்னவென்று விசனித்த வேளையிலே, கௌதம ரிஷியானவர் பரமேஸ்வரியை நமஸ்காரம் பண்ணி, தாயே ! படிக லிங்கமானது விடாமல் ஒட்டியிருக்கிற காரியம் அடியேன் சொல்லுகிறேன். அகத்தியர் முதல் தபோதனர்கள் கோபத்தினாலே ரிஷி எருமைக்கிடா முகமாய்ப் பிறந்தான், அந்த மகிஷாசுரன் இந்த மன்னத ரிஷியை விழுங்கினான். அந்த மன்னத ரிஷி கையில் இருந்த படிகலிங்கம் மகிஷாசுரன் கழுத்திலே சிக்கியிருந்தது. அந்த மகிஷாசுரன் இந்தப் படிக லிங்கத்தைக் கழுத்தில் வைத்திருந்ததால் அவன் லிங்க புராணியாயிற்றே, அவனைக் கொல்வித்த படியினாலே அந்தத் தோஷம் உன் கையிலிருந்த படிகலிங்கம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அந்தத் தோஷம் நவதீர்த்தமாடினால் போகும். படிகமும் கைவிட்டு நீங்குமென்றார். அந்தப் படிக்குப் பரமேசுவரியும் அந்த அருணாசலத்திலே ஒரு மாதம் நவதீர்த்தமாடினாள். அந்தப் படிக லிங்கமும் கையைவிட்டது. அந்தப் படிக லிங்கத்தை அந்த நவதீர்த்த கரையில் என் பாவம் தீர்த்த லிங்கமென்று பேரிட்டு வைத்துப் பூசை நடக்கும்படி பண்ணினாள். தபோதனர் கோபத்தினாலே ரிஷி

மகிஷமானுன். படிகலிங்கத்தைக் கழுத்தில் வைத்திருந்தவனை விசனப்படுத்தியதால் அந்த ஈசுவரி கையில் லிங்கம் ஓட்டிக்கொண்டது. ஆதலால், பரப்பிரமமாகிய செயங்கொண்டாருலகில், "பெரியோர்களுள்ளம் பேதிக்கச் செய்யப்படாதென்று," உலக வழக்கம் சொல்லும் என்றவாறு. (100)

(முற்றிற்று)

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| அச்சமில்லாத் | .... 98 |
| அடவி சென்று | .... 51 |
| அடவியில்வே | .... 101 |
| அண்ணலருள் | .... 49 |
| அத்தர் கையால் | .... 72 |
| அரசன்மனை | .... 16 |
| அரசிலையிற் | .... 100 |
| அரியோனைக் | .... 5 |
| அருமறை | .... 3 |
| அருமைசெறி | .... 3 |
| அறம்பெற்ற | .... 46 |
| அற்புதரா | .... 30 |
| அனியாயதக்கன் | .... 38 |
| அன்பான | .... 34 |
| ஆச்சரிய | .... 50 |
| ஆத்தியணி | .... 31 |
| ஆரூரெல் | .... 78 |
| ஆவலாய்ப் | .... 31 |
| ஆளைப்போல் | .... 14 |
| ஆறு ரிஷி | .... 88 |
| உச்சிதமாய்த் | .... 73 |
| உலகிடவிசால | .... 59 |
| உழுதிளையான் | .... 4 |
| உறுக்குதலு | .... 19 |
| உற்றசெங்காப் | .... 80 |
| கஞ்சனுக்குப் | .... 40 |
| கடனின்ற | .... 12 |
| கடியகனல் | .... 44 |
| கண்ணார் படை | .... 29 |
| கயிலைத்தா | .... 37 |
| கல்லான | .... 17 |
| காவலன்புட் | .... 59 |
| கும்பகர்ண | .... 17 |
| கூச்சமற | ... 65 |
| கூறுமரவக் | ... 55 |
| கையினிற்பட் | ... 69 |
| கொடியினில் | ... 63 |
| சலியாமற் | .... 91 |
| சாத்திரவே | .... 33 |
| சிந்தைமகிழ் | .... 69 |
| சிம்மாச | .... 60 |
| சிலைவேளை | .... 1 |
| சிவயோகி | .... 106 |
| சீர்பொருந் | .... 1 |
| சுற்றுமளக் | .... 13 |
| சூத்திரப்பாவை | .... 85 |
| செப்புமரிச் | .... 42 |
| செல்லோடே | .... 7 |
| தண்ணார் மீன் | .... 57 |
| தண்பரசு | .... 82 |
| தாப்பாய்வா | .... 9 |
| திறமுளசஞ் | .... 44 |
| தெகுட்டாக்கா | .... 94 |
| தேன்மொழிச் | .... 20 |
| தொடைக் | .... 6 |
| நகரமெல் | .... 1 |
| நங்கமல | .... 8 |
| நம்புகுரு | .... 64 |
| நயல்வேந்தன் | .... 23 |
| நல்வேட | .... 3 |
| நன்னிலத்தி | .... 51 |
| நிசகாளி | ... 70 |
| நித்தியசந் | ... 90 |
| நீறெடுத்தோர் | ... 66 |
| நுண்ணாகழை | ... 22 |
| பண்டுலகில் | ... 11 |
| பண்டுகிணற் | ... 21 |
| பண்டுகுட்ட | ... 26 |
| பண்ணாருந் | ... 9 |
| பத்தர்கழுத் | ... 2 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| பார்த்தனுக் | ... 83 |
| பார்புகழும் | ... 76 |
| பானுகுல | ... 6 |
| பிலமுற்ற | ... 56 |
| புகழரிச்சந்தி | ... 48 |
| புள்ளாலே | ... 10 |
| பூதலமும் | ... 52 |
| பூமிதனிற் | ... 53 |
| பெண்ணிறக்கத் | ... 53 |
| பெண்ணைவாழ்க் | ... 25 |
| பேரிலுயர் | ... 7 |
| பொன்னுர் | ... 84 |
| மதியிலியாய் | ... 91 |
| மதுரைமன்ன | ... 92 |
| மன்னர் துரோ | ... 35 |
| மிகப்பெரிய | ... 81 |
| மிஞ்சியசெவ் | ... 4 |
| முனியகவி | ... 41 |
| முன்னொருசோ | ... 28 |
| மெத்தநாள் | ... 84 |
| யாகத்தாற் | ... 71 |
| வணக்கமுடன் | ... 43 |
| வல்லவர | ... 98 |
| வளமையுள்ள | ... 42 |
| வள்ளல் கர்ணன் | ... 49 |
| வனத்திலிந்திரன் | ... 39 |
| வாணிமா | ... 97 |
| வாச்சுதெனத் | ... 103 |
| வாழிரவி | ... 47 |
| விதுரன்வில் | ... 32 |
| விருப்பமறை | ... 67 |
| விழியெதிர் | ... 15 |
| வேணியர | ... 36 |
| வேய்க்கிமகன் | ... 56 |